ஜூலை - 2024

WINMEEN.COM

LEARNING LEADS TO RULING

# நடப்பு நிகழ்வுகள்











**1. அண்மையில், உத்தரபிரதேச மாநில அரசு அதன் எந்த மாவட்டத்தில் உயிரி–நெகிழிப் பூங்காவை அமைக்க முடிவு செய்துள்ளது?**



அ. மதுரா

ஆ. ஆக்ரா

**இ. லக்கிம்பூர் கெரி ☑**

ஈ. சஹாரன்பூர்

★ உத்தர பிரதேச மாநில அரசு நெகிழி மாசுபாட்டை எதிர்த்துப் போராடுவதற்காக லக்கிம்பூர் கெரி மாவட்டத்தில் உள்ள கோலா கோகர்நாத் வட்டத்தில் உள்ள கும்பி கிராமத்தில் உயிரி–நெகிழிப் பூங்காவை நிறுவுகிறது. 1000 ஹெக்டேர் பரப்பளவில், ₹2000 கோடி மதிப்பீட்டில், UPEIDAஐ மைய முகமையாகக்கொண்டு, பல்ராம்பூர் சினி மில்மூலம் இந்தத் திட்டம் உருவாக்கப்படும். புதுப்பிக்கத்தக்க மூலங்களிலிருந்து தயாரிக்கப்படும் உயிரி–நெகிழிகள், பெட்ரோலியம் அடிப்படையிலான நெகிழிகளுக்கு மாற்றீடாகவும், சூழலுக்கு உகந்த விதத்தில் விரைவாகவும் சிதைவடைகிறது.

**2. அண்மையில், "Migration and Development Brief" என்ற தலைப்பிலான அறிக்கையை வெளியிட்ட அமைப்பு எது?**




**அ. உலக வங்கி ☑**

ஆ. IMF

இ. UNDP

ஈ. UNEP

★ உலகளவில் அதிகம் பணம் அனுப்பும் நாடான இந்தியா, 2024இல் $124 பில்லியனும் 2025இல் $129 பில்லியனும் பெறுமென எதிர்பார்க்கப்படுகிறது. 2023இல், 7.5% வளர்ச்சி விகிதத்துடன் இந்தியா $120 பில்லியன் பணம் பெற்றது. 2024இல் இது 3.7%ஆக இருக்கும் எனக் கணிக்கப்பட்டுள்ளது. உலக வங்கியின் 2024 ஜூன் புலம்பெயர்வு மற்றும் மேம்பாடு குறித்த சுருக்க அறிக்கையானது (Migration and Development Brief) இப்போக்குகளை எடுத்துக்காட்டுகிறது. 18.7 மில்லியன் புலம்பெயர்ந்தோருடன், இந்தியா, முதன்மையான புலம்பெயர்ந்த நாடாக உள்ளது.

**3. யாருக்கு 2024ஆம் ஆண்டுக்கான PEN பிண்டர் பரிசு வழங்கப்பட்டுள்ளது?**



அ. விக்ரம் சேத்

ஆ. நீலம் சக்சேனா

இ. விக்ரம் சிங்

**ஈ. அருந்ததி ராய் ☑**

★ புக்கர் பரிசு வென்ற அருந்ததி ராய்க்கு 2024ஆம் ஆண்டுக்கான PEN பிண்டர் இலக்கியப்பரிசு வழங்கப்பட்டது. சட்டவிரோத நடவடிக்கைகள் (தடுப்பு) சட்டத்தின்கீழ் அவர் மீது வழக்குத் தொடர தில்லியின் துணை நிலை ஆளுநர் அனுமதி வழங்கிய சிறிது நேரத்திலேயே இந்தப்பரிசு அவருக்குக் கிடைத்துள்ளது. விருது வழங்கும் விழா அக்டோபர் மாதம் லண்டனில் நடைபெறவுள்ளது. இதற்கு முன் இப்பரிசினை பெற்றோருள் சல்மான் ருஷ்டி மற்றும் மார்கரெட் அட்வுட் ஆகியோர் அடங்குவர். 2009இல் நிறுவப்பட்ட இந்த PEN Pinter விருது, ஐக்கிய இராச்சியம் (UK), அயர்லாந்து அல்லது காமன்வெல்த் நாடுகளைச் சார்ந்த ஆங்கில மொழி எழுத்தாளர்களை அங்கீகரிக்கிறது.

**4. பள்ளிக்கரணை சதுப்புநிலம் அமைந்துள்ள மாநிலம் எது?**



**அ. தமிழ்நாடு ☑**

ஆ. கர்நாடகா

இ. கேரளா

ஈ. ஆந்திர பிரதேசம்

★ சென்னைக்குத் தெற்கே 20 கிமீ தொலைவில் உள்ள நன்னீர் மற்றும் உவர்நீர் சதுப்பு நிலமான பள்ளிக்கரணை சதுப்புநிலத்தை பாதுகாப்பதற்காக உயர்மட்ட பாலம் அமைக்க தமிழ்நாடு அரசு திட்டமிட்டுள்ளது. சென்னையின் கடைசி இயற்கை ஈரநிலங்களில் ஒன்றான இது, ஒரு நீர்நிலை தாங்கலாக செயல்படுகிறது. ஒக்கியம் மடுவு மற்றும் கோவளம் சிற்றோடை வழியாக வங்காள விரிகுடா வரை சுமார் 250 சதுர கிமீ வரை இது பரவியுள்ளது. ராம்சார் தளமான இது 115 பறவை இனங்கள், கண்ணாடி விரியன் மற்றும் அன்றில் உள்ளிட்ட பல்வேறு உயிரினங்களின் வாழ்விடமாகத் திகழ்ந்து வருகிறது.

**5. அண்மையில், இந்தியக் கடற்படைக்கு Medium Range–Microwave Obscurant Chaff Rocket (MR–MOCR) என்ற ஏவுகணையை வழங்கிய அமைப்பு எது?**

அ. DRDO ☑

ஆ. ISRO

இ. HAL

ஈ. CSIR



★ பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பானது (DRDO) Medium Range–Microwave Obscurant Chaff Rocket (MR–MOCR) என்ற ஏவுகணையை புது தில்லியில் வைத்து இந்தியக் கடற்படையிடம் ஒப்படைத்தது. ஜோத்பூரில் உள்ள DRDOஇன் பாதுகாப்பு ஆய்வகத்தால் உருவாக்கப்பட்ட இந்தத் தொழில்நுட்பம், ரேடார் சிக்னல்களை மறைத்து, ரேடார் இருப்பைக் குறைக்க நுண்ணலை கவசத்தை உருவாக்குகிறது. இந்த ஏவுகணை, ரேடார் ஏய்ப்புத் திறனை மேம்படுத்துவதற்காக ஒன்றிணைந்த, தனித்துவமான நுண்ணலை தெளிவின்மை பண்புகளுடன்கூடிய சிறப்பு இழைகளைப் பயன்படுத்துகிறது.

**6. அண்மையில், நெகிழிக்கழிவுகளைப் பயன்படுத்தி சாலையை அமைத்த இந்தியாவின் இரண்டாவது இராணுவ நிலையம் எது?**

அ. டேராடூன் இராணுவ நிலையம்

ஆ. ரூர்க்கி இராணுவ நிலையம்

**இ. ஜெய்ப்பூர் இராணுவ நிலையம் ☑**

ஈ. மீரட் இராணுவ நிலையம்



★ ஜூன்.26 அன்று மேஜர் ஜெனரல் R S கோதாராவால் நெகிழிக்கழிவுகளால் ஆன சாலை திறந்து வைக்கப்பட்டது. இதன்மூலம், நெகிழிக்கழிவுகளைப் பயன்படுத்தி சாலையை அமைத்த இந்தியாவின் இரண்டாவது இராணுவ நிலையம் என்ற பெருமையை ஜெய்ப்பூர் இராணுவ நிலையம் பெற்றது. டீப் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் பிரைவேட் லிட்உடன் GE (தெற்கு) மற்றும் CE ஜெய்ப்பூர் மண்டலத்தின்கீழ் கட்டப்பட்ட இந்த 100 மீ சாலை, அஸ்ஸாமின் நரங்கி இராணுவ நிலையத்தால் நிறுவப்பட்ட முதல் நெகிழிச் சாலையின் அடியொற்றி போடப்பட்டுள்ளது. குறைந்த தேய்மானம், நீர் புகா தன்மை மற்றும் நீடித்த நிலைத்தன்மை ஆகியவற்றைக்கொண்ட இந்தச் சாலைகள் அதிக காலம் நீடிப்பவை.

**7. அண்மையில், NATOஇன் புதிய பொதுச்செயலராக நியமிக்கப்பட்ட மார்க் ரூட்டே, எந்த நாட்டின் பிரதமராவார்?**

அ. சிங்கப்பூர்

ஆ. இந்தோனேசியா

**இ. நெதர்லாந்து ☑**

ஈ. ஆஸ்திரேலியா



★ NATOஇன் அடுத்த பொதுச்செயலாளராக நெதர்லாந்து பிரதமர் மார்க் ரூட்டே நியமிக்கப்பட்டுள்ளார். ஜூன்.26 அன்று பிரஸ்ஸல்ஸில் NATOஇன் 32 உறுப்புநாடுகளால் அங்கீகரிக்கப்பட்ட அவர், 2024 அக்.01ஆம் தேதியன்று ஜென்ஸ்

ஸ்டோல்டன்பெர்க்கிற்குப் பிறகு பதவியேற்பார். ஹங்கேரி மற்றும் துருக்கியின் எதிர்ப்பையும், ருமேனிய அதிபர் கிளாஸ் அயோஹானிஸின் விலகலையும் தொடர்ந்து மார்க் ரூட்டேவின் நியமனம் வந்தது. கடந்த 2010 முதல் டச்சுப் பிரதமராக பணியாற்றிய அவர், மேற்கத்திய இராணுவக் கூட்டணியை வழிநடத்துவதற்காக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

**8. கலிபர் சீர்வேக ஏவுகணையை உருவாக்கிய நாடு எது?**

அ. சீனா

ஆ. ஜப்பான்

இ. இந்தியா

**ஈ. ரஷ்யா ☑**



★ ரஷ்ய கருங்கடல் கடற்படையானது அண்மையில் உக்ரேனிய உள்கட்டமைப்பை குறிவைத்து கலிபர் சீர்வேக ஏவுகணைகளை ஏவியது. ரஷ்யாவின் அல்மாஸ்–ஆன்டேயால் உருவாக்கப்பட்ட கலிபர் ஏவுகணைகளை பல்வேறு தளங்களிலிருந்து ஏவ முடியும். இதனை கப்பல் எதிர்ப்புக் கருவி, நீர்மூழ்கிக்கப்பல் எதிர்ப்புக் கருவி மற்றும் தரையில் உள்ள இலக்கைத்தாக்கும் கருவியாகவும் பயன்படுத்த முடியும். 1,300 கிலோ முதல் 2,300 கிலோ வரையிலான எடையில் உள்ள இந்த ஏவுகணைகளின் தாக்குதல் தூரம் 200 கிமீ முதல் 2500 கிமீ வரையாக உள்ளது.

**9. 'தபஸ் BH–201 UAV'ஐ உருவாக்கிய அமைப்பு எது?**

அ. JAXA

**ஆ. DRDO ☑**

இ. ISRO

ஈ. HAL



★ இந்திய வான்படை 10 TAPAS (Tactical Airborne Platform for Aerial Surveillance Beyond Horizon–201 அல்லது Tapas BH–201) என்ற ஆளில்லா விமானங்களை (UAV) வாங்க முன்வந்துள்ளது. DRDOஇன் ஏரோநாட்டிக்கல் டெவலப்மென்ட் நிறுவனத்தின்மூலம் உருவாக்கப்பட்ட இந்த டிரோன்கள், முன்பு Rustom–II என்று அழைக்கப்பட்டது. இது முப்படைகளின் உளவுத்துறை, கண்காணிப்பு, இலக்கு கையகப்படுத்தல், கண்காணிப்பு மற்றும் உளவுத்துறை (ISTAR) தேவைகளைப் பூர்த்தி செய்கிறது. 24 மணி நேர நீடிக்கும் திறனுடன் 30,000 அடி உயரத்தில் இரவும் பகலும் செயல்படும் திறன் கொண்டவை இந்த டிரோன்கள்.

**10. அண்மையில், ISROஇன் வணிகப்பிரிவான நியூஸ்பேஸ் இந்தியா லிட் (NSIL) உடனான் $18 மில்லியன் டாலர் மதிப்பிலான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட நாடு எது?**

**அ. ஆஸ்திரேலியா ☑**


ஆ. ஜப்பான்

இ. ஜெர்மனி

ஈ. பிரான்ஸ்

★ அண்மையில், விண்வெளி மைத்திரி திட்டத்தின் ஒருபகுதியாக ISROஇன் வணிகப்பிரிவான நியூஸ்பேஸ் இந்தியா லிட் உடன் ஆஸ்திரேலிய அரசு $18 மில்லியன் டாலர் மதிப்பிலான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது. இந்த முன்முயற்சியானது விண்வெளி ஆய்வில் இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவதோடு குப்பை மேலாண்மை மற்றும் நிலைத்தன்மையில் கவனம் செலுத்துகிறது. NSIL ஆனது 2026ஆம் ஆண்டில் ஆஸ்திரேலியாவின் ஸ்பேஸ் மெஷின்ஸ் நிறுவனத்தின் ஆப்டிமஸ் விண்கலத்தை ISROஇன் SSLVமூலமாக ஏவும். இது விண்வெளி தொழில் நுட்பத்தில் குறிப்பிடத்தக்க ஒத்துழைப்பைக் குறிக்கிறது மற்றும் இந்தியாவிற்கும் ஆஸ்திரேலியாவிற்கும் இடையே பொறுப்பான விண்வெளி நடவடிக்கைகளை ஊக்குவிக்கிறது.

**11. காசநோய் தொற்று மற்றும் சிகிச்சையை ஆய்வுசெய்வதற்காக ஒரு புதிய 3D நீரேறிய களி வளர்ப்பு அமைப்பை வடிவமைத்துள்ள நிறுவனம் எது?**




**அ. இந்திய அறிவியல் கழகம் (IISc) ☑**

ஆ. ஆயுர்வேத ஆய்வுகள் மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்

இ. இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகம் (ICMR)

ஈ. தேசிய காசநோய் நிறுவனம்

★ IIScஇன் உயிரி–பொறியியல் துறையின் ஆராய்ச்சியாளர்கள் பாலூட்டிகளின் நுரையீரல் சூழலைப்பிரதிபலிக்கும் 3D நீரேறிய களி வளர்ப்பு அமைப்பை (3D Hydrogel Culture System) உருவாக்கியுள்ளனர். இக்கண்டுபிடிப்பு நுரையீரல் செல்களில் காசநோய் பாக்டீரியா தொற்றுகுறித்த துல்லியமான கண்காணிப்பு மற்றும் ஆய்வுக்கு வழிவகுக்கிறது. காசநோய் சிகிச்சை முறைகளின் செயல்திறனைச்சோதிக்கும் ஒரு வலுவான தளமாக இவ்வமைப்பு செயல்படுகிறது.

**12. சமீபத்தில், லீட்ஸ் பல்கலைக்கழகத்துடனான ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட நிறுவனம் எது?**

அ. ஐஐடி கான்பூர்

ஆ. ஐஐடி தில்லி

**இ. ஐஐடி மெட்ராஸ் ☑**

ஈ. ஐஐடி பம்பாய்

★ ஐஐடி மெட்ராஸும் இங்கிலாந்தில் அமைந்துள்ள லீட்ஸ் பல்கலைக்கழகமும் இணைந்து நிலையான வளர்ச்சிக்கான கூட்டு மெய்நிகர் மையத்தை அமைக்க புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளன. இந்த ஒப்பந்தம் நிலையான வளர்ச்சி இலக்குகளை அடைவதில் தாக்கம்மிக்க ஆராய்ச்சி மற்றும் புதுமைகளை வளர்ப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. பாடத்திட்டங்கள், கருத்தரங்குகள், ஆய்வரங்குகள், விரிவுரைகள்போன்ற கூட்டான கல்வி செயல்பாடுகளை ஏற்பாடு செய்யவும், கூட்டான ஆராய்ச்சித் திட்டங்களை உருவாக்கவும் இப்புரிந்துணர்வு ஒப்பந்தம் வகைசெய்கிறது. மேலும், இதன்மூலம் கல்வி அனுபவங்களை வளப்படுத்தி, சிக்கலான சவால்களைத் தீர்ப்பதற்கான அர்ப்பணிப்புடன் கூடிய நிபுணர்களின் உலகளாவிய வலையமைப்பு வலுப்பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. பசிபிக் பெருங்கடலை ஒட்டிய 29 நாடுகள் போர் பயிற்சி: இந்தியக்கடற்படை பங்கேற்பு.**

உலகின் மிகப்பெரும் கடற்சார் போர் பயிற்சியான, 'ரிம் ஆஃப் தி பசிபிக்' (RIMPAC) பயிற்சியில் இந்தியக் கடற்படை பங்கேற்றது. ஹவாய் தீவில் நடைபெறும் இந்தப்பயிற்சியில் 29 நாடுகள், 40 கப்பல்கள், 3 போர்க்கப்பல்கள், 150க்கும் மேற்பட்ட விமானங்கள் மற்றும் 25,000க்கும் மேற்பட்ட கடற்படை வீரர்கள் பங்கேற்கின்றனர்.

இந்தப் பயிற்சியில் பங்கேற்பதற்காக தென்சீனக்கடல் மற்றும் வட பசிபிக் பெருங்கடலில் நிலைநிறுத்தப்பட்டிருந்த இந்தியாவின் பல்நோக்கு போர்க்கப்பலான ஷிவாலிக், பேர்ல் ஹார்பரைச் சென்றடைந்தது. நடப்பாண்டுக்கான RIMPAC பயிற்சியின் கருப்பொருள், "ஒருங்கிணைந்த & தயார்நிலையிலான கூட்டமைப்பு நாடுகள்" என்பதாகும்.

---

**2. இராணுவ புதிய தலைமைத்தளபதியாக உபேந்திர துவிவேதி பொறுப்பேற்பு.**

இந்தியாவின் 30ஆம் ராணுவ தலைமைத்தளபதியாக உபேந்திர துவிவேதி பொறுப்பேற்றார். ராணுவ தலைமைத் தளபதியாக இருந்த மனோஜ் பாண்டேயின் பதவிக்காலம் ஜூன்.30ஆம் தேதியன்று நிறைவடைந்ததையடுத்து உபேந்திர துவிவேதி பொறுப்பேற்றுக்கொண்டார்.

---

**3. வெங்கையா குறித்த மூன்று நூல்கள்: பிரதமர் நரேந்திர மோதி வெளியிட்டார்.**

முன்னாள் குடியரசுத்துணைத்தலைவர் வெங்கையாவின் வாழ்க்கை, அரசியல் பயணம் குறித்த மூன்று நூல்களை பிரதமர் நரேந்திர மோதி வெளியிட்டார். வெங்கையாவின் வாழ்க்கை வரலாறு, "வெங்கையா நாயுடு–லைஃப் இன் சர்வீஸ்" என்ற பெயரில் நூலாக வெளியிடப்பட்டுள்ளது. இதுதவிர, "செலிபிரேட் பாரத்", 13ஆவது குடியரசுத்துணைத் தலைவராக வெங்கையாவின் இலக்கை நோக்கிய பயணம் மற்றும் செய்தி ஆகிய நிழற்படத்தொகுப்பு நூல்களும் வெளியிடப்பட்டன. ஆங்கிலத்தில் மட்டுமல்லாது, வெங்கையாவின் தாய்மொழியான தெலுங்கிலும் அவரது வாழ்க்கை வரலாற்று நூல் வெளியாகியுள்ளது.

---

**4. SCO உச்சிமாநாடு.**

ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பில் இந்தியா, சீனா, ரஷ்யா, பாகிஸ்தான், கஜகஸ்தான், கிர்கிஸ்தான், தஜிகிஸ்தான், உஸ்பெகிஸ்தான் ஆகிய 8 நாடுகள் இடம்பெற்றுள்ளன. பெரும் சர்வதேச அமைப்புகளில் ஒன்றாக உருவெடுத்துள்ள ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு, செல்வாக்கு மிகுந்த பொருளாதார, பாதுகாப்பு அமைப்பாக விளங்குகிறது. இந்த அமைப்பின் 24ஆவது உச்சிமாநாடு கஜகஸ்தானின் தலைநகரம் அஸ்தானாவில் ஜூலை.03, 04 ஆகிய தேதிகளில் நடைபெறவுள்ளது.

---

# IMPORTANT LINKS

TNPSC CURRENT AFFAIRS

https://www.winmeen.com/tnpsc-tamil-current-affairs/

WINMEEN: INSTALL THE WINMEEN APP
DAILY FREE & PREMIUM TNPSC STUDY MATERIALS & ONLINE TEST

https://play.google.com/store/apps/details?id=co.robin.jbzwb

WINMEEN: WINMEEN TNPSC TEST SERIES - SAMACHEER LESSON WISE TEST + PREVIOUS YEAR MODEL TEST FOR TNPSC GROUP 1,2, 4 & VAO

https://wp.me/p7JanY-ag8

---

**1. அண்மையில், இந்தியாவின் தொழில்முறை கோல்ஃப் சுற்றுப்பயணத்தின் புதிய தலைவராக நியமிக்கப்பட்டவர் யார்?**

அ. யுவராஜ் சிங்

**ஆ. கபில் தேவ் ☑**

இ. சச்சின் டெண்டுல்கர்

ஈ. நீரஜ் சோப்ரா



★ புகழ்பெற்ற இந்திய கிரிக்கெட் வீரரும், ஆர்வமுள்ள தொழிற்முறையல்லாத கோல்ப் வீரருமான கபில் தேவ், இந்தியாவின் தொழில்முறை கோல்ஃப் சுற்றுப்பயணத்தின் (PGTI) புதிய தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். கடந்த 1983ஆம் ஆண்டு கிரிக்கெட் உலகக்கோப்பையை வென்ற இந்திய அணியின் கேப்டனாக இருந்த கபில் தேவ், துணைத்தலைவராகவும், PGTIஇன் ஆளும் குழுவின் உறுப்பினராகவும் பணியாற்றியுள்ளார். "Haryana Hurricane" என்று அழைக்கப்படும் அவர், 2006இல் PGTIஇன் தொடக்கத்திலிருந்து, நாடு முழுவதும் போட்டிகளை ஏற்பாடு செய்து, இந்தியாவில் தொழிற்முறை கோல்ஃபை ஊக்குவிப்பதில் முக்கிய பங்கு வகித்தார்.

**2. உத்தர பிரதேச மாநிலத்தின் எந்த மாவட்டம், 'கத்திகளின் நகரம்' என்று அழைக்கப்படுகிறது?**

**அ. இராம்பூர் ☑**

ஆ. சஹாரன்பூர்

இ. மிர்சாபூர்

ஈ. ரேபரேலி



★ "கத்திகளின் நகரம்" என்று அழைக்கப்படும் உத்தர பிரதேச மாநிலத்தின் இராம்பூர் மாவட்டம், பதினெட்டாம் (18ஆம்) நூற்றாண்டிலிருந்து புகழ்பெற்ற ராம்புரி சாக்குவை வடிவமைத்து வருகிறது. கைவினைத்திறன் மற்றும் அரச விசுவாசத்தின் சின்னங்களாகப் பார்க்கப்படும் இந்தக் கத்திகள், உயர்தர எஃகுமூலம் தயாரிக்கப்படுகின்றன. எலும்பு, கொம்பு அல்லது தந்தத்தின் கைப்பிடிகளுடன் வெகு நுணுக்கமாக இவை செய்யப்படுகின்றன. வன்முறையைக் குறைக்கும் நோக்கில் 1990 வாக்கில் இக்கத்திகளுக்குத் தடைவிதிக்கப்பட்டபோதிலும், ராம்பூர் கைவினைஞர்கள் தங்கள் கைவினைப் பாரம்பரியத்தைப் பாதுகாத்து, அதனை சட்டப்பூர்வமாக மாற்றியமைத்தனர்.

**3. காண்டாமிருகங்களைப் பாதுகாப்பதற்காக, 'ரைசோடோப்' என்ற திட்டத்தைத் தொடங்கியுள்ள நாடு எது?**

**அ. தென்னாப்பிரிக்கா ☑**

ஆ. ஜிம்பாப்வே

இ. நியூசிலாந்து

ஈ. இந்தியா



★ தென்னாப்பிரிக்க அறிவியலாளர்கள், "ரைசோடோப்" என்ற திட்டத்தைத் தொடங்கியுள்ளனர். காண்டாமிருகங்கள் கொம்புகளுக்காக வேட்டையாடப்படுவதைத் தடுக்கும் நோக்கோடு அவற்றின் கொம்புகளில் கதிரியக்கப்பொருட்கள் செலுத்தப்படும். கொம்புகளை கண்டறியக்கூடியதாகவும், நுகர்வுக்கு நச்சுத்தன்மையுடையதாகவும் மாற்றுவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். 20 காண்டாமிருகங்களை உள்ளடக்கிய இந்தச் செயல்முறையானது துளையிடுதல், ரேடியோஐசோடோப்புகளைச் செருகுதல் மற்றும் நுண்புள்ளிகள் மற்றும் சில்லுகளைச்சேர்ப்பது ஆகியவை அடங்கும்.

**4. அண்மையில், இமயமலைப்பகுதிகளில், 'அயனமண்டல மின்னலைக்கண்ட (Gigantic Jets)' அமைப்பு எது?**

அ. JAXA

ஆ. ISRO

**இ. NASA ☑**

ஈ. CNSA



★ NASA சமீபத்தில் இமயமலைப்பகுதிகளில் பிரம்மாண்ட அயனமண்டல மின்னல்களைக் கண்டுள்ளது. இவ்வரிய மற்றும் ஆற்றல்மிகு மின்னல்கள் மேகத்தின் உச்சியிலிருந்து விண்வெளியின் விளிம்புவரை நீண்டு, வழமையான மின்னலிலிருந்து வேறுபடுகின்றன. 21ஆம் நூற்றாண்டில் மட்டுமே ஆவணப்படுத்தப்பட்ட, இந்த பிரம்மாண்ட அயன மண்டல மின்னல்களின் அடிப்பகுதி நீலநிற பிரம்மாண்ட அயனமண்டல மின்னல்களை ஒத்துள்ளது; அதே சமயம் அதன் மேற்பகுதி சிவப்பாக உள்ளது. இக்கண்டுபிடிப்பு வளிமண்டல நிகழ்வுகள்பற்றிய நமது புரிதலை அதிகரிக்கிறது.

**5. பாலூட்டி விலங்கான, 'பெருநில மலையாட்டின்' காரணமாக அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற ரைமோனா தேசியப்பூங்கா அமைந்துள்ள மாநிலம் எது?**



அ. ஒடிஸா

**ஆ. அஸ்ஸாம் ☑**

இ. மத்திய பிரதேசம்

ஈ. சிக்கிம்

★ அஸ்ஸாம் மாநிலத்தின் ரைமோனா தேசியப்பூங்காவில், கடல் மட்டத்திலிருந்து 96 மீட்டர் உயரத்தில், மனிதர்கள் வசிக்கும் இடத்திற்கருகில், ஓர் ஆடு அல்லது மானின் தோற்றுத்துக்கு இடைப்பட்ட ஒரு பாலூட்டி இனமான 'பெருநில மலையாடு' தென்பட்டது. அறிவியலாளர்களின் குழுவால் ஆவணப்படுத்தப்பட்ட இந்தக் கண்டுபிடிப்பு ஜர்னல் ஆஃப் த்ரெட்டென்ட் டாக்ஸாவில் வெளியிடப்பட்டது. இந்தியா–பூடான் எல்லைப்பகுதியில் வழக்கமாக 200–3,000 மீட்டர் உயரத்தில் காணப்படும் மலையாடுகள், பூங்காவின் பல்லுயிர் பாதுகாப்பு முயற்சிகளை எடுத்துக்காட்டுகிறது.

**6. அண்மையில், MND 'விழிப்புணர்வு, கவனிப்பு மற்றும் மேலாண்மை' பற்றிய 3ஆவது ஆண்டு மாநாடு நடைபெற்ற இடம் எது?**

அ. AIIMS, பாட்னா

ஆ. KGMU, லக்னௌ

**இ. NIMHANS, பெங்களூரு ☑**

ஈ. AIIMS, தில்லி

★ பெங்களூருவில் உள்ள NIMHANSஇல் நடைபெற்ற MND 'விழிப்புணர்வு, கவனிப்பு மற்றும் மேலாண்மை'பற்றிய வருடாந்திர மாநாடு, அறிகுறி மற்றும் ஆதரவான சிகிச்சைகளின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தது. இயக்கு நரம்பணு நோய்கள் மூளை மற்றும் முதுகுத்தண்டில் உள்ள இயக்கு நரம்பணுக்களை பாதிக்கும் ஒரு நரம்பியல் கோளாறு நோயாகும். இது பொதுவாக 50 வயதிற்குப் பிறகு தசை பலவீனம், பேச்சு மந்தம் மற்றும் பக்கவாதத்திற்குக் காரணமாக அமைகிறது. இதற்கான சரியான காரணங்கள் இதுவரை கண்டறியப்படவில்லை; இருப்பினும் சில நிகழ்வுகள் மரபணு ரீதியாக ஏற்படுகின்றன. இந்நோய் பெண்களைவிட ஆண்களை அதிகம் பாதிக்கிறது.

**7. '*Steriphopus wangala*' என்பது சார்ந்த இனம் எது?**



அ. மீன்


**ஆ. சிலந்தி ☑**

இ. தவளை

ஈ. வண்ணத்துப்பூச்சி

★ மேகாலயா மாநிலத்தின் மேற்கு கரோ மலைப்பகுதியில், '*Steriphopus wangala*' என்ற புதியதொரு சிலந்தி இனம் கண்டுபிடிக்கப்பட்டது. காரோ சமூகத்தின் 'வாங்கலா' அறுவடை திருவிழாவின் பெயரால் அழைக்கப்படும் இந்தச் செம்பழுப்பு நிறத்தைக் கொண்ட சிலந்தி, '*Palpimanidae*' சிலந்தி குடும்பத்தைச் சார்ந்ததாகும்.

**8. NASAஇன் ஜூனோ புரோப் என்ற விண்கலம் கீழ்க்காணும் எந்தக் கோளைச் சுற்றிவந்து ஆய்வுசெய்வதற்காக வடிவமைக்கப்பட்டது?**



**அ. வியாழன் ☑**

ஆ. செவ்வாய்

இ. சனி

ஈ. வெள்ளி

★ NASAஇன் ஜூனோ ஆய்வுக்கலத்தின் புதிய கண்டுபிடிப்புகள் வியாழனின் நிலவு அயோவில் எரிமலை ஏரிகளின் அளவை வெளிப்படுத்துகின்றன. 2011இல் ஏவப்பட்ட ஜூனோ, வியாழனின் தோற்றம் மற்றும் மாற்றங்களை ஆய்வு செய்யும் நோக்கத்திற்காக வடிவமைக்கப்பட்டது. 2016இல் வியாழனை சென்றடைந்த இது 11 நாட்களுக்கு ஒருமுறை வியாழனைச் சுற்றிவருகிறது. ஆரம்பத்தில் 5 ஆண்டு வரை பணிசெய்ய உருவாக்கப்பட்ட இதன் பணிக்காலம் 2025 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. இந்த நீட்டிக்கப்பட்ட பயணகாலத்தின்போது, ஜூனோ வியாழனின் நிலவுகளான கனிமீடு, யூரோபா மற்றும் அயோ மற்றும் அதன் வளிமண்டலம் மற்றும் வளையங்களை ஆராயும்.

**9. அண்மையில், High-Speed Expendable Aerial Target (HEAT) 'ABHYAS'இன் ஆறு தொடர்ச்சியான மேம்பாட்டு சோதனைகளை வெற்றிகரமாக முடித்த அமைப்பு எது?**



அ. JAXA

**ஆ. DRDO ☑**

இ. ISRO

ஈ. HAL

★ பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பானது (DRDO) அண்மையில் ஒடிஸாவின் சந்திப்பூரில் High-Speed Expendable Aerial Target (HEAT) 'ABHYAS'இன் தொடர்ச்சியான மேம்பாட்டு சோதனைகளை வெற்றிகரமாக நிறைவுசெய்தது. DRDOஇன் ஏரோநாட்டிக்கல் டெவலப்மென்ட் எஸ்டாப்லிஷ்மென்ட் வடிவமைத்து, ஹிந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் லிட் மற்றும் லார்சன் & டூப்ரோ ஆகியோரால் உருவாக்கப்பட்ட இது, ஆயுத அமைப்பு பயிற்சிக்கான யதார்த்தமான அச்சுறுத்தல் காட்சிகளை வழங்குகிறது. இது தன்னிச்சையாக பறப்பது மற்றும் பறத்தலுக்குப் பிந்தைய பகுப்பாய்வுக்கான தரவுப்பதிவுகளைக் கொண்டிருப்பது போன்ற பல்வேறு திறன்களைக் கொண்டுள்ளது.

**10. அண்மையில், காமன்வெல்த் ஊராட்சி அரசு மன்றத்தின் (CLGF) வருடாந்திர வாரியக் கூட்டம் நடைபெற்ற இடம் எது?**




அ. இந்தியா

**ஆ. இலங்கை ☑**

இ. பூட்டான்

ஈ. சீனா

★ "Reinforcing Social Resilience through Women's Political Representation" என்ற கருப்பொருளின்கீழ், இலங்கையில் நடைபெற்ற காமன்வெல்த் ஊராட்சி அரசு மன்றத்தின் வருடாந்திர வாரியக் கூட்டத்தில் இந்தியா பங்கேற்றது. 1995 முதல் லண்டனை தலைமையிடமாகக் கொண்டு இயங்கி வரும் காமன்வெல்த் ஊராட்சி அரசு மன்றம் (CLGF), இந்தியா உட்பட ஐம்பத்தாறு காமன்வெல்த் நாடுகளில் உள்ள ஊராட்சி அரசாங்கங்கள் மற்றும் அமைச்சகங்களை ஒன்றிணைக்கிறது. SDG 5 இலக்குகளுடன் இணைந்து, பொது வாழ்வில் பெண்களின் ஆர்வமிகு பங்கேற்பை ஆதரிப்பதற்காக உள்ளூர் நிர்வாகத்தில் பாலின சமத்துவத்தை இது பரிந்துரைக்கிறது.

**11. அண்மையில், மகாராஷ்டிராவின் எந்தப் புலிகள் காப்பகத்தில் காட்டுத்தீயை முன்கூட்டியே கண்டறிவதற்கான மேம்பட்ட செயற்கை நுண்ணறிவு (AI) அமைப்பு அறிமுகப்படுத்தப்பட்டது?**

அ. நவேகான் நாஜிரா புலிகள் காப்பகம்

**ஆ. பெஞ்ச் புலிகள் காப்பகம் ☑**

இ. தடோபா அந்தாரி புலிகள் காப்பகம்

ஈ. ஷயாத்ரி புலிகள் காப்பகம்



★ காட்டுத்தீயை முன்கூட்டியே கண்டறிவதற்கான மேம்பட்ட செயற்கை நுண்ணறிவு (AI) அமைப்பு பெஞ்சச் புலிகள் காப்பகத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது. மகாராட்டிரம் மற்றும் மத்திய பிரதேச மாநிலத்தில் பரவியுள்ள பெஞ்ச் புலிகள் காப்பகம், வெப்பமண்டல ஈரமான இலையுதிர் காடுகள் மற்றும் தேக்கு உள்ளிட்ட பல்வேறு மர வகைகளுக்கு பெயர் பெற்றதாகும். 1975இல் தேசியப்பூங்காவாகவும், 1992ஆம் ஆண்டில் புலிகள் காப்பகமாகவும் அறிவிக்கப்பட்ட இந்தக் காப்புக்காடு, பெஞ்ச் ஆற்றால் பிரிக்கப்பட்டுள்ளது. இது பல்வேறு விதமான விலங்குகள் மற்றும் தாவரங்களுடன் வளமான பல்லுயிர்ப் பெருக்கத்தைக் கொண்டுள்ளது.

**12. புவன் பஞ்சாயத்து 4.0 மற்றும் அவசரநிலை மேலாண்மைக்கான தேசிய தரவுத்தளம் ஆகியவற்றுக்கான தேசிய அளவிலான புவிசார் தரவுத்தளங்களை உருவாக்கிய அமைப்பு எது?**

அ. JAXA

**ஆ. ISRO ☑**

இ. NASA

ஈ. CNSA




★ இந்திய விண்வெளி ஆய்வமைப்பான ISRO உருவாக்கிய 'புவன் பஞ்சாயத்து 4.0, அவசரகால மேலாண்மைக்கான தேசிய தரவுத்தளம் 5.0 (National Database for Emergency Management (NDEM 5.0)) ஆகிய இரண்டு புதிய தகவல் இணையதளங்களை மத்திய விண்வெளித்துறை இணையமைச்சர் தொடக்கி வைத்தார்.

★ கிராமப்புற ஊராட்சிகளில் அடிமட்டத்தில் உள்ள மக்களுக்கு அதிகாரம் அளிப்பதற்கு புவன் பஞ்சாயத்து தளம் உதவும். மேலும் நிலப்பதிவுகளுக்கு உள்ளூர் நிர்வாகத்தை சார்ந்திருக்க வேண்டிய அவசியத்தை இது குறைப்பதோடு அடித் தள நிலையில் ஊழலைக்குறைக்கும். இயற்கைப்பேரிடர்கள் குறித்த விண்வெளி அடிப்படையிலான உள்ளீடுகளை வழங்குகின்ற பேரிடர் அபாய குறைப்புக்கு உதவுகின்ற அவசரகால மேலாண்மைக்கான தேசிய தரவுத்தளம் 5.0 இயற்கை சீற்றங்களிலிருந்து மக்களைக் காக்கும்.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. 3, 5, 8ஆம் வகுப்புகளுக்கு பொதுத்தேர்வு கூடாது.**

தமிழ்நாட்டில் மாநில பாடத்திட்டத்தில் 3, 5, 8ஆம் வகுப்புகளுக்கு பொதுத்தேர்வு நடத்தக்கூடாது உள்ளிட்ட பல்வேறு பரிந்துரைகள் மாநில கல்விக்கொள்கை பரிந்துரை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இக்கல்விக்கொள்கையை வடிவமைக்க ஓய்வுபெற்ற நீதிபதி த முருகேசன் தலைமையில் பதினான்கு பேர்கொண்ட குழு 2022ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது.

---

**2. 58 இலட்சம் குழந்தைகளுக்கு வைட்டமின்–A மருந்து.**

பொதுவாக குழந்தைகளுக்கு பிறந்தவுடன் தாயிடமிருந்து கிடைக்கப்பெறும் வைட்டமின்–A சத்து, அதற்கடுத்த ஆறு மாதங்களில் இருந்து குறையத்தொடங்கும். ஒரு கட்டத்தில் அந்தச் சத்து மிகவும் குறைந்தால், குழந்தைக்கு வளர்ச்சி குறைபாடு, வயிற்றுப்போக்கு, கண்பார்வை குறைபாடு ஏற்பட வாய்ப்புள்ளது. அதைக் கருத்தில்கொண்டு மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பில் ஆண்டுதோறும் ஆறு மாதங்கள் முதல் ஐந்து வயது வரையிலான குழந்தைகளுக்கு, வைட்டமின்–A மருந்து கொடுக்கப்படுகிறது. 11 மாதங்களுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கு 1 மிலி மருந்தும், ஒரு வயது முதல் ஐந்து வயது உள்ள குழந்தைகளுக்கு 2 மிலி மருந்தும் கொடுக்கப்படும்.

---


## IMPORTANT LINKS

TNPSC Current Affairs

https://www.winmeen.com/tnpsc-tamil-current-affairs/


Winmeen: Install the Winmeen App
Daily Free & Premium Tnpsc Study Materials & Online Test

https://play.google.com/store/apps/details?id=co.robin.jbzwb

Winmeen: Winmeen Tnpsc Test Series - Samacheer lesson Wise Test + Previous Year Model Test for Tnpsc Group 1,2, 4 & VAO

https://wp.me/p7JanY-ag8

**1. 2024 – செயற்கை நுண்ணறிவுத் தயார்நிலைக் குறியீட்டில் (AIPI) இந்தியாவின் தரநிலை என்ன?**



அ. 65ஆவது

**ஆ. 72ஆவது ☑**

இ. 85ஆவது

ஈ. 62ஆவது

★ பன்னாட்டு செலாவணி நிதியம் (IMF) AI தயார்நிலை குறியீட்டு (AIPI) தகவல் பலகையை அறிமுகப்படுத்தியுள்ளது. அதன்படி, 174 நாடுகள் AI தொழில்நுட்பங்களைப் பின்பற்றத் தயாராகவுள்ளன. குறைந்த வருமானம் கொண்ட நாடுகள் (LIC), வளர்ந்து வரும் சந்தைப்பொருளாதாரங்கள் (EM) மற்றும் மேம்பட்ட பொருளாதாரங்கள் (AE) ஆகியவை இதிலடங்கும். சிங்கப்பூர், டென்மார்க் மற்றும் அமெரிக்கா ஆகியவை AE பிரிவில் முன்னணியில் உள்ளன, அதே நேரத்தில், EM பிரிவில் உள்ள இந்தியா 0.49 மதிப்பெண்களுடன் 72ஆவது இடத்தில் உள்ளது. வங்காளதேசம் மற்றும் இலங்கை போன்ற அண்டை நாடுகளுடன் ஒப்பிடும்போது சீனா 0.63 மதிப்பெண்களுடன் 31ஆவது இடத்தில் உள்ளது.

**2. இந்திய நாட்டுப்புற மற்றும் பழங்குடியினக் கலைகளை, வசீகரிக்கும் விதத்தில் காட்சிப்படுத்தும், "ஹுனார்" என்ற கண்காட்சியை நடத்திய நகரம் எது?**

அ. வாரணாசி

ஆ. காஞ்சிபுரம்

**இ. துபாய் ☑**

ஈ. பாரிஸ்

★ துபாய் கலை மையமானது இந்தியாவின் வளமான நாட்டுப்புற மற்றும் பழங்குடியினரின் கலை பாரம்பரியத்தை வெளிப்படுத்தும், "ஹுனார்" என்ற கண்காட்சியை நடத்தியது. விதேஷா பாண்டே ஏற்பாடு செய்துள்ள இந்தக் கண்காட்சியில் இராமாயண ஓவியம், உத்தரகாண்டின் ஐபன் கலை, பீகாரின் மதுபானி கலை, மகாராஷ்டிராவின் வார்லி கலை மற்றும் சத்தீஸ்கரின் முரியா கலை உள்ளிட்ட பல்வேறு படைப்புகள் காட்சிப்படுத்தப்பட்டன. இந்தக் கண்காட்சியானது இந்தியாவின் கலாச்சார பன்முகத்தன்மை மற்றும் குறைவான பிரதிநிதித்துவம் கொண்ட கலை வடிவங்களை முன்னிலைப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

**3. அண்மையில் தனது மாநில பள்ளிப்பாடத்திட்டத்தில் அவசரநிலை பற்றிய அத்தியாயத்தை சேர்ப்பதாக அறிவித்த மாநில அரசு எது?**



அ. தமிழ்நாடு

**ஆ. மத்திய பிரதேசம் ☑**

இ. கேரளா

ஈ. அருணாச்சல பிரதேசம்

★ மத்திய பிரதேச மாநில முதலமைச்சர் மோகன் யாதவ், 1975–77இன் அவசரநிலை குறித்த புதிய பள்ளி பாடத்திட்ட அத்தியாயத்தை அறிவித்தார். இந்த அத்தியாயம் அந்தக் காலகட்டத்திய, "அதிகப்படியான மற்றும் அடக்குமுறையை" எடுத்துக்கூறும். அவசரநிலைக்கு எதிரான போராட்டம்குறித்து இளைய தலைமுறையினருக்கு அறிவூட்டுவது இதன் நோக்கமாகும்.

**4. அண்மையில், 'முதலமைச்சர் மஜி லட்கி பகின்' என்ற திட்டத்தை அறிமுகப்படுத்திய மாநில அரசு எது?**

**அ. மகாராஷ்டிரா ☑** ஆ. ஒடிசா

இ. குஜராத் ஈ. கேரளா

★ மகாராஷ்டிர மாநிலத்தில் தொடங்கப்பட்ட முதலமைச்சர் மஜி லட்கி பகின் திட்டம், பெண் குழந்தைகளுக்கு இலவச கல்வி மற்றும் வேலையற்றோருக்கு ஆதரவினை வழங்குகிறது. இத்திட்டத்தின்கீழ், 21–60 வயதுடைய தகுதியான பெண்களுக்கு மாதந்தோறும் ₹1500 வழங்கப்படும். நிதிச்சுதந்திரம் மற்றும் தன்னம்பிக்கையை மேம்படுத்துவதை நோக்கமாகக்கொண்ட இத்திட்டமானது 46,000 கோடி மதிப்பிலான திட்ட மதிப்பீட்டைக் கொண்டது. பெண்களுக்கு பல்வேறு சலுகைகளை வழங்குதல், அவர்களின் வளர்ச்சி மற்றும் ஒட்டுமொத்த நல்வாழ்வை மேம்படுத்துதல் இதன் முதன்மை நோக்கமாகும்.

**5. அண்மையில், நிதியியல் நடவடிக்கை பணிக்குழு (FATF) கூட்டம் நடைபெற்ற இடம் எது?**

அ. சீனா

ஆ. பிரான்ஸ்

இ. இந்தோனேசியா

**ஈ. சிங்கப்பூர் ☑**

★ 2024 ஜூன்.26–28 வரை சிங்கப்பூரில் நடைபெற்ற அதன் முழுமையான கூட்டத்திற்குப் பிறகு, நிதி நடவடிக்கை பணிக்குழுமூலம் இந்தியா, "வழக்கமான பின்தொடர்தல் பிரிவில்" வைக்கப்பட்டுள்ளது. இந்தக் கூட்டம் பணமோசடி எதிர்ப்பு, பயங்கரவாத எதிர்ப்பு குறித்து 17 நாடுகளை மதிப்பீடு செய்தது. இந்தியா, ரஷ்யா, பிரான்ஸ், இத்தாலி மற்றும் இங்கிலாந்து ஆகியவை, "வழக்கமான பின்தொடர்தல்" பிரிவில் வைக்கப்பட்டன. அதே நேரத்தில் ஒரு நாடு மட்டும் சாம்பல்–பட்டியலில் வைக்கப்பட்டது.

**6. GSAT 20 செயற்கைக்கோளின் முதன்மை நோக்கம் என்ன?**

அ. பூமி கண்காணிப்பு

**ஆ. தகவல் தொடர்பு ☑**

இ. வானிலை கண்காணிப்பு

ஈ. வழிசெலுத்தல்




★ முதன்முறையாக, ISRO தனது சமீபத்திய பெரிய செயற்கைக்கோளான GSAT 20ஐ ஸ்பேஸ்Xஇன் பால்கன்–9 ஏவுகலத்தின்மூலம் ஏவவுள்ளது. உயர்தொழில்நுட்ப தகவல் தொடர்பு செயற்கைக்கோளான GSAT 20, 4,700 கிகி எடையும், 48 Gbps தகவல் பரிமாற்றத் திறனும் கொண்டதாகும். இது இந்தியா முழுவதையும், குறிப்பாக வடகிழக்குப் பகுதியை உள்ளடக்கிய 32 இடக்குறிக் கற்றைகளைக் கொண்டுள்ளது. ISROஇன் வணிகப்பிரிவான NSIL–க்கு சொந்தமான இது, இந்தியாவின் LV Mk–IIIஇன் வரம்புகள் காரணமாக SpaceXஇன் ஏவுகலத்தைப் பயன்படுத்துகிறது.

**7. அண்மையில், 'மினி ரத்னா' அந்தஸ்தைப்பெற்ற மத்திய மின்னணு நிறுவனம் (CEL) சார்ந்த அமைச்சகம் எது?**

**அ. அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகம் ☑**

ஆ. எரிசக்தி அமைச்சகம்

இ. மின்னணு மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்ப அமைச்சகம்

ஈ. MSME அமைச்சகம்

विज्ञान एवं प्रौद्योगिकी मंत्रालय
MINISTRY OF SCIENCE AND TECHNOLOGY
सत्यमेव जयते

★ மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகத்தின் அறிவியல் மற்றும் தொழில்துறை ஆராய்ச்சித் துறையின் கீழ் உள்ள ஓர் இந்திய அரசு நிறுவனமான மத்திய மின்னணு நிறுவனத்திற்கு (CEL), அண்மையில் "மினி ரத்னா" (வகை–1) அந்தஸ்து வழங்கப்பட்டது. கடந்த 1974ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட CEL, தேசிய ஆய்வகங்கள் மற்றும் R&D நிறுவனங்களின் உள்நாட்டு தொழில்நுட்பங்களை வணிகமயமாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

★ சூரிய ஆற்றல் அமைப்புகள், உத்திசார் மின்னணுவியல் மற்றும் பல்வேறு உயர்–தொழில்நுட்பப்பகுதிகள், சூரிய மின்கலங்கள், ரெயில்வே சமிக்ஞை வழங்கு கருவிகள் மற்றும் பாதுகாப்புப் பயன்பாடுகளுக்கான கூறுகளை உற்பத்தி செய்வதில் CEL சிறந்து விளங்குகிறது.

**8. அண்மையில், ரெயில்வே பாதுகாப்புப் படை (RPF) அறிமுகப்படுத்திய சங்யான் செயலியின் முதன்மை நோக்கம் என்ன?**

அ. ரெயில் அட்டவணையை வழங்குதல்

**ஆ. குற்றவியல் சட்டங்கள்பற்றிய தகவல்களை RPF பணியாளர்களுக்குக் கற்பித்தல் ☑**

இ. ரெயில் பயணச்சீட்டு முன்பதிவுகளைக் கண்காணித்தல்

ஈ. RPF பணியாளர்களுக்கு சுகாதார ஆலோசனைகளை வழங்க

★ நடுவணரசின் மூன்று புதிய குற்றவியல் சட்டங்களான சட்டரீதியான மேற்கோளுக்கு விரிவான செயலி–சங்யான் செயலியை ரெயில்வே பாதுகாப்புப்படை தலைமை இயக்குநர் தொடக்கி வைத்தார். இந்திய நியாயச் சட்டம், இந்திய சிவில் பாதுகாப்புச் சட்டம் மற்றும் இந்திய சாட்சியச்சட்டம் ஆகிய மூன்று புதிய குற்றவியல் சட்டங்கள்பற்றி ரெயில்வே பாதுகாப்புப்படையின் தொழில்நுட்ப குழுவினருக்கு விரிவான தகவல் வழங்க ஏதுவாக, இப்புதிய சங்யான் செயலி உருவாக்கப்பட்டுள்ளது. இந்தச் செயலி, ரெயில்வே பாதுகாப்புப் படையினருக்கு சட்டங்கள்பற்றி எடுத்துரைத்து அதிகாரமளிக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**9. அனைவருக்கும் ஆரோக்கியத்தை உறுதிசெய்வதற்காக அண்மையில் மெய்நிகர் NQAS மதிப்பீடு மற்றும் தள உணவு உரிம (spot food licence) முயற்சியைத் தொடங்கியுள்ள அமைச்சகம் எது?**

அ. பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம்

**ஆ. சுகாதாரம் மற்றும் குடும்பநல அமைச்சகம் ☑**

இ. அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகம்

ஈ. மின்சார அமைச்சகம்

★ மத்திய சுகாதாரம் மற்றும் குடும்பநலத்துறை ஆயுஷ்மான் பாரத் திட்டம் தொடர்பான மூன்று முன்முயற்சிகளைத் தொடங்கியுள்ளது. சுகாதார சேவைகளின் தரத்தை மேம்படுத்துவதில் இந்த முயற்சிகள் முக்கியப் பங்கு வகிக்கும். ஆயுஷ்மான் ஆரோக்கிய மையங்களுக்கான மெய்நிகர் தேசிய தர உத்தரவாத தரநிலைகள் மதிப்பீட்டு நடைமுறை, ஒருங்கிணைந்த பொது சுகாதார ஆய்வகங்களுக்கான தரநிலைகள் வெளியிடுதல், உணவுப் பாதுகாப்பு அமைப்பு மூலம் உரிமங்கள் மற்றும் பதிவுகளை உடனடியாக வழங்குவதற்கான புதிய நடைமுறை ஆகியன அம்மூன்று முயற்சிகளாகும். இந்த முன்முயற்சிகள் அனைவருக்கும் தரமான சுகாதார சேவைகளை வழங்கும்.

★ இந்த முன்முயற்சிகள் பொது சுகாதார வசதிகளின் தரத்தை மேம்படுத்த வழிவகுக்கும் என்றும், உணவு தொடர்பான உடனடி உரிம நடைமுறையை அறிமுகப்படுத்துவது இத்துறையில் வணிகம் செய்வதை எளிதாக்கும் என்றும் மத்திய சுகாதாரம் மற்றும் குடும்பநல அமைச்சகம் தெரிவித்துள்ளது.

**10. அண்மையில், ஈராண்டுக்கு ஒருமுறை நடைபெறும் ரிம் ஆஃப் தி பசிபிக் (RIMPAC) பயிற்சியின் 29ஆவது பதிப்பு நடைபெற்ற இடம் எது?**

அ. ஆக்லாந்து, நியூசிலாந்து

**ஆ. ஹவாய், அமெரிக்கா ☑**

இ. பாரிஸ், பிரான்ஸ்

ஈ. கொல்கத்தா, இந்தியா



★ தென்சீனக்கடல் மற்றும் வட பசிபிக் பெருங்கடலில் நிலைநிறுத்தப்பட்டுள்ள இந்திய மறைந்திருந்து தாக்கும் பல பாத்திர போர்க்கப்பலான INS ஷிவாலிக், ரிம் ஆஃப் தி பசிபிக் (RIMPAC) பயிற்சியில் பங்கேற்பதற்காக அமெரிக்காவின் ஹவாயில் உள்ள பேர்ல் துறைமுகத்தை சென்றடைந்தது. RIMPAC என்பது உலகின் மிகப்பெரிய சர்வதேச கடல்சார் பயிற்சியாகும்; இது 29 பங்கேற்பு நாடுகளின் கடற்படை இயங்குதன்மை மற்றும் நம்பிக்கையை மேம்படுத்துகிறது. அமெரிக்க கடற்படையின் தலைமையில் நடைபெறும் இந்தப் பயிற்சியானது கருத்தரங்கம், விளையாட்டு போட்டிகள் மற்றும் ஒருங்கிணைந்த கடல்சார் செயல்பாடுகள் போன்ற பல்வேறு செயல்பாடுகளை உள்ளடக்கியது.

11. **அண்மையில், இந்தியாவின் எந்த ஏரியில் 10 மெகாவாட் திறன்கொண்ட தனது முதலாவது மிதக்கும் சூரிய ஆற்றல் மின்னுற்பத்தி ஆலையை மத்திய ரெயில்வே நிர்வாகம் திறந்து வைத்தது?**



அ. லோனார் ஏரி

**ஆ. இகத்புரி ஏரி ☑**

இ. பெரியார் ஏரி

ஈ. வெண்ணா ஏரி

★ மேற்குத்தொடர்ச்சிமலையில் உள்ள இகத்புரி ஏரியில் 10 மெகாவாட் திறன்கொண்ட இந்தியாவின் முதல் மிதக்கும் சூரிய ஆற்றல் மின்னுற்பத்தி ஆலையை மத்திய ரெயில்வே நிர்வாகம் திறந்துள்ளது. இந்த முன்முயற்சி இந்திய ரெயில்வேயின் தூய்மையான எரிசக்தி முயற்சிகளில் ஒன்றாக பார்க்கப்படுகிறது. இது 2030ஆம் ஆண்டுக்குள் சுழிய கார்பன் உமிழ்வு என்ற நிலையை அடைவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

12. **கேசவர் திருக்கோவில் அமைந்துள்ள மாநிலம் எது?**



அ. ஒடிஸா

**ஆ. கர்நாடகா ☑**

இ. கேரளா

ஈ. மகாராஷ்டிரா

★ இந்த ஆண்டு தசராவுக்கு முன்னதாக மைசூரு சுற்றுலா சுற்றுவட்டத்தில் முக்கிய ஈர்ப்பிடமாக உள்ள சோமநாதபூர் UNESCO உலக பாரம்பரிய தளத்தை, குறிப்பாக கேசவர் திருக்கோவிலை மேம்படுத்த கர்நாடக சுற்றுலாத்துறை முடிவு செய்துள்ளது. காவேரி ஆற்றங்கரையில் சோமநாதபுர நகரத்தில் அமைந்துள்ள இக்கோவில், பொ ஆ 1268ஆம் ஆண்டு ஹொய்சாள மன்னர் மூன்றாம் நரசிம்மரின்கீழ் கட்டிமுடிக்கப்பட்டது. மூன்று கருவறைகளுடன் கூடிய தனித்துவமான விண்மீன் வடிவ மேடையை இது கொண்டுள்ளது. ஹளபீது மற்றும் பேலூர் கோவில்களுடன் இணைந்து அங்கீகரிக்கப்படும் இது, ஹொய்சாள பாரம்பரியத்தின் ஒருபகுதியாக கலாச்சார முக்கியத்துவத்தைத் தன்னகத்தே கொண்டுள்ளது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. பயிர்க்காப்பீட்டுக்கு ஜூலை.31 கடைசி: தமிழ்நாடு அரசு அறிவிப்பு.**

நடப்பாண்டில் பிரதமர் பயிர்க்காப்பீட்டுத்திட்டம் ₹1,775 கோடியில் செயல்படுத்தப்படும் என நிதிநிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து மாநிலத்திலுள்ள 37 மாவட்டங்களில் குறுவை, சம்பா, நவரை ஆகிய மூன்று பருவங்களிலும் பயிர்க்காப்பீட்டுத்திட்டத்தைச் செயல்படுத்த தமிழ்நாடு அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

---

**2. கீழடி அகழாய்வில் மீன் உருவிலான பானை ஓடுகள்.**

சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் அருகே கீழடியில் நடைபெறும் 10ஆம் கட்ட அகழாய்வில் மீன் உருவிலான இரு சிவப்பு வண்ண பானை ஓடுகள் கண்டெடுக்கப்பட்டன. இந்த இரு ஓடுகளின் நீளம், அகலம் முறையே 4.5 செமீ., 4.3 செமீ ஆகும்.

---

**3. 91% ரெயில்களை சரியான நேரத்தில் இயக்கி தெற்கு ரெயில்வே சாதனை.**

தெற்கு ரெயில்வே நடப்பு நிதியாண்டின் முதல் காலாண்டில் 91.6 சதவீத ரெயில்களை சரியான நேரத்தில் இயக்கி சாதனை படைத்துள்ளது. மாதத்துக்கு 10,000 ரெயில்களை கையாளும் மண்டலங்களில் தெற்கு ரெயில்வே 91.6% பெற்று முதலிடத்திலும், கிழக்கு மத்திய ரெயில்வே (82.4%), மத்திய ரெயில்வே (78.5%) அடுத்தடுத்த இடத்திலும் உள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

**4. தமிழ்நாடு–ரைஸ் (TN–RAISE) திட்டம்.**

**வழிகாட்டும் திட்டம்:** தற்போது, நாட்டிலுள்ள மகளிர் தொழில்முனைவோர், தொழில் நிறுவனங்களை நடத்துவோர் சுமார் 13.5% தமிழ்நாட்டில் உள்ளனர். இதுபோன்று தொழில்முனைவோராக விரும்பும் மகளிருக்கு வழிகாட்டவும், நிதி மேலாண்மை வழங்கவும் 'தமிழ்நாடு ரைஸ்' ஏற்படுத்தப்பட்டுள்ளது. 'தமிழ்நாடு ரைஸ்' திட்டம்மூலம் 126 மகளிர் தொழில்முனைவோருக்கும், 800 மகளிர் தொழில் குழு நிறுவனங்களுக்கும் ஆலோசனை வழங்கப்படும்.

---

# IMPORTANT LINKS

TNPSC Current Affairs

https://www.winmeen.com/tnpsc-tamil-current-affairs/

Winmeen: Install the Winmeen App
Daily Free & Premium Tnpsc Study Materials & Online Test

https://play.google.com/store/apps/details?id=co.robin.jbzwb

Winmeen: Winmeen Tnpsc Test Series - Samacheer lesson Wise Test + Previous Year Model Test for Tnpsc Group 1,2, 4 & VAO

https://wp.me/p7JanY-ag8

---

## 1. 2024 – புள்ளியியல் நாளுக்கானக் கருப்பொருள் என்ன?

**அ. Use of data for decision-making ☑**

ஆ. Alignment of State Indicator Framework with National Indicator Framework



இ. Data for Sustainable Development

ஈ. End Hunger, Achieve Food Security and Improved Nutrition

★ இந்தியாவில் ஆண்டுதோறும் ஜூன்.29 அன்று கொண்டாடப்படும் தேசிய புள்ளியியல் நாள், புள்ளிவிவரங்கள் மற்றும் பொருளாதாரத் திட்டமிடலில் பேராசிரியர் பிரசாந்த சந்திர மஹாலனோபிஸ் ஆற்றிய பங்களிப்புகளுக்காக அவரை கௌரவிக்கிறது. 2007இல் தொடங்கப்பட்ட இந்நாளின் குறிக்கோள், சமூக-பொருளாதாரக் கொள்கைகளை வடிவமைப்பதில் புள்ளிவிவரத்தின் முக்கியப்பங்குபற்றிய விழிப்புணர்வை இளையோரிடையே ஏற்படுத்துவதாகும். "Use of data for decision-making" என்பது நடப்பு 2024ஆம் ஆண்டில் வரும் இந்நாளுக்கானக் கருப்பொருளாகும்.

## 2. அண்மையில், இந்தியாவின் 35ஆவது வெளியுறவுச் செயலாளராக நியமிக்கப்பட்டவர் யார்?

அ. அமிதாப் காந்த்

**ஆ. விக்ரம் மிஸ்ரி ☑**



இ. ருசிரா கம்போஜ்


ஈ. அஜய் பிசாரியா

★ 2024 ஜூலை.15 அன்று வினை மோகன் குவாத்ராவை அடுத்து இந்தியாவின் புதிய வெளியுறவுச் செயலாளராக விக்ரம் மிஸ்ரி நியமிக்கப்பட்டார். சீன விவகாரங்களில் நிபுணத்துவம் பெற்ற விக்ரம் மிஸ்ரி, 2019-2021 கால கட்டத்தில் கால்வான் பள்ளத்தாக்கு மோதல்கள் உட்பட சீனாவுக்கான இந்தியத் தூதராகப் பணியாற்றியுள்ளார்.

## 3. '*Amoebic Meningoencephalitis*' என்றால் என்ன?

அ. சாதாரண சளி

**ஆ. மத்திய நரம்பு மண்டலத்தைத் தாக்கும் ஓர் அரிதான, பொதுவாக ஆபத்தான தொற்று ☑**



இ. ஒரு வகையான புற்றுநோய்

ஈ. நுரையீரலில் ஏற்படும் பாக்டீரியா தொற்று

★ கேரளத்தில் தொடர்ந்து மழை பெய்துவருவதால், '*Amoebic Meningoencephalitis*' (PAM) எனப்படும் *Naegleria fowleri* அமீபாவால் ஏற்படும் அரிதான, பொதுவாக ஆபத்தான மூளைத்தொற்றுக்கு எதிராக சுகாதாரத்துறை எச்சரிக்கை விடுத்துள்ளது. இந்த அமீபா வெதுவெதுப்பான, ஆழமற்ற நீரில் செழித்து வளர்கிறது. அந்த நீரை பயன்படுத்துவோரின் மூக்குவழியாக அது மூளைக்குள் நுழைகிறது. ஆரம்ப அறிகுறிகளில் காய்ச்சல், தலைவலி மற்றும் வாந்தி, கடினமான கழுத்து வலி, வலிப்பு, பிரமைகள் மற்றும் கோமா ஆகியவை அடங்கும். நோய்த்தொற்று ஏற்பட்ட ஐந்து நாட்களுக்குள் இந்த அறிகுறிகள் தோன்றும்.

## 4. தனது முழு விலங்கினங்களின் சரிபார்ப்புப் பட்டியலைத் தயாரித்த உலகின் முதல் நாடு எது?

அ. பூட்டான்

**ஆ. இந்தியா ☑**



இ. நேபாளம்

ஈ. மியான்மர்

★ 104,561 உயிரினங்களை ஆவணப்படுத்தி அதன் முழு விலங்கினங்களின் முழுமையான சரிபார்ப்புப் பட்டியலைத் தயாரித்த முதல் நாடாக இந்தியா ஆனது. கொல்கத்தாவில் மத்திய சுற்றுச்சூழல் அமைச்சர் பூபேந்தர் யாதவ் அறிவித்த இந்தச் சாதனை, இந்திய விலங்கியல் ஆய்வகத்தின் விலங்கினங்களின் சரிபார்ப்புப் பட்டியல் வலைத்தளத்தை அறிமுகப்படுத்தியதோடு ஒத்துப்போகிறது. அறிவியல் ஆராய்ச்சிக்கு முக்கியமான இந்த வலைத்தளம், அறியப்பட்ட அனைத்து விலங்குகளின் 121 சரிபார்ப்புப் பட்டியல்களை உள்ளடக்கியது. இந்த நிகழ்வில் இரண்டாவது விலங்கு வகைபிரித்தல் உச்சிமாநாடு–2024உம் இடம்பெற்றது.

**5. தென்னாப்பிரிக்க அணியை வீழ்த்தி 9ஆவது ICC ஆடவர் T20 உலகக்கோப்பையை வென்ற அணி எது?**



**அ. இந்தியா ☑**

ஆ. ஆப்கானிஸ்தான்

இ. ஆஸ்திரேலியா

ஈ. நியூசிலாந்து

★ ரோகித் ஷர்மா தலைமையிலான இந்திய ஆடவர் கிரிக்கெட் அணி, 2024 ஜூன்.29 அன்று பார்படாஸில் உள்ள கென்சிங்டன் ஓவல் மைதானத்தில் தென்னாப்பிரிக்காவை 7 இரன்கள் வித்தியாசத்தில் தோற்கடித்து 9ஆவது ICC ஆடவர் T20 உலகக்கோப்பையை வென்றது. 2007 வெற்றியைத்தொடர்ந்து இது இந்தியாவின் இரண்டாவது T20 உலகக்கோப்பை வெற்றியாகும். இறுதிப்போட்டியில் ரோகித் சர்மா, விராட் கோலி, இரவீந்திர ஜடேஜா ஆகியோரின் T20 ஓய்வு அறிவிக்கப்பட்டது. பயிற்சியாளராக இராகுல் டிராவிட்டின் கடைசி பணியும் அதுதான்.

**6. 'Snowblind' என்றால் என்ன?**



அ. புறக்கோள்

ஆ. சிறுகோள்

**இ. தீம்பொருள் (Malware) ☑**

ஈ. மருந்துகள்

★ 'Snowblind' எனப்படும் புதிய ஆண்ட்ராய்டு தீம்பொருள், 'seccomp' என்ற பாதுகாப்பு அம்சத்தைப் பயன்படுத்தி, குறுக்கீடு–எதிர்ப்பு வழிமுறைகளைத் தவிர்த்து, வங்கிச்சான்றுகளைத் திருடுவதற்கு பயனர்களை குறிவைக்கிறது. கண்டறிதலைத் தவிர்க்க இந்தத்தீம்பொருள், செயலிகளை மீண்டும் கட்டுகிறது மற்றும் உயிரியளவுகள் மற்றும் இரு –காரணி அங்கீகாரத்தை முடக்கி, திரைகளை எங்கிருந்தும் நோக்குவதற்கான சேவைகளைப் பயன்படுத்துகிறது. இது முதன்மையாக நம்பத்தகாத ஆதாரங்களில் இருந்து செயலிகள் வழியாக சாதனங்களை பாதிக்கிறது. தற்போது தென்கிழக்காசியாவில் இந்தச் செயலி அதிகளவில் பரவி வருகிறது.

**7. அண்மையில், eSankhyiki என்ற வலைத்தளத்தை உருவாக்கிய அமைச்சகம் எது?**

அ. அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகம்

ஆ. நிதி அமைச்சகம்

GOVERNMENT OF INDIA
MINISTRY OF STATISTICS AND PROGRAMME IMPLEMENTATION

**இ. புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம் ☑**

ஈ. பாதுகாப்பு அமைச்சகம்

★ புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம், உலகளாவிய புள்ளியியல் நடைமுறைகள் மற்றும் சிறந்த தரவுப் பகிர்வு தரநிலைகளை உறுதிசெய்ய தொடர்ந்து செயலாற்றி வருகிறது. இதன் ஒருபகுதியாக திட்டமிடுபவர்கள், கொள்கை வகுப்பாளர்கள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் பொதுமக்களுக்கு உடனடித் தகவல்களை வழங்குவதற்காக இந்த அமைச்சகம் இசங்க்யிகி (eSankhyiki) என்ற தளத்தை உருவாக்கியுள்ளது.

★ நாட்டில் அதிகாரபூர்வ புள்ளிவிவரங்களை எளிதாக மக்களிடம் கொண்டுசெல்வதும், விரிவான தரவு மேலாண்மை மற்றும் பகிர்வு முறையை ஏற்படுத்துவதும் இந்த வலைத்தளத்தின் முக்கிய நோக்கமாகும்.

**8. அண்மையில், நிலையான டிரைநைட்ரோடொலுயீனை (TNT) விட 2.01 மடங்கு அதிக ஆபத்தான SEBEX–2ஐ வெற்றிகரமாக உருவாக்கி சான்றளித்துள்ள நாடு எது?**



**அ. இந்தியா ☑**

ஆ. வங்காளதேசம்

இ. பிரான்ஸ்

ஈ. ஆப்கானிஸ்தான்

★ வெடிகுண்டுகள் மற்றும் வெடியுளைகளுக்காக உருவாக்கப்பட்ட TNTஐவிட 2.01 மடங்கு ஆற்றல்வாய்ந்த ஆபத்தான வெடிமருந்தான, 'SEBEX–2'ஐ இந்தியா உருவாக்கி சான்றளித்துள்ளது. இந்திய கடற்படையால் அங்கீகரிக்கப்பட்ட இது, உலகின் மிகவும் ஆற்றல்வாய்ந்த அணுவல்லாத வெடிபொருட்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது. கூடுதல் எடை கொள்ளாமல் மேம்படுத்தப்பட்ட அழிவுத் திறனைத் தன்வசம் கொண்டுள்ள SEBEX–2, இராணுவ ஆயுதங்களில் புரட்சியை ஏற்படுத்தும்.

**9. INS ரன்வீர் சார்ந்த வகை எது?**



அ. சீ வொல்ஃப்

**ஆ. ராஜ்புத் ☑**

இ. ஸ்கார்பீன்

ஈ. கல்வாரி

★ கிழக்குக் கடற்படை கட்டளையின்கீழ் உள்ள ரன்வீர் கப்பல் வங்காளதேசத்தின் சட்டோகிராமுக்குச் சென்றடைந்தது. இந்தப் பயணம், இந்திய மற்றும் வங்காளதேச கடற்படைகளைச் சேர்ந்த வீரர்கள், இருநாடுகளுக்கும் இடையே தற்போதுள்ள பரஸ்பர கடல்சார் ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. துறைமுக கட்டம் முடிந்ததும், INS ரன்வீர் கப்பல், வங்காளதேச கடற்படையின் கப்பல்களுடன் இணைந்து கடல்சார் கூட்டுப் பயிற்சியில் பங்கேற்கும். INS ரன்வீர் என்பது ஓர் ஏவுகணை அழிப்புக்கப்பலாகும். இது அதிநவீன ஆயுதங்கள் மற்றும் உணரிகளுடன் வடிவமைக்கப்பட்டுள்ளது. இதன் பெரும்பாலான பாகங்கள் தற்சார்பு இந்தியா முன்முயற்சிக்கு ஏற்ப உள்நாட்டில் தயாரிக்கப்பட்டதாகும்.

**10. ஒவ்வோர் ஆண்டும் 'சரக்குகள் மற்றும் சேவைகள் வரி (GST) நாள்' அனுசரிக்கப்படுகிற தேதி எது?**

**அ. ஜூலை.01 ☑**

ஆ. ஜூலை.05

இ. மார்ச்.29

ஈ. மார்ச்.05




★ சரக்குகள் மற்றும் சேவைகள் வரி (GST) நாளானது ஆண்டுதோறும் ஜூலை.01 அன்று அனுசரிக்கப்படுகிறது. இது இந்தியாவின் புதிய வரி முறையை அமல்படுத்தியதை நினைவுபடுத்துகிறது. 2024 – கொண்டாட்டம் GSTஇன் ஏழாம் ஆண்டு நிறைவைக் குறிக்கிறது. முன்பு மத்திய மற்றும் மாநில அரசுகளால் நிர்வகிக்கப்பட்ட சிக்கலான வரிக் கட்டமைப்பை எளிமைப்படுத்தும் நோக்கோடு அறிமுகப்படுத்தப்பட்டது.

★ இந்தியாவில் மறைமுக வரிகளை ஒழுங்குபடுத்துவதன்மூலமும் பொருளாதார செயல்திறனை வளர்ப்பதன்மூலமும் GST பொருளாதாரத்தில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தியது.

**11. அண்மையில், எந்த மாநிலத்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் தென்னை நார்களிலிருந்து மீ மின்தேக்கிகளுக்கு (super capacitors) செயலூட்டிய கரியை உற்பத்தி செய்யும் முறையை உருவாக்கியுள்ளனர்?**

அ. தமிழ்நாடு

**ஆ. கேரளா ☑**

இ. ஒடிசா

ஈ. மகாராஷ்டிரா



★ கேரள மாநிலத்தின் திருவனந்தபுரத்தில் அமைந்துள்ள அரசு மகளிர் கல்லூரியைச் சார்ந்த ஆராய்ச்சியாளர்கள், மீ மின்தேக்கிகளுக்கு தென்னை நாரிலிருந்து செயலூட்டிய கரியை உருவாக்கும் முறையை உருவாக்கியுள்ளனர். இந்த நிலையான, திறமையான தீர்வு, செயலூட்டிய கரியின் உயர் பரப்பளவை மேம்படுத்துகிறது; அது உயர் செயல் திறன்கொண்ட மீ மின்தேக்கிகளுக்கு ஏற்றதாக அமைகிறது. இந்தச்சாதனங்கள் மின்வேதியியல் ஆற்றல் சேமிப்பை மேம்படுத்தும், அயனிகளின் மீளக்கூடிய உறிஞ்சுதல் மற்றும் சிதைவுமூலம் ஆற்றலைச் சேமித்து வழங்குகின்றன.

**12. M K ரஞ்சித்சிங் மற்றும் பலர் எதிர் இந்திய ஒன்றியம் மற்றும் பலர் வழக்குடன் தொடர்புடைய பிரச்சினை எது?**

அ. வறுமை மற்றும் பசி

**ஆ. தட்பவெப்பநிலை மாற்றம் ☑**

இ. முத்தலாக்

ஈ. மேற்கூறப்பட்ட எதுவும் இல்லை



★ இந்திய உச்சநீதிமன்றம், M K ரஞ்சித்சிங் மற்றும் பலர் எதிர் இந்திய ஒன்றியம் மற்றும் பலர் வழக்கில் அளித்த தட்ப வெப்பநிலை மாற்றம் குறித்த தீர்ப்பு நீதித்துறையில் ஒரு முன்னுதாரணத்தை அமைத்துள்ளது. அரசியலமைப்பின் 21 மற்றும் 14ஆவது பிரிவுகளின்கீழ், "காலநிலை மாற்றத்தின் பாதகமான விளைவுகளிலிருந்து விடுபடுவதற்கான" உரிமையை அடிப்படை உரிமையாக இந்த முக்கிய தீர்ப்பு நிறுவுகிறது. இந்தத் தீர்ப்பு, சுற்றுச்சூழல் சவால்களை எதிர்கொள்வதிலும், குடிமக்களின் உரிமைகளைக் காப்பதிலும் நீதித்துறையின் பங்கை எடுத்துரைத்து, நிர்வாகம் & சட்டத்தில் செல்வாக்கு செலுத்துவதன்மூலம் இந்தியாவின் தட்பவெப்பநிலைக் கொள்கையை வடிவமைக்கிறது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. பன்னாட்டு நெகிழிப்பை இல்லாத நாள்.**

ஆண்டுதோறும் ஜூலை.03 அன்று நெகிழிப்பைகளைத் தவிர்த்தல், நெகிழிக்கழிவுகளைக்குறைத்தல், மறுபயன்பாடு மற்றும் மறுசுழற்சி செய்தல் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் பன்னாட்டு நெகிழிப்பை இல்லாத (plastic bag free) நாள் கொண்டாடப்பட்டு வருகிறது.

---

**2. தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவராக மகேசன் காசிராஜன் பதவியேற்பு.**

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகளின் முறைமன்ற நடுவராக M மாலிக் பெரோஸ்கான் செயலாற்றி வந்தார். அவரைத் தொடர்ந்து, இப்போது ஓய்வுபெற்ற இஆப அதிகாரியான மகேசன் காசிராஜன், முறைமன்ற நடுவராக நியமிக்கப்பட்டு உள்ளார்.

**பணி என்ன?**

உள்ளாட்சி அமைப்புகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின்கீழ் பணிசெய்து வரும் அலுவலர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுகள், அதுதொடர்பான விசாரணைகளை முறைமன்ற நடுவம் மேற்கொண்டு வருகிறது. இந்த நடுவத்தை அமைப்பதற்கான பிரத்யேக சட்டம் கடந்த 2014ஆம் ஆண்டு இயற்றப்பட்டு அந்த ஆண்டு நவம்பரில் இருந்து நடைமுறைக்கு வந்தது. தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் அலுவலகம் சென்னை கிண்டியில் இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

---


# IMPORTANT LINKS

TNPSC Current Affairs

https://www.winmeen.com/tnpsc-tamil-current-affairs/

Winmeen: Install the Winmeen App
Daily Free & Premium Tnpsc Study Materials & Online Test

https://play.google.com/store/apps/details?id=co.robin.jbzwb

Winmeen: Winmeen Tnpsc Test Series - Samacheer lesson Wise Test + Previous Year Model Test for Tnpsc Group 1,2, 4 & VAO

https://wp.me/p7JanY-ag8


**1. மெத்தனால் மற்றும் ஃபார்மால்டிஹைட் கலவையிலிருந்து ஹைட்ரஜன் உருவாக்கும் திறமையான முறையை உருவாக்கியுள்ள நிறுவனம் எது?**

அ. IISER, திருப்பதி ☑

ஆ. ஐஐடி, ரூர்க்கி

இ. ஐஐடி, மெட்ராஸ்

ஈ. ஐஐடி, தில்லி



★ IISER திருப்பதியின் ஆராய்ச்சியாளர்கள் மெத்தனால் மற்றும் ஃபார்மால்டிஹைடைப் பயன்படுத்தி ஹைட்ரஜனை திறம்பட உருவாக்குவதற்கான ஒரு முறையை வகுத்துள்ளனர். வினையூக்கிகளின் தேவையில்லாமல், சந்தையில் எளிதில் கிடைக்கும் நிக்கல் வினையூக்கிகளைப் பயன்படுத்தி அவர்கள் இம்முறையை உருவாக்கினார்கள். இந்த ஹைட்ரஜன் உற்பத்தியானது அல்கைன்களின் தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதி பரிமாற்ற ஹைட்ரஜனேற்றத்தை செயல்படுத்தி, அவற்றை அல்கீன்களாக மாற்றுகிறது. இந்த முறை உயிர்வேதியியல் மூலக்கூறுகளின் தொகுப்பை ஆதரிக்கிறது.

**2. அண்மையில் INS தபார் வருகையால் செய்திகளில் இடம்பெற்ற துறைமுக நகரமான அலெக்ஸாண்ட்ரியா உள்ள நாடு எது?**

அ. இந்தோனேசியா

**ஆ. எகிப்து ☑**

இ. பிரான்ஸ்

ஈ. ரோம்



★ இந்திய கடற்படைக் கப்பல் தபார் அண்மையில் எகிப்தின் அலெக்சாண்டிரியாவுக்குச் சென்று இருதரப்பு உறவுகளில் இந்தியாவின் உறுதிப்பாட்டை எடுத்துரைத்தது. 2004ஆம் ஆண்டு ரஷ்யாவில் பணியமர்த்தப்பட்ட தல்வார்–வகுப்பு மறைந்திருந்து தாக்கும் போர்க்கப்பலான INS தபார், "Guts and Glory" என்ற பொன்மொழியை உள்ளடக்கியது. இப்பயணம் இந்தியாவின் உத்திசார் கடல்சார் ஈடுபாட்டை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது; பிராந்திய ஒத்துழைப்பு மற்றும் கடற்படை திறன்களையும் இது வலியுறுத்துகிறது.

**3. அண்மையில், இந்தியாவின் பசுமை ஹைட்ரஜன் முயற்சிகளுக்கு ஆதரவாக $1.5 பில்லியன் அளவுக்குக் கடன் வழங்க ஒப்புதல் அளித்த அமைப்பு எது?**

**அ. உலக வங்கி ☑**

ஆ. பன்னாட்டு செலாவணி நிதியம்

இ. புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுக்கான சர்வதேச வங்கி

ஈ. பன்னாட்டு வளர்ச்சி சங்கம்




★ இந்தியாவின் குறைந்த கரிம–ஆற்றல் வளர்ச்சியை ஆதரிக்க உலக வங்கி $1.5 பில்லியன் அளவுக்குக் கடன் வழங்க ஒப்புதல் அளித்துள்ளது. இந்த நிதியானது பசுமை ஹைட்ரஜன், மின்பகுப்பிகள் மற்றும் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் உருவாக்கத்திற்கு உதவும். இது இந்தியாவின் தேசிய பசுமை ஹைட்ரஜன் இயக்கம் மற்றும் ஆற்றல் இலக்கு ஆகியவற்றுடன் ஒத்துப்போகிறது. 2030ஆம் ஆண்டுக்குள் 500 கிகாவாட் (Gw) புதுப்பிக்கத்தக்க ஆற்றல் திறனை அடைவது மற்றும் 2070ஆம் ஆண்டுக்குள் நிகர சுழிய உமிழ்வை அடைவது இந்தியாவின் இலக்காகும்.

**4. அண்மையில், விண்வெளி ஆய்வு மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் (SERA) கீழ்க்காணும் எந்த நாட்டை மனிதனை விண்வெளிக்கு அனுப்பும் பயணத் திட்டத்துக்கான கூட்டாளர் நாடாக அறிவித்தது?**

அ. பூட்டான்

**ஆ. இந்தியா ☑**

இ. நேபாளம்

ஈ. மியான்மர்




★ அமெரிக்காவைச் சேர்ந்த விண்வெளி ஆய்வு மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் (SERA) மற்றும் புளூ ஆர்ஜின் ஆகியவை மனிதனை விண்வெளிக்கு அனுப்பும் பயணத்திட்டத்திற்காக இந்தியாவுடன் கூட்டுசேர்ந்துள்ளன. வருங்கால நியூ ஷெப்பர்ட் திட்டத்தில், குறைந்த இடவசதி உள்ள நாடுகளைச் சேர்ந்த குடிமக்களுக்கு அவர்கள் ஆறு இடங்களை ஒதுக்குவார்கள். நியூ ஷெப்பர்ட் என்பது மறு பயன்பாடுடைய துணை சுற்றுப்பாதையில் வலம் வரக்கூடிய ஏவுகலம் ஆகும். தேர்ந்தெடுக்கப்பட்ட விண்வெளி வீரர்களை 100 கிமீ தொலைவிலுள்ள பன்னாட்டளவில் அங்கீகரிக்கப்பட்ட விண்வெளி எல்லையான கர்மான் கோடு வழியாக 11 நிமிட பயணத்தில் விண்வெளிக்கு இது அழைத்துச் செல்லும்.

**5. இந்திய இராணுவம் அண்மையில் எந்த நாட்டு இராணுவத்துடன் இணைந்து, 'மைத்ரீ' என்ற கூட்டு இராணுவப் பயிற்சியை நடத்தியது?**

**அ. தாய்லாந்து ☑**

ஆ. ஆப்கானிஸ்தான்

இ. ஆஸ்திரேலியா

ஈ. நியூசிலாந்து



★ 2024ஆம் ஆண்டு ஜூலை.01 முதல் 15ஆம் தேதி வரை தாய்லாந்தின் வச்சிரபிரகான் கோட்டையில் இராயல் தாய் இராணுவத்துடன் இந்திய இராணுவம் மைத்ரீ பயிற்சியைத் தொடங்கியது. 2006ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இந்த இருதரப்பு பயிற்சி, பாதுகாப்பு ஒத்துழைப்பை மேம்படுத்துகிறது. லடாக் சாரணர்கள் உட்பட இருபடைகளிலிருந்தும் எழுபத்தாறு பணியாளர்கள் இதில் பங்கேற்றனர். இந்தப் பயிற்சி நகர்ப்புற மற்றும் வனச்சூழல்களில் கிளர்ச்சி–எதிர்ப்பு மற்றும் பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகள், கூட்டாகத் திட்டமிடல், உத்திசார் பயிற்சிகள் மேற்கொள்வது ஆகியவற்றில் கவனம் செலுத்தியது.

**6. அண்மையில், ஆப்கானிஸ்தான் தொடர்பான ஐநா அவையின் மூன்றாவது மாநாடு நடைபெற்ற இடம் எது?**

**அ. தோஹா, கத்தார் ☑**

ஆ. அஸ்தானா, கஜகஸ்தான்

இ. புது தில்லி, இந்தியா

ஈ. பிஷ்கெக், கிர்கிஸ்தான்



★ 2024 ஜூன்.30 மற்றும் ஜூலை.01 ஆகிய தேதிகளில் தோஹாவில் நடைபெற்ற ஆப்கானிஸ்தான் தொடர்பான ஐநா மாநாட்டில் முதன்முறையாக தாலிபான் பங்கேற்றது. ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் SCO உட்பட 25 நாடுகள் மற்றும் அமைப்புகள் கலந்துகொண்டபோதிலும், கணிசமான முன்னேற்றம் எதுவும் எட்டப்படவில்லை. தாலிபான்களை பிரதிநிதித்துவப்படுத்திய ஜபிஹுல்லா முஜாஹித், ஆப்கானிய சிவில் சமூகப்பிரதிநிதிகள் கோரிக்கையைத்தவிர்த்து பிற கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்ட பின்னர் இணைந்தார். இந்தியா சார்பில் வெளியுறவு அமைச்சகத்திலிருந்து ஜே பி சிங் கலந்துகொண்டார்.

**7. மார்ஸ் ஒடிஸி சுற்றுக்கலனைப்பயன்படுத்தி ஒலிம்பஸ் மோன்ஸ் என்று பெயரிடப்பட்ட நமது சூரியமண்டலத்தின் மிகப்பெரிய எரிமலையின் காவியக் காட்சியை படம்பிடித்த அமைப்பு எது?**

அ. ROSCOSMOS

ஆ. JAXA

**இ. NASA ☑**

ஈ. CNSA



★ NASAஇன் மார்ஸ் ஒடிஸி சுற்றுக்கலன் சூரிய குடும்பத்தின் மிகப்பெரிய எரிமலையான ஒலிம்பஸ் மோன்ஸின் காவியக்காட்சியை படம் பிடித்தது. 2001இல் தொடங்கப்பட்ட ஒடிஸியின் பணி, செவ்வாய் கோளின் மேற்பரப்பை வரைபடமாக்குவது மற்றும் தகவல்தொடர்பு சேவை வழங்குவதை உள்ளடக்கியதாக உள்ளது. கவச எரிமலையான ஒலிம்பஸ் மோன்ஸ், 24 கிமீ உயரமும் 550 கிலோமீட்டர் அகலமும் கொண்டது. பூமியின் மௌனா லோவாவை விட உயரமானதாக்கும் இம்மலை. 2025 வரை செயலில் இருக்கவுள்ள இந்தத் திட்டம், மற்றொரு கோளைச் சுற்றி மிகநீண்டகாலம் செயலில் உள்ள திட்டம் எனப் பெயர் பெற்றுள்ளது.

**8. 'நெக்ஸஸ்' திட்டத்தின் முதன்மை நோக்கம் என்ன?**

அ. உள்நாட்டு வங்கி அமைப்புகளை மேம்படுத்துதல்

**ஆ. உடனடி எல்லைதாண்டிய சில்லறை கொடுப்பனவுகளை செயல்படுத்துதல் ☑**

இ. புதிய கிரிப்டோ நாணயத்தை உருவாக்க

ஈ. பன்னாட்டு நிதி பரிவர்த்தனைகளை கண்காணிக்க



★ உள்நாட்டு விரைவு கொடுப்பனவு முறைகளை ஒன்றிணைப்பதன்மூலம் உடனடி எல்லைதாண்டிய சில்லறை கொடுப்பனவுகளை செயல்படுத்தும் ஒரு முயற்சியான நெக்ஸஸ் திட்டத்தில் இந்திய ரிசர்வ் வங்கி இணைந்தது. BIS புத்தாக்க மையம்மூலம் கருத்துருவாக்கம் செய்யப்பட்ட, 'நெக்ஸஸ்' தடையற்ற பன்னாட்டு பரிவர்த்தனைகளுக்கு ஒற்றை–இணைப்பு தீர்வை வழங்குகிறது. இது 2026ஆம் ஆண்டிற்குள் இந்தியா மற்றும் 4 ஆசியான் நாடுகளின் உள்நாட்டு விரைவு கொடுப்பனவு முறைகளை ஒன்றிணைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. நெக்ஸஸ் திட்டம் தாமாகவே புதிய உறுப்புநாடுகளை இணைக்கிறது, செயல்திறனை மேம்படுத்துகிறது, செலவுகளைக் குறைக்கிறது மற்றும் பன்னாட்டு கொடுப்பனவு அணுகலை மேம்படுத்துகிறது.

**9. 'நௌகா பைச்' என்பது எந்த மாநிலத்தின் பாரம்பரிய படகுப்போட்டியாகும்?**

அ. ஒடிசா

ஆ. கேரளா

**இ. மேற்கு வங்காளம் ☑**

ஈ. மணிப்பூர்



★ தென்மேற்குப்பருவமழை தொடங்கியுள்ள நிலையில், மேற்கு வங்காளத்தின் கிராமப்புறங்களில் நௌகா பைச் படகுப் போட்டிகள் விரைவில் தொடங்கவுள்ளன. இப்பாரம்பரிய பந்தயங்கள் செப்டம்பர் முதல் நவம்பர் வரை நிகழ்கின்றன. இப்போட்டியில் பெண்களின் பங்கேற்பும் இருக்கும். அரவங்களின் தெய்வமான மானசா வழிபாட்டுடன் தொடர்புடைய இந்தப் போட்டிகள், 90 அடி நீளமுள்ள சோரெங்கி உட்பட பல்வேறு பாரம்பரிய படகுகளைப் பயன்படுத்துகின்றன. இது, வேளாண் பண்பாடு மற்றும் பருவமழை காலத்தில் பெருக்கெடுத்து ஓடும் ஆறுகளை கொண்டாடுகிறது.

**10. தொல்பொருள் ஆராய்ச்சியாளர்களால் சுமார் 41,000 ஆண்டுகள் பழமையான தீக்கோழிக்கூடு கீழ்க்காணும் எந்த மாநிலத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது?**

அ. தமிழ்நாடு

ஆ. கர்நாடகா

**இ. ஆந்திர பிரதேசம் ☑**

ஈ. மகாராஷ்டிரா



★ ஆந்திர பிரதேச மாநிலத்தில் 41,000 ஆண்டுகளுக்கு முந்தைய உலகின் மிகப்பழமையான தீக்கோழிக் கூட்டை தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். இந்தக் கண்டுபிடிப்பு இந்திய துணைக்கண்டத்தில் ஒரு பேருயிரின் அழிவுபற்றிய நுண்ணறிவுகளை வழங்குகிறது. 50 கிலோவுக்கு மேல் எடையுள்ள பெருவிலங்குகள் பேருயிரிகள் என அழைக்கப்படுகின்றன; இவற்றுள் பெருந்தாவர உண்ணிகள், பெரும் மாமிச உண்ணிகள் மற்றும் பெரும் அனைத்துண்ணிகள் ஆகியவை அடங்கும். பிளீஸ்டோசீன் காலத்திற்குப் பிற்பகுதியிலிருந்து பேருயிரிகள் குறிப்பிடத்தக்க அளவில் குறைந்தன.

**11. அண்மையில், எந்த மாநிலத்தின் முதல் பெண் தலைமைச் செயலாளராக சுஜாதா சௌனிக் ஆனார்?**

அ. தமிழ்நாடு

ஆ. கேரளா

இ. ஒடிசா

**ஈ. மகாராஷ்டிரா ☑**



★ மூத்த இஆப அதிகாரியான சுஜாதா சௌனிக் மகாராட்டிரத்தின் முதல் பெண் தலைமைச்செயலராக பதவியேற்றார். 1960இல் மகாராட்டிர மாநிலம் உருவானதிலிருந்து அவர் 45ஆவது தலைமைச்செயலராவார். இவருக்கு முன் ஓய்வு பெற்ற நிதின் கரீர் இப்பதவியில் இருந்தார். சுஜாதா சௌனிக், 2025 ஜூன் வரை ஓராண்டு பதவியில் இருப்பார். அவரை முதலமைச்சர் ஏக்நாத் ஷிண்டே மற்றும் துணை முதலமைச்சர் தேவேந்திர பட்னாவிஸ் ஆகியோர் ஒருமனதாக நியமித்தனர். மும்பையில் உள்ள மாநில செயலகமான மந்த்ராலயாவில் பணிமாறுதல் விழா நடந்தது.

**12. Tianlong-3 என்ற விண்வெளி ஏவுகலத்துடன் தொடர்புடைய நாடு எது?**

**அ. சீனா ☑**

ஆ. ஜப்பான்

இ. வியட்நாம்

ஈ. இந்தோனேசியா



★ சீனாவின் தனியார் ஏவுகலமான டியான்லாங்-3 சோதனை ஓட்டத்தின்போது தற்செயலாக ஏவப்பட்ட காரணத்தால் விபத்துக்குள்ளானது. பெய்ஜிங் தியான்பிங்கால் (விண்வெளி முன்னோடி) உருவாக்கப்பட்ட டியான்லாங்-3 என்பது ஒரு நடுத்தர உயரம் செல்லும் ஏவுகலமாகும், இது பகுதியளவில் பத்து முறை வரை மீண்டும் பயன்படுத்தக்கூடியது. இதன் முதல் நிலை தாமாக செங்குத்து நிலையில் தரையிறங்கும் திறன்கொண்டது. இதால் தாழ் புவி சுற்றுப்பாதை (LEO) மற்றும் சூரிய ஒத்திசைவு சுற்றுப்பாதைக்கு (SSO) நடுத்தர அளவிலான சுமைகளை கொண்டு செல்லமுடியும்; அதன் செயல்திறன் ஸ்பேஸ்Xஇன் பால்கன்-9 உடன் ஒப்பிடத்தக்கதாகும்.

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. 'மக்களுடன் முதல்வர்' திட்டம் விரிவாக்கம்.**

'மக்களுடன் முதல்வர்' திட்டத்தின் விரிவாக்கத்தை தருமபுரி மாவட்டத்தில் ஜூலை.11ஆம் தேதி தொடங்கி வைக்க உள்ளதாக முதலமைச்சர் மு க ஸ்டாலின் தெரிவித்துள்ளார். பொதுமக்கள் அன்றாடம் அணுகும் அரசுத்துறைகளின் சேவைகள் விரைவாகவும் எளிதாகவும் சென்று சேரும் வகையில், மக்களுடன் முதல்வர் திட்டம் கடந்த ஆண்டு டிச. 18இல் தொடங்கப்பட்டது. அதன்மூலம், 8.74 இலட்சம் மனுக்களுக்குத் தீர்வு காணப்பட்டுள்ளது. நகரப்பகுதிகளைத் தொடர்ந்து, ஊரகப்பகுதிகளிலும் இந்தத் திட்டம் தொடங்கப்படுகிறது.

**காலை உணவுத்திட்டம்:**

பள்ளி மாணாக்கர்க்கு காலையில் உணவு அளிக்கும் திட்டம் கடந்த 2022ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இதன்கீழ், 14,40,351 பேர் பயன்பெற்று வருகிறார்கள். இந்தத்திட்டத்தால் காலை உணவு தயாரிக்கும் நேரமும் பொருட்செலவும் குறைவதுடன், குழந்தைகளின் நலம், கற்றல்திறன் அதிகரித்துள்ளதாக திட்டக்குழு தெரிவித்துள்ளது.

இந்தத் திட்டத்தின் நோக்கம் அனைத்துத் தரப்பு மாணவர்களையும் சென்றடையும் வகையில், ஊரகப்பகுதிகளைச் சேர்ந்த அனைத்து அரசு உதவிபெறும் தொடக்கப்பள்ளிகளில் 1 முதல் 5ஆம் வகுப்பு வரை பயிலும் மாணாக்கர்க்கும் காலை உணவுத் திட்டம் விரிவாக்கம் செய்யப்படவுள்ளது. இந்தத் திட்டத்தை முன்னாள் முதலமைச்சர் காமராஜரின் பிறந்தநாளான கல்வி வளர்ச்சி நாளில் (ஜூலை.15) திருவள்ளூர் மாவட்டத்தில் தொடங்கப்படவுள்ளது.

---


## IMPORTANT LINKS

TNPSC Current Affairs

https://www.winmeen.com/tnpsc-tamil-current-affairs/

Winmeen: Install the Winmeen App
Daily Free & Premium Tnpsc Study Materials & Online Test

https://play.google.com/store/apps/details?id=co.robin.jbzwb

Winmeen: Winmeen Tnpsc Test Series - Samacheer lesson Wise Test + Previous Year Model Test for Tnpsc Group 1,2, 4 & VAO

https://wp.me/p7JanY-ag8

**1. கானமயில் மற்றும் வரகுக்கோழி ஆகியவற்றின் பாதுகாப்பிற்காக அண்மையில் ₹56 கோடி நிதி ஒதுக்கீடு செய்து ஒப்புதலளித்த அமைச்சகம் எது?**



**அ. சுற்றுச்சூழல், வனம் மற்றும் தட்பவெப்பநிலை மாற்றம் அமைச்சகம் ☑**

ஆ. வேளாண் அமைச்சகம்

இ. நிதி அமைச்சகம்

ஈ. சுற்றுலா அமைச்சகம்

★ கானமயில் (Great Indian Bustard) மற்றும் வரகுக்கோழி (Lesser Florican) ஆகியவற்றைப் பாதுகாப்பதற்காக ₹56 கோடி நிதி ஒதுக்கீடு செய்து சுற்றுச்சூழல், வனம் மற்றும் தட்பவெப்பநிலை மாற்ற அமைச்சகம் ஒப்புதல் அளித்துள்ளது. 2016ஆம் ஆண்டு முதல் இயங்கி வருகிற இந்தத்திட்டம், இந்த மிகவும் அருகிவிட்ட உயிரினங்களை மீட்டெடுப்பதை நோக்கமாகக்கொண்டுள்ளது. இதன்மூலம் சுமார் 140 கானமயில்கள் மற்றும் 1,000–க்கும் குறைவான வரகுக் கோழிகள் உயிர்பிழைத்துள்ளன. இனப்பெருக்க மையங்கள், வாழ்விடத்திலேயே பாதுகாப்பு, செயற்கை கருவூட்டல் நுட்பங்கள் மற்றும் வேட்டையாடுதல் மற்றும் மின்கம்பி மோதல்கள் போன்ற அச்சுறுத்தல்களை நிவர்த்தி செய்தல் ஆகியவை இத்திட்டத்தின் முதன்மை முயற்சிகளில் அடங்கும்.

**2. அண்மையில், லியோன் மாஸ்டர்ஸ் செஸ் சாம்பியன்ஷிப்பை 10ஆவது முறையாக வென்றவர் யார்?**



அ. ஃபேபியானோ கருவானா

**ஆ. விஸ்வநாதன் ஆனந்த் ☑**

இ. செர்ஜி கர்ஜாகின்

ஈ. மேக்னஸ் கார்ல்சன்

★ ஸ்பெயினின் லியோனில் 2024 ஜூன்.30 அன்று நடந்த இறுதிப்போட்டியில் ஸ்பெயினின் ஜெய்ம் சாண்டோஸ் லடாசாவை 3–1 என்ற கணக்கில் தோற்கடித்து முன்னாள் உலக செஸ் சாம்பியன் இந்தியாவின் விஸ்வநாதன் ஆனந்த் 10ஆம் முறையாக லியோன் மாஸ்டர்ஸ் செஸ் சாம்பியன்ஷிப்பை வென்றார். 5 முறை உலக சாம்பியனான விஸ்வநாதன் ஆனந்த், இதற்கு முன்பு 1996, 1999, 2000, 2001, 2005, 2006, 2007, 2011, மற்றும் 2016 ஆகிய ஆண்டுகளில் இந்தப் போட்டியை வென்றுள்ளார். லியோன் மாஸ்டர்ஸில் அர்ஜுன் எரிகைசி மற்றும் வெசெலின் டோபலோவ் உட்பட நான்கு வீரர்கள் இடம்பெற்றுள்ளனர்.

**3. அண்மையில், எந்த நாட்டின் கடற்படை, இந்தியாவின் கார்டன் ரீச் கப்பல் கட்டுநர்கள் மற்றும் பொறியாளர்கள் (GRSE) நிறுவனத்துடன், பெருங்கடலில் செல்லும் 800 டன் எடைகொண்ட இழுவைப்படகுக்கான ஓர் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது?**



அ. மியான்மர்

ஆ. இலங்கை

**இ. வங்காளதேசம் ☑**

ஈ. சீனா

★ வங்காளதேச கடற்படை, இந்தியாவின் கார்டன் ரீச் கப்பல் கட்டுநர்கள் & பொறியாளர்கள் (GRSE) நிறுவனத்துடன் பெருங்கடலில் செல்லும் 800 டன் எடைகொண்ட இழுவைப்படகுக்கான ஓர் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது. டாக்காவில் இறுதிசெய்யப்பட்ட இந்த ஒப்பந்தத்திற்கு, GRSE மற்றும் வங்காளதேச கடற்படை அதிகாரிகள் சாட்சியாக இருந்தனர். இந்திய கடற்படைத் தலைவர் அட்மிரல் தினேஷ் K திரிபாதியின் வங்காளதேசப் பயணம், இருதரப்பு பாதுகாப்பு உறவுகளை வலியுறுத்துவது மற்றும் இருநாடுகளுக்கிடையே புதிய கடற்படை ஒத்துழைப்பு வாய்ப்புகளை ஆராயும் இந்த ஒப்பந்தத்துடன் ஒத்துப்போனது.

**4. அண்மையில், முதல் முறையாக பன்னாட்டு வடக்கு–தெற்கு போக்குவரத்து வழித்தடத்தின் (INSTC) வழியாக நிலக்கரி ஏற்றிச்செல்லும் இரண்டு ரெயில்களை இந்தியாவுக்கு அனுப்பிய நாடு எது?**

**அ. ரஷ்யா ☑**

ஆ. சீனா

இ. உக்ரைன்

ஈ. வங்காளதேசம்



★ பன்னாட்டு வடக்கு–தெற்கு போக்குவரத்து வழித்தடத்தின் (INSTC) வழியாக இந்தியாவிற்கு நிலக்கரி ஏற்றுமதியை ரஷ்யா முதன்முறையாக தொடங்கியுள்ளது. ஈரானின் பந்தர் அப்பாஸ் துறைமுகம் வழியாக புனித பீட்டர்ஸ்பர்க்கில் இருந்து மும்பை துறைமுகத்திற்கு சுமார் 7,200 கிமீ தொலைவுக்கு இந்த இரண்டு ரெயில்கள் பயணிக்கும். இந்தியா, ஈரான், அஜர்பைஜான், ரஷ்யா, மத்திய ஆசியா மற்றும் ஐரோப்பா இடையே சரக்கு போக்குவரத்தை எளிதாக்குவதன் மூலம், கப்பல், ரெயில் மற்றும் சாலை வலையமைப்புகளை INSTC ஒருங்கிணைக்கிறது. கடந்த 2000ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட இவ் வழித்தடமானது போக்குவரத்து ஒத்துழைப்பை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. யூரோ–ஆசிய போக்குவரத்து மாநாட்டின் போது இது ஒப்புக்கொள்ளப்பட்டது.

**5. அண்மையில், 'NTR பரோசா ஓய்வூதிய திட்டத்தை' அறிமுகப்படுத்திய மாநிலம் எது?**

**அ. ஆந்திர பிரதேசம் ☑**

ஆ. தெலுங்கானா

இ. கர்நாடகா

ஈ. ஒடிசா




★ ஆந்திர பிரதேச மாநில முதலமைச்சர் சந்திரபாபு நாயுடு, NTR பரோசா ஓய்வூதியத் திட்டத்தை 1 ஜூலை 2024 அன்று தொடங்கினார். பயனாளிகளுக்கு தனிப்பட்ட முறையில் ஓய்வூதியம் வழங்குகிற இத்திட்டம், தெலுங்கு தேசம் கட்சி அரசாங்கத்தால் நிறைவேற்றப்பட்ட வாக்குறுதியாகும். இத்திட்டம், பல்வேறு பிரிவுகளுக்கு மாதாந்திர ஓய்வூதிய நிதியை அதிகரிக்கிறது. முதியோர்கள், கைம்பெண்கள் மற்றும் பிற நபர்களுக்கு ₹3,000 முதல் ₹4,000 வரையும் கடுமையான ஊனமுற்ற நபர்களுக்கு ₹15,000 வரையிலும் ஓய்வூதியம் வழங்கப்படவுள்ளது. சமூகப்பாதுகாப்பை மேம்படுத்துவதை இத்திட்டம் தனது நோக்கமாகக் கொண்டுள்ளது.

**6. இந்தியா–மங்கோலியா இடையேயான, 'நாடோடி யானை – Nomadic Elephant' என்ற கூட்டு இராணுவப் பயிற்சியின் 16ஆவது பதிப்பு நடைபெற்ற இடம் எது?**

அ. கொல்கத்தா, மேற்கு வங்காளம்

ஆ. உலன்பாதர், மங்கோலியா

**இ. உம்ரோய், மேகாலயா ☑**

ஈ. கௌகாத்தி, அஸ்ஸாம்



★ இந்தியா–மங்கோலியா கூட்டு இராணுவப் பயிற்சியான 'நாடோடி யானை' 16ஆவது பதிப்பு மேகாலயா மாநிலம் உம்ரோயில் தொடங்கியது. 45 வீரர்களைக் கொண்ட இந்தியக் குழுவில், சிக்கிம் சாரணர் இயக்கத்தின் ஒரு பிரிவு மற்றும் பிற ஆயுதப்படைகளைச் சேர்ந்தவர்கள் பங்கேற்றுள்ளனர். மங்கோலிய ராணுவத்தின் சார்பில் அந்நாட்டின் 150 விரைவு அதிரடிப்படை பிரிவைச் சேர்ந்த வீரர்கள் பங்கேற்றுள்ளனர். 'நாடோடி யானை' பயிற்சி என்பது இந்தியாவிலும், மங்கோலியாவிலும் மாறி மாறி ஆண்டுதோறும் நடத்தப்படும் ஒரு பயிற்சி நிகழ்வாகும். கடந்த முறை இந்தப் பயிற்சி 2023 ஜூலையில் மங்கோலியாவில் நடத்தப்பட்டது.

★ இந்த ஆண்டு இப்பயிற்சியின் தொடக்க விழாவில் இந்தியாவுக்கான மங்கோலிய தூதர் தம்பஜவின் கன்போல்ட் மற்றும் இந்திய இராணுவத்தின் 51 துணைப்பகுதி கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் பிரசன்னா ஜோசி ஆகியோர் கலந்துகொண்டனர். பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு எதிராக செயல்படுதல், தேடுதல் செயல்பாடுகளில் ஆளில்லா விமானங்களைப் பயன்படுத்துதல் உள்ளிட்டவை இந்த ஆண்டு பயிற்சியில் முக்கிய அம்சங்களாக இடம்பெறுகிறது.

### 7. LOw–Frequency ARray (LOFAR)இன் முதன்மை நோக்கம் என்ன?

அ. பூமியின் மையத்தை ஆய்வு செய்தல்

**ஆ. குறைந்த ரேடியோ அலைவரிசையில் பேரண்டத்தை கூர்நோக்குதல் ☑**

இ. தட்பவெப்பநிலை மாற்றத்தைக் கண்காணித்தல்

ஈ. சிறுகோள் அசைவுகளைக் கண்காணித்தல்



★ டச்சு ரேடியோ வானியல் நிறுவனத்தால் (ASTRON) உருவாக்கப்பட்ட, ஐரோப்பா முழுமைக்கும் பரவலாக்கப்பட்ட LOw–Frequency ARray (LOFAR)ஐப் பயன்படுத்தி வானியலாளர்கள் ஒரு புதிய ரேடியோ விண்மீன் மண்டலத்தைக் கண்டுபிடித்தனர். குறைந்த ரேடியோ அதிர்வெண்களில் (90–200 MHz) பேரண்டத்தை LOFAR நோக்குகிறது. இதால் ஒரே நேரத்தில் பல திசைகளை கூர்நோக்க முடியும். இது ஆரம்பகால பேரண்டம், சூரிய செயல்பாடு மற்றும் நிலப்பரப்பு வளிமண்டலத்தை ஆராய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

### 8. '*Senna spectabilis*' என்றால் என்ன?

**அ. ஆக்கிரமிப்பு தாவரம் ☑**

ஆ. மீனினம்

இ. பாரம்பரிய நீர்ப்பாசன முறை

ஈ. தகவல் தொடர்பு செயற்கைக்கோள்



★ வயநாடு வனவிலங்கு சரணாலயத்திலிருந்து '*Senna spectabilis*'ஐ அகற்றும் திட்டத்தில் வெளிப்படைத்தன்மையை பராமரிக்கவேண்டும் என்று சுற்றுச்சூழல் அமைப்புகள் அண்மையில் வனத்துறையை வலியுறுத்தின. தென் மற்றும் மத்திய அமெரிக்காவை பூர்வீகமாகக்கொண்ட ஒரு பயறு குடும்ப மரமான *Senna spectabilis*, இந்தியாவில் ஊடுருவி வருகிறது. பிரகாசமான மஞ்சள்நிறப் பூக்கள் மற்றும் நெகிழ்ச்சித்தன்மைக்கு பெயர்பெற்ற இம்மரம், நிழல் மற்றும் எரிபொருளுக்காக அறிமுகப்படுத்தப்பட்டது; ஆனால் இப்போது அதன் அடர்த்தியான பசுமையின் காரணமாக பூர்வீக இனங்களுக்கு அச்சுறுத்தலாக உள்ளது.


### 9. டௌன் நோய்க்குறி என்றால் என்ன?

அ. குரோமோசோம்கள் இல்லாததால் ஏற்படும் மரபணுக்கோளாறு

**ஆ. கூடுதல் குரோமோசோம் அல்லது குரோமோசோமின் துண்டினால் ஏற்படும் நிலை ☑**

இ. நரம்பு மண்டலத்தைப் பாதிக்கும் ஒரு வைரஸ் தொற்று

ஈ. ஒரு வகையான தசைநார் சிதைவு



★ ஓர் அண்மைய ஆய்வு நியண்டர்தால்களில் டௌன் நோய்க்குறியின் முதல் பாதிப்பை ஆவணப்படுத்துகிறது. டௌன் நோய்க்குறி என்பது மனிதரில் காணப்படும் 21ஆம் நிறப்புரியில் இரண்டு இருப்பதற்குப் பதிலாக, பகுதியாகவோ, முழுமையாகவோ மேலதிகமான ஒரு நிறப்புரி காணப்படும் நிலையாகும். இது பல்வேறு அளவில், கற்கும் திறனையும் உடலையும் பாதிக்கிறது. இதில் சிலவேறுபட்ட வகைகள் இருப்பினும் டிரைசோமி–21 / டிரைசோமி–ஜி என்னும் வகை 95% ஆகும். இந்த மரபணு நிலை மனம் மற்றும் உடல் வளர்ச்சியை பாதிக்கிறது. இந்த நிலை பொதுவாக ஆரம்பகால கரு வளர்ச்சியின்போது தோராயமாக எழுகிறது. மரபு அடிப்படையில் இது வருவதில்லை.

**10. '*Xenophrys apatani*' என்பது சார்ந்த இனம் எது?**



அ. எறும்பு

**ஆ. தவளை ☑**

இ. மீன்

ஈ. சிலந்தி

★ இந்திய விலங்குகள் கணக்கெடுப்பு நிறுவனத்தின் ஆராய்ச்சியாளர்கள், டால்லே வனவிலங்கு சரணாலயத்தில், காடுகளில் வசிக்கும் தவளை இனமான, '*Xenophrys apatani*'ஐக் கண்டுபிடித்துள்ளனர். அபதானி சமூகத்தின் பாதுகாப்பு முயற்சிகளின் காரணமாக இத் தவளை இனத்திற்கு இப்பெயரிடப்பட்டுள்ளது. இந்த இனம் கிழக்கிமாலய மற்றும் இந்தோ-பர்மா பல்லுயிர் வெப்பப்பகுதிகளில் காணப்படுகிறது. அருணாச்சல பிரதேச மாநிலத்தின் ஜிரோ பள்ளத்தாக்கில் வசிக்கும் அபதானிகள், தனி மொழி பேசுகிறார்கள்; ஞாயிறு மற்றும் திங்களை வணங்குகிறார்கள்; திரீ மற்றும் மயோகோ போன்ற விழாக்களைக் கொண்டாடுகிறார்கள். அவர்கள் எமியோ, பியாப் மற்றும் மைபியா போன்ற நெல் வகைகளைப் பயன்படுத்தி, ஒருங்கிணைந்த நெல்-மீன் பண்ணையத்தை மேற்கொள்கிறார்கள்.

**11. அண்மையில், "மாநிலப் பல்கலைக்கழகங்கள் மற்றும் நிறுவனங்களில் ஆராய்ச்சி & மேம்பாட்டு கலாச்சாரத்தை மேம்படுத்துதல்" என்ற தலைப்பில் அறிக்கையை வெளியிட்ட அரசு நிறுவனம் எது?**

அ. தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையம்

ஆ. அறிவுசார் சொத்து மேல்முறையீட்டு வாரியம்

**இ. NITI ஆயோக் ☑**

ஈ. இந்திய தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணையம்

★ இந்திய மாநிலப் பல்கலைக்கழகங்களில் R&D பற்றிய NITI ஆயோக்கின் அறிக்கை, R&D (GERD)க்கான மொத்தச் செலவினம் 2010-11இலிருந்த ₹60,197 கோடியிலிருந்து 2020-21இல் ₹127,381 கோடியாக இரட்டிப்பாகியுள்ளதாக தெரிவிக்கிறது. மத்திய மற்றும் மாநில அரசுகள் உட்பட அரசு துறைகள் மற்றும் உயர் கல்வி நிறுவனங்கள் GERDஐ இயக்குகின்றன. R&D புதுமைகளை வளர்க்கிறது, தொழில்துறை தேவைகளுடன் கல்வியைச்சீரமைக்கிறது மற்றும் சமூக சவால்களை எதிர்கொள்கிறது. இருப்பினும், உலகளாவிய சகாக்களுடன் ஒப்பிடும்போது, GDPஇல் R&Dக்கான குறைந்த ஒதுக்கீடு, ஆராய்ச்சியைவிட கற்பித்தலுக்கு முக்கியத்துவம் அளித்தல் மற்றும் Ph.Dபோன்ற மேம்பட்ட திட்டங்களில் குறைந்த அளவிலான சேர்க்கை ஆகியவை சவால்களில் அடங்கும்.

**12. அண்மையில், மண்குறித்த பன்னாட்டு மாநாட்டில் புதிய உலக மண் நலக் குறியீட்டை அறிவித்த அமைப்பு எது?**

**அ. UNESCO ☑**

ஆ. UNICEF

இ. UNEP

ஈ. UNDP

★ உலக அளவில் மண்ணின் தரமதிப்பீட்டை தரப்படுத்துவதற்காக மொராக்கோவில் நடந்த பன்னாட்டு மாநாட்டில் UNESCO புதிய உலக மண் நலக் குறியீட்டை அறிமுகப்படுத்தியது. பல்வேறு சுற்றுச்சூழல் அமைப்புகளில் மண் சிதைவு போக்குகள் மற்றும் மேம்பாடுகளை கண்காணிப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது. UNESCO சிறந்த நடைமுறைகளை உருவாக்க பத்து உயிர்க்கோள காப்பகங்களில் நிலையான மண் மேலாண்மையை சோதிக்கும். உலகளவில், மண் சிதைவு 75% நிலத்தைப் பாதிக்கிறது; 3.2 பில்லியன் மக்களை பாதிக்கிறது; மேலும் 2050ஆம் ஆண்டில் அது 90%ஆக இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது. இந்தியாவில், 32% நிலம் பாழடைந்துள்ளது; 25% காடழிப்பு மற்றும் தொழில்துறை மாசுபாடு உள்ளிட்ட பல்வேறு காரணிகளால் பாலைவனமாக்கப்படுகிறது.

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. சமையல் உபகரணங்கள் மீது ISI முத்திரை கட்டாயம்: நடுவண் அரசு.**

அலுமினியம் மற்றும் துருப்பிடிக்காத எஃகால் தயாரிக்கப்படும் அனைத்து சமையல் பாத்திரங்கள், உபகரணங்கள் மீதும் ISI (இந்திய தரநிறுவன குறியீடு) முத்திரை இடம்பெறுவதை நடுவணரசு கட்டாயமாக்கியுள்ளதாக இந்திய தர நிர்ணய அமைப்பு (BIS) சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. பொருள்களின் தரம் மற்றும் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் BIS சார்பில் இந்த ISI குறியீடு மேம்படுத்தப்பட்டுள்ளது.

அதன்படி, துருப்பிடிக்காத எஃகால் ஆன சமையல் உபகரணங்கள்மீது 'IS 14756:2022' என்ற குறியீடும் அலுமினிய சமையல் உபகரணங்கள்மீது, 'IS 1660:2024' என்ற குறியீடும் இடம்பெறும். பாத்திரம் மற்றும் உபகரணங்களின் வடிவமைப்பு விவரக்குறிப்பு, செயல்திறன் அளவீடுகள் ஆகியவற்றின் அடிப்படையில் இந்தத் தரக்குறியீடுகள் வழங்கப்படுகின்றன.

---

## IMPORTANT LINKS

TNPSC Current Affairs

https://www.winmeen.com/tnpsc-tamil-current-affairs/

Winmeen: Install the Winmeen App
Daily Free & Premium Tnpsc Study Materials & Online Test

https://play.google.com/store/apps/details?id=co.robin.jbzwb

Winmeen: Winmeen Tnpsc Test Series - Samacheer lesson Wise Test + Previous Year Model Test for Tnpsc Group 1,2, 4 & VAO

https://wp.me/p7JanY-ag8

**1. மின்னலால் நிகழும் இறப்புகளை எதிர்த்துப் போராடுவதற்காக கிட்டத்தட்ட 19 இலட்சம் பனை மரங்களை நடும் திட்டத்தை அறிவித்துள்ள மாநில அரசு எது?**

அ. பீகார்

ஆ. ஹரியானா

இ. பஞ்சாப்

**ஈ. ஒடிசா ☑**



★ ஒடிசா மாநில அரசு 2024–25இல் மின்னலால் ஏற்படும் அபாயத்தைக் குறைப்பதற்காக சுமார் 19 இலட்சம் பனை மரங்களை நடத் திட்டமிட்டுள்ளது. ஒவ்வொரு வனத்தொகுதி எல்லைக்கும் ₹7 கோடி செலவில் 4 பனைமரங்கள் வழங்கப்படும். தென்னை மற்றும் பனைபோன்ற மரவகைகள் வெப்பமண்டல சுற்றுச்சூழல் அமைப்புகளின் ஒரு பகுதியாக விளங்குகின்றன. பனைமரம் தமிழ்நாடு அரசின் மாநில மரமாகும். மின்னல் தாக்குதலின்போது அவை இயற்கைக்கடத்திகளாகச் செயல்பட்டு உயிர்களைக் காக்கிறது. ஆண் பனை மரங்கள் பூக்களைத் தாங்குகின்றன; அதே நேரத்தில் பெண் பனை மரங்கள் கனிகளைத் தருகின்றன.

**2. அண்மையில், 'Noble Initiative for Rewarding Mains Aspirants of National Civil Services Examination (NIRMAN)' என்ற இணையதளத்தைத் தொடங்கிய அமைச்சகம் எது?**

**அ. நிலக்கரி மற்றும் சுரங்க அமைச்சகம் ☑**

ஆ. கல்வி அமைச்சகம்

இ. உள்துறை அமைச்சகம்

ஈ. பாதுகாப்பு அமைச்சகம்

कोयला मंत्रालय
MINISTRY OF COAL
सत्यमेव जयते

★ மத்திய நிலக்கரி மற்றும் சுரங்க அமைச்சகம், NIRMAN என்ற இணையதளத்தை தொடங்கியுள்ளது. குடிமைப்பணித் தேர்வு எழுதும் இளைஞர்களுக்கு உதவும் வகையில் இந்த இணையதளம் தொடங்கப்பட்டுள்ளது. இந்தியா நிலக்கரி நிறுவனத்தின் பெருநிறுவன பொறுப்புணர்வு திட்டத்தின்கீழ் இந்த இணையதளம் தொடங்கப்பட்டுள்ளது.

★ குடும்ப ஆண்டு வருமானம் ₹8 இலட்சத்திற்கும் குறைவாக உள்ள ஆதிதிராவிடர், பழங்குடியினர், பெண் அல்லது 3ஆம் பாலினத்தவருக்கு ₹1,00,000/– வரை நிதியுதவி செய்வதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இந்திய நிலக்கரி நிறுவனத்தின் செயல்பாடுகள் உள்ள 39 மாவட்டங்களில் ஏதேனும் ஒன்றில் நிரந்தரமாக வசிக்கும் மேற்குறிப்பிட்ட பிரிவினர் இத்திட்டத்தின்கீழ் பயன்பெற தகுதியுடையவர்கள் ஆவார்கள்.

**3. அண்மையில், IAF தலைவரால் ஆயுதப்பயிற்சிப்பள்ளி திறந்து வைக்கப்பட்ட நகரம் எது?**

அ. ஜெய்ப்பூர்

**ஆ. ஹைதராபாத் ☑**

இ. கொல்கத்தா

ஈ. போபால்



★ ஹைதராபாத், பேகம்பேட்டையில் உள்ள விமானப்படைத்தளத்தில் அமைக்கப்பட்டுள்ள ஆயுதப்பயிற்சிப்பள்ளியை, விமானப்படைத்தளபதி திறந்து வைத்தார். இந்திய விமானப்படையை, எதிர்காலத்திற்கேற்ற படைபலம்வாய்ந்த பிரிவாக மாற்றியமைப்பதே இதன் நோக்கம். இந்தப்புதிய பயிற்சிப்பிரிவு ஏற்படுத்தப்பட்டிருப்பது, இந்தியாவின் ஆயுதப் படைகள், குறிப்பாக விமானப்படை மேலும் வேகத்துடன் செயல்பட உதவிகரமாக இருக்கும்.

**4. அண்மையில், ஏர் இந்தியா நிறுவனம், தெற்காசியாவின் மிகப்பெரிய விமானப்பயிற்சிப்பள்ளியை கீழ்க்காணும் எந்த மாநிலத்தில் நிறுவவுள்ளது?**

அ. இராஜஸ்தான்

**ஆ. மகாராஷ்டிரா ☑**

இ. ஆந்திர பிரதேசம்

ஈ. மேகாலயா

★ ஏர் இந்தியா நிறுவனம் தெற்காசியாவின் மிகப்பெரிய விமானப் பயிற்சிப் பள்ளியை மகாராஷ்டிர மாநிலத்தின் அமராவதி மாவட்டத்தில் ₹200 கோடி முதலீட்டில் நிறுவவுள்ளது. அடுத்த நிதியாண்டின் முதல் காலாண்டில் திறக்கப்படவுள்ள இது, ஆண்டுதோறும் 500–700 விமானிகளுக்கான பயிற்சித் தேவையைப் பூர்த்தி செய்யும். மகாராஷ்டிர மாநில விமான நிலைய மேம்பாட்டு நிறுவனத்துடன் இணைந்து, 10 ஏக்கர் பரப்பளவில் அமையவுள்ள இந்தப் பயிற்சிப் பள்ளி, 31 ஒற்றை–இயந்திர ஃபைபர் விமானங்கள் மற்றும் மூன்று இரட்டை–என்ஜின் டயமண்ட் விமானங்களைப் பயன்படுத்தி 180 வணிக விமானிகளுக்குப் பயிற்சியளிக்கும்.

**5. அண்மையில், வானிலிருந்து மேற்பரப்பு இலக்கைத் தாக்கும் கதிர்வீச்சு எதிர்ப்பு ஏவுகணையான, 'ருத்ரம்–1'ஐ வெற்றிகரமாகச் சோதனை செய்த நாடு எது?**



அ. சீனா

**ஆ. இந்தியா ☑**

இ. ஜப்பான்

ஈ. நேபாளம்

★ இந்திய வான்படைக்காக DRDO உருவாக்கிய அதன் முதல் உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட கதிர்வீச்சு எதிர்ப்பு ஏவுகணையான, 'ருத்ரம்–1'ஐ இந்தியா வெற்றிகரமாகச் சோதனைசெய்தது. சுகோய்–30 MKI போர் விமானத்தில் இருந்து ஏவுதல், INS–GPS வழிசெலுத்தல் அமைப்பைப் பெற்றிருத்தல் ஆகியவை இதன் முக்கிய அம்சங்களில் அடங்கும். 100–250 கிமீ தூர வரம்பைக் கொண்டுள்ள இதால் மாக் 2 வேகம் வரை செல்ல முடியும். ருத்ரம்–1 ஆனது இந்திய வான்படையின் (IAF) Suppression of Enemy Air Defence (**SEAD**) திறனை மேம்படுத்துவதோடு ஒரு படை பெருக்கியாகவும் செயல்படுகிறது.

**6. அண்மையில், கேரள மாநிலத்தில் உள்ள எந்த மாவட்டப் பஞ்சாயத்து, நீலோற்பலத்தின் அச்சுறுத்தலுக்குத் தீர்வு காண்பதற்காக ஒரு தொழில்நுட்பக் குழுவை அமைத்தது?**



**அ. கோட்டயம் ☑**

ஆ. கண்ணூர்

இ. வயநாடு

ஈ. திருச்சூர்

★ கோட்டயம் (கேரளா) மாவட்டப் பஞ்சாயத்து, நீலோற்பலத்தின் அச்சுறுத்தலைச் சமாளிக்க ஒரு தொழில்நுட்ப குழுவை அமைத்துள்ளது. நீலோற்பலம் (*Eichhornia crassipes*) என்பது பிரேசிலைப் பூர்வீகமாகக் கொண்ட வேகமாக வளரும் ஒரு நீர்வாழ் தாவரமாகும்; இது விதைகள் மற்றும் தாவர இனப்பெருக்கம்மூலம் பரவுகிறது. இது நீர்ப்பரப்புகளில் அடர்த்தியாக படிந்து சூரியவொளியை முற்றாகத் தடுக்கிறது மற்றும் ஆக்ஸிஜன் ($O_2$) அளவைக் குறைக்கிறது. இதன் காரணாமக மீன்பிடி, போக்குவரத்து மற்றும் பொழுதுபோக்கு அம்சங்கள் சீர்குலைகின்றன. அதன் ஆக்கிரமிப்பு தன்மை காரணமாக இது பெரும்பாலும், "வங்காளத்தின் பயங்கரம்" என்று அழைக்கப்படுகிறது.

**7. 'பன்னாட்டு நெகிழிப்பை இல்லாத நாள்' அனுசரிக்கப்படுகிற தேதி எது?**

**அ. ஜூலை.03 ☑**

ஆ. ஜூலை.05

இ. நவம்பர்.05

ஈ. நவம்பர்.03




★ ஒருமுறை பயன்படுத்தும் நெகிழியைத் தவிர்ப்பதற்கும் நெகிழி மாசுபாட்டை எதிர்த்துப் போராடுவதற்குமாக ஜூலை 03ஆம் தேதியன்று பன்னாட்டு நெகிழிப்பை இல்லாத நாள் கடைப்பிடிக்கப்படுகிறது. பேக் ஃப்ரீ வேர்ல்டுமூலம் நிறுவப்பட்ட இந்நாள், கடந்த 2008ஆம் ஆண்டில், ஜீரோ வேஸ்ட் ஐரோப்பாவின் உறுப்பினரான ரெஸெரோவால் முதல் முதலாக அனுசரிக்கப்பட்டது. 2015ஆம் ஆண்டில், ஐரோப்பிய ஒன்றியம், ஒருமுறை பயன்படுத்தும் நெகிழிப் பைகளின் பயன்பாட்டைக் குறைப்பதற்கான ஆணைகளை நிறைவேற்றியது. 2022ஆம் ஆண்டில் இப்பைகளை தடைசெய்த முதல் நாடாக வங்காளதேசம் ஆனது. அதைத் தொடர்ந்து இந்தியா மற்றும் பிற நாடுகள் நிறைவேற்றின.

**8. சிக்கிமில் பேரேலக்காய் நோய்களைக்கண்டறிந்து வகைப்படுத்துவதற்கான AI கருவிகளை உருவாக்குவதற்காக அண்மையில் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட நிறுவனங்கள் எவை?**

**அ. தேசிய தகவலியல் மையம் (NIC) மற்றும் இந்திய மசாலா வாரியம் ☑**

ஆ. இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகம் (ICAR) மற்றும் இந்திய மசாலா வாரியம்

இ. தேசிய தகவலியல் மையம் (NIC) மற்றும் வேளாண் அமைச்சகம்

ஈ. இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (ISRO) மற்றும் இந்திய மசாலா வாரியம்



★ சிக்கிமில் பேரேலக்காய் நோய்களைக் கண்டறிந்து வகைப்படுத்துவதற்கான AI கருவிகளை உருவாக்குவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் தேசிய தகவலியல் மையமும் (NIC) இந்திய மசாலா வாரியமும் கையெழுத்திட்டுள்ளன. கொல்கத்தாவில் உள்ள NICஇன் AI-க்கான சிறப்பு மையம் தலைமையிலான இத்திட்டம் நோய்களை முன்கூட்டியே கண்டறிய ஏலக்காய் இலைகளின் படங்களை பகுப்பாய்வு செய்கிறது.

**9. அண்மையில், ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் (SCO) உறுப்புநாடுகளின் தலைவர்கள் கூட்டமைப்பின் 24ஆவது கூட்டம் நடைபெற்ற இடம் எது?**

அ. தெஹ்ரான், ஈரான்

**ஆ. அஸ்தானா, கஜகஸ்தான் ☑**

இ. பெய்ஜிங், சீனா

ஈ. புது தில்லி, இந்தியா

★ 24ஆவது SCO உறுப்பு நாடுகளின் தலைவர்கள் கூட்டம் கஜகஸ்தானின் அஸ்தானாவில் 2024 ஜூலை.04 அன்று நடைபெற்றது. தலைவர் டோகாயேவால் தொகுத்து வழங்கப்பட்ட இந்த உச்சிமாநாடு, பெலாரஸை பத்தாவது முழு நேர உறுப்பினராக ஏற்றுக்கொண்டது. இந்தியப் பிரதமர் நரேந்திர மோதிக்குப் பதிலாக இக்கூட்டத்தில் பங்கேற்ற வெளியுறவு அமைச்சர் Dr S ஜெய்சங்கர், பயங்கரவாதத்திற்கு எதிரான நரேந்திர மோதியின் நிலைப்பாட்டை மீண்டும் வலியுறுத்தினார். புதின், ஜி ஜின்பிங், எர்டோகன் உள்ளிட்ட முக்கிய தலைவர்கள் கலந்துகொண்டு, பயங்கரவாதம் மற்றும் தீவிரமயமாக்கலுக்கு எதிரான போராட்டத்தின் முன்னுரிமையை வலியுறுத்தினர்.

**10. அண்மையில், 'சம்பூர்ணதா அபியானைத்' தொடங்கிய அரசு நிறுவனம் எது?**

அ. தேசிய தகவலியல் மையம் ஆ. NABARD

**இ. NITI ஆயோக் ☑** ஈ. நிதி அமைச்சகம்

★ 'சம்பூர்ணதா அபியான்' என்ற இயக்கத்தை NITI ஆயோக் தொடங்கியது. இதில் நாடு முழுவதுமுள்ள குடிமக்களின் குறிப்பிடத்தக்க பங்கேற்பு காணப்பட்டது. முன்னேற விரும்பும் 112 மாவட்டங்கள் மற்றும் 500 முன்னேற விரும்பும் வட்டாரங்களில் தொடக்க நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. 2024 ஜூலை .04 முதல் செப்டம்பர்.30 வரை இயங்கும் இந்த விரிவான மூன்று மாத பிரச்சாரம், முன்னேற விரும்பும் மாவட்டங்கள் மற்றும் வட்டாரங்களில் 12 முக்கிய சமூகத்துறை குறிகாட்டிகளின் 100% செறிவூட்டலை அடைவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

★ பரப்புரையின் முதல் நாளில் ஜம்மு–காஷ்மீர் முதல் அந்தமான், நிக்கோபார் தீவுகள் வரை லட்சக்கணக்கானோர் பங்கேற்றனர். இதன் ஒருபகுதியாக, மாவட்ட, வட்டார அதிகாரிகள், தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளுடன் இணைந்து கிராம சபைகள், சுகாதார முகாம்கள், ஐ.சி.டி.எஸ் முகாம்கள், விழிப்புணர்வு அணிவகுப்புகள், பேரணிகள், கண்காட்சிகள் போன்ற விழிப்புணர்வு நடவடிக்கைகளை 12 கருப்பொருட்களில் நடத்துவர்.

**11. UNESCO உலக பாரம்பரியக் குழுவின் 46ஆவது அமர்வை நடத்துகிற நாடு எது?**

அ. ஆஸ்திரேலியா

ஆ. பிரான்ஸ்

**இ. இந்தியா ☑**

ஈ. ரஷ்யா

★ 2024 ஜூலை.21–31 வரை, புதுதில்லியில் உள்ள பாரத் மண்டபத்தில் 46ஆவது UNESCO உலக பாரம்பரியக் குழு அமர்வை இந்தியா நடத்தவுள்ளது. இந்தக் குறிப்பிடத்தக்க கலாச்சார நிகழ்வில் 195 நாடுகளைச் சார்ந்த 2,500 பிரதிநிதிகள் பங்கேற்கவுள்ளனர். இந்நிகழ்வில், உலக பாரம்பரிய கூட்டமைப்பின் உறுப்பு நாடுகள், ஆலோசனை அமைப்புகள், மூத்த இராஜதந்திரிகள், பாரம்பரிய நிபுணர்கள் மற்றும் அறிஞர்கள் பங்கேற்பர். உலகளாவிய கலாச்சார முக்கியத்துவம் வாய்ந்த விஷயங்களை விவாதித்து முடிவெடுப்பதை இந்தக்கூட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

**12. கரிமப்பாஸ்பேட் அடிப்படையிலான பூச்சிக்கொல்லிகளை திறம்பட நடுநிலையாக்கும் பூச்சிக்கொல்லி–எதிர்ப்பு துணியை உருவாக்கியுள்ள இந்திய ஆராய்ச்சி நிறுவனம் எது?**

அ. உலர்நில வேளாண்மைக்கான மத்திய ஆராய்ச்சி நிறுவனம்

**ஆ. குருத்தணு அறிவியல் மற்றும் மீளாக்க மருத்துவத்திற்கான நிறுவனம் (inStem) ☑**

இ. தேசிய உயிரி-மருத்துவ மரபணுத்தொகுதியியல் நிறுவனம்

ஈ. இந்திய அறிவியல் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்கள்

★ பெங்களூருவில் அமைந்துள்ள குருத்தணு அறிவியல் மற்றும் மீளாக்க மருத்துவத்திற்கான நிறுவனம் (inStem) ஒரு புதுமையான பூச்சிக்கொல்லி–எதிர்ப்பு துணியை உருவாக்கியுள்ளது. இந்தத் துணியானது நியூக்ளியோபிலிக் சிறிய மூலக்கூறுகளைப் பயன்படுத்துகிறது. இது 150 முறை துவைத்தலுக்குப் பிறகும், கரிமப்பாஸ்பேட்–அடிப்படையிலான பூச்சிக்கொல்லிகளைத் தொடர்புகொள்ளும்போது அதை நடுநிலையாக்க இணைப்பிணைப்பைப் பயன்படுத்துகிறது. மின்னணு மிகுபொருள் மருந்தூட்டப்பட்ட நீராற்பகுப்பு முறை (Nucleophile–mediated Hydrolysis)மூலம் பூச்சிக்கொல்லி நச்சுத்தன்மையிலிருந்து விவசாயிகளுக்கு பாதுகாப்பளிப்பதை இது நோக்கமாகக்கொண்டுள்ளது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. கிராண்ட் பிரீ மல்யுத்தம்: வினேஷ் போகத்துக்கு தங்கம்.**

ஸ்பெயினில் நடைபெற்ற கிராண்ட் பிரீ மல்யுத்த போட்டியில் இந்தியாவின் வினேஷ் போகத் தங்கப்பதக்கம் வென்றார். மகளிருக்கான 50 கிகி எடைப்பிரிவில் பங்கேற்ற அவர், இறுதிச்சுற்றில் 10–5 என்ற கணக்கில் ரஷ்யாவைச் சேர்ந்த மரியா டியுமெரிகோவாவை வீழ்த்தினார்.

# IMPORTANT LINKS

TNPSC Current Affairs

https://www.winmeen.com/tnpsc-tamil-current-affairs/

Winmeen: Install the Winmeen App
Daily Free & Premium Tnpsc Study Materials & Online Test

https://play.google.com/store/apps/details?id=co.robin.jbzwb

Winmeen: Winmeen Tnpsc Test Series - Samacheer lesson Wise Test + Previous Year Model Test for Tnpsc Group 1,2, 4 & VAO

https://wp.me/p7JanY-ag8

**1. இயற்கை வேளாண்மையை மேம்படுத்துவதற்கான புதிய முயற்சியான, 'ஜைவா கிராமம்' என்ற இயக்கத்தைத் தொடங்கிய மாநிலம் எது?**

அ. பீகார்

ஆ. ஹரியானா

இ. பஞ்சாப்

**ஈ. கேரளா ☑**



★ கேரள மாநிலத்தின் கருமல்லூரில் தொடங்கப்பட்ட, 'ஜைவா கிராமம்' இயக்கம் கரிம வேளாண்மை ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. உள்ளூர் பஞ்சாயத்து மற்றும் அரிமா சங்கத்தால் ஆதரிக்கப்படும் இது ஓணத்திற்கு காய்கறிகளை வளர்ப்பதற்கு மக்களை ஊக்குவிக்கிறது.

★ பங்கேற்பாளர்கள் மரக்கன்றுகள், உரங்கள் மற்றும் கருவிகளுக்கு மானியங்களைப் பெறுவதோடு அனுபவம் வாய்ந்த விவசாயிகளிடமிருந்து வேளாண்மையைக் கற்றுக்கொள்வார்கள். இந்த முயற்சி நிலையான வேளாண் வளர்ச்சி, காய்கறி உற்பத்தியில் தன்னிறைவு மற்றும் விவசாயிகளின் பொருளாதார வாய்ப்புகளை அதிகரிப்பதற்காக கேரள மாநிலத்தின் விவசாய பாரம்பரியத்தை பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

**2. தொழில்நுட்ப மேம்பாட்டு நிதி திட்டம் என்பது கீழ்க்காணும் எந்த அமைச்சகத்தின் முதன்மை திட்டமாகும்?**

அ. நிலக்கரி மற்றும் சுரங்க அமைச்சகம்

ஆ. கல்வி அமைச்சகம்

இ. உள்துறை அமைச்சகம்

**ஈ. பாதுகாப்பு அமைச்சகம் ☑**

★ பாதுகாப்பு அமைச்சகத்தின் தலைமையிலான மற்றும் DRDOஆல் 'மேக் இன் இந்தியா'இன்கீழ் செயல்படுத்தப்பட்ட தொழில்நுட்ப மேம்பாட்டு நிதி திட்டமானது பாதுகாப்பில் தன்னம்பிக்கையை ஊக்குவிக்கிறது. தற்போது உள்நாட்டில் கிடைக்காத பாதுகாப்பு மற்றும் இரட்டை பயன்பாட்டு தொழில்நுட்பங்களை உருவாக்குவதற்கு இந்திய தொழில்கள், MSMEகள், புத்தொழில் நிறுவனங்கள் மற்றும் கல்வி நிறுவனங்களுக்கு இது மானியங்களை வழங்குகிறது. இந்தத் திட்டம் தனியார் துறைகளிடையே இராணுவ தொழில்நுட்ப வடிவமைப்பு மற்றும் வளர்ச்சியின் கலாச்சாரத்தை வளர்க்கிறது. மேலும், முன்னோடி முதன்மை தொழில்நுட்பங்கள் மற்றும் ஆயுதப்படைகள், ஆராய்ச்சி அமைப்புகள், கல்வியாளர்கள் மற்றும் தனியார் நிறுவனங்களிடையே ஒத்துழைப்பை வளர்ப்பதில் இது கவனம் செலுத்துகிறது.

**3. அண்மையில், பேரிடர் நிர்வாகத்தில் புரட்சியை ஏற்படுத்துவதற்காக, Advanced Land Observing Satellite–4 "DAICHI–4" (ALOS–4)ஐ வெற்றிகரமாக ஏவிய விண்வெளி நிறுவனம் எது?**

அ. NASA

ஆ. ISRO

**இ. JAXA ☑**

ஈ. CNSA

★ ஜப்பானிய விண்வெளி ஆய்வு முகமை (JAXA) 2024 ஜூலை.1 அன்று, தனகாஷிமா விண்வெளி மையத்திலிருந்து H3 ஏவுகலத்தைப் பயன்படுத்தி Advanced Land Observing Satellite–4 "DAICHI–4" (ALOS–4)ஐ வெற்றிகரமாக ஏவியது. ALOS–4 ஆனது Phased Array type L–band Synthetic Aperture Radar–3 (PALSAR–3) மற்றும் Space–அடிப்படையிலான AIS Experiment (SPAISE3) ஆகியவற்றைக் கொண்டுள்ளது.

★ இது உயர்தெளிவுத்திறன், அனைத்து வானிலை கூர்நோக்குத்திறனை மேம்படுத்துகிறது. இந்தச்செயற்கைக்கோள் பேரிடர் நிர்வாகத்திற்கு முக்கியமானதாகும். இயற்கைப் பேரிடர்கள் மற்றும் சுற்றுச்சூழல் கண்காணிப்பைத் தணிக்க விரிவான கண்காணிப்புத் திறன்களை இது கொண்டுள்ளது.

**4. எந்த வகை கொசுக்களால் ஜிகா வைரஸ் நோய் பரவுகிறது?**



அ. அனோபீலஸ் கொசுக்கள்

**ஆ. ஏடிஸ் கொசுக்கள் ☑**

இ. கியூலெக்ஸ் கொசுக்கள்

ஈ. மேற்குறிப்பிட்ட எதுவும் இல்லை

★ சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகத்தின் சுகாதார சேவைகளின் இயக்குநர் ஜெனரல் டாக்டர் அதுல் கோயல், மகாராஷ்டிராவில் ஜிகா வைரஸ் பாதிப்புகள் ஏற்பட்டதைத் தொடர்ந்து மாநிலங்களுக்கு ஆலோசனை வழங்கினார். சிறுதலை மற்றும் கருவிலுள்ள நரம்பியல் பிரச்சினைகள் ஆகியவற்றுடனான ஜிகா வைரசின் தொடர்பு காரணமாக இந்த ஆலோசனை விழிப்புணர்வை வலியுறுத்துகிறது.

★ கர்ப்பிணிப் பெண்களுக்கு ஜிகா வைரஸ் உள்ளதா? என்பதை கண்காணிக்கவும், சுகாதார மையங்கள் கொசு இல்லா நிலையை உறுதிப்படுத்தவும், நடுவண் அரசின் வழிகாட்டுதல்களைப் பின்பற்றவும் மாநிலங்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. முதன்மையாக பாதிக்கப்பட்ட ஏடிஸ் கொசுக்கள் வழியாக பரவுகிற ஜிகாவின் அறிகுறிகளில், காய்ச்சல், சொறி மற்றும் மூட்டு வலி ஆகியவை அடங்கும்.

**5. அண்மையில், எதிர்கால தொற்றுநோய்களுக்கு இந்திய சுகாதார அமைப்பின் தயார்நிலையை ஒருங்கிணைத்து வலுப்படுத்துவதற்காக கீழ்க்காணும் எந்த நிறுவனத்துடனான கடன் ஒப்பந்தத்தில் இந்திய அரசு கையெழுத்திட்டது?**

**அ. ஆசிய வளர்ச்சி வங்கி ☑**

ஆ. உலக வங்கி




இ. இந்திய ரிசர்வ் வங்கி

ஈ. பாரத வங்கி

★ எதிர்கால தொற்றுநோய்களுக்கான இந்தியாவின் சுகாதார அமைப்பை மேம்படுத்துவதற்காக இந்திய அரசு மற்றும் ஆசிய வளர்ச்சி வங்கி (ADB) $170 மில்லியன் டாலர் மதிப்பிலான கடன் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன. ஜூஹி முகர்ஜி மற்றும் மியோ ஓகா ஆகியோர் இதில் கையொப்பமிட்டவர்களாவர். "நெகிழக்கூடிய மற்றும் உருமாறும் சுகாதார அமைப்புகள் திட்டத்திற்கான பலப்படுத்தப்பட்ட மற்றும் அளவிடக்கூடிய நடவடிக்கைகள்" ஆனது நோய் கண்காணிப்பு, நலத்திற்கான மனித வளங்கள் & காலநிலை-நெகிழ்திறன்மிக்க பொதுச்சுகாதார உள்கட்டமைப்பு ஆகியவற்றை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இது தேசிய சுகாதார கொள்கை-2017 மற்றும் PM-ABHIM போன்ற முன்னெடுப்புகளை ஆதரிக்கிறது.

**6. அண்மையில், எந்த மாநிலத்தின் முதலமைச்சராக ஹேமந்த் சோரன் பதவியேற்றுக்கொண்டார்?**

அ. ஒடிசா

**ஆ. ஜார்க்கண்ட் ☑**



இ. பீகார்

ஈ. மத்திய பிரதேசம்

★ ஜார்க்கண்ட் முக்தி மோர்ச்சா கட்சியின் (JMM) ஹேமந்த் சோரன் மூன்றாவது முறையாக ஜார்க்கண்ட் மாநிலத்தின் முதலமைச்சராக பதவியேற்றுக்கொண்டார். அவருக்கு அம்மாநில ஆளுநர் CP இராதாகிருஷ்ணன் பதவிப்பிரமாணம் செய்து வைத்தார். முன்னதாக 2013-2014 மற்றும் 2019-2024 ஆகிய காலகட்டத்தில் முதலமைச்சராக இருந்த ஹேமந்த் சோரன், 2024 ஜனவரியில் பணமோசடி வழக்கில் கைதுசெய்யப்படுவதற்கு முன்னர் ராஜினாமா செய்தார். 2024 ஜூனில் பிணை பெற்ற அவர், JMM, காங்கிரஸ், ராஷ்டிரிய ஜனதா தளம் மற்றும் இடதுசாரிக் கட்சிகளை உள்ளடக்கிய மககத்பந்தன் கூட்டணிக்கு தலைமை தாங்குகிறார்.

**7. அண்மையில், சர் கெய்ர் ஸ்டார்மர் என்பவர் கீழ்க்காணும் எந்த நாட்டின் புதிய பிரதமராக நியமிக்கப்பட்டார்?**



**அ. ஐக்கிய இராச்சியம் ☑**

ஆ. ஆஸ்திரேலியா

இ. நியூசிலாந்து

ஈ. போலந்து

★ மூன்றாம் சார்லஸ் அரசரால் சர் கெய்ர் ஸ்டார்மர் இங்கிலாந்தின் 58ஆவது பிரதமராக நியமிக்கப்பட்டார். அவரது தொழிலாளர் கட்சி 412/650 இடங்களில் வென்று ஒரு மாபெரும் வெற்றியைப் பெற்றது. பழைமவாத தலைவர் ரிஷி சுனக் 119 இடங்களை மட்டுமே வென்றார். கெய்ர் ஸ்டார்மர் இங்கிலாந்து பிரதமரின் அதிகாரப்பூர்வ வசிப்பிடமான 10, டௌனிங் தெருவில் இனி வசிப்பார்.

**8. துரந்த் கோப்பையுடன் தொடர்புடைய விளையாட்டு எது?**

அ. கூடைப்பந்து

ஆ. ஹாக்கி

இ. கிரிக்கெட்

**ஈ. கால்பந்து ☑**

★ ஆசியாவின் மிகப்பழமையான சங்கம் அடிப்படையிலான கால்பந்து போட்டியான 133ஆவது துரந்த் கோப்பையானது 2024 ஜூலை.27 தொடங்கி ஆக.31 வரை நடைபெறவுள்ளது. இப்போட்டிகள் கொல்கத்தா, கோக்ராஜர், ஜாம்ஷெட்பூர் மற்றும் ஷில்லாங் ஆகிய இடங்களில் நடைபெறவுள்ளன. போட்டியை முதல் முறையாக ஜாம்ஷெட்பூர் நடத்துகிறது. இந்தப்போட்டியில் இந்திய சூப்பர் லீக், ஐ–லீக் மற்றும் ஆயுதப்படைகளைச் சேர்ந்த 24 அணிகள் இடம்பெற்றுள்ளன. இதன் தொடக்கப்போட்டி, அரையிறுதி மற்றும் இறுதிப்போட்டி ஆகியவை கொல்கத்தாவில் நடைபெறும். மோகன் பாகன் அணி நடப்புச் சாம்பியனாக உள்ளது.

**9. காவேரியாறு மாசுபடுவதை விசாரிப்பதற்காக ஒன்பதுபேர்கொண்ட குழுவை அமைத்துள்ள மாநில அரசு எது?**



அ. தமிழ்நாடு

**ஆ. கர்நாடகா ☑**

இ. கேரளா

ஈ. ஆந்திர பிரதேசம்

★ காவேரியாறு மாசுபடுவதை விசாரிப்பதற்காக கர்நாடக மாநில அரசு ஒன்பது பேர் கொண்ட குழுவை அமைத்தது. இந்துக்களின் புனித ஆறான காவேரி மேற்குத்தொடர்ச்சிமலையில் பிரம்மகிரி மலையிலிருந்து 1,341 மீ உயரத்தில் உருவாகிறது. இது வங்காள விரிகுடாவில் கலப்பதற்கு முன்பு கர்நாடகா மற்றும் தமிழ்நாடு வழியாக 800 கிமீ நீளத்திற்குப் பாய்கிறது. தமிழ்நாடு, கர்நாடகா, கேரளா மற்றும் புதுச்சேரி முழுவதும் 81,155 சதுர கிமீ பரப்பளவிற்கு இது நன்மைபயக்கிறது. இதன் முதன்மை துணையாறுகளில் ஹேரங்கி, ஹேமாவதி, சிம்சா, அரக்காவதி, லட்சுமன தீர்த்தம், கபினி, சுவர்ணவதி, பவானி, நொய்யல் மற்றும் அமராவதி ஆகியவை அடங்கும். இதன் முக்கிய அணைகள் கிருஷ்ணராஜ சாகரம், மேட்டூர் மற்றும் பனசுரா சாகர் ஆகும்.

**10. அண்மையில், முதுமலை புலிகள் காப்பகத்தில் தென்பட்ட பொதுவான புல் மஞ்சள் என்பது சார்ந்த இனம் எது?**



அ. சிலந்தி **ஆ. பட்டாம்பூச்சி ☑**

இ. தவளை ஈ. எறும்பு

★ முதுமலை புலிகள் காப்பகத்தில் மேற்கொள்ளப்பட்ட 3 நாள் கணக்கெடுப்பின்போது, முதல் முறையாக, பொதுவான புல் மஞ்சள் பட்டாம்பூச்சிகள் காணப்பட்டன. பொதுவான புல் மஞ்சள் (*Eurema hecabe*) பட்டாம்பூச்சி என்பது ஆசியா, வட அமெரிக்கா, ஆப்பிரிக்கா மற்றும் ஆஸ்திரேலியா முழுவதும் காணப்படும் ஒரு சிறிய பட்டாம்பூச்சி ஆகும். அவை திறந்த புல்வெளி அல்லது புதர் நிலப்பரப்புகளில் பெரிதும் வாழ்கின்றன. அவை கண்கவர் மஞ்சள் இறக்கைகளைக் கொண்டுள்ளன. பரவலாக காணப்பட்டபோதிலும், அவை IUCNஇன் செம்பட்டியலில் தீவாய்ப்பு கவலை குறைந்த இனமாக பட்டியலிடப்பட்டுள்ளன. மேலும் அவை இந்தியாவின் வனவிலங்கு (பாதுகாப்பு) சட்டம், 1972இன் கீழ் பாதுகாக்கப்படாத இனமாகும்.

**11. அண்மையில், எஃகுக்கழிவு சாலை குறித்த முதல் பன்னாட்டு மாநாடு நடைபெற்ற இடம் எது?**



அ. போபால்

**ஆ. புது தில்லி ☑**

இ. கோயம்புத்தூர்

ஈ. சென்னை

★ அறிவியல் மற்றும் தொழிற்துறை ஆராய்ச்சிக் கழகம் (CSIR), மத்திய சாலை ஆராய்ச்சிக்கழகம், (CRRI) வர்த்தகம் மற்றும் தொழில்துறையின் PHD கூட்டமைப்பு ஆகியவை எஃகுக்கழிவு கலந்த சாலை அமைத்தல் குறித்த முதலாவது பன்னாட்டு மாநாட்டிற்கு புதுதில்லியில் ஏற்பாடு செய்திருந்தன. இதில் கலந்துகொண்ட NITI ஆயோக் (அறிவியல்) உறுப்பினர் Dr V K சரஸ்வத், எஃகுக்கழிவைப் பயன்படுத்துவதற்கான வழிகாட்டு நெறிமுறைகளை வெளியிட்டார்.

★ எஃகுக்கழிவுகளைப் பயன்படுத்தி சாலை அமைத்தல், பராமரித்தல் ஆகியவற்றுக்கான இந்த வழிகாட்டுதல்களை ஏற்றுக்கொள்வதன்மூலம், மலிவு, சுற்றுச்சூழல் சீர்கேட்டைக் குறைத்தல், மேம்பட்ட சாலை அமைப்பு உள்ளிட்ட பல நன்மைகள் கிடைக்கும். கட்டுமானம், பராமரிப்புப் பணிகளுக்காக நாட்டில் ஆண்டுதோறும் சுமார் 1.8 பில்லியன் டன், இயற்கை வளப்பொருட்கள் தற்போது தேவைப்படுகின்றன. இந்தியாவின் முதல் எஃகுக்கழிவுச்சாலை சூரத்தில் போடப்பட்டது.

**12. கோடெக்ஸ் அலிமென்டேரியஸ் ஆணையச் செயற்குழுவின் (CCEXEC) 86ஆம் அமர்வு நடத்தப்பட்ட இடம் எது?**

அ. லண்டன்

ஆ. பாரிஸ்

**இ. ரோம் ☑**

ஈ. ஜெனீவா

★ ரோமில் 2024 ஜூலை.01–05 வரை நடந்த கோடெக்ஸ் அலிமென்டேரியஸ் ஆணையச்செயற்குழுவின் 86ஆவது அமர்வில் இந்தியா பங்கேற்றது. FSSAI தலைமைச்செயலதிகாரி G கமலா வர்தனா ராவ் பிரதிநிதித்துவப்படுத்திய இந்த அமர்வில் மசாலா, தாவர எண்ணெய்கள் மற்றும் உணவுப்பாதுகாப்பு ஆகியவற்றிற்கான தரங்களை இந்தியா ஆதரித்தது. முதன்மை முன்னெடுப்புகளில் ஷிகா–நச்சினை உற்பத்தி செய்யும் ஈ.கோலைக் கட்டுப்படுத்துவதற்கான வழிகாட்டுதல்கள், உணவுப்பதப்படுத்துதலில் பாதுகாப்பான நீர் பயன்பாடு மற்றும் உணவுப் பொட்டலம் போடுவதில் மறுசுழற்சி செய்யப்பட்ட பொருட்கள் பயன்படுத்துதல் ஆகியவை அடங்கும். FAOஆல் 1963ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட கோடெக்ஸ் அலிமென்டேரியஸ் ஆணையம், 1964 முதல் இந்தியா உட்பட 189 உறுப்பினர்களைக் கொண்டுள்ளது.

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. NITI ஆயோக்கின் மகளிர் தொழில்முனைவோர் திட்ட தளமும் டிரான்ஸ்யூனியன் சிபில் நிறுவனமும் இணைந்து பெண் தொழில்முனைவோருக்கு அதிகாரமளிக்க புதிய திட்டத்தைத் தொடங்கியுள்ளன.**

NITI ஆயோக்கின் பெண் தொழில்முனைவோர் திட்ட தளமும் டிரான்ஸ்யூனியன் சிபில் நிறுவனமும், 'SEHER' என்ற திட்டத்தைத் தொடங்கியுள்ளன. இந்தியாவிலுள்ள பெண் தொழில்முனைவோருக்கு நிதி தொடர்பான தகவல்களை வழங்குதல், வணிகத்திறன்களை அதிகரித்தல் போன்றவை இத்திட்டத்தின் நோக்கமாகும்.

பெண் தொழில்முனைவோர் திட்ட தளம் என்பது NITI ஆயோகால் நிறுவப்பட்ட ஒரு பொது–தனியார் கூட்டு தளமாகும். இது இந்தியாவில் பெண் தொழில்முனைவோருக்கு ஒரு சிறந்த அமைப்பை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்கள் அமைச்சகத்தின் உதயம் பதிவு தளத்தின் தகவல்படி, இந்தியாவில் 63 மில்லியன் குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் உள்ளன. அவற்றில் 20.5% பெண்களுக்குச் சொந்தமானது. கடன் மற்றும் நிதி மேம்பாட்டில் கவனம் செலுத்துவதன்மூலம், SEHER திட்டம் பெண் தொழில்முனைவோருக்கு பெரிதும் பயனளிக்கும்.

---

**2. ஜூலை.27இல் பிரதமர் நரேந்திர மோதி தலைமையில் NITI ஆயோக் நிர்வாகக்குழு கூட்டம்.**

தில்லியில் பிரதமர் நரேந்திர மோதி தலைமையில் NITI ஆயோக் நிர்வாகக்குழு கூட்டம் ஜூலை.27ஆம் தேதியன்று நடைபெறவுள்ளது. இதில் இந்தியாவை வளர்ந்த நாடாக உருவாக்கும், 'விக்ஷித் பாரத்–2047' திட்டம் குறித்து விரிவாக விவாதிக்கப்படவுள்ளது. இந்திய விடுதலையின் நூறாவது (க௦௦) ஆண்டைக் கொண்டாடும்போது முப்பது (௩௦) டிரில்லியன் டாலர் மதிப்புள்ள பொருளாதாரத்தைக் கொண்ட வளர்ந்த நாடாக உருவாக்குவே விக்ஷித் பாரத் – 2047 திட்டத்தின் நோக்கமாகும்.

மத்திய திட்டக்குழுவுக்கு மாற்றாக கடந்த 2015 ஜன.01ஆம் தேதி NITI ஆயோக் நடுவணரசால் உருவாக்கப்பட்டது. தேசிய வளர்ச்சிக்கான கொள்கையை வகுப்பதே இதன் முதன்மை நோக்கமாகும்.

---

**3. கோடைக்கால நெல் சாகுபடி 19% அதிகரிப்பு: நடுவணரசு.**

நடப்பு ஆண்டு காரீப் (கோடை) பருவக்கால நெல் சாகுபடி பரப்பளவு 19.35% உயர்ந்து, 59.99 லட்சம் ஹெக்டேராக அதிகரித்துள்ளது என நடுவணரசு தெரிவித்தது. கடந்த ஆண்டு, 50.26 லட்சம் ஹெக்டேரில் நெல் பயிரிடப்பட்டது. காரீப் காலப்பயிர்களானது தென்மேற்குப்பருவமழை தொடங்கும் ஜூனில் விதைக்கப்பட்டு, செப்டம்பரில் அறுவடை செய்யப்படும்.

---

**4. புதிய குற்றவியல் சட்டங்களில் திருத்தம் செய்ய குழு.**

நடுவணரசின் புதிய குற்றவியல் சட்டங்களில், மாநில அளவில் திருத்தங்கள் மேற்கொள்ள ஓய்வுபெற்ற நீதிபதி சத்ய நாராயணன் தலைமையில் ஒருநபர் குழு அமைத்து தமிழ்நாடு முதலமைச்சர் மு க ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார். இந்திய தண்டனைச் சட்டம், இந்திய குற்றவியல் நடைமுறைச் சட்டம் மற்றும் இந்திய சாட்சிகள் சட்டம் ஆகிய சட்டங்கள் நடைமுறையில் இருந்த வந்த நிலையில், நடுவணரசால் அவை, "பாரதிய நியாய சன்ஹிதா, 2023", "பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா, 2023" மற்றும் "பாரதிய சாக்ஷியா சட்டம், 2023" என மாற்றப்பட்டு, 01–7–2024 முதல் இச்சட்டங்கள் நடைமுறைக்கு வந்துள்ளன.

இந்தக்குழு இந்தப் புதிய சட்டங்கள் குறித்து தெளிவாக ஆராய்ந்து, மாநில அளவில் என்னென்ன திருத்தங்களைக் கொண்டுவரலாம் என்பது பற்றிய தனது அறிக்கையை ஒருமாதகாலத்திற்குள் அரசுக்கு வழங்கும்.

---

# IMPORTANT LINKS

TNPSC CURRENT AFFAIRS

https://www.winmeen.com/tnpsc-tamil-current-affairs/

WINMEEN: INSTALL THE WINMEEN APP
DAILY FREE & PREMIUM TNPSC STUDY MATERIALS & ONLINE TEST

https://play.google.com/store/apps/details?id=co.robin.jbzwb

WINMEEN: WINMEEN TNPSC TEST SERIES - SAMACHEER LESSON WISE TEST + PREVIOUS YEAR MODEL TEST FOR TNPSC GROUP 1,2, 4 & VAO

https://wp.me/p7JanY-ag8

**1. தேசிய பசுமை ஹைட்ரஜன் இயக்கத்தின் முதன்மை நோக்கம் என்ன?**

அ. கரிம வெளியேற்றத்தை 50% அளவுக்குக் குறைப்பது

**ஆ. பசுமை ஹைட்ரஜன் மற்றும் அதன் வழித்தோன்றல்களை உற்பத்தி செய்வதற்கும், பயன்படுத்துவதற்கும் மற்றும் ஏற்றுமதி செய்வதற்கும் இந்தியாவை உலகளாவிய மையமாக மாற்றுதல் ☑**

இ. மின்சார வாகன உள்கட்டமைப்பை மேம்படுத்துவது

ஈ. சூரிய ஆற்றல் பயன்பாட்டை ஊக்குவிப்பது

★ 2023 ஜனவரி.04 அன்று மத்திய அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்ட தேசிய பசுமை ஹைட்ரஜன் இயக்கத்தின் கீழ் நிதியுதவி செய்வதற்கான வழிகாட்டுதல்களை புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம் வெளியிட்டது. பசுமை ஹைட்ரஜனை உற்பத்தி செய்வதற்கும், பயன்படுத்துவதற்கும் மற்றும் ஏற்றுமதி செய்வதற்கும் இந்தியாவை உலகளாவிய மையமாக மாற்றுவதை நோக்கமாகக் கொண்டது இது. உள்நாட்டு மின்னாற்பகுப்பு உற்பத்தி மற்றும் பசுமை ஹைட்ரஜன் உற்பத்திக்கான நிதிச்சலுகைகள், சோதனைத்திட்டங்கள், பசுமை ஹைட்ரஜன் மையங்களின் மேம்பாடு, R&Dக்கான உத்திசார் ஹைட்ரஜன் கண்டுபிடிப்பு கூட்டாண்மை (SHIP) மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட திறன் மேம்பாட்டுத் திட்டம் ஆகியவை இதன் முக்கிய கூறுகளில் அடங்கும்.

**2. 'அபோபிஸ் – Apophis' என்றால் என்ன?**

**அ. சிறுகோள் ☑**



ஆ. கருந்துளை

இ. நீர்மூழ்கிக்கப்பல்

ஈ. ஆக்கிரமிப்பு களை

★ கோள் பாதுகாப்பு முயற்சிகளை மேம்படுத்துவதற்காக பூமியிலிருந்து 32,000 கிமீ தொலைவில் உள்ள, 'அபோபிஸ்' என்ற சிறுகோளை 2029ஆம் ஆண்டில் ஆய்வுசெய்ய திட்டமிட்டுள்ளதாக, 2024ஆம் ஆண்டு சிறுகோள் நாளில் ISRO தலைவர் அறிவித்தார். 2004இல் கண்டுபிடிக்கப்பட்ட, 'அபோபிஸ்' என்பது பூமிக்கருகில் உள்ள ஒரு பொருளாகும். ஒரு காலத்தில் இது மிகவும் ஆபத்தானதாகக் கருதப்பட்டது. கடந்த 2021 மார்ச்சில் மேற்கொள்ளப்பட்ட ரேடார் ஆய்வுகளின்படி, குறைந்தது அடுத்த நூற்றாண்டு வரை அபோபிஸால் பூமிக்கு எந்தவொரு அபாயம் இல்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டது.

**3. அண்மையில், எந்த மாநிலத்தின் மைக்கா சுரங்கங்களை குழந்தைத் தொழிலாளர் இல்லாத சுரங்கமாக தேசிய சிறார் உரிமைகள் பாதுகாப்பு ஆணையம் (NCPCR) அறிவித்தது?**

அ. மத்திய பிரதேசம்

**ஆ. ஜார்கண்ட் ☑**

இ. ஒடிசா

ஈ. குஜராத்

★ தேசிய சிறார் உரிமைகள் பாதுகாப்பு ஆணையமானது (NCPCR) 2024 ஜூலை.05 அன்று ஜார்கண்டின் மைக்கா சுரங்கங்களை குழந்தைத் தொழிலாளர் இல்லாத சுரங்கமாக அறிவித்தது. மாநில மற்றும் மத்திய அரசுகள், சிவில் சமூகம் மற்றும் உள்ளூர் அதிகாரிகளை உள்ளடக்கிய இந்த முயற்சி 20 ஆண்டுகளுக்கு முன்பு தொடங்கப்பட்டது. சுமார் 20,000 குழந்தைகள் முன்பு மைக்கா சுரங்கத்தில் பணிபுரிந்து வந்தனர். அவர்கள் அனைவரும் மீட்கப்பட்டு, பின்னர் மறுவாழ்வு அளிக்கப்பட்டு பள்ளிகளில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

**4. காசிரங்கா தேசியப்பூங்கா அமைந்துள்ள மாநிலம் எது?**



அ. நாகாலாந்து

ஆ. மணிப்பூர்

இ. மேற்கு வங்காளம்

**ஈ. அஸ்ஸாம் ☑**

★ காசிரங்கா தேசியப்பூங்கா மற்றும் புலிகள் சரணாலயத்தில் மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு ஒரு தனியான பெண் கங்கைநீர் முதலை காணப்பட்டது. கங்கைநீர் முதலைகள் அல்லது *Gavialis gangeticus*, ஒரு காலத்தில் தெற்காசியா முழுவதும் பரவலாக வாழ்ந்து வந்த நன்னீர் முதலைகளாகும். ஆனால் இப்போது முதன்மையாக நேபாளம் மற்றும் வட இந்தியாவில் ஆங்காங்கே காணப்படுகின்றன. மிகவும் அருகிய இனமான இவற்றுள் ஆண் முதலை 20 அடி வரையும், பெண் முதலை 15 அடி வரையும் வளர்கின்றது.

**5. கிருஷ்ணராஜ சாகர் (KRS) அணை அமைந்துள்ள மாநிலம் எது?**



அ. மகாராஷ்டிரா

**ஆ. கர்நாடகா ☑**

இ. மத்திய பிரதேசம்

ஈ. தெலுங்கானா

★ காவேரியாற்றின் குறுக்கே அமைந்துள்ள கிருஷ்ணராஜ சாகர் (KRS) நீர்த்தேக்கம் அண்மையில் 100 அடியைத் தாண்டி அதிகபட்சமாக 124.80 அடியாக உயர்ந்தது. கர்நாடக மாநிலத்தின் மாண்டியாவில் அமைந்துள்ள புவியீர்ப்பு அணையான இது 1911–1931க்கு இடையில் கட்டப்பட்டது. மகாராஜா நான்காம் கிருஷ்ணராஜ வாடியார் பெயரால் அழைக்கப்படுகின்ற இந்த அணை சர் M விஸ்வேஸ்வரயாவால் வடிவமைக்கப்பட்டதாகும். நீர்ப்பாசனம் வழங்கல், நீர்மின்னுற்பத்தி மற்றும் வறட்சி தணிப்பு ஆகியவை இதன் முதன்மை நோக்கங்கள் ஆகும். 130 சதுர கிமீ இந்த நீர்த்தேக்கம் அமைந்துள்ளது.

**6. SEHER திட்டத்தின் முதன்மை நோக்கம் என்ன?**

அ. சுகாதார சேவைகளை மேம்படுத்த

**ஆ. பெண் தொழில்முனைவோர் மத்தியில் நிதிசார் கல்வியறிவு மற்றும் வணிகத்திறன்களை மேம்படுத்துதல் ☑**

இ. விளையாட்டு நடவடிக்கைகளை ஊக்குவிக்க

ஈ. புதிய தொழில்நுட்பங்களை உருவாக்க வேண்டும்

NITI Aayog

★ NITI ஆயோக்கின் பெண் தொழில்முனைவோர் திட்ட தளமும் டிரான்ஸ்யூனியன் சிபில் நிறுவனமும், 'SEHER' என்ற திட்டத்தைத்தொடங்கியுள்ளன. இந்தியாவில் உள்ள பெண்தொழில்முனைவோருக்கு நிதிதொடர்பான தகவல்களை வழங்குதல், வணிகத்திறன்களை அதிகரித்தல் போன்றவை இத்திட்டத்தின் நோக்கமாகும்.

★ பெண் தொழில்முனைவோர் திட்ட தளம் (WEP) என்பது NITI ஆயோகால் நிறுவப்பட்ட ஒரு பொது–தனியார் கூட்டு தளமாகும். இது இந்தியாவில் பெண்தொழில்முனைவோருக்கு ஒரு சிறந்த அமைப்பை உருவாக்குவதை நோக்கம் எனக்கொண்டுள்ளது. குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்கள் அமைச்சகத்தின் உதயம் பதிவு தளத்தின் தகவல்படி, இந்தியாவில் 63 மில்லியன் குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் உள்ளன.

**7. கலம்காரி கலை வடிவத்துடன் தொடர்புடைய மாநிலம் எது?**



அ. ஆந்திர பிரதேசம் ☑

ஆ. உத்தர பிரதேசம்

இ. அஸ்ஸாம்

ஈ. நாகாலாந்து

★ ஒரு காலத்தில் செழித்து வளர்ந்த ஓவியக்கலையான கலம்காரி கலை, இப்போது விசைத்தறிகள் மற்றும் அதிகரித்து வரும் மூலப்பொருள் செலவுகள் காரணமாக நலிவடைந்து வருகிறது. ஆந்திர பிரதேச மாநிலத்தில் நடைமுறையில் இருக்கும் கலம்காரி கலை, 16–17ஆம் நூற்றாண்டில் கோல்கொண்டாவின் குதுப் ஷாஹிஸின்கீழ் திலாங் பகுதியில் (இப்போது ஆந்திர பிரதேசம் மற்றும் தெலுங்கானா) உருவானது. "கலம்காரி" என்ற சொல் "கலம்" (பேனா) மற்றும் "கரி" (கைவினைத்திறன்) எனப் பொருள்படுகிறது. இது இரண்டு தனித்துவமான பாணிகளைக் கொண்டுள்ளது: அவை திருக்காளத்தி மற்றும் பெத்தண்ணா.

**8. பிரான்சு அரசாங்கத்துடன் இணைந்து இந்தோ–பிரெஞ்சு கல்லீரல் & வளர்சிதைமாற்ற நோய் வலையமைப்பைத் (InFLiMeN) தொடங்கிய அமைச்சகம் எது?**

அ. புவி அறிவியல் அமைச்சகம்

ஆ. அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகம் ☑

இ. வெளியுறவு அமைச்சகம்

ஈ. உள்துறை அமைச்சகம்

★ மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகம் இந்தோ–பிரெஞ்சு கல்லீரல் மற்றும் வளர்சிதைமாற்ற நோய் வலையமைப்பை (InFLiMeN) பிரெஞ்சு அரசாங்கத்துடன் இணைந்து தொடங்கியது. இன்ஸ்டிடியூட் ஆஃப் லிவர் & பிலியரி சயின்சஸ், இன்ஸ்டிடியூட் ஆஃப் தில்லியில் அமைந்துள்ள InFLiMeN, கல்லீரல் மற்றும் வளர்சிதைமாற்றக் கோளாறுகளை எதிர்த்துப் போராடுவதற்கான அறிவியல் பரிமாற்றங்கள் & கூட்டுத்திட்டங்களை ஊக்குவிக்கும் ஒரு கூட்டு ஆராய்ச்சித் திட்டமாகும். குறிப்பாக, மூன்றில் ஒரு இந்தியருக்கு கொழுப்புக் கல்லீரல் உள்ளது; இது வகை–2 நீரிழிவு நோய்க்கு முந்தைய நிலையாகும். இச்சிக்கலைத் தீர்ப்பதில் InFLiMeN செயலாற்றுகிறது.

**9. உலகின் முதல் அழுக்கப்பட்ட இயற்கை எரிவாயுவில் (CNG) இயங்கும் இருசக்கர வாகனத்தை அறிமுகப்படுத்திய நிறுவனம் எது?**



அ. யமஹா

ஆ. பஜாஜ் ஆட்டோ ☑

இ. ஹீரோ

ஈ. டி வி எஸ்

★ பஜாஜ் ஆட்டோ நிறுவனமானது புனேயில் CNGஇல் இயங்கும் உலகின் முதல் இருசக்கர வாகனத்தை, 'ஃப்ரீடம் 125' என்ற பெயரில் அறிமுகப்படுத்தியது. சுமார் ₹95,000 விலையில் விற்கப்படும் இந்த வாகனம், மோட்டார் சைக்கிள் சந்தையில் புரட்சியை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. பெட்ரோலை நம்பியிருத்தலிலிருந்து இனி விடுதலை என பஜாஜ் ஆட்டோ நிறுவனத்தின் தலைமைச்செயலதிகாரி இராஜீவ் பஜாஜ் சுட்டிக்காட்டினார். இது 125 cc திறன்கொண்ட எஞ்சினைக் கொண்டுள்ளது.

**10. ஒவ்வோர் ஆண்டும் விலங்குவழி பரவும் நோய்கள் நாள் அனுசரிக்கப்படுகிற தேதி எது?**



அ. ஜூலை.06 ☑

ஆ. ஆகஸ்ட்.16

இ. ஆகஸ்ட்.06

ஈ. ஜூலை.16

★ 1885ஆம் ஆண்டு லூயிஸ் பாஸ்டரால் கண்டுபிடிக்கப்பட்ட ரேபிஸ் தடுப்பூசியை நினைவுகூரும் வகையில், ஆண்டு தோறும் ஜூலை.6 அன்று உலக விலங்குவழி பரவும் நோய்கள் நாள் அனுசரிக்கப்படுகிறது. இது விலங்குகளுக்கும் மனிதர்களுக்கும் பரவும் நோய்கள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துகிறது. வைரஸ்கள், பாக்டீரியாக்கள் மற்றும் ஒட்டுண்ணிகள்போன்ற நோய்க்கிருமிகளால் ஏற்படும் இந்நோய்கள், நேரடி தொடர்பு, அசுத்தமான உணவு அல்லது நீர் அல்லது கொசுக்கள் போன்ற கொணரிகள்மூலம் பரவலாம். "One World, One Health: Prevent Zoonoses" என்பது நடப்பு 2024ஆம் ஆண்டில் வரும் இந்நாளுக்கானக் கருப்பொருளாகும்.

**11. அண்மையில், இந்திய அரசாங்கம், கீழ்க்காணும் எந்தெந்தப்பொருட்கள் இந்திய தரநிலைகளின் பணியகத்துடன் (BIS) ஒத்திசைவதைக் கட்டாயமாக்கியுள்ளது?**

**அ. துருப்பிடிக்காத எஃகு மற்றும் அலுமினியத்தாலான சமையல் உபகரணங்கள் ☑**

ஆ. பித்தளையாலான விளிம்புப்பட்டைகள்

இ. நெகிழிப்பொருட்கள்

ஈ. மரத்தாலான கைவினைப்பொருட்கள்

★ சமையல் உபகரணங்கள்மீது ISI முத்திரை இடம்பெறுவதை கட்டாயமாக்கி, மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சகத்தின்கீழ் செயல்படும் தொழில் மற்றும் உள்நாட்டு வர்த்தக ஊக்குவிப்புக்கான துறை தரக்கட்டுப்பாட்டு ஆணையை அண்மையில் பிறப்பித்தது. பொருள்களின் தரம் மற்றும் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் BIS சார்பில் இந்த ISI குறியீடு மேம்படுத்தப்பட்டுள்ளது. பாத்திரம் மற்றும் உபகரணங்களின் வடிவமைப்பு விவரக்குறிப்பு, செயல்திறன் அளவீடுகள் ஆகியவற்றின் அடிப்படையில் இத்தரக்குறியீடுகள் வழங்கப்படுகின்றன. இந்த ஆணையை மீறும் நிறுவனங்களுக்கு அபராதம் விதிக்கப்படும் என்று BIS தெரிவித்துள்ளது.

**12. "அயன்–டோம்" ஆகாஷ் சர்ஃபேஸ்–டூ ஏர் ஏவுகணையானது எந்த அமைப்பால் உள்நாட்டில் வடிவமைக்கப்பட்டு உருவாக்கப்பட்டது?**

அ. ISRO

ஆ. HAL

**இ. DRDO ☑**

ஈ. BHEL



★ இந்திய "அயன்–டோம்" ஆகாஷ் என்ற தரையிலிருந்து வானிலக்கைத் தாக்கும் ஏவுகணையை பிரேசில் நாடு கொள்முதல் செய்யவுள்ளது. பிரேசிலின் கொள்முதலுக்கான பட்டியலில் சீனாவின் ஸ்கை டிராகன்–50உம் உள்ளது. இந்தியாவின் DRDOஆல் உருவாக்கப்பட்டு மற்றும் பாரத் டைனமிக்ஸ் லிட்ஆல் தயாரிக்கப்பட்ட, 'ஆகாஷ்' என்ற தரையிலிருந்து வானிலக்கைத் தாக்கும் இந்த ஏவுகணை, போர் விமானங்கள் மற்றும் எறிகணைகள் உள்ளிட்ட வான்சார்ந்த அச்சுறுத்தல்களுக்கு எதிராக பாதுகாப்பளிக்கிறது. இந்திய இராணுவம் மற்றும் வான்படையுடன் இணைந்து செயல்படுகிற இந்த ஏவுகணை இலக்கு வழிகாட்டலுக்காக, 'இராஜேந்திரா' என்னும் ரேடாரையும் தன்வசம் கொண்டுள்ளது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. இருதரப்பு வர்த்தகத்தை ₹8.35 லட்சம் கோடியாக உயர்த்த உடன்பாடு: இந்தியா–ரஷியா கூட்டறிக்கை.**

2 நாள் பயணமாக ரஷியா சென்ற பிரதமர் நரேந்திர மோதி, ரஷிய அதிபர் புதினுடன் இருநாடுகளிடையேயான 22ஆவது உச்சிமாநாட்டில் கலந்துகொண்டார். அப்போது, முதலீடுகளை ஊக்குவிப்பது, வர்த்தகத்துக்கு அந்தந்த நாட்டு ரூபாய்களை பயன்படுத்துவது, எரிசக்தி முதல் வேளாண் துறைகள் வரையிலும் மற்றும் உள்கட்டமைப்புத்

துறைகளிலும் ஒத்துழைப்பை மேம்படுத்துவதன்மூலம் வரும் 2030–க்குள் இந்தியா–ரஷியா இடையேயான வர்த்தகத்தை ₹8,35,037 கோடியாக ($100 பில்லியன்) உயர்த்த ஒப்புக்கொள்ளப்பட்டது. குறிப்பாக, ரஷியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் கச்சா எண்ணெய்போன்ற பொருள்களுக்கு இந்திய ரூபாயில் பணஞ்செலுத்தவும், அதுபோல, இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருள்களுக்கு ரஷியாவின் ரூபெல்லில் பணம் செலுத்தவும் ஒப்புக்கொள்ளப்பட்டது.

---

**2. கடலூர் அகழாய்வில் வட்டச்சில்லுகள் கண்டெடுப்பு!**

கடலூர் மாவட்டம் மருங்கூர் அகழாய்வில் வட்டச்சில்லுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. மருங்கூரில் வாழ்விடப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் அகழாய்வில் இராசராசன் காலத்துச் செம்புக்காசு ஒன்றும் கண்டெடுக்கப்பட்டது. தற்போது, பல்வேறு அளவுகளில் சுடுமண்ணாலான வட்டச்சில்லுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. பெண்டிரும் சிறுவர் சிறுமியரும் இந்த வட்டச்சில்லுகளைப் பயன்படுத்தி விளையாடியுள்ளனர். இத்தகைய விளையாட்டுகள், 'பாண்டி விளையாட்டு' என்று தற்போது அழைக்கப்படுகிறது.

---

**3. கீழடி அகழாய்வில் மூங்கில் கம்புகள் ஊன்றும் குழிகள், பானை விளிம்புகள் கண்டெடுப்பு!**

சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் அருகேயுள்ள கீழடி அகழாய்வில் மூங்கில் கம்புகள் ஊன்றுவதற்கான குழிகள், இரு பானைகளின் விளிம்புகள் கண்டறியப்பட்டுள்ளன. தற்போது அங்கு பத்தாம் கட்ட அகழாய்வுப் பணிகள் நடந்து வருகின்றன. கண்ணாடிப்பாசிமணிகள், தமிழி எழுத்து பொறிக்கப்பட்ட பானை ஓடு, மீன் உருவம் பொறிக்கப்பட்ட பானை ஓடு ஆகியவையும் கண்டறியப்பட்டன.

---

**4. தமிழ்நாடு மக்கள் நலவாழ்வுத் துறை திட்டங்கள்.**

தமிழக மக்கள் நல்வாழ்வுத் துறை பிற மாநிலங்களுக்கு முன்னோடியாக விளங்கி வருகிறது. 1923ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட பொதுச் சுகாதார அமைப்புமூலம் பல்வேறு பொது சுகாதாரத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன.

**காப்பீட்டுத்திட்டம்:** ஏழை மக்களுக்காக 2009ஆம் ஆண்டு ஜூலை.23ஆம் தேதி காப்பீட்டு திட்டத்தை முன்னாள் முதலமைச்சர் மு கருணாநிதி தொடங்கினார். முதலமைச்சரின் விரிவான மருத்துவக்காப்பீட்டு திட்டம் தொடங்கியது முதல் கடந்த ஜூன் வரை ₹13,625 கோடி மதிப்பீட்டில் செலவில், 1.4 கோடி மக்களுக்கு சிகிச்சையளிக்கப்பட்டுள்ளது. மொத்த பயனாளிகளில் 4.32 மில்லியன் மக்கள் அரசு மருத்துவமனைகளில் உயர்சிகிச்சைகள் பெற்றுள்ளனர்.

2008 செப்.15ஆம் தேதி 1,353 அவசர ஊர்திகளுடன் 108 அவசரகால பராமரிப்பு சேவை திட்டம் தொடங்கப்பட்டது. தமிழ்நாட்டில் எந்த இடத்திலிருந்தாலும், கட்டுப்பாட்டறையை தொடர்புகொண்ட 11 நிமிஷங்கள் 23 விநாடிகளுக்குள் அவசர ஊர்தி அந்த இடத்துக்கு சென்றடையும் வகையில் அத்திட்டம் செயல்பட்டு வருகிறது.

**இன்னுயிர் காப்போம் திட்டம்:** சாலைப்போக்குவரத்து விபத்துகளுக்கு இலவச அவசர சிகிச்சை வழங்கும் 'இன்னுயிர் காப்போம் – நம்மை காக்கும் 48' திட்டம் 2023 டிச.18ஆம் தேதி தொடங்கப்பட்டது.

2008ஆம் ஆண்டு முதல் தமிழ்நாட்டில் மூளைச்சாவு அடைந்தவர்களிடம் இருந்து உடல் உறுப்புகளை தானமாக பெற்று உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை மேற்கொள்ளும் திட்டம் தொடங்கப்பட்டது. அதிக எண்ணிக்கையிலான உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைகளை செய்யும் மாநிலங்களில் தமிழ்நாடு தொடர்ந்து தேசிய அளவில் முதல் இடம் பிடித்துள்ளது. உறுப்புதானம் செய்யப்பட்ட உடலுக்கு அரசு மரியாதை வழங்கப்படுகிறது.

மக்களைத்தேடி மருத்துவம் திட்டம் 2021 ஆக.5 அன்று தொடங்கப்பட்டது. இத்திட்டத்தில் மக்களுக்கு தேவையான மருந்துகள், அவர்களின் வீடுகளுக்கே சென்று வழங்கப்படுகிறது. தமிழ்நாட்டில் மக்களைத்தேடி ஆய்வகம் திட்டம், இதயம் காப்போம் திட்டம், சிறுநீரகம் பாதுகாப்பு திட்டம், தொழிலாளரைத்தேடி மருத்துவம் என்னும் திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

---

**5. தேசிய காசநோய் ஒழிப்புத்திட்ட முதன்மை ஆலோசகராக செளமியா சுவாமிநாதன் நியமனம்.**

மத்திய சுகாதாரம் மற்றும் குடும்பநல அமைச்சகத்தின்கீழ் செயல்படுத்தப்பட்டு வரும் தேசிய காசநோய் ஒழிப்புத் திட்டத்துக்கான முதன்மை ஆலோசகராக Dr செளமியா சுவாமிநாதன் சமூகநலன் அடிப்படையில் நியமிக்கப்பட்டு உள்ளார். Dr செளமியா சுவாமிநாதன் உலக சுகாதார அமைப்பின் முன்னாள் தலைமை விஞ்ஞானியாகவும், இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகத்தின் (ICMR) தலைமை இயக்குநராகவும் இதற்குமுன்பு பணியாற்றியுள்ளார்.

---

# IMPORTANT LINKS

TNPSC Current Affairs

https://www.winmeen.com/tnpsc-tamil-current-affairs/

Winmeen: Install the Winmeen App
Daily Free & Premium Tnpsc Study Materials & Online Test

https://play.google.com/store/apps/details?id=co.robin.jbzwb

Winmeen: Winmeen Tnpsc Test Series - Samacheer lesson Wise Test + Previous Year Model Test for Tnpsc Group 1,2, 4 & VAO

https://wp.me/p7JanY-ag8

---

**1. '*Habrocestum swaminathan*' என்பது சார்ந்த இனம் எது?**



அ. தவளை

ஆ. மீன்

**இ. சிலந்தி ☑**

ஈ. முதலை

★ இரிஞ்ஞாலக்குடாவில் அமைந்துள்ள கிறிஸ்ட் கல்லூரியைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள், தென்மேற்குத்தொடர்ச்சி மலையின் பசுமையான காடுகளில், குப்பைகளில் வாழும் இரு புதிய சிலந்தி இனங்களைக் கண்டுபிடித்துள்ளனர். '*Habrocestum swaminathan*' மற்றும் '*Habrocestum benjamin*' எனப்பெயரிடப்பட்ட இவை *Habrocestum* இனத்தைச் சார்ந்தவைகளாகும். இந்தச் சிலந்திகள் இயற்கையான பூச்சிக்கட்டுப்பாட்டில் முக்கிய பங்கு வகிக்கின்றன மற்றும் சுற்றுச்சூழல் நலத்தின் குறிகாட்டிகளாக செயல்படுகின்றன. குந்தியாற்றின் அருகே காணப்பட்ட, '*Habrocestum swaminathan*' என்ற இனம், M S சுவாமிநாதன் பெயரால் அழைக்கப்படுகிறது. அதன் வண்ணமயமான திட்டுகளுக்கு பெயர் பெற்றதுவும் துஷாரகிரி அருவிக்கு அருகில் கண்டுபிடிக்கப்பட்டதுவுமான '*Habrocestum benjamin*' என்ற இனம் குதிக்கும் சிலந்தி நிபுணர் சுரேஷ் P பெஞ்சமின் பெயரால் அழைக்கப்படுகிறது.

**2. கடற்தடுப்பணையின் முதன்மை செயல்பாடு என்ன?**



**அ. வண்டலைச் சேகரிப்பதும் கரையோரப் பெயர்வைத் தடுப்பதும் ☑**

ஆ. கடல்வாழ் உயிரினங்களுக்கு செயற்கையான பவளப்பாறைகளை உருவாக்குதல்

இ. மணல் மறுசுழற்சி மூலம் கடற்கரையை ஊட்டச்சத்து மிக்கதாக்குதல்

ஈ. மேற்குறிப்பிட்ட எதுவும் இல்லை

★ கேரளத்தின் பூந்துறைப் பகுதியில் கடலோர அரிப்பை எதிர்த்துப் போராடும் ஒரு முயற்சியாக, நீர்ப்பாசனத்துறை ₹17.5 கோடி செலவில் எட்டு கடற்தடுப்பணைகளை அமைக்க திட்டமிட்டுள்ளது. பொதுவாக மரம், பாறை அல்லது பசுங்காரையால் காட்டப்படும் கடற்தடுப்பணைகள், கரையிலிருந்து கடலின் உள்வரை விரிவடைந்து வண்டலைச் சேகரிக்கவும், அலையாற்றலைச் சிதறடிக்கவும், கரையோரப் பெயர்வைத் தடுக்கவும் உதவுகிறது. அவை கடலோர அரிப்பைக்குறைக்கின்றன; கடற்கரைகளை விரிவுபடுத்துகின்றன. குறைந்தபட்ச பராமரிப்பே தேவைப்படும் இவை, கடற்கரைகளை உறுதிப்படுத்துவதற்கான நிலைத்த கட்டமைப்புகளாகச் செயல்படுகின்றன.

**3. அண்மையில், 15ஆவது வேளாண் தலைமைத்துவ விருதுகள் குழுவால் நடப்பு 2024ஆம் ஆண்டிற்கான சிறந்த விவசாய மாநில விருது வழங்கி கௌரவிக்கப்பட்ட மாநிலம் எது?**



அ. தமிழ்நாடு

**ஆ. மகாராஷ்டிரா ☑**

இ. கேரளா

ஈ. சிக்கிம்

★ நீதியரசர் P சதாசிவம் தலைமையிலான 15ஆவது வேளாண் தலைமைத்துவ விருதுகள் குழு, நடப்பு 2024ஆம் ஆண்டிற்கான சிறந்த விவசாய மாநிலமாக மகாராட்டிராவை தேர்வுசெய்துள்ளது. மகாராட்டிர மாநில முதலமைச்சர் ஸ்ரீ ஏக்நாத் ஷிண்டே இந்த விருதை ஜூலை10 அன்று புது தில்லியில் பெற்றுக்கொண்டார். அதன் புதுமையான வேளாண் கொள்கைகள் மற்றும் திட்டங்களுக்காக அங்கீகரிக்கப்பட்டுள்ள மகாராட்டிராவின் முன்முயற்சிகளில் பெருமூங்கில் திட்டம், விரிவான நீர்ப்பாசன திட்டங்கள் மற்றும் நானோ–தொழில்நுட்ப உர விநியோகம் ஆகியவை அடங்கும்.

**4. அண்மையில் பாரி (இந்தியாவின் பொதுக்கலை) என்ற திட்டத்தைத் தொடங்கிய அமைச்சகம் எது?**

அ. பாதுகாப்பு அமைச்சகம்

**ஆ. கலாச்சார அமைச்சகம் ☑**

இ. உள்துறை அமைச்சகம்

ஈ. வேளாண் அமைச்சகம்

संस्कृति मंत्रालय
MINISTRY OF CULTURE
सत्यमेव जयते

★ இந்திய அரசின் கலாச்சார அமைச்சகம், 2024 ஜூலை.21–31 வரை புது தில்லியில் நடைபெறும் உலக பாரம்பரியக் குழு கூட்டத்தின் 46ஆவது அமர்வின்போது, பாரி (PARI :: Public Art of India :: இந்திய பொதுக்கலை) திட்டத்தைத் தொடங்கவுள்ளது. இதன்கீழ், கலாச்சார அமைச்சகத்தின்கீழ் ஒரு தன்னாட்சி நிறுவனமான லலித் கலா அகாதெமி, நாடு முழுவதிலுமிருந்து 150க்கும் மேற்பட்ட காட்சிக்கலைஞர்களை அழைத்துள்ளது. நமது தேசிய தலைநகரத்தின் வளமான வரலாற்று பாரம்பரியத்திற்கு பெருமைசேர்க்கும் அதே வேளையில், தில்லியின் அழகியல் மற்றும் கலாசார கண்ணோட்டத்தை மேம்படுத்துவதற்கான ஒரு தளத்தை வழங்குவதை பாரி திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

★ லலித் கலா அகாதெமி மற்றும் தேசிய நவீன கலைக்கூடம் ஆகியவை ஆயிரக்கணக்கான ஆண்டுகால நமது கலை பாரம்பரியத்தை வெளிக்கொணர எண்ணும் அதே வேளையில் நவீன கருப்பொருள்கள் மற்றும் நுட்பங்களை அவை இணைக்கின்றன.

**5. அண்மையில், சவுதி அரேபியாவின் ரியாத்தில் நடந்த 2024–ஆசிய பில்லியர்ட்ஸ் சாம்பியன்ஷிப்பை வென்றவர் யார்?**

**அ. துருவ் சித்வாலா ☑**

ஆ. பங்கஜ் அத்வானி

இ. ரூபேஷ் ஷா

ஈ. கீத் சேத்தி



★ சவுதி அரேபியாவின் ரியாத்தில் நடைபெற்ற 2024 – ஆசிய பில்லியர்ட்ஸ் சாம்பியன்ஷிப்பை துருவ் சித்வாலா 5–2 என்ற கணக்கில் பங்கஜ் அத்வானியை தோற்கடித்து வென்றார். இந்த வெற்றி துருவ் சித்வாலாவின் மூன்றாவது ஆசிய பில்லியர்ட்ஸ் பட்டத்தைக் குறிக்கிறது; இதற்கு முன்பு 2015 மற்றும் 2016இல் அவர் பட்டம் வென்றிருந்தார். தனது மூன்றாவது பட்டத்தையும் ஹாட்ரிக் சாம்பியன்ஷிப்பையும் இலக்காகக் கொண்டிருந்த பங்கஜ் அத்வானி, இறுதிப்போட்டியில் தோல்வியைத் தழுவினார்.

**6. 2024 – ஆசிய ஸ்குவாஷ் இரட்டையர் சாம்பியன்ஷிப் போட்டி நடைபெற்ற இடம் எது?**

அ. மேடன், இந்தோனேசியா

ஆ. புது தில்லி, இந்தியா

**இ. ஜோகூர், மலேசியா ☑**

ஈ. கொல்கத்தா, இந்தியா



★ மலேசியாவின் ஜோகூரில் நடைபெற்ற 2024–ஆசிய ஸ்குவாஷ் இரட்டையர் சாம்பியன்ஷிப்பில் இந்திய ஸ்குவாஷ் வீரர்கள் இரண்டு பட்டங்களை வென்றனர். கலப்பு இரட்டையர் பிரிவில் அபை சிங் மற்றும் ஜோஷ்னா சின்னப்பா இணை ஹாங்காங்கின் டோங் டிஸ் விங் மற்றும் மிங் ஹாங் டாங் இணையை வீழ்த்தி வெற்றி பெற்றது. ஆடவர் இரட்டையர் பிரிவில் சிங், வேலவன் செந்தில்குமார் இணையானது மலேசியாவின் ஓங் சாய் ஹங், சயாபிக் கமல் இணையை வீழ்த்தி வெற்றி பெற்றது. ஏழு நாடுகளைச் சேர்ந்த 33 அணிகள் பங்கேற்ற இந்தச் சாம்பியன்ஷிப், 2024 ஜூலை.04–07 வரை நடைபெற்றது.

**7. CAMCOPTER S-100 என்றால் என்ன?**

**அ. ஆளில்லா விமானம் ☑**

ஆ. சிறுகோள்

இ. புதிதாக கண்டுபிடிக்கப்பட்ட புறக்கோள்

ஈ. ஆக்கிரமிப்பு தாவரம்




★ ஆஸ்திரிய நிறுவனமான ஷீபலிலிடமிருந்து CAMCOPTER S-100 என்ற சுழலும் ஆளில்லா விமானத்தை இந்தியா வாங்கவுள்ளது. இவ்வமைப்பு இந்தியப்பெருங்கடல் பகுதியில் இந்திய கடற்படையின் ISR திறன்களை மேம்படுத்தும். வியன்னாவில் 1951ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட ஷீபல் நிறுவனம், அனைத்து வசதிகளுடன்கூடிய உயர் தொழில்நுட்ப ஆளில்லா வான்வழி வாகன அமைப்புகளில் நிபுணத்துவம் பெற்று விளங்குகிறது. இராணுவம் மற்றும் வணிகம் சார்ந்த தயாரிப்புகளுக்கு இது பெயர் விளங்கிய நிறுவனமாகும்.

**8. கண்டகி ஆறு கீழ்க்காணும் எந்த ஆற்றின் இடதுகரை துணையாறாகும்?**

அ. காவேரியாறு

**ஆ. கங்கையாறு ☑**

இ. நர்மதையாறு

ஈ. கோதாவரியாறு



★ பீகாரின் சரண் மாவட்டத்தில் கண்டகி ஆற்றின்மீது உள்ள 15 ஆண்டுகள் பழமையான பாலமொன்று ஜூலை.04 அன்று இடிந்து விழுந்தது; 24 மணி நேரத்திற்குள்ளாக இது அம்மாவட்டத்தில் இடிந்து விழுந்த 3ஆவது பாலமாகும். இந்தப் பாலம் சரணில் உள்ள கிராமங்களை சிவான் மாவட்டத்துடன் இணைக்கிறது. பீகார் முழுவதும் கடந்த 17 நாட்களில் 12 பாலங்கள் இடிந்து விழுந்துள்ளன. 'நாராயணி' மற்றும் 'கந்தக்' என்று அழைக்கப்படும் கண்டகி ஆறு நேபாளத்தில் உற்பத்தியாகி பீகார் மாநிலம் பாட்னா அருகே கங்கையில் கலக்கிறது.

★ 475 மைல்கள் பரப்பளவில், 46,300 சதுர கிமீ நீர்ப்பிடிப்புப் பகுதியைக் கொண்டுள்ள இது, இந்தியாவில் 7,620 சதுர கிமீ பரப்பளவைக் கொண்டுள்ளது. இந்த ஆறானது இமயமலை, கங்கை, புர்கி கண்டக் படுகை மற்றும் காக்ரா நீர்வடிநிலம் ஆகியவற்றை எல்லையாகக் கொண்டுள்ளது; அதன் மேற்புற நீர்ப்பிடிப்பில் 1,710 பனிப்பாறைகளும் 300க்கும் மேற்பட்ட ஏரிகளும் உள்ளன.

**9. பழுதுபார்ப்பதற்கான உரிமை இணையதளத்தைத் தொடங்கிய அமைச்சகம் எது?**

அ. பாதுகாப்பு அமைச்சகம்

ஆ. அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகம்

இ. மின்சார அமைச்சகம்

**ஈ. நுகர்வோர் விவகாரங்கள் அமைச்சகம் ☑**




★ மத்திய நுகர்வோர் விவகாரங்கள் அமைச்சகத்தின்கீழ் உள்ள நுகர்வோர் விவகாரங்கள் துறை வாகனங்களைப் பழுதுபார்க்கும் நடைமுறைகளை எளிதில் மக்கள் அறிந்துகொள்ளும் வகையில், பழுதுபார்ப்பதற்கான உரிமை (Right to Repair) என்ற இணையதளத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. நுகர்வோரின் உரிமைகளை நிலைநிறுத்தவும், சிக்கல் இல்லாமல் வாகனப் பழுதுபார்ப்பை மேற்கொள்ளும் வகையிலும் இந்தத் தளம் அறமுகப்படுத்தப்பட்டுள்ளது.

★ இதுதொடர்பாக வாகன நிறுவனங்கள் பங்கேற்ற கூட்டம் மத்திய நுகர்வோர் விவகாரங்கள் துறை செயலர் நிதி கரே தலைமையில் புது தில்லியில் நடைபெற்றது. இதில் வாகன தொழிற்துறை சங்கங்கள் மற்றும் வாகன உற்பத்தி நிறுவனங்கள் பங்கேற்றன. இந்நிறுவனங்கள் இத்தளத்தில் இணைய வேண்டும் என்று இந்தக் கூட்டத்தின்போது

கேட்டுக்கொள்ளப்பட்டது. இந்தக் கூட்டத்தில் டாடா மோட்டார்ஸ், மஹிந்திரா, டிவிஎஸ் உள்ளிட்ட நிறுவனங்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

### 10. கோப்பர்நிக்கஸ் திட்டம் என்றால் என்ன?

அ. ஒரு புதிய இணையவெளிப் பாதுகாப்பு திட்டம்

**ஆ. இது ஐரோப்பிய ஒன்றியத்தின் புவி கண்காணிப்பு திட்டமாகும் ☑**

இ. இது வனவிலங்குகளின் இடம்பெயர்வு முறைகளைக் கண்காணிப்பதற்கான ஒரு திட்டமாகும்

ஈ. புதிய கல்வித் திட்டம்

★ நடப்பு 2024 ஜூன் மாதம் உலகளவில் வெப்பமான ஜூன் மாதமாகப் பதிவுசெய்யப்பட்டது. அம்மாதத்து வெப்பநிலை 1991–2020 சராசரியைவிட சராசரியாக 0.67°C அதிகமாகவும், 2023 ஜூனிலிருந்த முந்தைய அதிகபட்சமான 0.14°C விடவும் அதிகமாகும் என கோப்பர்நிகஸ் தட்பவெப்பநிலைமாற்ற சேவையகம் தெரிவித்துள்ளது. ஐரோப்பிய ஒன்றியத்தின் கோப்பர்நிக்கஸ் புவி கண்காணிப்பு திட்டத்தின் ஒருபகுதியான C3S, உலகளாவிய தட்பவெப்பநிலை கொள்கைகள் மற்றும் நெகிழ்திறன் முயற்சிகளை ஆதரிக்கிறது. இது புவி கண்காணிப்பு செயற்கைக்கோள்கள் மற்றும் சிட்டு உணரிகளில் இருந்து தரவைப் பயன்படுத்துகிறது.

### 11. அண்மையில், உலகளாவிய உயிர்க்கோளக் காப்பகங்கள் வலையமைப்பில் எத்தனை புதிய உயிர்க்கோளக் காப்பகங்கள் சேர்க்கப்பட்டன?

**அ. 11 ☑**

ஆ. 22

இ. 33

ஈ. 44

★ கொலம்பியா, டொமினிகன் குடியரசு, காம்பியா, இத்தாலி, மங்கோலியா, பிலிப்பைன்ஸ், கொரிய குடியரசு மற்றும் ஸ்பெயின் ஆகிய நாடுகளில் உள்ள 11 புதிய உயிர்க்கோளக்காப்பகங்களை UNESCO உலகளாவிய உயிர்க்கோளக் காப்பகங்கள் வலையமைப்பில் சேர்த்தது. உயிர்க்கோளக்காப்பகங்கள் அறிவியல் ஆய்வுக்கு உதவுகின்றன; சுற்றுச் சூழல் கொள்கைகளை அறிவிக்கின்றன மற்றும் நிலையான வளர்ச்சிக்கு உதவுகின்றன. இந்தச் சேர்த்தல்களுடன், உலக உயிர்க்கோளக்காப்பகங்களின் எண்ணிக்கை இப்போது 136 நாடுகளைச் சார்ந்த 759 தளங்களாக உள்ளன. அவற்றின் மொத்த பரப்பளவு 7.44 மில்லியன் சகிமீ ஆகும்.

### 12. 'ஜோராவர்' என்ற இந்தியாவின் உள்நாட்டு இலகுரக பீரங்கியின் முன்மாதிரியை வெளியிட்ட அமைப்பு எது?



அ. ISRO

ஆ. HAL

**இ. DRDO ☑**

ஈ. BHEL

★ பாதுகாப்பு ஆராய்ச்சி & மேம்பாட்டு அமைப்பு (DRDO) மற்றும் லார்சன் & டூப்ரோ (L&T) ஆகியவற்றால் உருவாக்கப்பட்ட இந்தியாவின் உள்நாட்டு இலகுரக பீரங்கியான ஜோராவரின் முன்மாதிரி ஜூலை.06 அன்று வெளியிடப்பட்டது. கம்மின்ஸ் எஞ்சின்மூலம் இயக்கப்படுகிற இது, தீவிர வானிலை மற்றும் உயரமான இடங்களில் இயங்கும் விதமாக வடிவமைக்கப்பட்டுள்ளது. 2025ஆம் ஆண்டு ஆகஸ்டுக்குள் ராணுவத்திற்குப் பயன்படும் விதமாக ஆக்குவதற்கான அனைத்து சோதனைகளும் முடிக்கப்படும். இப்புதிய உள்நாட்டு இயந்திரத்தையும் DRDO உருவாக்கியுள்ளது.

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. ஊரகப்பகுதிகளில், 'மக்களுடன் முதல்வர்' திட்டம்.**

ஊரகப்பகுதிகளில் வாழும் மக்களின் குறைகளை நிவர்த்தி செய்ய மற்றும் அரசின் சேவைகளை மக்களுக்கு விரைவாகச் சேர்த்திட மக்களை நாடிச்செல்லும் தமிழ்நாடரசின் முக்கியமான திட்டங்களில் ஒன்றான, "மக்களுடன் முதல்வர்" திட்டத்திற்கான முகாமினை தருமபுரி மாவட்டம் பாளையம் புதூர் அரசு மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் முதல்வர் மு க ஸ்டாலின் தொடங்கி வைத்தார்.

---

## IMPORTANT LINKS

TNPSC Current Affairs

https://www.winmeen.com/tnpsc-tamil-current-affairs/

Winmeen: Install the Winmeen App
Daily Free & Premium Tnpsc Study Materials & Online Test

https://play.google.com/store/apps/details?id=co.robin.jbzwb

Winmeen: Winmeen Tnpsc Test Series - Samacheer lesson Wise Test + Previous Year Model Test for Tnpsc Group 1,2, 4 & VAO

https://wp.me/p7JanY-ag8

**1. கேரள மாநிலத்தின் குளத்துப்புழை கிராமப்பஞ்சாயத்தில், ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத்திட்டத்தை தொடங்கிய அமைப்பு எது?**

அ. SEBI

**ஆ. NABARD ☑**

இ. FCI

ஈ. பழங்குடியினர் விவகாரங்கள் அமைச்சகம்

★ தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி (NABARD) தனது முதல் ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத்திட்டத்தை கேரள மாநிலம் கொல்லத்தில் உள்ள குளத்துப்புழை கிராமப்பஞ்சாயத்தில் ஜூலை.08ஆம் தேதி அன்று தொடங்கியது. தனலால் செயல்படுத்தப்படும் இந்த ஐந்தாண்டுத் திட்டம், பல்வேறு விவசாயத்தின்மூலம் 413 பழங்குடியின குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதை நோக்கமாகக்கொண்டுள்ளது. இதில் நீர்வள மேம்பாடு, திறன் பயிற்சி மற்றும் சமூகத்தைப் பொருளாதார ரீதியாக மேம்படுத்துவதற்காக பழங்குடி உழவர் உற்பத்தியாளர் நிறுவனத்தை உருவாக்குதல் ஆகியவை அடங்கும்.

**2. அண்மையில், ரேச்சல் ரீவ்ஸ், கீழ்க்காணும் எந்த நாட்டின் முதல் பெண் நிதியமைச்சராக ஆனார்?**



அ. ஆஸ்திரேலியா

**ஆ. ஐக்கிய இராச்சியம் ☑**

இ. ரஷ்யா

ஈ. நியூசிலாந்து

★ 45 வயதான ரேச்சல் ரீவ்ஸ், ஐக்கிய இராச்சியத்தின் முதல் பெண் நிதியமைச்சராக ஆனார். ஆக்ஸ்போர்டில் இளங்கலைப் பட்டமும் LSEஇல் முதுகலைப் பட்டமும்பெற்ற பொருளாதார நிபுணரான இவர், இங்கிலாந்து வங்கி மற்றும் தனியார் துறையில் பணிபுரிந்துள்ளார். 2010ஆம் ஆண்டில் லீட்ஸ் வெஸ்டுக்கான தொழிலாளர் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அவர், 2021இல் நிதிக்கொள்கைத் தலைவரானார். வருவாய் அல்லது மாநகராட்சி வரிகளை உயர்த்தாமல் இங்கிலாந்தின் மந்தமான பொருளாதாரத்தை நிலைப்படுத்துவதை அவர் தனது நோக்கமாகக் கொண்டுள்ளார்.

**3. 'மீளாக்க நிறுத்தி – Regenerative Braking'இன் முதன்மை செயல்பாடு என்ன?**



அ. வாகனத்தின் வேகத்தை அதிகரிப்பது

**ஆ. இயக்க ஆற்றலை மின்னாற்றலாக மாற்றுவது ☑**

இ. எரிபொருள் எரிப்பை அதிகரிப்பது

ஈ. இயந்திரத்தை குளிர்விப்பது

★ ஹைபிரிட் மற்றும் முழு–எலக்ட்ரிக் வாகனங்களில் காணப்படும் மீளாக்க நிறுத்தி, வாகனத்தின் உயர் மின்னழுத்த மின்கலத்தை மின்னேற்றம் செய்ய இயக்க ஆற்றலை நிறுத்தியிலிருந்து மின்னாற்றலாக மாற்றுகிறது. இயக்க ஆற்றல் மீட்பு அமைப்பு என்றும் அறியப்படுகிற இது, மின்னியற்றிகளாக செயல்பட மின் மோட்டார்களை தலைகீழாகப் பயன்படுத்துகிறது. இந்த அமைப்பு மகிழுந்தின் வேகத்தைக் குறைத்து, வழக்கமான நிறுத்திகளுக்கு உதவுகிறது மற்றும் எரிபொருள் திறனை மேம்படுத்துகிறது.

**4. தேசிய அதிகார வரம்பைத் தாண்டி பல்லுயிர் பெருக்கம் தொடர்பான ஒப்பந்தத்தின் முதன்மை நோக்கம் என்ன?**

அ. கடல்சார் பகுதிகளில் சுற்றுலாவை மேம்படுத்துதல்

**ஆ. ஆழ்கடல்களில் கடல்சார் பல்லுயிர்களின் நீண்டகால பாதுகாப்பு குறித்த கவலைகளை நிவர்த்தி செய்தல் ☑**

இ. கடலோரப்பகுதிகளில் மீன்பிடி நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்துதல்

ஈ. கடல்சார் வர்த்தகத்தை மேம்படுத்துதல்

★ பிரதமர் தலைமையிலான நடுவண் அமைச்சரவை, தேசிய அதிகார வரம்பைத் தாண்டி பல்லுயிர் பெருக்கம் தொடர்பான ஒப்பந்தம் அல்லது 'ஆழ்கடல் ஒப்பந்தத்தில்' இந்தியா கையெழுத்திட ஒப்புதல் அளித்தது. UNCLOSஇன் கீழ் உள்ள இந்த ஒப்பந்தம், பன்னாட்டு ஒத்துழைப்புமூலம் ஆழ்கடல்களில் கடல்சார் பல்லுயிர்களைப் பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இது நிலையான பயன்பாடு மற்றும் பயன்களின் சமமான பகிர்வை உறுதிசெய்கிறது. இது சுற்றுச்சூழல்–மைய அணுகுமுறை, பாரம்பரிய மற்றும் அறிவியலறிவை ஊக்குவிக்கிறது மற்றும் சுற்றுச்சூழல் தாக்கங்களைக் குறைக்கிறது.

**5. அண்மையில், இந்திய பெருநிறுவனங்களின் செயல்திறனைக் கண்காணிக்கவும் பெருநிறுவன மோசடிகளைக் கண்டறியவும், 'AI தணிக்கைக் கருவியை' கூட்டாக உருவாக்குவதற்காக கீழ்க்காணும் எந்த அமைச்சகத்துடன் CA நிறுவனம் பேச்சுவார்த்தையைத் தொடங்கியுள்ளது?**

அ. உள்துறை அமைச்சகம்

ஆ. பாதுகாப்பு அமைச்சகம்

இ. அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகம்

**ஈ. மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் ☑**

★ CA நிறுவனமும் நடுவண் மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகமும் நிறுவன செயல்திறனைக் கண்காணிக்கவும் மோசடிகளைக் கண்டறியவும் ஒரு 'AI தணிக்கைக் கருவியை' உருவாக்க கூட்டிணைந்து வருகின்றன என்று அந்நிறுவனத்தின் ரஞ்சீத்குமார் அறிவித்தார். இக்கருவி நிறுவனங்கள் 'இயங்கும் நிறுவனமாக' இருக்க உதவும். CA நிறுவனம் AI கருவிக்காக ₹25 கோடி நிதி ஒதுக்கியுள்ளது. அதிகபட்சமாக ₹100 கோடி வரை நிதியை உயர்த்த திட்டமிட்டுள்ளது.

**6. அண்மையில், இந்திய அரசாங்கம், கீழ்க்காணும் எந்த மத்திய அமைச்சகத்தை ஹஜ் செயற்குழுவுக்கான மைய அமைச்சகமாக நியமித்தது?**

அ. பாதுகாப்பு அமைச்சகம்

ஆ. வெளியுறவு அமைச்சகம்

இ. உள்துறை அமைச்சகம்

**ஈ. சிறுபான்மையினர் நல அமைச்சகம் ☑**

★ வெளியுறவு அமைச்சகத்திற்கு மாற்றாக சிறுபான்மையினர் நல அமைச்சகத்தை ஹஜ் செயற்குழுவுக்கான மைய அமைச்சகமாக இந்திய அரசாங்கம் நியமித்துள்ளது. ஹஜ் செயற்குழு (திருத்தம்) விதிகள், 2024 என்ற புதிய விதிகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. மத்திய வெளியுறவு, உள்துறை, நிதி மற்றும் உள்நாட்டு விமானப்போக்குவரத்து ஆகிய அமைச்சகங்களின் அதிகாரிகள் பதவிக்குழு உறுப்பினர்களாக நியமிக்கப்படுவார்கள். முன்னதாக, வெளியுறவு அமைச்சகம் ஹஜ் செயற்குழு சட்டம், 2002இன்கீழ் ஹஜ் புனிதப்பயண நிர்வாகத்தை நிர்வகித்து வந்தது.

**7. "Sustainable Transport for Rural Entrepreneurs through Electric Bicycles – STREE" திட்டத்தைத் தொடங்குவதற்கு, கீழ்க்காணும் எந்த இரண்டு நிறுவனங்கள் கூட்டிணைந்துள்ளன?**

**அ. ஊரக வளர்ச்சி அமைச்சகம் & ஒருங்கிணைப்பு எரிசக்தி சேவைகள் நிறுவனம் (CESL) ☑**



ஆ. நகர்ப்புற மேம்பாட்டு அமைச்சகம் & DRDO

இ. வேளாண்மை அமைச்சகம் & ஒருங்கிணைப்பு எரிசக்தி சேவைகள் நிறுவனம் (CESL)

ஈ. பாதுகாப்பு அமைச்சகம் மற்றும் ISRO

★ தீனதயாள் அந்தியோதயா யோஜனா – தேசிய கிராமப்புற வாழ்வாதார இயக்கத்தின் (DAY–NRLM)கீழ், Sustainable Transport for Rural Entrepreneurs through Electric Bicycles – STREE தொடங்க ஒருங்கிணைப்பு எரிசக்தி சேவைகள் நிறுவனம் (CESL) உடனான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் ஊரக வளர்ச்சி அமைச்சகம் கையெழுத்திட்டது.

★ மின்சார மிதிவண்டிகளைக்கொண்டு பசுமையான போக்குவரவை வழங்குவதன்மூலம், வாழ்வாதார வாய்ப்புகள் மற்றும் சமூக–பொருளாதார நிலையை மேம்படுத்தி கிராமப்புற பெண்களுக்கு அதிகாரம் அளிப்பதை STREE திட்டம் தனது நோக்கமாகக் கொண்டுள்ளது. CESL புதுப்பிக்கத்தக்க ஆற்றல் மற்றும் மின்சார போக்குவரவுத் தீர்வுகளில் கவனம் செலுத்துகிறது. DAY–NRLM ஆனது பல்வேறு துறைகளில் உள்ள சுய–உதவிக்குழுக்கள் (SHGs) பெண்கள் தலைமையிலான நிறுவனங்களை ஊக்குவிக்கிறது.

**8. அண்மையில், இந்திய ஆடவர் கிரிக்கெட் அணியின் தலைமைப் பயிற்சியாளராக நியமிக்கப்பட்டவர் யார்?**

**அ. கௌதம் கம்பீர் ☑**

ஆ. MS தோனி

இ. யுவராஜ் சிங்

ஈ. ராகுல் டிராவிட்



★ இந்திய ஆடவர் கிரிக்கெட் அணியின் தலைமைப்பயிற்சியாளராக ராகுல் டிராவிட்டிற்குப் பதிலாக முன்னாள் இந்திய கிரிக்கெட் வீரர் கௌதம் கம்பீர் நியமிக்கப்பட்டுள்ளார். 2024 ஜூலை.09 அன்று BCCI செயலர் ஜெய் ஷா அறிவித்தபடி, கௌதம் கம்பீரின் பதவிக்காலம் மூன்று ஆண்டுகள் நீடிக்கும். 2026 T20 உலகக்கோப்பை, 2027 ஒருநாள் உலகக் கோப்பை மற்றும் 2025 ICC சாம்பியன்ஸ் கோப்பைபோன்ற போட்டிகளில் அவர் அணியை மேற்பார்வையிடுவார். கௌதம் கம்பீர், ஜூலை மாத இலங்கை சுற்றுப்பயணத்துடன் தனது பங்கை தொடங்குவார்.

**9. "Order of St. Andrew the Apostle" விருது என்பது எந்த நாட்டின் மிகவுயரிய குடிமக்கள் கௌரவ விருதாகும்?**

அ. ஆஸ்திரேலியா

**ஆ. ரஷ்யா ☑**

இ. பிரான்ஸ்

ஈ. ஜெர்மனி



★ இந்தியா–ரஷ்யா உத்திசார் கூட்டாண்மை மற்றும் நட்புறவுகளை வளர்ப்பதற்கு அவர் செய்த பங்களிப்புகளுக்காக 2019இல் வழங்கப்பட்ட ரஷ்யாவின் மதிப்புமிக்க புனித ஆன்ட்ரூ தி அப்போஸ்தலர் விருதை பிரதமர் நரேந்திர மோதி அதிகாரப்பூர்வமாக பெற்றுக்கொண்டார். ஜார் பீட்டர் தி கிரேட் அவர்களால் 1698இல் நிறுவப்பட்ட இந்தக் கௌரவம், சிறந்த குடிமகன் அல்லது இராணுவ பொறுப்பை அங்கீகரிக்கிறது.

**10. 2024 – ஒலிம்பிக்கில் பங்கேற்கும் இந்திய அணியின் வழிநடத்தியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர் யார்?**

**அ. ககன் நரங் ☑**

ஆ. மேரி கோம்

இ. நீரஜ் சோப்ரா

ஈ. அபினவ் பிந்த்ரா



★ நான்கு முறை ஒலிம்பிக்கில் பங்கேற்றவரும், 2012இல் வெண்கலப்பதக்கம் வென்றவருமான ககன் நரங், 2024 ஒலிம்பிக்கில் போட்டியில் பங்கேற்கும் இந்திய அணியின் வழிநடத்தியாக மேரி கோமுக்குப்பதிலாக நியமனம் செய்யப்பட்டுள்ளார் என்று இந்திய ஒலிம்பிக் சங்கம் அறிவித்துள்ளது. உடல்நலக்குறைவு காரணமாக மேரி கோம்

பதவி விலகினார். PV சிந்து பெண் கொடிதாங்கியாக இருப்பார். 2024 – பாரிஸ் ஒலிம்பிக் போட்டிகள் 2024 ஜூலை 26 முதல் ஆகஸ்ட்.11 வரை நடைபெறவுள்ளன.

**11. அண்மையில், இந்தியாவும் ரஷ்யாவும் எந்த ஆண்டுக்குள் இருதரப்பு வர்த்தகத்தை 100 பில்லியன் டாலர்களாக அதிகரிக்க ஒப்புக்கொண்டன?**

அ. 2025

ஆ. 2027




இ. 2028

ஈ. 2030 ☑

★ இந்தியாவும் ரஷ்யாவும் இருதரப்பு வர்த்தகத்தை 2030ஆம் ஆண்டுக்குள் $100 பில்லியன்களாக அதிகரிக்கவும், 22ஆவது வருடாந்திர உச்சிமாநாட்டின்போது மேற்கத்திய பொருளாதாரத் தடைகளைத் தவிர்க்க தேசிய நாணயங்களைப் பயன்படுத்தவும் ஒப்புக்கொண்டன. உக்ரைனில் பொதுமக்கள் உயிரிழப்பதை நிறுத்தவேண்டும் என்று பிரதமர் நரேந்திர மோதி வலியுறுத்தினார். ரஷ்யா தனது இராணுவத்தில் பணியமர்த்தப்பட்ட இந்தியர்களை விரைவாக வெளியேற்றும் எனத் தெரிவித்தது.

**12. அஸ்ஸாமில் உள்ள எந்தத் தேசியப்பூங்காவில் அண்மையில், 'சலாசர் குழிவிரியன்' பாம்பு தென்பட்டது?**



அ. காசிரங்கா தேசியப்பூங்கா ☑

ஆ. மனாஸ் தேசியப்பூங்கா

இ. ரைமோனா தேசியப்பூங்கா

ஈ. நமேரி தேசியப்பூங்கா

★ 'ஹாரி பாட்டர்' தொடரின் சலாசர் ஸ்லிதரின் பெயரால் அழைக்கப்படும் சலாசர் குழி விரியன், அஸ்ஸாமின் காசிரங்கா தேசியப்பூங்காவில் தென்பட்டது. குழி விரியன்கள் இரையிலிருந்து அகச்சிவப்பு கதிர்வீச்சைக் கண்டறியும் வெப்ப–உணர்திறன் குழியுறுப்புகளைக் கொண்ட நஞ்சுப்பாம்புகளாகும். பல்வேறு வாழ்விடங்களில் காணப்படும் அவை முதன்மையாக வெப்பமண்டல மற்றும் மிதவெப்பமண்டல பகுதிகளில், குறிப்பாக ஆசியா மற்றும் அமெரிக்காவில் காணப்படுகின்றன. 2019இல் அருணாச்சல பிரதேச மாநிலத்தில் முதன்முதலில் அடையாளம் காணப்பட்ட சலாசர் குழி விரியன்களில் ஆண் பாம்புகளுக்குத் தனித்துவமான ஆரஞ்சு / சிவப்பு கோடுகள் உள்ளன.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. உலக மக்கள்தொகை நாள்:: ஜூலை.11**

உலக மக்கள்தொகை நாளானது ஆண்டுதோறும் ஜூலை.11 அன்று கடைப்பிடிக்கப்படுகிறது. "கருத்தரிப்பு காலத்தில் தாய் மற்றும் குழந்தையின் நலனுக்காக ஆரோக்கியமான கால இடைவெளி" என்பது இந்த நாளுக்கானக் நடப்பு 2024ஆம் ஆண்டுக்கானக் கருப்பெருளாகும்.

---

**2. குடும்பத்தலைவிகளுக்கு பொருளாதார அதிகாரமளித்தல் அவசியம்: இந்திய உச்சநீதிமன்றம்.**

வீட்டுப்பெண்களான குடும்பத்தலைவிகளுக்கு தனியாக வருமானம் இல்லை என்பதால் அவர்களுக்கு பொருளாதார பாதுகாப்பை கணவர் அளிக்க வேண்டியது கட்டாயமென்றும், அதுதான் உண்மையான வளர்ச்சி என்றும் இந்திய உச்சநீதிமன்ற பெண் நீதிபதி பி வி நாகரத்னா தனது தீர்ப்பில் குறிப்பிட்டார்.

குற்றவியல் நடைமுறைச் சட்ட (CrPC) பிரிவு 125இன்கீழ், முஸ்லிம் பெண்களும் ஜீவனாம்சம் (பராமரிப்புத்தொகை) கோரலாம் என உச்சநீதிமன்றம் முக்கியத் தீர்ப்பை வழங்கியது. அனைத்து மதத்தைச் சேர்ந்த பெண்களுக்கும் இந்தத் தீர்ப்பு பொருந்தும் என்று நீதிபதிகள் பி வி நாகரத்னா, அகஸ்டின் ஜார்ஜ் ஆகியோர் தனித்தனியாக தீர்ப்பு அளித்தனர்.

---

**3. தமிழ்நாட்டின் சுகாதார கட்டமைப்பு மேம்பாட்டுக்கு ₹3,000 கோடி வழங்க உலக வங்கி ஒப்புதல்.**

தமிழ்நாட்டின் சுகாதார கட்டமைப்பு, தரத்தை மேம்படுத்துவதற்கு ₹3,000 கோடி நிதியுதவி வழங்க உலக வங்கி ஒப்புதல் அளித்துள்ளதாக மக்கள் நல்வாழ்வு துறை தெரிவித்துள்ளது. தமிழ்நாட்டின் சுகாதார தரத்தை மேம்படுத்தும் வகையில், உலக வங்கியின் உதவியுடன், சுகாதார சீரமைப்பு திட்டம் 2019 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 5 ஆண்டு கொண்ட இத்திட்டத்தில் ₹2,854.74 கோடி மதிப்பில் பல்வேறு சுகாதார பணிகள் மேற்கொள்ளப்படுகிறது. இதில் ₹1,998.32 கோடி உலக வங்கியும், ₹856.42 கோடி தமிழ்நாடு அரசும் நிதியளிக்கிறது.

---

# IMPORTANT LINKS

TNPSC Current Affairs

https://www.winmeen.com/tnpsc-tamil-current-affairs/

Winmeen: Install the Winmeen App
Daily Free & Premium TNPSC Study Materials & Online Test

https://play.google.com/store/apps/details?id=co.robin.jbzwb

Winmeen: Winmeen Tnpsc Test Series - Samacheer lesson Wise Test + Previous Year Model Test for Tnpsc Group 1,2, 4 & VAO

https://wp.me/p7JanY-ag8

---

**1. இந்தியப்பெருங்கடலின் நலம்பற்றிய தகவல்களைச் சேகரிப்பதற்காக, "Regional Analysis of Indian Ocean (RAIN)" என்ற அமைப்பை அண்மையில் மேம்படுத்திய அமைப்பு எது?**

அ. தேசிய கடல்சார் நிறுவனம்

**ஆ. பெருங்கடல்சார் தகவல் சேவைகளுக்கான இந்திய தேசிய மையம் (INCOIS) ☑**

இ. இந்திய வானிலை ஆய்வு மையம்

ஈ. தேசிய கடல் மற்றும் வளிமண்டல நிர்வாகம் (NOAA)

★ ஹைதராபாத்தில் உள்ள பெருங்கடல்சார் தகவல் சேவைகளுக்கான இந்திய தேசிய மையம் (INCOIS) அதன் இந்தியப்பெருங்கடலின் பிராந்திய பகுப்பாய்வு (**R**egional **A**nalysis of **I**ndian Ocea**N** – **RAIN**) அமைப்பில் உவர்தன்மை மற்றும் பெருங்கடல் மேற்பரப்பு வெப்பநிலையுடன் பெருங்கடல் மேற்பரப்பு உயர ஒழுங்கின்மை (**S**ea **S**urface **H**eight **A**nomaly–**SSHA**) ஆகியவற்றை உள்ளடக்குவதற்காக அவ்வமைப்பை மேம்படுத்தியுள்ளது. கடந்த 2023இல் உருவாக்கப்பட்டு அண்மையில் செயல்படுத்தப்பட்ட இவ்வமைப்பு, இந்தியப்பெருங்கடலின் நலத்தை கண்காணிக்க உதவுகிறது. கூடுதலாக, இந்தியப்பெருங்கடலின் இருமுனையம் தற்போது நடுநிலையாக உள்ளது, ஆனால் வரும் ஆகஸ்ட் முதல் இந்தியாவில் பருவமழை அதிகரிக்கும் வகையில் அது நேர்மறையாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**2. ஆனந்த் திருமணச் சட்டமானது இந்தியாவில் உள்ள எந்தச்சமூகத்தினரின் திருமணச்சடங்குகளுக்கு சட்டப்பூர்வ அங்கீகாரத்தை வழங்குகிறது?**

அ. இசுலாமியர்கள்

**ஆ. சீக்கியர்கள் ☑**

இ. சமணர்கள்

ஈ. யூதர்கள்



★ சீக்கிய திருமணச் சடங்குகளை அங்கீகரிக்கும் ஆனந்த் திருமணச் சட்டத்தை அமல்படுத்துவது குறித்து விவாதிக்க தேசிய சிறுபான்மை ஆணையம் காணொளி வாயிலாக விவாதம் மேற்கொண்டது. ஜார்கண்ட், மகாராட்டிரா மற்றும் மேகாலயாபோன்ற மாநிலங்கள் அச்சட்டத்தைச் செயல்படுத்துவதாக அறிவித்தன; இவை தவிர பிற மாநிலங்கள் 2 மாதங்களுக்குள் அதைச் செயல்படுத்துவதாக உறுதியளித்துள்ளன. கடந்த 1909இல் தோற்றுவிக்கப்பட்டு 2012இல் திருத்தப்பட்ட இந்தச் சட்டம், சீக்கியர்களுக்கு இந்து திருமணச் சட்டத்திற்குப் புறத்தே திருமணங்களைப் பதிவுசெய்ய அனுமதிக்கிறது. அண்மையில், ஜம்மு–காஷ்மீர், ஆனந்த் திருமணப் பதிவுக்கான விதிகளை வகுத்தளித்தது.

**3. எந்த நாட்டுடனான கரிமப்பொருட்களுக்கான பரஸ்பர அங்கீகார ஒப்பந்தத்தில், இந்தியா, கையெழுத்திட்டது?**

அ. ஹாங்காங்

**ஆ. தைவான் ☑**

இ. வியட்நாம்

ஈ. ஜப்பான்



★ இந்தியா, தைவான் இடையே இயற்கை வேளாண் பொருட்களுக்கான பரஸ்பர அங்கீகார ஒப்பந்தம் புது தில்லியில் தைவானுடனான வர்த்தகம் குறித்த 9ஆவது பணிக்குழு கூட்டத்தின்போது செயல்படுத்தப்பட்டது. இந்தியாவின் வணிகம் மற்றும் தொழிற்துறை அமைச்சகத்தின் வேளாண் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப்பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையம், தைவானின் வேளாண் அமைச்சகத்தின் வேளாண் மற்றும் உணவு முகமை ஆகியவை இந்த ஒப்பந்தத்தை செயல்படுத்தும் முகமைகளாகும்.

★ அரிசி, பதப்படுத்தப்பட்ட உணவு, பச்சை/கருப்பு, மூலிகை தேயிலை, மருத்துவ தாவரப் பொருட்கள்போன்ற முக்கிய இந்திய இயற்கை வேளாண் பொருட்களை தைவானுக்கு ஏற்றுமதி செய்ய இந்த ஒப்பந்தம் வழிவகுக்கும்.

**4. அண்மையில், பிரதமரின் 25ஆவது அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் கண்டுபிடிப்பு ஆலோசனைக் குழு (PM–STIAC) கூட்டம் நடைபெற்ற இடம் எது?**

**அ. புது தில்லி ☑**

ஆ. சென்னை

இ. பெங்களூரு

ஈ. ஹைதராபாத்



★ ஜூலை.09 அன்று புது தில்லியில் பேராசிரியர் அஜய் குமார் சூட் தலைமையில் நடைபெற்ற பிரதமரின் 25ஆவது அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் கண்டுபிடிப்பு ஆலோசனைக்குழு (PM–STIAC) கூட்டம், பல்வேறு அறிவியல் மற்றும் தொழில்நுட்ப முயற்சிகளை மதிப்பாய்வு செய்தது. கடந்த 2018ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட PM–STIAC உத்தி சார் விஷயங்களில் ஆலோசனைகளை வழங்குகிறது. ஆழ்கடல் ஆய்வு, AI, தேசிய பங்கு, மின்சார வாகனம் மற்றும் AGNIiபோன்ற பணிகளை உருவாக்குகிறது. மேலும், இந்தியாவின் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் திறன்களை மேம்படுத்துவதற்காக அரசாங்க நிறுவனங்கள் முழுவதும் அவற்றை செயல்படுத்துவதை மேற்பார்வையிடுகிறது.

**5. அண்மையில், நிதிசார் சேர்ப்புக் குறியீட்டை வெளியிட்ட அமைப்பு எது?**

**அ. இந்திய ரிசர்வ் வங்கி ☑**

ஆ. NABARD

இ. நிதி அமைச்சகம்

ஈ. SEBI

★ 2023 மார்ச்சில் 60.1ஆக இருந்த ரிசர்வ் வங்கியின் நிதிசார் சேர்ப்புக் குறியீடு 2024 மார்ச்சில் 64.2ஆக உயர்ந்தது. இது இந்தியா முழுவதும் நிதிசார் சேர்ப்பில் வளர்ச்சியைக் குறிக்கிறது. இக்குறியீடு 0 (முழு விலக்கு) முதல் 100 (முழு சேர்த்தல்) வரை இருக்கும். அணுகல் (35%), பயன்பாடு (45%) மற்றும் தரம் (20%) ஆகிய மூன்று அளவுருக்களை இது உள்ளடக்கியுள்ளது. இம்முன்னேற்றம் முக்கியமாக பயன்பாட்டு பரிமாணத்தால் உந்தப்பட்டுள்ளது.

**6. அண்மையில், EWS, SEBC, OBC பெண்களுக்கான இலவச உயர்கல்வி கொள்கையை அறிவித்த மாநில அரசு எது?**

அ. தமிழ்நாடு

**ஆ. மகாராஷ்டிரா ☑**

இ. கேரளா

ஈ. இமாச்சல பிரதேசம்

★ பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினர் (EWS), சமூக ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் பின்தங்கிய வகுப்பினர் (SEBC), மற்றும் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (OBC) ஆகிய பெண்களுக்கான உயர்கல்வியை இலவசமாக வழங்கும் புதிய கொள்கையை மகாராஷ்டிர மாநில அரசு அறிவித்துள்ளது. 2024–25 கல்வியாண்டில் இருந்து நடைமுறைக்கு வரும் இம்முயற்சியானது, தொழில்முறை படிப்புகளில் பெண்களின் பங்களிப்பை அதிகரிப்பதையும், தேசியக் கல்விக்கொள்கையுடன் ஒத்திசைவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

**7. அண்மையில், எந்த நிறுவனத்தின் ஆராய்ச்சியாளர்கள் நுண்திவலை தண்ணீரைப்பயன்படுத்தி கனிம நானோ துகள்களை உருவாக்குவதற்கான ஒரு புதிய முறையை உருவாக்கியுள்ளனர்?**

**அ. ஐஐடி மெட்ராஸ் ☑** ஆ. ஐஐடி கான்பூர்

இ. ஐஐடி தில்லி ஈ. ஐஐடி பம்பாய்

★ மெட்ராஸ் ஐஐடி நிறுவனத்தின் ஆராய்ச்சியாளர்கள் சுமார் 10 மைக்ரோமீட்டர் அளவுள்ள நுண்திவலைகள் நீரைப் பயன்படுத்தி கனிம நானோதுகள்களை உருவாக்கும் முறையைக் கண்டுபிடித்துள்ளனர். இந்தக் கண்டுபிடிப்பு வாழ்வின் தோற்றம் மற்றும் வேளாண் மண் நிறைவாக்கலுக்கான சாத்தியமான தாக்கங்களைக் கொண்டுள்ளது. நுண்திவலைகளால் தாதுக்களை பேரளவு நீரைவிட வேகமாக விரைவாக நானோ துகள்களாக உடைக்க முடியும். எடுத்துக்காட்டுக்கு, சிலிக்கா நானோதுகள்களால் தாவர வளர்ச்சியை மேம்படுத்த முடியும், தரிசு நிலத்தை வளமான நிலமாக மாற்ற முடியும் மற்றும் உணவு உற்பத்தி மற்றும் பாதுகாப்பை மேம்படுத்த இயலும்.

**8. அண்மையில், 'மருத்துவச் சாதனங்கள் தகவல் அமைப்பு – MeDvIS'ஐ அறிமுகப்படுத்திய அமைப்பு எது?**

**அ. உலக சுகாதார அமைப்பு ☑**

ஆ. உலக வங்கி

இ. UNICEF

ஈ. UNDP

★ 2,301 வகையான மருத்துவ சாதனங்கள்பற்றிய தகவல்களை வழங்கும் MeDevIS (மருத்துவச் சாதனங்கள் தகவல் அமைப்பு) என்ற இணையதளத்தை உலக சுகாதார அமைப்பு (WHO) அறிமுகப்படுத்தியது. பல்வேறு நோய்களைக் கண்டறிவதற்கும் சிகிச்சையளிப்பதற்கும் மருத்துவச் சாதனங்களின் தேர்வு, கொள்முதல் மற்றும் பயன்பாடு ஆகியவற்றுக்கான முடிவெடுக்க இது உதவுகிறது.

★ இத்தளமானது 10,000–க்கும் மேற்பட்ட மருத்துவ தொழில்நுட்பங்களை உள்ளடக்கியது. வெப்பமானிகள்போன்ற எளிய கருவிகள் முதல் உதறல்நீக்கி மற்றும் ரேடியோதெரபி சாதனங்கள்போன்ற சிக்கலான உபகரணங்கள் வரை இதில் தகவல்கள் தரப்பட்டுள்ளன.

**9. 2024 – உலக மக்கள்தொகை நாளுக்கானக் கருப்பொருள் என்ன?**

**அ. To Leave No One Behind, Count Everyone ☑**




ஆ. Safeguard the health and rights of women and girls

இ. Gender equality and reproductive health

ஈ. Family Planning is a Human Right

★ உலக மக்கள்தொகை நாளானது 1990 முதல் ஆண்டுதோறும் ஜூலை.11ஆம் தேதியன்று அனுசரிக்கப்படுகிறது. இது மக்கள்தொகை வளர்ச்சி, சுற்றுச்சூழல் பாதிப்பு மற்றும் வளர்ச்சி சிக்கல்களை மையமாகக்கொண்டுள்ளது. 1989ஆம் ஆண்டு UNDPஆல் நிறுவப்பட்ட இந்நாள், 1987 ஜூலை.11இல் உலக மக்கள்தொகை ஐந்து பில்லியனைத் தாண்டிய தேதியைக் நினைவுகூருகிறது. "To Leave No One Behind, Count Everyone" என்பது நடப்பு 2024ஆம் ஆண்டில் வரும் இந்நாளுக்கானக் கருப்பொருளாகும்.

**10. 2024 – பிட்ச் பிளாக் பயிற்சியை நடத்தும் நாடு எது?**

அ. இந்தியா



ஆ. பிரான்ஸ்

**இ. ஆஸ்திரேலியா ☑**

ஈ. நியூசிலாந்து

★ பிட்ச் பிளாக்–2024 பயிற்சியில் பங்கேற்பதற்காக இந்திய விமானப்படையின் குழு ஆஸ்திரேலிய விமானப்படை தளமான டார்வின் சென்றது. இந்தப் பயிற்சி 2024 ஜூலை.12 முதல் ஆக.02 வரை நடைபெறுகிறது. இது இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை ஆஸ்திரேலியாவில் நடத்தப்படும் ஒரு பன்னாட்டுப் பயிற்சியாகும். 'பிட்ச் பிளாக்' என்ற இந்தப் பயிற்சி மக்கள் இல்லாத பெரிய பகுதிகளில் இரவு நேரத்தில் நடத்தப்படும் பயிற்சியாகும்.

★ பிட்ச் பிளாக்கின் 43 ஆண்டுகால வரலாற்றில் இந்த ஆண்டின் பயிற்சி மிகப்பெரியதாகும். இதில் 20 நாடுகளைச் சேர்ந்த 140–க்கும் மேற்பட்ட விமானங்களும் பல்வேறு விமானப்படைகளின் 4400 வீரர்களும் பங்கேற்கின்றனர். இப்பயிற்சி, பங்கேற்கும் நாடுகளின் திறனை வலுப்படுத்துதற்கும், இந்தோ–பசிபிக் பிராந்தியத்தில் ஒருங்கிணைந்த செயல்பாடுகளை வலுப்படுத்தவும் உதவும். இந்திய விமானப்படை இதற்கு முன்பு 2018, 2022 ஆகிய ஆண்டுகளில் இந்தப்பயிற்சியில் பங்கேற்றுள்ளது.

11. **துளைக்குழி புவி இயற்பியல் ஆராய்ச்சி ஆய்வகத்தின் (Borehole Geophysics Research Laboratory) அறிவியல் ரீதியான ஆழ்துளையிடல் திட்டத்தின் முதன்மை நோக்கம் என்ன?**

அ. கடல்சார் பல்லுயிர்குறித்து ஆய்வு செய்தல்

ஆ. புதைபடிவ எரிபொருட்களை ஆராய்தல்

**இ. நீர்த்தேக்கத்தால் தூண்டப்படும் நிலநடுக்கங்களைப் புரிந்து கொள்ளுதல் ☑**

ஈ. நிலத்தடி நீராதாரங்களைத் தேடுதல்




★ புவி அறிவியல் அமைச்சகத்தின் கீழ், மகாராஷ்டிராவின் காரத்தில் உள்ள துளைக்குழி புவி இயற்பியல் ஆராய்ச்சி ஆய்வகம் இந்தியாவின் அறிவியல் ரீதியிலான ஆழ்துளையிடல் திட்டத்தை வழிநடத்துகிறது. மகாராஷ்டிராவின் கொய்னா–வார்னா பகுதியில், 1962இல் கொய்னா அணை கட்டப்பட்டதிலிருந்து, நில அதிர்வுக்கு ஆளாகக்கூடிய நீர்த்தேக்கத்தால் தூண்டப்பட்ட நிலநடுக்கங்களை ஆய்வுசெய்வதற்காக பூமியின் மேலோட்டில் 6 கிமீ தூரம் வரை எட்டுவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது. இம்முயற்சி நிலநடுக்கவியல் & தொழில்நுட்ப கண்டுபிடிப்புகளை மேம்படுத்துவதோடு புவி இடர்களைப் புரிந்துகொள்வதற்கும் புவி வளங்களை மேம்படுத்துவதற்கும் உதவுகிறது.

12. **அண்மையில், இந்தியாவின் எந்தப் பகுதியில் கேடய–வால் பாம்பின் புதிய இனத்தை அறிவியலாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்?**

**அ. மேற்குத்தொடர்ச்சி மலைகள் ☑**

ஆ. கிழக்குத்தொடர்ச்சி மலைகள்

இ. மேற்கிமயமலைகள்

ஈ. ஆரவல்லி மலைத்தொடர்



★ மேற்குத்தொடர்ச்சி மலையின் மேகமலை – மூணாறு நிலப்பரப்பில், '*Uropeltis caudomaculata*' என்ற புதிய வகை கேடய–வால் பாம்பை ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். மஞ்சள்நிற புள்ளிகளைக் கொண்ட அதன் வாலில் கொண்டுள்ள இந்த நஞ்சற்ற இனம் அதன் மிகையான அடிப்புற செதில்களால் வேறுபட்டு காணப்படுகிறது.

★ மேகமலை புலிகள் காப்பகம், பெரியாறு புலிகள் சரணாலயம் மற்றும் மூணாற்றின் யெல்லப்பட்டி ஆகிய இடங்களில் பிரத்தியேகமாக காணப்படுகிறது. '*Uropeltidae*' குடும்பத்தைச் சேர்ந்த கேடய–வால் பாம்புகள், தீபகற்ப இந்தியா மற்றும் இலங்கையை பூர்வீகமாகக் கொண்டவை. அவை மலைப்பாங்கான காடுகளில் மண்ணுக்கு அடியில் ஓரடி வரை துளையிட்டு வாழ்கின்றன. அவை தமது வால் முனையில் ஒரு கெரடினஸ் கவசத்தைக் கொண்டுள்ளன.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. பொதுத்துறை வங்கிகள் தனியார்மயம்: சட்டத்திருத்தத்தை நிறைவேற்ற நடுவண் அரசு முடிவு.**

வங்கிகள் கட்டுப்பாட்டுச்சட்டம் 1949, வங்கி நிறுவனங்கள் (கையகப்படுத்துதல், நிர்வாக மாற்றம்) சட்டம், 1970 ஆகியவற்றில் திருத்தங்கள் செய்யப்படவுள்ளன. தனியார்மயமாக்கப்படும் பொதுத்துறை வங்கியில் நடுவணரசின் பங்கு 51 சதவீதமாகக் குறைக்கப்படும்.

தனியார்மயமாக்கப்படும் ஒரு வங்கி IDBI என்பது ஏற்கெனவே அறிவிக்கப்பட்டுவிட்டது. பொதுத்துறை காப்பீட்டு நிறுவனத்தை தனியார்மயமாக்கும் சட்டத்திருத்த மசோதா 2021ஆம் ஆண்டிலேயே நிறைவேற்றப்பட்டுவிட்டது. கடந்த 2020ஆம் ஆண்டு பத்து பொதுத்துறை வங்கிகளை இணைத்து நான்கு வங்கிகளாக நடுவணரசு மாற்றியது. இதன்மூலம் நாட்டிலுள்ள பொதுத்துறை வங்களின் எண்ணிக்கை 27இலிருந்து 12ஆக குறைக்கப்பட்டது.

---

**2. TANGEDCOஐ இரண்டாகப்பிரிக்க நடுவணரசு ஒப்புதல்.**

தமிழ்நாடு மின்னுற்பத்தி மற்றும் பகிர்மானக்கழகம் (TANGEDCO) நிர்வாக காரணங்களுக்காக TANGEDCOஐ இரண்டாகப் பிரிக்க நடுவண் அரசிடம், தமிழ்நாடு அரசு அனுமதி கோரியிருந்தது. இதற்கு தற்போது நடுவண் அரசு அனுமதி வழங்கியுள்ளது. அதன்படி 'TANGEDCO' இனி 'தமிழ்நாடு மின்னுற்பத்திக் கழகம்' என்று ஒரு பிரிவாகவும், 'தமிழ்நாடு பசுமை எரிசக்திக் கழகம்' என்று இன்னொரு பிரிவாகவும் செயல்படவுள்ளது.

இதில், தமிழ்நாடு மின்னுற்பத்திக் கழகம் என்பது நிலக்கரி, டீசல், அணு அல்லது வேறு ஏதேனும் எரிபொருட்களை பயன்படுத்தி மின்னுற்பத்தி செய்வதை மேற்கொள்ளும். அதேபோல் தமிழ்நாடு பசுமை எரிசக்திக்கழகம் என்பது வளி, சூரியவொளி, உயிரி–எரிபொருள், கடலலை உள்ளிட்டவற்றின்மூலம் எரிசக்தி உற்பத்தியை மேற்கொள்வதற்கான பணிகளை இனி மேற்கொள்ளும்.

---

**3. நிலையான வளர்ச்சி இலக்கு குறியீடு: தமிழ்நாடு 2ஆவது இடம்.**

2023–24ஆம் ஆண்டுக்கான NITI ஆயோக்கின் நிலையான வளர்ச்சி இலக்கு குறியீட்டில் தமிழ்நாடு 2ஆவது இடம் பிடித்துள்ளது. 2023–24ஆம் ஆண்டுக்கான NITI ஆயோக்கின் நிலையான வளர்ச்சி இலக்கு குறியீட்டில் இந்தியா ஒட்டுமொத்தமாக 71 புள்ளிகளைப் பெற்றுள்ளது. 2020–21ஆம் ஆண்டுக்கான அந்தக் குறியீட்டில் இந்தியா 66 புள்ளிகளைப்பெற்ற நிலையில், தற்போது முன்னேற்றம் அடைந்துள்ளது.

மாநிலங்களைப் பொருத்தவரை நிலையான வளர்ச்சி இலக்கு குறியீட்டில் கேரளம் மற்றும் உத்தரகண்ட் தலா 79 புள்ளிகளுடன் முதலிடம் பிடித்துள்ளன. நாகாலாந்து 63 புள்ளிகளுடனும், ஜார்கண்ட் 62 புள்ளிகளுடனும், பீகார் 57 புள்ளிகளுடனும் மிகவும் பின்தங்கிய மாநிலங்களாக உள்ளன. இந்தக் குறியீட்டில் யூனியன் பிரதேசங்களை பொருத்தவரை சண்டிகர், ஜம்மு–காஷ்மீர், புதுச்சேரி, அந்தமான்–நிகோபார் தீவுகள், தில்லி ஆகியவை முதல் ஐந்து இடங்களில் உள்ளன.

---

**4. ஜூன்.25 – அரசமைப்பு படுகொலை நாள்: நடுவணரசு அறிவிப்பு.**

முன்னாள் பிரதமர் இந்திராகாந்தி ஆட்சியில் நாட்டில் அவசரநிலை பிரகடனப்படுத்தப்பட்டதை கண்டித்து, ஆண்டு தோறும் ஜூன்.25ஆம் தேதியன்று 'சம்விதான் ஹாத்யா திவாஸ்' என்ற பெயரில் 'அரசியலமைப்பு படுகொலை நாள்' அனுசரிக்கப்படும் என்று நடுவணரசு அறிவித்துள்ளது.

---

**5. இந்தியாவில் முதல்முறையாக நடைபெறும் ஊடக மாநாடு: நடுவணரசு அறிவிப்பு.**

'உலக ஆடியோ காணொலி மற்றும் பொழுதுபோக்கு மாநாடு' இந்தியாவில் முதல்முறையாக கோவா மாநிலத்தில் வருகின்ற நவம்பரில் நடைபெறவுள்ளது. பன்னாட்டு திரைப்பட திருவிழாவுடன் இம்மாநாடும் சேர்த்து நடத்தப்பட உள்ளது. இந்த அறிவிப்பை மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்புத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

---

**6. காலை உணவுத்திட்டம் விரிவாக்கம்: திருவள்ளூரில் முதலமைச்சர் தொடங்கி வைக்கிறார்.**

காலை உணவுத்திட்ட விரிவாக்கத்தை திருவள்ளூர் மாவட்டம் கடம்பத்தூரில் முதலமைச்சர் முக ஸ்டாலின் ஜூலை. 15ஆம் தேதியன்று ('பெருந்தலைவர்' காமராஜர் பிறந்த நாள் :: கல்வி வளர்ச்சி நாள்) தொடங்கி வைக்கிறார்.

---

# IMPORTANT LINKS

TNPSC Current Affairs

https://www.winmeen.com/tnpsc-tamil-current-affairs/

Winmeen: Install the Winmeen App
Daily Free & Premium TNPSC Study Materials & Online Test

https://play.google.com/store/apps/details?id=co.robin.jbzwb

Winmeen: Winmeen TNPSC Test Series - Samacheer lesson Wise Test + Previous Year Model Test for TNPSC Group 1,2, 4 & VAO

https://wp.me/p7JanY-ag8

**1. அண்மையில், 'டிஜிட்டல் பொருளாதார அறிக்கை – 2024'ஐ வெளியிட்ட அமைப்பு எது?**

அ. உலக வங்கி

**ஆ. ஐநா வர்த்தகம் மற்றும் மேம்பாடு ☑**

இ. பன்னாட்டு செலாவணி நிதியம்

ஈ. ஐநா வளர்ச்சித் திட்டம்

★ ஐநா வர்த்தகம் மற்றும் மேம்பாட்டு அமைப்பு அண்மையில் டிஜிட்டல் பொருளாதார அறிக்கை–2024ஐ வெளியிட்டது. இது நிலையான எண்மமயமாக்கல் உத்திகளின் அவசியத்தை வலியுறுத்துகிறது. இணையப்பயனர்கள் 2005இல் இருந்த 1 பில்லியன் என்ற எண்ணிக்கையிலிருந்து 2023இல் 5.4 பில்லியனாக உயர்ந்துள்ளனர். ICT துறையின் உலகளாவிய GHG உமிழ்வு 2020இல் 1.5–3.2% ஆக இருந்தது. எண்மம் தொடர்பான கழிவுகள் 2010 முதல் 2022 வரை 30% அதிகரித்து, 10.5 மில்லியன் டன்களை எட்டியுள்ளது. 2022இல் தரவு மையங்கள் 460 டெராவாட் மணி நேரத்தை பயன்படுத்தியுள்ளன; 2026இல் இது 2 மடங்கு அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

★ முதன்மையான கனிமங்களின் தேவை 2050ஆம் ஆண்டில் 500%ஆக உயரக்கூடும். சுழற்சிப் பொருளாதார மாதிரிகளை ஏற்றுக்கொள்வது, சுற்றுச்சூழல் தரநிலைகளை அமல்படுத்துவது, புதுப்பிக்கத்தக்க ஆற்றலில் முதலீடு செய்தல் மற்றும் நிலையான வணிக மாதிரியை மேம்படுத்துவது ஆகியவை இதன் பரிந்துரைகளில் அடங்கும்.

**2. உம்லிங் லா கணவாய் அமைந்துள்ள மாநிலம்/யூனியன் பிரதேசம் எது?**

அ. உத்தரகாண்ட்

**ஆ. லடாக் ☑**

இ. சிக்கிம்

ஈ. இமாச்சல பிரதேசம்




★ நியூஸ்பேஸ் ரிசர்ச் அண்ட் டெக்னாலஜிஸ் நிறுவனம் 100 கிலோ எடையுள்ள மேக்ஸ் டேக் ஆஃப் வெயிட் (MTOW) UAVஐ உம்லிங் லா கணவாயில் வெற்றிகரமாக சோதித்தது. லடாக் மலைத்தொடரை ஒட்டி கீழை லடாக்கில் 19,024 அடி உயரத்தில் அமைந்துள்ள உம்லிங் லா கணவாய், ஹிமாங்க் திட்டத்தின்கீழ் எல்லைப்புற சாலைகள் அமைப்பால் கட்டப்பட்ட உலகின் மிகவுயரமான சாலையாகும். இந்தச் சாலை, ஆதிக்க எல்லைக் கோட்டிற்கான இணைப்பை மேம்படுத்துகிறது மற்றும் சிசும்லே–டெம்சொக் பிரிவில் உள்ள உள்ளூர் சாலை இணைப்பை லே வரை மேம்படுத்தி, சுற்றுலாவை மேம்படுத்துகிறது. லடாக்கில் உள்ள மற்ற குறிப்பிடத்தக்க கணவாய்களில் கர்துங் லா, சாங் லா மற்றும் டாங்லாங் லா ஆகியவை அடங்கும்.

**3. '*Salvinia molesta*' என்றால் என்ன?**

**அ. ஆக்கிரமிப்புக் களை ☑**

ஆ. சிறுகோள்

இ. புவி கண்காணிப்பு செயற்கைக்கோள்

ஈ. AI கருவி



★ பிரேசிலைச் சேர்ந்த *Cyrtobagus salvinia* என்ற அயல் திணைக்குரிய வண்டினமானது, மத்திய பிரதேச மாநிலத்தின் பெட்டூல் மாவட்டத்தில் உள்ள சரணி நீர்த்தேக்கத்தில் (சாத்புரா அணை) விரவியிருந்த ஆக்கிரமிப்புக் களையான '*Salvinia molesta*'ஐ முற்றாக அழித்துள்ளது. நர்மதையாற்றின் கிளையாறான தவா ஆற்றில் அமைந்துள்ள இந்த நீர்த் தேக்கம், "நீர்ப்பரணி" அல்லது "சீன ஜாலார்" என்றும் அழைக்கப்படும் பிரேசிலை பூர்வீகமாகக்கொண்ட தானே மிதந்து வாழும் ஒரு நீர்வாழ் பரணியாகும். இந்தக் களை கேரளா, ஒடிசா, உத்தரகண்ட் மற்றும் மகாராஷ்டிராவின் சூழலியலையும் பாதித்து வருகிறது.

**4. அண்மையில், எந்தத்தொலைநோக்கிக்கான அகச்சிவப்பு விண்மீன் பட்டியலை உருவாக்குவதற்காக பொதுவளக் கருவியை இந்திய அறிவியலாளர்கள் உருவாக்கியுள்ளனர்?**

அ. இமயமலை சந்திரா தொலைநோக்கி

**ஆ. முப்பது மீட்டர் தொலைநோக்கி ☑**

இ. கேஸ்கிரேன் தொலைநோக்கி

ஈ. GROWTH-இந்தியா தொலைநோக்கி



★ முப்பது மீட்டர் தொலைநோக்கிக்கான அகச்சிவப்பு விண்மீன் பட்டியலை உருவாக்க இந்திய அறிவியலாளர்கள் ஒரு பொதுவளக்கருவியை உருவாக்கியுள்ளனர். பன்னாட்டளவிலான இத்திட்டம், உலகின் அதிநவீன ஒளியியல் மற்றும் அகச்சிவப்பு ஆய்வகமாக பேரண்டத்தைப்பற்றிய நமது புரிதலில் புரட்சியை ஏற்படுத்துவதை தனது நோக்கமாகக் கொண்டுள்ளது. 492 அறுகோணப்பிரிவுகளைக்கொண்ட 30 மீட்டர் பிரிக்கப்பட்ட முதன்மைக் கண்ணாடி இந்தத் தொலைநோக்கியின் முதன்மை அம்சங்களுள் அடங்கும்; இது வட அரைக்கோளத்திலேயே மிகப்பெரியதாகும்.

**5. அண்மையில், 2024 – NATO உச்சிமாநாடு நடைபெற்ற இடம் எது?**

**அ. வாஷிங்டன் DC ☑**

ஆ. லண்டன்

இ. பாரிஸ்

ஈ. சிட்னி

★ வாஷிங்டன் DCஇல் நடைபெற்ற அண்மைய NATO உச்சிமாநாட்டின்போது உக்ரைன் நாட்டை உறுப்பினராக்கிக் கொள்வதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து விவாதிக்கப்பட்டது. அடுத்த ஆண்டில் உக்ரைனுக்கு குறைந்தபட்சம் 40 பில்லியன் யூரோக்கள் ($43.28 பில்லியன்) இராணுவ உதவியை வழங்கவும் அக்கூட்டணி பரிசீலித்தது. NATO என்பது 32 உறுப்புநாடுகளை உள்ளடக்கிய ஓர் அரசுகளுக்கிடையேயான இராணுவக் கூட்டணியாகும்.

**6. போஜ் ஈரநிலம் அமைந்துள்ள மாநிலம் எது?**

அ. தமிழ்நாடு

**ஆ. மத்திய பிரதேசம் ☑**

இ. கேரளா

ஈ. இமாச்சல பிரதேசம்



★ மத்திய பிரதேச மாநிலத்தின் போபாலில் அமைந்துள்ள போஜ் ஈரநிலம் சுற்றுச்சூழல் பாதிப்பு காரணமாக ராம்சர் மாநாட்டின் பன்னாட்டு முக்கியத்துவம் வாய்ந்த ஈரநிலங்களின் பட்டியலிலிருந்து நீக்கப்படும் அபாயத்தில் உள்ளது. அவ்வீரநிலத்தின் நீர்ப்பிடிப்புப்பகுதியை பாதிக்கும் சாலைகட்டுமானம் குறித்த திட்டத்தால் இவ்வபாயம் எழுந்துள்ளது.

★ ராம்சர் மாநாட்டின் செயலகம் இந்தியாவிடமிருந்து இதற்கான விளக்கத்தைக் கோரியுள்ளது; இது பட்டியலிலிருந்து நீக்கம் செய்வதற்கான செயல்முறையின் முதல் படியாகும். ஈரநிலங்களுக்கான மைய அதிகாரமாக விளங்கும் இந்திய சுற்றுச்சூழல் அமைச்சகம் இக்கட்டுமானம் ஈரநிலத்தின் சுற்றுச்சூழல் தன்மையை மாற்றுமா என்பதை மதிப்பிட்டு அறிக்கையை அனுப்பும்.

**7. '*Squalus hima*' என்றால் என்ன?**

**அ. இந்தியாவின் தென்மேற்குக் கடற்கரையில் கண்டுபிடிக்கப்பட்ட ஒரு புதிய வகை நாய்மீன் சுறா ☑**

ஆ. அரபிக்கடலில் காணப்படும் ஒரு புதிய வகை பவழப்பாறைகள்



இ. கிழக்குத்தொடர்ச்சி மலைகளில் காணப்படும் ஓர் அழிந்து வரும் தவளை இனம்

ஈ. வடகிழக்குப்பகுதியில் புதிதாக கண்டுபிடிக்கப்பட்ட ஒரு சிலந்தி இனம்

★ இந்திய விலங்கியல் ஆய்வுமையத்தைச்சேர்ந்த அறிவியலாளர்கள், கேரளத்தின் தென்மேற்குக் கடற்கரையில், புதிய ஆழ்கடல் நாய்மீன் சுறா இனமான, '*Squalus hima*'ஐக் கண்டுபிடித்துள்ளனர். '*Spurdogs*' என்று அழைக்கப்படும் இந்த இனமானது, மென்மையான முதுகுத்துடுப்பு முதுகெலும்புகள், ஒரு சிறிய வாய் மற்றும் உடலில் புள்ளிகள் ஏதுமற்று காணப்படுகிறது. முதுகெலும்பு எண்ணிக்கை, பற்கள் எண்ணிக்கை மற்றும் துடுப்பமைப்பு ஆகியவற்றில், '*Squalus hima*' பிற உயிரினங்களிலிருந்து வேறுபடுகிறது. குவாலீன் நிறைந்த கல்லீரல் எண்ணெய்க்காகவும் மருந்துகள் மற்றும் அழகுசாதனப் பொருட்கள் தயாரிப்பிற்காகவும் இது முக்கியமாக பயன்படுகிறது.

**8. 2024 – வேளாண் தலைமைத்துவ விருதுகளில், கீழ்க்காணும் எம்மாநிலம், '2024 – தோட்டக்கலையில் சிறந்த மாநிலம்' என்ற விருதை வென்றது?**

அ. அஸ்ஸாம்



ஆ. அருணாச்சல பிரதேசம்

**இ. நாகாலாந்து ☑**

ஈ. சிக்கிம்

★ பல்வேறு விவசாயிகள் மற்றும் கிராமப்புற மக்களுக்கு பயனளிக்கும் புதுமையான தோட்டக்கலை திட்டங்களுக்காக நாகாலாந்து, '2024 – தோட்டக்கலையில் சிறந்து விளங்கும் மாநிலம்' என்ற விருதை வென்றது. பெண்கள் வள மேம்பாடு மற்றும் தோட்டக்கலைத்துறை அமைச்சர் சல்ஹூதுவோனுவோ குரூஸ் புது தில்லியில் இந்த விருதைப் பெற்றுக் கொண்டார். அம்மாநிலத்தின் தோட்டக்கலைத் துறையானது வாழ்வாதாரத்தை மேம்படுத்தி, வேலை வாய்ப்புகளை உருவாக்கி, ஊட்டச்சத்து பாதுகாப்பை உறுதிசெய்ததோடு மூன்று பயிர்களுக்கு புவிசார் குறியீடு பெற பதிவும் செய்துள்ளது. நாகாலாந்து மாநிலம் பதிமூன்று விவசாயிகளுடன் உற்பத்தி நிறுவனங்களை உருவாக்கி, 6,800 ஹெக்டேர் நிலங்களுக்கு இயற்கை முறை சான்றளித்து, தேசிய அங்கீகாரத்தைப் பெற்றுள்ளது.

**9. எந்த வகை கொசுக்களால் டெங்கு (எலும்புமுறிவுக் காய்ச்சல்) பரவுகிறது?**

அ. அனோபிலிஸ் கொசுக்கள்



**ஆ. ஏடிஸ் கொசுக்கள் ☑**

இ. கியூலெக்ஸ் கொசுக்கள்

ஈ. கியூலிசெட்டா கொசுக்கள்

★ கர்நாடகம் முழுவதும் டெங்கு காய்ச்சல் பரவிவருவதைத் தானாக முன்வந்து விசாரணை நடத்தியது கர்நாடக மாநில உயர்நீதிமன்றம். வெப்பமண்டல மற்றும் மிதவெப்ப மண்டல பகுதிகளில் பொதுவாகக் கொசுக்களால் பரவும் வைரஸ் தொற்றுநோயான டெங்கு என்பது ஏடிஸ் கொசுக்களால் பரவுகிறது. பொதுவாக இந்த நோய்த்தொற்று சாதாரண அறிகுறியையே கொண்டிருந்தாலும், சில சமயங்களில் குருதிப்போக்குக் காய்ச்சல், விரைவான சுவாசம், வாந்தி மற்றும் ஈறுகளில் இரத்தப்போக்கு ஆகியவற்றையும் இது ஏற்படுத்துகிறது. ஆண்டுதோறும் 400 மில்லியன் பேர் இந்த நோய்த்தொற்றால் பாதிக்கப்படுகின்றனர்.இந்நோய்த்தொற்றுக்கென குறிப்பிட்ட மருந்து எதுவும் இல்லை.

**10. தொழில்நுட்ப மேம்பாட்டு நிதித் திட்டத்துடன் தொடர்புடைய அமைச்சகம் எது?**

அ. அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகம்

ஆ. உள்துறை அமைச்சகம்

இ. நகர்ப்புற மேம்பாட்டு அமைச்சகம்

**ஈ. பாதுகாப்பு அமைச்சகம் ☑**

★ பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு (DRDO) தொழில்நுட்ப மேம்பாட்டு நிதித்திட்டத்தின்கீழ் (TDF) ஏழு புதிய தனியார்துறை திட்டங்களுக்கு அனுமதியளித்துள்ளது. 'இந்தியாவில் தயாரிப்போம்' என்ற முன்னெடுப்பின்கீழ் பாதுகாப்புத் தொழில்நுட்பத்தில் தன்னிறைவை மேம்படுத்துவதற்காக தொடக்கப்பட்ட TDF திட்டம் என்பது DRDOஆல் செயல்படுத்தப்படும் மத்திய பாதுகாப்பு அமைச்சகத் திட்டமாகும். இது MSMEகள் மற்றும் புத்தொழில் நிறுவனங்களை ஆதரிக்கிறது. இது ₹50 கோடி வரை செலவாகும் திட்டங்களுக்கு 90% வரை நிதியுதவி அளிக்கிறது.

**11. தாராளமயமாக்கப்பட்ட பணமனுப்பும் திட்டத்தின் முதன்மை நோக்கம் என்ன?**

அ. இந்தியாவில் அந்நிய நேரடி முதலீட்டை அதிகரித்தல்

**ஆ. இந்தியாவிற்குப் புறத்தே நிதியை அனுப்பும் செயல்முறையை எளிமைப்படுத்துவது & நெறிப்படுத்துவது ☑**

இ. அயல்நாட்டு சுற்றுலாப்பயணிகளை இந்தியாவுக்கு வர ஊக்குவிப்பது

ஈ. இந்தியாவுக்குள் அந்நியச் செலாவணி வருவதைக் கட்டுப்படுத்துதல்

★ இந்திய ரிசர்வ் வங்கி (RBI) அண்மையில் குஜராத் மாநிலத்தில் உள்ள GIFT நகரத்தில் உள்ள பன்னாட்டு நிதிச் சேவை மையங்களில் தாராளமயமாக்கப்பட்ட பணமனுப்பும் திட்டத்தின்கீழ், அயல்நாட்டு நாணயக் கணக்குகளைத் தொடங்குவதற்கு குடியுரிமையுள்ள நபர்களுக்கு அனுமதி வழங்கியது. 2004ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட தாராளமயமாக்கப்பட்ட பணமனுப்பும் திட்டமானது இந்தியாவிற்குப் புறத்தே பணம் அனுப்புவதை எளிதாக்குகிறது. இதன்மூலம் ஒரு நிதியாண்டிற்கு $250,000 வரை அனுப்பவியலும். இது பெருநிறுவனங்கள் மற்றும் அறக்கட்டளை –களைத் தவிர்த்து, அனுமதிக்கப்பட்ட நடப்பு அல்லது மூலதனக் கணக்குப் பரிவர்த்தனைகளை உள்ளடக்கும்.

**12. அண்மையில், 'உலக மக்கள்தொகை வாய்ப்புகள் அறிக்கை – 2024'ஐ வெளியிட்ட அமைப்பு எது?**

**அ. ஐநா பொருளாதாரம் மற்றும் சமூக விவகாரங்கள் துறை (UNDESA) ☑**

ஆ. ஐநா வளர்ச்சித் திட்டம் (UNDP)

இ. ஐநா சுற்றுச்சூழல் திட்டம் (UNEP)

ஈ. உலக வங்கி

★ ஐநா பொருளாதாரம் மற்றும் சமூக விவகாரங்கள் துறையானது (UN-DESA) அண்மையில் உலக மக்கள்தொகை வாய்ப்புகள் அறிக்கையை வெளியிட்டது. இவ்வறிக்கையின்படி, 2080களின் நடுப்பகுதியில் உலக மக்கள்தொகை 10.3 பில்லியனாக உயரும், 2024இல் அது 8.2 பில்லியனாக இருக்கும்.

★ இவ்வறிக்கையின் முக்கிய கண்டுபிடிப்புகளில் தற்போதைய கருவுறுதல் விகிதம் ஒரு பெண்ணுக்கு 2.25 என்ற அளவிலும் ஆயுட்காலம் 73.3 ஆண்டுகளாக இருக்கும் என்பதும் அடங்கும். 2060களின் முற்பகுதியில் இந்தியாவின் மக்கள்தொகை உச்சத்தை எட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. நேபாள பிரதமராக பதவியேற்றார் சர்மா ஒலி.**

நேபாள நாட்டின் புதிய பிரதமராக நேபாள கம்யூனிஸ்ட் கட்சி–ஐக்கிய மாாக்சிஸ்ட் லெனினிஸ்ட் (CPN–UML) கட்சித் தலைவர் கே பி சர்மா ஒலி பதவியேற்றார்.

---

**2. நாட்டறம்பள்ளி அருகே 10,000 ஆண்டுகளுக்கு முந்தைய கற்காலக் கற்கருவிகள் கண்டெடுப்பு.**

திருப்பத்தூர் மாவட்டம் நாட்டறம்பள்ளி அருகே 10,000 ஆண்டுகளுக்கு முந்தைய பழைய கற்காலக்கற்கருவிகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இந்தக் கற்கருவிகளானது வெவ்வேறு வடிவங்களில் கிடைத்துள்ளன. முற்காலத்தில் நாடோடிகளாக அலைந்து திரிந்த மனிதன், உணவுப்பொருள்களை கிழிக்கவும், வெட்டவும் மற்றும் விலங்குகளை வேட்டையாடவும், இயற்கையாகக் கிடைக்கும் கற்களை உடைத்து அவற்றில் கூர்மையானவற்றை ஆயுதங்களாக –வும், கருவிகளாகவும் பயன்படுத்தி வந்தனர்.

---

## IMPORTANT LINKS

TNPSC Current Affairs

https://www.winmeen.com/tnpsc-tamil-current-affairs/

Winmeen: Install the Winmeen App
Daily Free & Premium TNPSC Study Materials & Online Test

https://play.google.com/store/apps/details?id=co.robin.jbzwb

Winmeen: Winmeen TNPSC Test Series - Samacheer lesson Wise Test + Previous Year Model Test for TNPSC Group 1,2, 4 & VAO

https://wp.me/p7JanY-ag8

**1. அமெரிக்கா, ஜப்பான் மற்றும் ஆஸ்திரேலியாவுடன் இணைந்து 28ஆவது மலபார் கடற்படை பயிற்சியை வரும் அக்டோபரில் நடத்தவுள்ள நாடு எது?**



**அ. இந்தியா ☑**

ஆ. சீனா

இ. வங்காளதேசம்

ஈ. மியான்மர்

★ அமெரிக்கா, ஜப்பான், ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளுடன் இணைந்து வரும் அக்டோபர் மாதத்தில் 28ஆவது மலபார் கடற்படை பயிற்சியை இந்தியா நடத்தவுள்ளது. இந்தப் பயிற்சியானது, அதிநவீன நீர்மூழ்கி எதிர்ப்புப் போர் பயிற்சி மற்றும் உத்திசார் கடற்படை நிகழ்வுகளில் கவனஞ்செலுத்தி, ராணுவ ஒருங்கிணைப்பு மற்றும் இயங்குதன்மையை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இது இந்தோ-பசிபிக் பிராந்தியத்தில் இந்தியாவின் உத்திசார் பங்கையும் பங்கேற்கும் நாடுகளிடையே கூட்டு பாதுகாப்பு முயற்சிகளின் முக்கியத்துவத்தையும் வலியுறுத்துகிறது.

**2. டிஜிட்டல் பாரத நிதி என்ற முன்னெடுப்பின் முதன்மை நோக்கம் என்ன?**



அ. நகர்ப்புறங்களில் தொலைத்தொடர்பு சேவைகளை அதிகரித்தல்

**ஆ. தொலைதூர மற்றும் கிராமப்புறங்களில் தொலைத்தொடர்பு வலையமைப்புகளை மேம்படுத்துதல் ☑**

இ. பழங்குடியினர் பகுதிகளில் எண்மக்கல்வியறிவை மேம்படுத்துதல்

ஈ. வெள்ளஞ்சூழ் பகுதிகளில் உள்ள குழந்தைகளுக்குப் பள்ளிசார் உபகரணங்களை வழங்குதல்

★ கிராமப்புறங்களில் தொலைத்தொடர்பு இணைப்பை மேம்படுத்தும் நோக்கில், டிஜிட்டல் பாரத நிதியைச் செயல்படுத்த தொலைத்தொடர்புத்துறை வரைவு விதிகளை முன்மொழிந்துள்ளது. தொலைத்தொடர்பு இயக்கிகளின் வருவாயில் 5% அனைத்து சேவைகள் வரியைப் பயன்படுத்தி தொலைதூரப் பகுதிகளில் மலிவு விலையில் தொலைத்தொடர்பு சேவைகளை வழங்குவதற்காக உருவாக்கப்பட்ட Universal Service Obligation Fund (USOF) திட்டத்துக்கு மாற்றாக டிஜிட்டல் பாரத நிதி இருக்கும். தொலைத்தொடர்புச் சட்டம், 2023இன்கீழ் நிறுவப்பட்ட டிஜிட்டல் பாரத நிதி, தனியார் நிறுவனங்கள் முதலீடு செய்யாத, பின்தங்கிய பகுதிகளில் வலையமைப்புகளை விரிவுபடுத்த எண்ணுகிறது.

**3. அண்மையில், கீழ்க்காணும் யாருக்கு பிரான்ஸின் மிகவுயரிய குடிமக்கள் விருதான, 'செவாலியே' (Knight of the Legion of Honour) வழங்கப்பட்டது?**



அ. கொப்பு சதாசிவ மூர்த்தி

**ஆ. ரோஷ்னி நாடார் மல்ஹோத்ரா ☑**

இ. புஷ்ப் குமார் ஜோஷி

ஈ. அலோக் ஓரி

★ HCLTechஇன் தலைவரான ரோஷ்னி நாடார் மல்ஹோத்ரா, வர்த்தகம் மற்றும் நிலைத்தன்மைக்காகவும் பிரான்ஸ் மற்றும் இந்தியா இடையே பொருளாதார உறவுகளை மேம்படுத்துவதில் குறிப்பிடத்தக்க பங்களிப்பு செய்ததற்காகவும் பிரான்ஸின் மிகவுயரிய குடிமக்கள் விருதான, 'செவாலியே' வழங்கப்பட்டது. இந்தியாவுக்கான பிரான்ஸ் தூதுவரால் இந்த விருது அவருக்கு வழங்கப்பட்டது. பன்னாட்டு வணிகம் மற்றும் செயல்திறமை மிக்க அவரது விதிவிலக்கான தலைமை மற்றும் செல்வாக்கை அங்கீகரித்து அவருக்கு இந்த விருது வழங்கப்பட்டுள்ளது.

**4. ஏரியன் 6 ஏவுகணையை உருவாக்கிய விண்வெளி நிறுவனம் எது?**



அ. ISRO ஆ. NASA

**இ. ESA ☑** ஈ. JAXA

★ ஐரோப்பாவின் ஏரியன் 6 ஏவுகணை நான்காண்டு தாமதத்திற்குப் பிறகு செயற்கைக்கோள்களை வெற்றிகரமாக விண்ணில் செலுத்தியது. ஐரோப்பிய விண்வெளி முகமை மற்றும் ஏரியன்ஸ்பேஸ் ஆகியவற்றால் உருவாக்கப்பட்ட இந்த, கனரக ஏவுகலம், திரவ மற்றும் திட உந்து இயந்திரங்கள் என இரண்டையும் பயன்படுத்தி வணிக மற்றும் அரசாங்க பணிகளுக்கு செலவுகுறைந்த மற்றும் நெகிழ்வான தீர்வை வழங்குகிறது. பாரிஸைத் தலைமையிடமாகக் கொண்டு 1975இல் நிறுவப்பட்ட ESA, உறுப்புநாடுகளிடையே விண்வெளி நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கிறது மற்றும் பன்னாட்டு விண்வெளி நிலையம் மற்றும் ரொசெட்டா பணிபோன்ற திட்டங்களில் ஒத்துழைக்கிறது.

### 5. 'இ–ஸ்வஸ்திய தாம்' இணையதளத்தின் முதன்மை நோக்கம் என்ன?

அ. யாத்ரீகர்களுக்கான தங்குமிடத்தை முன்பதிவு செய்தல்

**ஆ. நாற்பெருந்தல யாத்ரீகர்களின் சுகாதார அளவுருக்களை கண்காணித்தல் ☑**

இ. யாத்ரீகர்களுக்கு பயண வழிகாட்டிகளை வழங்குதல்

ஈ. யாத்திரை சேவைகளுக்கான கட்டணத்தை எளிதாக்குதல்

★ இ–ஸ்வஸ்திய தாம் தளத்துடன் இப்போது ஆயுஷ்மான் பாரத் டிஜிட்டல் இயக்கம் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது. இது கடந்த 2021 செப்டம்பரில் தொடங்கப்பட்ட மத்திய துறை திட்டமாகும். இது ஒருங்கிணைந்த டிஜிட்டல் சுகாதார உள்கட்டமைப்பை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. உத்தராகண்ட் மாநில அரசின் சுகாதார மற்றும் குடும்பநலத்துறை இ–ஸ்வஸ்திய தாம் என்ற தளத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இந்தத் தளத்தின்மூலம் சார் தாம் யாத்ரீகர்கள் 14 இலக்கம் கொண்ட ஆயுஷ்மான் சுகாதார எண்ணை உருவாக்கலாம். இந்த நடவடிக்கை, நாற் பெருந்தல (சார் தாம்) யாத்திரை என்று அழைக்கப்படும் யமுனோத்ரி (யமுனை தேவி), கங்கோத்ரி (கங்கை தேவி), கேதார்நாத் (சிவபெருமான்), பத்ரிநாத் (திருமால்) ஆகிய இடங்களுக்குச் செல்லும் புனிதப்பயணிகளின் சுமூகமான பயணத்தை உறுதிசெய்கிறது.

### 6. உலகின் மிகப்பெரிய இராமாயண திருக்கோவில் கட்டப்படும் மாநிலம் எது?



அ. தமிழ்நாடு

**ஆ. பீகார் ☑**

இ. கேரளா

ஈ. இமாச்சல பிரதேசம்

★ பீகார் மாநிலம் கிழக்குச் சம்பரானில் உலகின் மிகப்பெரிய இராமாயண திருக்கோவில் கட்டப்பட்டு வருகிறது. இது அயோத்தியில் உள்ள இராமர் திருக்கோவிலைவிட மும்மடங்கு பெரியதாகவும், கம்போடியாவில் உள்ள அங்கோர் வாட்டைவிட உயரமானதாகவும் இருக்கும். இக்கோவிலில் மாமல்லபுரத்திலிருந்து கருங்கல்லால் செய்யப்பட்ட 33 அடி உயர சிவலிங்கமும், இராமாயண காலத்தின் முக்கிய தெய்வங்களுக்கென அர்ப்பணிக்கப்பட்ட இருபத்திரண்டு சிறிய திருக்கோவில்களும் இடம்பெறும். இந்தியா மற்றும் கம்போடியாவில் உள்ள குறிப்பிடத்தக்க கோவில்களில் இருந்து பெறப்பட்ட கட்டிடக்கலை பாணியுடன், இக்கோவிலின் விமானம் 270 அடி உயரத்திற்கு அமைக்கப்படும்.

### 7. ஒவ்வோர் ஆண்டும், 'உலக மலாலா நாள்' அனுசரிக்கப்படுகிற தேதி எது?



**அ. ஜூலை.12 ☑**

ஆ. ஜூலை.13

இ. ஜூலை.14

ஈ. ஜூலை.15

- ★ மலாலா யூசுப்சாய் பெண்கள் மற்றும் குழந்தைகளின் உரிமைகளுக்காக வாதிட்டதைக் கொண்டாடும் விதமாக ஒவ்வோர் ஆண்டும் ஜூலை.12ஆம் தேதியன்று உலக மலாலா நாள் கொண்டாடப்படுகிறது. பாகிஸ்தானில் 1997 ஜூலை.12இல் பிறந்த மலாலா யூசுப்சாய், 2012இல் தலிபான் படுகொலை முயற்சியிலிருந்து உயிர் தப்பினார்.
- ★ உலகளாவிய அங்கீகாரத்தைப் பெற்ற அவர், தனது 16ஆவது பிறந்தநாளில் ஐநாவில் பேசினார். 2013இல் TIME இதழின் செல்வாக்குமிக்க நபர்களில் ஒருவராக பட்டியலிடப்பட்ட அவர், அமைதிக்கான நோபல் பரிசை கடந்த 2014 ஆம் ஆண்டில் வென்றார். அவர் பர்மிங்காமிலிருந்து தனது கல்வி மற்றும் செயல்பாடுகளைத் தொடர்கிறார்.

**8. அண்மையில், இத்தாலியில் நடந்த ஷாட்கன் ஜூனியர் உலகக்கோப்பையில் வெண்கலப்பதக்கம் வென்றவர் யார்?**

அ. மனு பாக்கர்

ஆ. அஞ்சலி பகவத்

**இ. சபீரா ஹரீஸ் ☑**

ஈ. நந்திதா தாஸ்



- ★ இத்தாலியில் நடைபெற்ற ISSF ஜூனியர் உலகக்கோப்பையில் பெண்கள் டிராப் போட்டியில் இந்தியாவின் சபீரா ஹரிஸ் 40 இலக்குகளில் 29 இலக்குகளை எறிந்து வெண்கலப்பதக்கம் வென்றார். அமெரிக்காவின் கேரி கேரிசன் 50 இலக்குகளில் 40 இலக்குகளை எறிந்து தங்கப்பதக்கமும், இத்தாலியின் சோபியா கோரி 39 இலக்குகளுடன் வெள்ளிப்பதக்கமும் வென்றனர். இந்திய துப்பாக்கி சுடுதல் வீராங்கனைகள் பவ்யா திரிபாதி மற்றும் இராஜ்குவார் இங்கிள் முறையே 26 மற்றும் 33ஆவது இடம்பிடித்தனர்.

**9. அண்மையில், நாட்டின் கரிமிகா எரிசக்தித் துறையை மேம்படுத்துவதற்காக இந்தியாவிற்கு $1.5 பில்லியன் டாலர் அளவுக்குக் கடன் வழங்க ஒப்புதல் அளித்துள்ள அமைப்பு எது?**

**அ. உலக வங்கி ☑**

ஆ. IMF

இ. ADB

ஈ. NATO

- ★ 2023ஆம் ஆண்டில் பெறப்பட்ட இதேபோன்ற ஒரு கடனைத் தொடர்ந்து, கரிமிகா எரிசக்தித் துறையை (low–carbon energy) மேம்படுத்துவதற்காக, இந்தியாவிற்கு $1.5 பில்லியன் டாலர் அளவுக்குக் கடன் வழங்க உலக வங்கி ஒப்புதல் அளித்தது. கரிமிகா எரிசக்தித் துறையில் ஹைட்ரஜன் (H) மற்றும் உயிரி எரிபொருள்கள் போன்ற எரிபொருட்கள் அடங்கும்; இவை புதைபடிவ எரிபொருட்களைவிடவும் குறைவான கரியை வெளியிடுகின்றன.
- ★ ஹைட்ரஜன் உற்பத்திக்கு புதுப்பிக்கத்தக்க ஆற்றலைப் பயன்படுத்தும் தேசிய பசுமை ஹைட்ரஜன் இயக்கம்போன்ற முன்னெடுப்புகளின் துணையோடு 2070ஆம் ஆண்டுக்குள் நிகர சுழிய கரிம உமிழ்வை அடைவதற்கு இந்தியா நோக்கம் கொண்டுள்ளது.

**10. அண்மையில் பன்னாட்டு கிரிக்கெட்டிலிருந்து ஓய்வுபெறுவதாக அறிவித்த ஜிம்மி ஆண்டர்சன் சார்ந்த நாடு எது?**

அ. ஆஸ்திரேலியா

ஆ. தென்னாப்பிரிக்கா

**இ. இங்கிலாந்து ☑**

ஈ. அயர்லாந்து




- ★ கிரிக்கெட் ஜாம்பவான்களில் ஒருவரான ஜேம்ஸ் ஆண்டர்சன் 2024 ஜூலை.12 அன்று லார்ட்ஸில் மேற்கிந்தியத் தீவு அணியை ஒரு இன்னிங்ஸ் மற்றும் 114 இரன்கள் வித்தியாசத்தில் இங்கிலாந்து அணி தோற்கடித்த பிறகு

பன்னாட்டு கிரிக்கெட்டிலிருந்து ஓய்வுபெற்றார். வலது கை வேகப்பந்து வீச்சாளரான ஜேம்ஸ் ஆண்டர்சன், 2002–03இல் அறிமுகமாகி, 188 டெஸ்ட் போட்டிகளில் 704 விக்கெட்டுகளை வீழ்த்தி வேகப்பந்து வீச்சாளர்களில் அதிக விக்கெட் வீழ்த்திய வீரராக ஓய்வுபெற்றார். 21 ஆண்டுகள் கிரிக்கெட் வாழ்வை உடைய அவர், சச்சின் டெண்டுல்கருக்குப் பிறகு அதிக டெஸ்ட் போட்டிகளில் விளையாடிய இரண்டாவது வீரர் ஆவார்.

**11. முன்பு, Indian Regional Navigation Satellite System (IRNSS) என அறியப்பட்ட NavICஐ உருவாக்கிய அமைப்பு எது?**

அ. ISRO ☑

ஆ. DRDO

இ. HAL

ஈ. BHEL




★ ISROஆல் உருவாக்கப்பட்ட இந்திய வழிசெலுத்தல் அமைப்பான NavIC–க்கான பெறுநர் சில்லை (receiver chip) உருவாக்கும் பணியை பெங்களூரு நிறுவனத்திற்கு DRDO வழங்கியுள்ளது. இந்திய பிராந்திய வழிசெலுத்தல் செயற்கைக்கோள் அமைப்பான 'NavIC', ஏழு செயற்கைக்கோள்களைக் கொண்டுள்ளது. இது இந்தியா முழுவதும் துல்லியமான புவி நில்லிட நிலை மற்றும் நேரத்தகவலை வழங்குகிறது. புவியிலிருந்து 1,500 கிமீ தொலைவில் இது உள்ளது. குடிமக்கள் மற்றும் பாதுகாப்பு பயன்பாட்டிற்கான சேவைகளை வழங்கும் இது, இந்தியாவில் 10 மீட்டருக்கும் அதிகமான துல்லியத்துடன் தகவல்களை வழங்குகிறது. NavICஇன் சமிக்ஞைகள் GPS, Glonass, Galileo மற்றும் BeiDou போன்ற பிற உலகளாவிய வழிசெலுத்தல் அமைப்புகளுடன் இணக்கமாக உள்ளன.

**12. அண்மையில், விவசாயத்தில் புதுமைகளை ஊக்குவிப்பதற்காக ₹750 கோடி மதிப்பில், 'Agri SURE' நிதியத்தை அறிவித்து உருவாக்கியுள்ள அமைப்பு எது?**

அ. NABARD ☑

ஆ. ICAR

இ. NITI ஆயோக்

ஈ. விவசாய அமைச்சகம்



★ விவசாயத்தில் புத்தொழில்கள் மற்றும் கிராமப்புற நிறுவனங்களை ஆதரிப்பதற்காக NABARD அண்மையில் Agri–SURE நிதியத்தை அறிவித்தது. NABARD, வேளாண் அமைச்சகம் மற்றும் பிற நிறுவனங்களின் பங்களிப்புடன் ₹750 கோடி நிதியில், தலா ₹25 கோடி முதலீடுகளுடன் 85 வேளாண் புத்தொழில்கள் இதன்மூலம் ஆதரிக்கப்படும். Agri–SURE ஆனது புதுமை, தொழில்நுட்பம், மதிப்புச்சங்கிலியை மேம்படுத்தல், கிராமப்புற இணைப்புகளை உருவாக்கல், வேலைவாய்ப்பை உருவாக்கல் மற்றும் விவசாயிகள் உற்பத்தியாளர் அமைப்புகளுக்கு ஆதரவளிப்பதில் கவனம் செலுத்துகிறது. NABVENTURES இதற்கான நிதியை நிர்வகிக்கும்.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. 'பாதம் பாதுகாப்போம்' திட்டம்.**

சர்க்கரை நோயால் ஏற்படும் பாத பாதிப்புகளை தொடக்க நிலையிலேயே கண்டறிந்து காலிழப்புகளை தடுப்பதற்கு ஒருங்கிணைந்த பாதம் பாதுகாப்போம் திட்டம் ₹26.62 கோடி செலவில் மாநிலம் முழுவதும் செயல்படுத்தப்படும் என நடப்பாண்டு மக்கள் நல்வாழ்வுத்துறையின் அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டிருந்தது. அந்த அறிவிப்புக்கு ஏற்ப 'மக்களைத் தேடி மருத்துவம்' திட்டத்தின்படி, 8,000 மருத்துவர்கள், 19,175 மருத்துவப் பணியாளர்களைக்கொண்டு மொத்தமாக 28,000 பேருக்கு பயிற்றுவிக்கும் அரங்கம் தொடங்கப்பட்டுள்ளது. அதைத்தொடர்ந்து, பாத பாதிப்புகளை கண்டறியும் பரிசோதனை மையங்கள் தமிழ்நாட்டிலுள்ள 2,286 ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் அமைக்கப்படவுள்ளன.

**2. இந்தியாவில் ஒரு தடுப்பூசிகூட செலுத்தாத நிலையில் 16 இலட்சம் குழந்தைகள்.**

இந்தியாவில் 2023இல் சுமார் 16 இலட்சம் குழந்தைகளுக்கு எந்தவொரு தடுப்பூசியும் செலுத்தப்படவில்லை என்பது தெரியவந்துள்ளது. இதன்மூலம், அதிக குழந்தைகளுக்கு எந்தவொரு தடுப்பூசியும் செலுத்தாத மோசமான நாடுகளின் பட்டியலில் நைஜீரியாவுக்கு அடுத்து இரண்டாமிடத்தில் இந்தியா உள்ளது. உலக சுகாதார அமைப்பு (WHO) மற்றும் UNICEF இணைந்து வெளியிட்ட தரவுகளின்மூலம் இத்தகவல்கள் தெரியவந்துள்ளன. 8 சார்க் (SAARC) கூட்டமைப்பு நாடுகளில் இந்தியா முதலிடத்தில் உள்ளது. நாட்டின் தடுப்பூசி அட்டவணையைப் பொறுத்து, 9–12 மாதங்களில் செலுத்தப்படும் 'எம்சிவி1' தடுப்பூசி செலுத்தப்பட்ட இந்திய குழந்தைகளின் விகிதம் 93%ஆகக் குறைந்துள்ளது.

---

**3. வாழும் கைவினைப் பொக்கிஷம் விருதுகள்: முதலமைச்சர் மு க ஸ்டாலின் வழங்கினார்.**

கைத்தறித்துறையில் சிறந்து விளங்குவோருக்கான 'வாழும் கைவினைப் பொக்கிஷம்' விருதை முதலமைச்சர் மு க ஸ்டாலின் வழங்கினார். தஞ்சாவூர் கே.பி.உமாபதி, நெல்லை சா.ராஜகோபால், திருவண்ணாமலை சி. முத்துசுவாமி ஆச்சாரி, தஞ்சை ப.சுலைகாள் பீவி, கன்னியாகுமரி செ.தங்கஜோதி ஆகியோருக்கு, 'வாழும் கைவினைப்பொக்கிஷம்' விருதுக்கான தலா ₹1,00,000 காசோலை, 8 கி தங்கம், தாமிரப்பத்திரம், சான்றிதழ் வழங்கப்பட்டது.

இதேபோன்று, தலா ₹50,000 பரிசுத்தொகை, 4 கி தங்கம், தாமிரப்பத்திரம், தகுதிச்சான்றை உள்ளடக்கிய பூம்புகார் மாநில விருதுகள், தஞ்சாவூர் சி.ரவி, ச.நாகலட்சுமி, ம.முருகேசன், இரா.லோகநாதன், புதுக்கோட்டை மா.இராஜப்பா, கன்னியாகுமரி ந.பூவம்மாள், செ.லில்லிமேரி, செங்கல்பட்டு ப.வரதன், மு.ராஜரத்தினம், கள்ளக்குறிச்சி ரா.சக்திவேல் ஆகியோருக்கு வழங்கப்பட்டன.

---

**4. உச்சநீதிமன்ற நீதிபதிகளாக ஆர்.மகாதேவன், கோடீஸ்வர் சிங் நியமனம்.**

சென்னை உயர்நீதிமன்ற பொறுப்பு தலைமை நீதிபதி ஆர்.மகாதேவன், ஜம்மு–காஷ்மீர் & லடாக் உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி என்.கோடீஸ்வர் சிங் ஆகியோர் இந்திய உச்சநீதிமன்ற நீதிபதிகளாக நியமிக்கப்பட்டனர். மணிப்பூரைச் சேர்ந்தவரான என்.கோடீஸ்வர் சிங், அந்த மாநிலத்தில் இருந்து உச்சநீதிமன்றத்துக்கு நியமிக்கப்பட்ட முதல் நீதிபதி என்ற சிறப்பைப் பெற்றுள்ளார். உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திரசூட் தலைமையிலான கொலீஜியம் இவ்விருவரின் பெயரையும் பரிந்துரைத்தது. இந்நிலையில், இருவரையும் உச்சநீதிமன்ற நீதிபதிகளாக குடியரசுத்தலைவர் நியமித்துள்ளதாக, மத்திய சட்டத்துறை அமைச்சர் அர்ஜுன் ராம் மேக்வால் தெரிவித்தார்.

**முழு பலத்தை எட்டும் உச்சநீதிமன்றம்:**

இந்திய உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி உள்பட அனுமதிக்கப்பட்ட மொத்த நீதிபதிகளின் எண்ணிக்கை 34 ஆகும். தற்போது 32 நீதிபதிகள் உள்ளனர். மேற்கண்ட இருவரும் பதவியேற்கும்போது, இந்திய உச்சநீதிமன்றம் தனது முழு பலத்தையும் எட்டும்.

---

# IMPORTANT LINKS

## TNPSC Current Affairs

https://www.winmeen.com/tnpsc-tamil-current-affairs/

## Winmeen: Install the Winmeen App
## Daily Free & Premium Tnpsc Study Materials & Online Test

https://play.google.com/store/apps/details?id=co.robin.jbzwb

## Winmeen: Winmeen Tnpsc Test Series - Samacheer lesson Wise Test + Previous Year Model Test for Tnpsc Group 1,2, 4 & VAO

https://wp.me/p7JanY-ag8

**1. ஷிஜெல்லா தொற்று என்பது எந்தக் காரணியால் ஏற்படும் ஒரு குடல் தொற்றாகும்?**

அ. வைரஸ்

ஆ. பூஞ்சை

**இ. பாக்டீரியா ☑**

ஈ. புரோட்டோசோவா



★ இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகம் (ICMR) ஷிஜெல்லா பாக்டீரியாவால் ஏற்படும் குடல் நோயான ஷிஜெல்லா தொற்றுக்கு ஒரு தடுப்பூசியை உருவாக்குதற்காக ஓர் இந்திய உற்பத்தியாளருடன் கூட்டு சேர்ந்துள்ளது. ஷிஜெல்லா தொற்றானது வயிற்றுப்போக்கு, வயிற்று வலி, காய்ச்சல் மற்றும் குமட்டல்போன்ற அறிகுறிகளை ஏற்படுத்துகிறது. இது முதன்மையாக ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளைப் பாதிக்கிறது. தற்போது தடுப்பூசி எதுவும் இல்லை. ஷிஜெல்லா ஆண்டுதோறும் சுமார் 125 மில்லியன் வயிற்றுப்போக்கு பாதிப்புகள் மற்றும் 160,000 இறப்புகளை ஏற்படுத்துகிறது.

**2. SDG (வளங்குன்றா வளர்ச்சி இலக்குகள்) இந்தியா குறியீடு 2023-24இன் நான்காவது பதிப்பை வெளியிட்ட நிறுவனம் எது?**

அ. NABARD

**ஆ. NITI ஆயோக் ☑**

இ. ஜல் சக்தி அமைச்சகம்

ஈ. SEBI

★ அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களை 13 குறிகாட்டிகளில் அதன் முன்னேற்றத்தை மதிப்பிடும் SDG இந்தியா குறியீடு 2023-24இன் நான்காவது பதிப்பை NITI ஆயோக் வெளியிட்டுள்ளது. நாட்டின் ஒட்டுமொத்த வளங்குன்றா வளர்ச்சி குறியீட்டு மதிப்பீடு 2023-24ஆம் ஆண்டில் 71ஆக உள்ளது; இது 2020-21ஆம் ஆண்டில் 66ஆகவும், 2018ஆம் ஆண்டில் 57ஆகவும் இருந்தது. இலக்குகள் 1, 8, மற்றும் 13 ஆகியவற்றில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை நாடு கண்டுள்ளது. உத்தரகண்ட் மற்றும் கேரளா ஆகியவை பட்டியலில் 79 மதிப்பெண்களுடன் முதலிடத்தில் உள்ளன. சண்டிகர் யூனியன் பிரதேசங்களில் முன்னணியில் உள்ளது.

**3. பாறுகளின் (Vulture) பாதுகாப்பு காரணமாக சமீபத்திய செய்திகளில் இடம்பெற்ற, சத்தியமங்கலம் புலிகள் காப்பகம் அமைந்துள்ள மாவட்டம் எது?**

**அ. ஈரோடு ☑**

ஆ. கோயம்புத்தூர்

இ. தென்காசி

ஈ. கன்னியாகுமரி



★ தமிழ்நாட்டின் ஈரோடு மாவட்டத்தில் அமைந்துள்ள சத்தியமங்கலம் புலிகள் காப்பகத்தின் முக்கிய வாழ்விடங்களில் பாறுகளைப் பாதுகாப்பது குறித்த விழிப்புணர்வு இல்லாததை ஓர் அண்மைய ஆய்வு வெளிப்படுத்தியது. 2013இல் நிறுவப்பட்ட சத்தியமங்கலம் புலிகள் காப்பகம் முதுமலை & பந்திப்பூர் புலிகள் காப்பகங்களுடன் இணைக்கப்பட்டு பல்வேறு வனப்பரப்புகளை தன்னகத்தே கொண்டுள்ளது. இது யானைகள், புலிகள் மற்றும் தேன்கரடிகள் உள்ளிட்ட குறிப்பிடத்தக்க வனவிலங்குகளின் தாயகமாகும். சந்தனமரக்கடத்தல் மற்றும் வேட்டையாடுதல் ஆகியவை இந்தக் காப்புக்காட்டிற்கான முக்கிய அச்சுறுத்தலாக உள்ளது.

**4. அண்மையில், ஒவ்வோராண்டும் எந்நாளை, 'அரசமைப்பு படுகொலை நாள்' என்று அனுசரிக்க நடுவணரசாங்கம் முடிவு செய்துள்ளது?**

**அ. ஜூன்.25 ☑** ஆ. ஜூன்.26 இ. ஜூலை.25 ஈ. ஜூலை.26

★ 1975ஆம் ஆண்டு முன்னாள் பிரதமர் இந்திராகாந்தியால் விதிக்கப்பட்ட அவசரநிலையை நினைவுகூரும் வகையில் ஜூன்.25ஆம் தேதியை, 'சம்விதான் ஹாத்ய திவாஸ் – அரசமைப்பு படுகொலை நாள்' என்று நடுவண் அரசாங்கம் கடைப்பிடிக்கவுள்ளது. அந்தக் காலகட்டத்தில் அடிப்படை உரிமைகள் பரவலாக இடைநிறுத்தப்பட்டது, எதிர்க்கட்சித் தலைவர்கள் தடுப்புக்காவல் மற்றும் பத்திரிகை தணிக்கை ஆகியவற்றைக் கண்டனர். 38ஆவது திருத்தச்சட்டம் அவசரகால அறிவிப்புகளை நீதித்துறை மறுஆய்வுக்குத் தடையாக மாற்றியது; பின்னர் 1978இல் 44ஆவது திருத்தம் மூலம் இந்த ஏற்பாடு இரத்துசெய்யப்பட்டது. இந்திய வரலாற்றில் இந்தக் கொடூரமான நேரத்தில் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் இந்த நாள் மரியாதை அளிக்கிறது.

**5. அண்மையில், எந்த நாடு கொலம்பியாவை தோற்கடித்து தொடர்ந்து இரண்டாவது முறையாக COPA அமெரிக்கா சாம்பியன்ஷிப்பை வென்றது?**

**அ. அர்ஜென்டினா ☑**

ஆ. பெரு

இ. வெனிசுலா

ஈ. சிலி




★ மியாமியில் உள்ள ஹார்ட் ராக் மைதானத்தில் நடைபெற்ற இறுதிப்போட்டியில் கொலம்பியாவை 1–0 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி அர்ஜென்டினா தனது 16ஆவது COPA அமெரிக்கா பட்டத்தை வென்றது. இரண்டாவது முறையாக அமெரிக்கா நடத்திய இப்போட்டியில் 16 அணிகள் பங்கேற்றன. கூடுதல் நேரத்தில் லௌடாரோ மார்டினெஸ் வெற்றி கோலை அடித்தார். இந்த வெற்றி அர்ஜென்டினாவின் தொடர்ச்சியான கோபா அமெரிக்கா வெற்றியைக் குறித்தது; 2022 FIFA உலகக்கோப்பை வெற்றியைத் தொடர்ந்து அர்ஜென்டினா பெறும் இரண்டாவது வெற்றி இதுவாகும்.

**6. 2024 – விம்பிள்டன் டென்னிஸ் சாம்பியன்ஷிப்பில் ஆடவர் ஒற்றையர் பட்டத்தை வென்றவர் யார்?**

அ. ரோஜர் பெடரர்

ஆ. நோவக் ஜோகோவிச்

**இ. கார்லோஸ் அல்கராஸ் ☑**

ஈ. மேக்ஸ் பர்செல்



★ 2024 – விம்பிள்டன் டென்னிஸ் சாம்பியன்ஷிப்பில் ஸ்பெயினின் கார்லோஸ் அல்கராஸ் மற்றும் செக் குடியரசின் பார்போரா கிரெஜ்சிகோவா ஆகியோர் முறையே ஆடவர் மற்றும் மகளிர் ஒற்றையர் பட்டங்களை வென்றனர். நோவக் ஜோகோவிச்சை தோற்கடித்து கார்லோஸ் அல்கராஸ் தனது இரண்டாவது விம்பிள்டன் பட்டத்தையும், பார்போரா கிரெஜ்சிகோவா தனது முதல் விம்பிள்டன் பட்டத்தையும் வென்றனர். 2024 ஜூலை.01–14 வரை நடைபெற்ற இந்தப் போட்டியானது, இந்த ஆண்டின் மூன்றாவது கிராண்ட்ஸ்லாம் போட்டியாகும். மேலும், இந்தப் போட்டி இயற்கையாக வளரும் புல் தரையில் விளையாடப்படும் ஒரே டென்னிஸ் போட்டியாகும்.

**7. அண்மையில், கட்கா பிரசாத் சர்மா ஒலி என்பவர் கீழ்க்காணும் எந்த நாட்டின் பிரதமரானார்?**

**அ. நேபாளம் ☑**

ஆ. பூட்டான்

இ. மியான்மர்

ஈ. வங்காளதேசம்



★ கட்கா பிரசாத் ஷர்மா ஒலியை (K P ஷர்மா ஒலி) நான்காவது முறையாக நேபாளத்தின் பிரதமராக 2024 ஜூலை.15 அன்று நேபாளத்தின் குடியரசுத்தலைவர் இராம் சந்திர பவுடால் பதவிப்பிரமாணம் செய்துவைத்தார். புஷ்ப கமல் தஹால் 'பிரசந்தா'வின் அரசாங்கம் வீழ்ச்சியடைந்ததை அடுத்து, கூட்டணி ஆட்சியை KP சர்மா ஒலி வழிநடத்துகிறார்.

★ நேபாள அரசியலமைப்பின்படி, புதிய அரசாங்கம் முப்பது நாட்களுக்குள் கீழ்சபையில் நம்பிக்கை வாக்கெடுப்பு கோர வேண்டும். KP சர்மா ஒலியின் முந்தைய பதவிக்காலங்கள் 2015–2016, 2018–2021 மற்றும் 2021இல் இருந்தன.

**8. 2024 நவ.20–24 வரை கீழ்க்காணும் எந்த மாநிலத்தில் முதல் உலக ஒலி–காட்சி மற்றும் பொழுதுபோக்கு உச்சிமாநாட்டை (WAVES) இந்தியா நடத்தவுள்ளது?**

அ. கேரளா

ஆ. மகாராஷ்டிரா

இ. குஜராத்

**ஈ. கோவா ☑**

WAVES WORLD AUDIO VISUAL & ENTERTAINMENT SUMMIT Come, sail with us

20th - 24th NOVEMBER 2024

★ கோவாவில் 2024.நவ.20–24ஆம் தேதி வரை உலக ஒலி–காட்சி, பொழுதுபோக்கு உச்சிமாநாட்டை (World Audio Visual and Entertainment Summit – WAVES) இந்தியா நடத்தவுள்ளது என்று நடுவண் தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார். புது தில்லியில் நடைபெற்ற இதுதொடர்பான அறிமுக நிகழ்ச்சியில் அமைச்சர் இந்த அறிவிப்பை வெளியிட்டார். கோவா முதலமைச்சர் பிரமோத் சாவந்த், மத்திய தகவல் ஒலிபரப்புத் துறை இணையமைச்சர் Dr L முருகன் ஆகியோரும் இந்நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

★ ஊடகம், பொழுதுபோக்குத் துறைகளில் வேலைவாய்ப்பை உருவாக்குவதிலும், திறமைசாலிகளை அதிகரிப்பதிலும் அரசு கவனம் செலுத்தி வருவதாக அவர் கூறினார். இந்த முயற்சிகள், உயர்தர உள்ளடக்கத்தை ஊக்குவிக்கும் எனவும் நாட்டில் அறிவுசார் சொத்துரிமைகளை உருவாக்கிப் பாதுகாக்கும் ஓர் அமைப்பை உருவாக்குவதை உறுதி செய்யும் என்றும் அவர் தெரிவித்தார்.

**9. எந்த மாநிலத்தின் இயற்கை வேளாண்மை மாதிரியானது மனிதநேயத்திற்கான 2024ஆம் ஆண்டுக்கான குல்பென்கியன் பரிசை வென்றுள்ளது?**

அ. தமிழ்நாடு

ஆ. சிக்கிம்

**இ. ஆந்திர பிரதேசம் ☑**

ஈ. கேரளா



★ 2016இல் ரைத்து சதிகரா சம்ஸ்தா (RySS)ஆல் தொடங்கப்பட்ட 'ஆந்திர பிரதேச சமூகம் நிர்வகிக்கும் இயற்கை வேளாண்மை' முன்னெடுப்பானது, மனிதநேயத்திற்கான 2024ஆம் ஆண்டுக்கான குல்பென்கியன் பரிசை வென்றுள்ளது. போர்த்துகலைச் சார்ந்த காலௌஸ்டி குல்பென்கியன் அறக்கட்டளையால் வழங்கப்படும் இந்தப் பரிசு, உலகளாவிய உணவுப்பாதுகாப்பு,தட்பவெப்பநிலை நெகிழ்திறன் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஆகியவற்றிற்கான பங்களிப்புகளை கௌரவிக்கிறது. ஆந்திர பிரதேச சமூகம் நிர்வகிக்கும் இயற்கை வேளாண்மை முன்னெடுப்பானது €1 மில்லியன் மதிப்பிலான இப்பரிசை மண் விஞ்ஞானி ரத்தன் லால் மற்றும் எகிப்தைச் சார்ந்த SEKEMஉடன் பகிர்ந்துகொள்கிறது. 181 பரிந்துரைகளிலிருந்து வெற்றியாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இதன் நடுவர் குழுவிற்கு முன்னாள் ஜெர்மன் சான்சலர் ஏஞ்சலா மெர்கல் தலைமைதாங்கினார்.

**10. அண்மையில், மத்திய உள்துறை அமைச்சரால் கீழ்க்காணும் எந்த மாநிலத்தில், 'பிரதமர் சிறப்புக் கல்லூரிகள்' தொடக்கி வைக்கப்பட்டன?**

**அ. மத்திய பிரதேசம் ☑**

ஆ. அருணாச்சல பிரதேசம்

இ. ஆந்திர பிரதேசம்

ஈ. உத்தர பிரதேசம்



★ மத்திய பிரதேசத்தின் 55 மாவட்டங்களில் பிரதமரின் சிறப்புக்கல்லூரிகளை மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா திறந்து வைத்தார். பிரதமர் நரேந்திர மோதியின் புதிய கல்விக்கொள்கையை முதல் மாநிலமாக அமல்படுத்தியதற்கு அவர் வாழ்த்து தெரிவித்தார். கடந்த 2020இல் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய கல்விக்கொள்கையை வலியுறுத்திய அவர், 2047ஆம் ஆண்டுக்குள் இந்தியா உலகளவில் சிறந்து விளங்கவேண்டும் என்ற பிரதமர் நரேந்திர மோதியின் பார்வையையும் எடுத்துரைத்தார். புதிய கல்விக்கொள்கையை அமல்படுத்திய முதல் மாநிலம் மத்திய பிரதேசம் என்றும், பொறியியல் & மருத்துவப்பாடத்திட்டங்களை உள்ளூர் மொழியில் மொழிபெயர்ப்பதற்கான முன்னெடுப்பை மேற்கொண்டு பல மாணவர்களுக்கு உதவிய மாநிலம் என்றும் அமித் ஷா பாராட்டினார்.

**11. மகாபோதி திருக்கோவில் வளாகம் அமைந்துள்ள மாநிலம் எது?**



**அ. பீகார் ☑**

ஆ. ஒடிசா

இ. மேற்கு வங்காளம்

ஈ. உத்தர பிரதேசம்

★ செயற்கைக்கோள் படங்கள் மற்றும் நில ஆய்வுகளைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட ஒரு புவியியல் பகுப்பாய்வு, பீகார் மாநிலம் புத்தகயாவில் அமைந்துள்ள மகாபோதி திருக்கோவில் வளாகத்தில் புதையுண்ட, "பெரும் கட்டிடக் கலை செல்வம்" உள்ளதை வெளிப்படுத்தியுள்ளது. 2002ஆம் ஆண்டு முதல் UNESCOஇன் உலக பாரம்பரிய தளமாக விளங்கி வரும் மகாபோதி திருக்கோவில், புத்தரின் ஞானம்பெற்ற இடத்தைக்குறிக்கிறது. பொ ஆ மு 3ஆம் நூற்றாண்டில் பேரரசர் அசோகாவால் கட்டப்பட்டதாகும் இத்திருக்கோவில். அதன் தற்போதைய எஞ்சியுள்ள அமைப்பு 5 முதல் 6ஆம் நூற்றாண்டுகளுக்கு முந்தையதாகும். ஆரம்பகால செங்கல் கட்டிடக்கலை மற்றும் சிற்பக்கலைக்கு இது ஒரு முக்கிய எடுத்துக்காட்டு ஆகும்.

**12. கீழ்க்காணும் எந்த மாநிலத்தில் அசுரர் சமூக மக்கள் முதன்மையாக வசித்து வருகின்றனர்?**



அ. தமிழ்நாடு

**ஆ. ஜார்கண்ட் ☑**

இ. ஒடிசா

ஈ. கேரளா

★ குறிப்பாக பாதிக்கப்படக்கூடிய பழங்குடியினர் குழுவான அசுரர் சமூகத்தினர் ஜார்கண்ட் மாநிலத்தின் கும்லாவில் உள்ள நெதர்ஹாட் பீடபூமி பகுதியில் பெரும்பான்மையாக வசித்து வருகின்றனர். வனவுரிமைச் சட்டத்தின்கீழ் அம் மக்களுக்கு விரைவில் பலன்கள் கிடைக்கவுள்ளன. 2011 – மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி சுமார் 23,000 மக்கள்தொகைகொண்ட அசுரர்கள் பாரம்பரியமாக இரும்புருக்கிகளாவர். இப்போது முதன்மையாக வேளாண்மை செய்து வருகின்றனர். அவர்கள் முண்டா குடும்பத்தின் ஒருபகுதியான அசூர் மொழியைப் பேசுகிறார்கள்.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. 'கலைஞர்' மு. கருணாநிதியின் நூற்றாண்டு நினைவு நாணயம்: விலை ₹2,500.**

திராவிட முன்னேற்றக் கழகத்தின் முன்னாள் தலைவரும் மறைந்த முன்னாள் தமிழ்நாடு முதலமைச்சருமான மு. கருணாநிதியின் நூற்றாண்டு பிறந்தநாள் ₹100 நினைவு நாணயத்திற்கு நடுவண் அரசு அனுமதியளித்துள்ளது. இதற்கான அரசிதழ் வெளியிடப்பட்டு இந்நாணயத்தை அச்சிடுவதற்கு நடுவண் அரசின் நிதித்துறை அமைச்சகம் ஆணையிட்டுள்ளது. வெள்ளியும் தாமிரமும் கலந்த இந்த நாணயத்தின் விலை ₹2,500 ஆகும்.

தமிழ்நாட்டில் ஐந்து முறை முதலமைச்சராகவும் 13 முறை சட்டப்பேரவை மற்றும் மேலவை உறுப்பினராகவும் இருந்தவர் 'கலைஞர்' மு. கருணாநிதி. இந்த நாணயத்தின் ஒருபக்கம் அரிமாவின் தலையுடன்கூடிய அசோகத் தூண், "சத்தியமேவ ஜெயதே", "பாரத்" ஆகிய சொற்கள் தேவநாகரி எழுத்திலும் "இந்தியா" என ஆங்கிலத்திலும் பொறிக்கப்பட்டிருக்கும். மறுபக்கம் நாணயத்தின் மையத்தில் 'கலைஞர்' மு. கருணாநிதி உருவப்படமும், கீழே அவர் பயன்படுத்திய. "தமிழ் வெல்லும்" என்ற வாசகமும் இடம்பெறுகிறது. "கலைஞர் மு. கருணாநிதி பிறந்த நூற்றாண்டு" (1924–2024) என தேவநாகரி எழுத்திலும், ஆங்கிலத்திலும் இடம்பெறும்.

---

**2. பாரீஸ் ஒலிம்பிக் நீச்சல் போட்டிகளுக்கு சென்னாறு தயார்.**

பிரான்ஸின் வடக்குப்பகுதியில் 777 கிமீ நீளம் ஓடி கடலில் கடக்கும் சென்னாறு, பாரீஸ் நகரின் ஊடாகவும் கடந்து செல்கிறது. பிரபலமான இந்த ஆற்றில், பாரீஸ் ஒலிம்பிக் போட்டியின்போது தொடக்க நிகழ்ச்சி அணிவகுப்பையும், நீச்சல் பந்தயங்களையும் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

---

# IMPORTANT LINKS

TNPSC Current Affairs

https://www.winmeen.com/tnpsc-tamil-current-affairs/

Winmeen: Install the Winmeen App
Daily Free & Premium TNPSC Study Materials & Online Test

https://play.google.com/store/apps/details?id=co.robin.jbzwb

Winmeen: Winmeen TNPSC Test Series - Samacheer lesson Wise Test + Previous Year Model Test for TNPSC Group 1,2, 4 & VAO

https://wp.me/p7JanY-ag8

---

**1. NASAஇன் CHAPEA திட்டத்தின் முதன்மை நோக்கம் என்ன?**

அ. செவ்வாய்க்கான புதிய ஊர்தி வடிவமைப்புகளைச் சோதிப்பது

**ஆ. செவ்வாய் கோளின் மேற்பரப்பில் ஆண்டு முழுவதும் தங்குவதை உருவகப்படுத்துவது ☑**

இ. புதிய விண்வெளி உடைகளை உருவாக்குவது

ஈ. செவ்வாய் கோளில் சூரியவொளித் தகடுகளின் செயல்திறனைச் சோதிப்பது

★ NASAஇன் CHAPEA திட்டமானது உணவு முறை மற்றும் மனித நலத்தை மதிப்பிடுவதற்காக செவ்வாய் கோளின் மேற்பரப்பில் ஆண்டு முழுவதும் தங்குவதை உருவகப்படுத்துகிறது. ஜான்சன் விண்வெளி மையத்தில் 1700 ச.அடி பரப்பில் அமைக்கப்பட்டிருந்த செவ்வாய் டூன் ஆல்பா வாழ்விடத்தில் ஓராண்டு தங்கியபிறகு, ஒரு குழுவினர் வெளி வந்தனர். CHAPEA பணிசார்ந்த 4 குழு உறுப்பினர்கள் முப்பரிமாண முறையில்–அச்சிடப்பட்ட கட்டமைப்பில் வசித்து வந்தனர். இதன்மூலம் சேகரிக்கப்பட்ட தரவுகள் எதிர்கால விண்வெளிப் பயணங்களுக்கு உதவும்.

**2. கீழ்க்காணும் எந்த மாநிலத்தில் கர்ச்சி பூஜை கொண்டாடப்படுகிறது?**



அ. அஸ்ஸாம்

ஆ. நாகாலாந்து

**இ. திரிபுரா ☑**

ஈ. சிக்கிம்

★ ஜூலை–ஆகஸ்ட் மாதங்களில் வரும் அமாவாசையின் எட்டாவது நாளில் கொண்டாடப்படும் திரிபுராவின் முக்கிய திருவிழாவான கர்ச்சி பூஜைக்கு இந்தியப்பிரதமர் அண்மையில் வாழ்த்துகளைத் தெரிவித்தார். "பாவங்களைப் போக்குதல்" என்று பொருள்படும் இந்தத்திருவிழா, அரச பூசாரி சாண்டாய் பதினான்கு தெய்வங்களை வழிபடுவதை உள்ளடக்கியுள்ளது. பழைய அகர்தலாவில் உள்ள சதுர்தசா தேவதா திருக்கோவிலில் நடைபெறும் ஏழு நாள் திரு விழாவில் சைத்ரா ஆற்றில் தெய்வங்களின் தலைகளை குளிப்பாட்டுவதும், திருக்கோவிலுக்குத் திரும்புவதும் இத் திருவிழாவில் அடங்கும்.

**3. ஒவ்வோர் ஆண்டும், 'உலக இளையோர் திறன்கள் நாளாக' அனுசரிக்கப்படுகிற தேதி எது?**

**அ. ஜூலை.15 ☑**

ஆ. ஜூலை.16

இ. ஆகஸ்ட்.15

ஈ. ஆகஸ்ட்.16

★ ஜூலை.15 அன்று அனுசரிக்கப்படும் உலக இளையோர் திறன்கள் நாள் என்பது 2014இல் ஐநாஆல் நிறுவப்பட்ட ஒரு நாளாகும். இது இளையோரை வேலைவாய்ப்பு, நல்ல வேலை மற்றும் தொழில்முனைவு ஆகியவற்றிற்கான திறன்களுடன் தயார்படுத்துவதன் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறது. "Youth Skills for Peace and Development" என்பது நடப்பு 2024ஆம் ஆண்டில் வரும் இந்நாளுக்கானக் கருப்பொருளாகும். இது அமைதியை ஊக்குவிப்பதிலும், வளங்குன்றா வளர்ச்சிக்கு உந்துதலிலும் இளையோரின் முக்கிய பங்கை எடுத்துக்காட்டுகிறது. இளையோரின் திறன்மேம்பாடு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த இந்நாள் ஓர் உலகளாவிய தளமாகச் செயல்படுகிறது.

**4. கீழ்க்காணும் எந்த அமைச்சகத்தின்கீழ், துடிப்பான கிராமங்கள் திட்டம் செயல்பட்டு வருகிறது?**

**அ. உள்துறை அமைச்சகம் ☑**

ஆ. வெளியுறவு அமைச்சகம்

இ. பாதுகாப்பு அமைச்சகம்

ஈ. ஊரக வளர்ச்சி அமைச்சகம்

★ அருணாச்சல பிரதேசம், இமாச்சல பிரதேசம், சிக்கிம், உத்தரகண்ட் மற்றும் லடாக் ஆகிய மாநிலங்களில் வடக்கு எல்லையில் உள்ள கிராமங்களின் வளர்ச்சிக்காக 2023இல் அங்கீகரிக்கப்பட்ட துடிப்புமிக்க கிராமங்கள் திட்டத்தின் செயலாக்கத்தை மத்திய உள்துறை அமைச்சர் மதிப்பாய்வு செய்தார். உள்துறை அமைச்சகத்தின் தலைமையிலான இந்த நடுவண் நிதியுதவி திட்டம், திறன் மேம்பாடு, வாழ்வாதார உருவாக்கம், சுற்றுலா மற்றும் நிதி உள்ளடக்கம் ஆகியவற்றில் கவனம் செலுத்துகிறது. எல்லைப்புற நிர்வாகத்தில் சமூகப்பங்கேற்பை அதிகரிப்பதன்மூலம் எல்லைப் பாதுகாப்பை மேம்படுத்துவதை இந்தத்திட்டம் தனது நோக்கமாகக்கொண்டுள்ளது.

**5. மஞ்சீரா வனவிலங்கு சரணாலயம் அமைந்துள்ள மாநிலம் எது?**

அ. இராஜஸ்தான்

**ஆ. தெலுங்கானா ☑**

இ. அஸ்ஸாம்

ஈ. இமாச்சல பிரதேசம்



★ தெலுங்கானாவில் உள்ள மஞ்சீரா வனவிலங்கு சரணாலயம், மாநிலத்தின் முதல் ராம்சர் தளமாக மாறும் வகையில் ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. மேடக் மாவட்டத்தில் அமைந்துள்ள இது, முதலில் முதலைகள் சரணாலயமாக இருந்து வந்தது; தற்போது பாதிக்கப்படக்கூடிய அகன்மூக்கு முதலை உள்ளிட்ட 70க்கும் மேற்பட்ட பறவையினங்கள் அங்கு உள்ளன. மஞ்சீரா ஆற்றை அடுத்து மனிதனால் உருவாக்கப்பட்ட நீர்த்தேக்கம் ஐதராபாத் & செகந்திராபாத் நகரங்களுக்குப் பாசனம் மற்றும் குடிநீர் வசதியை வழங்குகிறது.

**6. அண்மையில், ஐநா காலநிலை நிதிய வாரியத்தை நடத்த தேர்வு செய்யப்பட்டுள்ள நாடு எது?**

அ. மலேசியா

**ஆ. பிலிப்பைன்ஸ் ☑**

இ. இந்தோனேசியா

ஈ. இந்தியா

★ தட்பவெப்பநிலை மாற்றத்தால் பாதிக்கப்பட்ட சமூகங்களுக்கு உதவுவதில் குறிப்பிடத்தக்க படியான, "இழப்பு மற்றும் சேதம்" நிதியத்தின் வாரியத்தை நடத்துவதற்கு பிலிப்பைன்ஸ் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. புவி வெப்பமயமாதலால் பாதிக்கப்பட்ட நாடுகளுக்கு நிதியுதவி செய்வதில் கவனஞ்செலுத்தும் ஐநா பேச்சுவார்த்தையின்போது இந்த முடிவு எடுக்கப்பட்டது. உலக வங்கி தற்காலிகமாக நான்காண்டுகளுக்கு நிதியை மேற்பார்வையிடும். உலகளாவிய தட்ப வெப்பநிலை கொள்கை விவாதங்களை மேம்படுத்துவதை பிலிப்பைன்ஸ் நோக்கமாகக் கொண்டுள்ளது.

**7. அண்மையில், கேப்டன் அபிலாஷ் ராவத் மற்றும் அவரது எண்ணெய்க் கப்பல் மார்லின் லுவாண்டா குழுவினரின், 'செங்கடல் பணியில் விதிவிலக்கான துணிச்சலுக்காக' விருது வழங்கிய அமைப்பு எது?**

அ. உலக வானிலை அமைப்பு

**ஆ. பன்னாட்டு கடல்சார் அமைப்பு ☑**

இ. உலக வங்கி

ஈ. UNEP

★ பன்னாட்டு கடல்சார் அமைப்பானது (IMO) நடப்பு 2024ஆம் ஆண்டிற்கான, மாலுமிகளுக்கான விருதுகளில் இந்திய மாலுமிகளின் துணிச்சலையும் சிறந்த செயல்பாடுகளையும் அங்கீகரித்து விருதுகளை அறிவித்துள்ளது.

★ இந்தியாவைச் சேர்ந்த கேப்டன் அவிலாஷ் ராவத்தையும் எண்ணெய்க்கப்பல் மார்லின் லுவாண்டாவின் இந்தியக் குழுவினரையும் அங்கீகரித்து, அவர்களின் அசாதாரண உறுதிப்பாட்டிற்காக IMO கவுன்சில் விருது வழங்குகிறது.

2024 ஜன.26 அன்று சரக்குகளை ஏற்றிச்சென்ற மார்லின் லுவாண்டா, சூயஸிலிருந்து இஞ்சியோனுக்குச் செல்லும் வழியில் கப்பல் எதிர்ப்பு ஏவுகணையால் தாக்கப்பட்டது. இதனால் அது தீப்பிடித்தது, கடுமையான தீ ஆபத்துக்கு உள்ளானது. கேப்டன் அவிலாஷ் ராவத் தீயணைப்பு முயற்சிகளில் விரைவாகவும் துணிச்சலாகவும் ஈடுபட்டு பணியாளர்களின் பாதுகாப்பை உறுதிசெய்தார். அதற்காக அவரும் அவரது குழுவினரும் அங்கீகரிக்கப்படுகின்றனர். IMOஇன் இந்த விருது இந்திய மாலுமிகளின் அசாதாரண துணிச்சலையும் சிறந்த தொழிற்முறை செயல்பாட்டையும் எடுத்தியம்புகிறது.

**8. அண்மையில், எந்த நகரத்தில் இந்தியப்பிரதமரால் இந்திய செய்தித்தாள் சங்க கட்டிடம் திறந்து வைக்கப்பட்டது?**

**அ. மும்பை ☑**

ஆ. போபால்

இ. சண்டிகர்

ஈ. பாட்னா

★ அண்மையில் இந்தியப்பிரதமர் நரேந்திர மோதியால் மும்பையில் INS கட்டிடம் திறந்து வைக்கப்பட்டது. இது இந்திய செய்தித்தாள் சங்கத்தின் (INS) குறிப்பிடத்தக்க வளர்ச்சியைக் குறிக்கிறது. கடந்த 1927இல் உருவான இது, 1939ஆம் ஆண்டில் இந்திய மற்றும் கிழக்குச் செய்தித்தாள் சங்கமாக மாற்றி நிறுவப்பட்டது. INS, பத்திரிகைகளுக்கான மைய அமைப்பாகச் செயல்படுகிறது. இந்தியா மற்றும் ஆசியாவில், பத்திரிகை சுதந்திரத்தைப் பாதுகாப்பதில் கவனம் செலுத்துதல் மற்றும் செய்தித்தாள்கள் மற்றும் பருவ இதழ்களுக்கான புள்ளிவிவரங்களை அங்கீகரிப்பதில் கவனம் செலுத்துகிறது. அதன் உறுப்பினர்களில் அச்சு–ஊடக உரிமையாளர்கள் மற்றும் வெளியீட்டாளர்கள் உள்ளனர்.

**9. அண்மையில், இந்தியா, எந்த நாட்டுடன் நான்கு சமூக மேம்பாட்டு திட்டங்களை செயல்படுத்துவதற்கான ஓர் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது?**

**அ. மார்ஷல் தீவுகள் ☑**



ஆ. சாலமன் தீவுகள்

இ. பப்புவா நியூ கினி

ஈ. நியூசிலாந்து

★ 4 சமூக மேம்பாட்டுத் திட்டங்களுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்போது, இந்தியாவிற்கும் மார்ஷல் தீவுகளுக்கும் இடையிலான நீண்டகால நட்புறவை வெளியுறவு அமைச்சர் Dr S ஜெய்சங்கர் வலியுறுத்தினார். தட்பவெப்பநிலை மாற்றம், இயற்கைப் பேரிடர்கள், வறுமையொழிப்பு மற்றும் சுகாதாரப் பாதுகாப்பு ஆகியவற்றில் பசிபிக் தீவுகளை ஆதரிப்பதற்கான இந்தியாவின் பொறுப்பை அவர் எடுத்துரைத்தார். Dr S ஜெய்சங்கர், பசிபிக் தீவுகள் குறிப்பிடத்தக்க கடல்சார் நாடுகள் என்றும் அவர்களுடனான கூட்டுறவை இந்தியா எப்போதும் மதிப்பதாகவும் கூறினார்.

**10. 2024 – உலக பாரம்பரிய இளந்தொழில்நுட்பவியலாளர்கள் மன்றத்தை நடத்துகிற அமைச்சகம் எது?**

அ. வெளியுறவு அமைச்சகம்

ஆ. உள்துறை அமைச்சகம்

**இ. கலாச்சார அமைச்சகம் ☑**

ஈ. பாதுகாப்பு அமைச்சகம்

★ UNESCOஇன் மதிப்புமிக்க உலக பாரம்பரியக் குழுவின் கூட்டம், இந்தியாவின் சார்பில், முதன்முறையாக 2024 ஜூலை.21–31 வரை புது தில்லியில் நடத்தப்படவுள்ளது. உலக பாரம்பரியக் குழுவின் 46ஆவது அமர்வின் ஒருங்கிணைந்த அம்சமாகவும், UNESCOஇன் உலக பாரம்பரியக் கல்வித்திட்டத்தின் கட்டமைப்புக்கு உட்பட்டும், நடுவண் கலாச்சார அமைச்சகம், உலக பாரம்பரிய இளம் தொழில்நுட்பவியலாளர்கள் அமைப்பின் 2024–க்கான கூட்டத்தை நடத்தவுள்ளது.

★ இந்திய தொல்லியல் ஆய்வுத்துறையின் துணை அமைப்பான பண்டித தீனதயாள உபாத்யாயா தொல்லியல் பயிற்சி நிறுவனம், "21ஆம் நூற்றாண்டில் உலக பாரம்பரியம்: திறனுருவாக்கம் மற்றும் இளைஞர்களுக்கான வாய்ப்புகளை ஆராய்தல்" என்ற தலைப்பில் இளந்தொழில்நுட்பவியலாளர்கள் கூட்டத்தை நடத்துகிறது. பல்வேறு நாடுகளிலிருந்து வந்துள்ள 50 (இந்தியாவிலிருந்து 20, பிறநாடுகளிலிருந்து 30) பேர் தங்களது படைப்புகளை சமர்ப்பிக்கவுள்ளனர்.

**11. அண்மையில், 'ஓர் அறிவியலாளர்–ஒரு தயாரிப்பு' என்ற திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ள ஆராய்ச்சி நிறுவனம் எது?**

**அ. இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகம் (ICAR) ☑**

ஆ. இந்திய அறிவியல் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் (IISER)

இ. தேசிய உயிரி-மருத்துவ மரபணுத்தொகுதிக்கல்வி நிறுவனம் (NIBMG)

ஈ. பொருளாதார வளர்ச்சி நிறுவனம்

★ வேளாண்மை மற்றும் கால்நடை வளர்ப்பில் ஆராய்ச்சியை மேம்படுத்தும் வகையில், இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகம் (ICAR) தனது 'ஓர் அறிவியலாளர் – ஒரு தயாரிப்பு' என்ற திட்டத்தை ஜூலை.16 அன்று அறிமுகப்படுத்தியது. தில்லியில் அதன் 96ஆவது நிறுவனநாள் கொண்டாட்டத்தின்போது, ICAR 323 புதிய பயிர் வகைகளை அறிவித்தது; இதில் 289 தட்பவெப்பநிலை–எதிர்ப்பு மற்றும் 27 உயிர்–வலுவூட்டப்பட்ட வகைகள் அடங்கும். இந்த நிகழ்ச்சியை நடுவண் வேளாண் துறை அமைச்சர் சிவராஜ் சிங் சௌகான் தொடங்கி வைத்தார்.

**12. அண்மையில், ஒரே நாளில் 11 இலட்சம் மரக்கன்றுகளை நட்டு உலக சாதனை படைத்த இந்திய நகரம் எது?**

அ. கோயம்புத்தூர், தமிழ்நாடு

**ஆ. இந்தூர், மத்திய பிரதேசம் ☑**

இ. கோழிக்கோடு, கேரளா

ஈ. அமராவதி, ஆந்திர பிரதேசம்



★ மத்திய பிரதேச மாநில அரசு இந்தூர் நகரத்தில் ஒரே நாளில் 11 இலட்சம் மரக்கன்றுகளை நட்டு புதிய கின்னஸ் சாதனை படைத்துள்ளது. முதலமைச்சர் மோகன் யாதவ், கின்னஸ் சாதனை நூல் குழுவிடமிருந்து இதற்கானச் சான்றிதழைப் பெற்றார். ஜூன்.05ஆம் தேதி பிரதமர் நரேந்திர மோதியால் தொடங்கப்பட்ட, "தாயின் பெயரில் ஒரு மரம்" என்ற இயக்கத்தில் மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷாவும் பங்கேற்றார். இந்தியாவின் தூய்மையான நகரமான இந்தூரில் இந்த இயக்கத்தின்கீழ், 51 இலட்சம் மரக்கன்றுகள் நடப்படும்.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. புதிய மாநகராட்சிகள் உருவாக்கத்துக்கான நிபந்தனைகள் தளர்வு: திருத்த மசோதாவுக்கு ஆளுநர் ஒப்புதல்.**

புதுக்கோட்டை, திருவண்ணாமலை, நாமக்கல், காரைக்குடி ஆகிய நான்கு நகராட்சிகளையும் மாநகராட்சிகளாக தரமுயர்த்துவதற்கு, ஏற்கெனவே நிர்ணயிக்கப்பட்டிருந்த மக்கள்தொகை, வருமான அளவுகளை குறைத்து மாநகரா–ட்சிகளாக தரமுயர்த்துவதற்கான நகர்ப்புற உள்ளாட்சி சட்டத்திருத்த மசோதா பேரவையில் தாக்கல்செய்யப்பட்டது. அதன்படி, நகர்ப்புற உள்ளாட்சி சட்டப்பிரிவில் மக்கள்தொகையாக இருந்த 3 இலட்சம் என்பது 2 இலட்சமாகவும், சம்பந்தப்பட்ட பகுதியின் ஆண்டு வருமானம் ₹30 கோடியிலிருந்து ₹20 கோடியாகவும் குறைக்கப்பட்டு திருத்தம் செய்யப்பட்டது.

---

**2. தமிழ்நாடு நாள் விழா.**

தமிழ்நாடு நாள் விழா கடந்த ஈராண்டுகளாக சென்னையில் கொண்டாடப்பட்டது. நடப்பாண்டு 'பேரறிஞர்' அண்ணா பிறந்த மண்ணில் நடத்த வேண்டும் என முடிவுசெய்யப்பட்டது. சென்னை மாகாணம் என்று இருந்த நமது மாநிலத்தின் பெயரை 'தமிழ்நாடு' என்று மாற்றவேண்டும் என தமிழ்நாடு சட்டப்பேரவையில் 'பேரறிஞர்' C N அண்ணாதுரையால் ஒரு மனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அந்த நாள் 18.7.1967. இந்த நாள் வெளிப்படாமல் உள்ளது என்பதை அறிந்த முதலமைச்சர் மு க ஸ்டாலின் 'தமிழ்நாடு நாள்' விழாவாகக் கொண்டாட வேண்டும் என தமிழ்வளர்ச்சித்துறைக்கு உத்தரவிட்டார். இதைத்தொடர்ந்து தமிழ்வளர்ச்சித்துறையும், செய்தித்துறையும் இணைந்து தமிழ்நாடு நாள் விழாவாக நடப்பாண்டு 3ஆவது ஆண்டாக காஞ்சிபுரத்தில் 'தமிழ்நாடு நாளைக்' கொண்டாடின.

---


# IMPORTANT LINKS

TNPSC Current Affairs

https://www.winmeen.com/tnpsc-tamil-current-affairs/

Winmeen: Install the Winmeen App
Daily Free & Premium TNPSC Study Materials & Online Test

https://play.google.com/store/apps/details?id=co.robin.jbzwb

Winmeen: Winmeen TNPSC Test Series - Samacheer lesson Wise Test + Previous Year Model Test for TNPSC Group 1,2, 4 & VAO

https://wp.me/p7JanY-ag8

**1. தேசிய புவி இயற்பியல் ஆராய்ச்சி நிறுவனம் அமைந்துள்ள நகரம் எது?**

அ. சென்னை


**ஆ. ஹைதராபாத் ☑**

இ. மும்பை

ஈ. கொல்கத்தா

★ தேசிய புவி இயற்பியல் ஆராய்ச்சி நிறுவனத்தின் (National Geophysical Research Institute – **NGRI**) அறிவியலாளர்கள் இந்திய துணைக்கண்டத்திற்கும் அண்டார்டிகாவிற்கும் இடையிலான பண்டைய தொடர்பை எடுத்துக்காட்டும் ஆதாரங்களைக் கண்டுபிடித்துள்ளனர். கடந்த 1961இல் நிறுவப்பட்டு, ஹைதராபாத்தில் இயங்கி வருகின்ற **NGRI**, அறிவியல் மற்றும் தொழிற்துறை ஆராய்ச்சிக் கழகத்தின் (CSIR) ஒருபகுதியாகும். இந்த நிறுவனம் புவி இயக்கவியல், நிலநடுக்க இடர்கள் மற்றும் இயற்கை வளங்கள் ஆகியவற்றில் நிலையான புவிவளப்பயன்பாட்டைத் தெரிவிக்கவும் மற்றும் இயற்கை இடர்களுக்கு நெகிழ்தன்மையை மேம்படுத்தவும் ஆராய்ச்சிகளை மேற்கொள்கிறது.

**2. மேகப்புண் நோயை ஏற்படுத்தும் காரணி எது?**



அ. வைரஸ்

**ஆ. பாக்டீரியா ☑**

இ. பூஞ்சை

ஈ. புரோட்டோசோவா

★ 2018–19 மற்றும் 2022–23க்கு இடையில் 6,000–க்கும் மேற்பட்ட மேகப்புண் நோய் (Syphilis) பாதிப்புகளை மும்பை எய்ட்ஸ் கட்டுப்பாட்டு சங்கத்தின் (MDACS) மேம்படுத்தப்பட்ட சோதனை அமைப்பு கண்டறிந்துள்ளது. *Treponema pallidum* பாக்டீரியாவால் ஏற்படும் மேகப்புண் நோய் என்பது பாலியல் ரீதியாக பரவும் ஒரு நோய்த்தொற்று ஆகும்; அறிகுறி எதுவும் காட்டாமல் பல்லாண்டுகளாக உடம்பிலிருக்கும் இது; திடீரென மீண்டும் செயல்படும். பாலியல் தொடர்புமூலம் பரவுகிற இது, பிறவாத குழந்தைகளையும் கூட பாதிக்கின்றது. வலியற்ற புண்கள் மற்றும் தோல் வெடிப்பு ஆகியவை இதன் அறிகுறிகளாகும். நுண்ணுயிர் எதிர்ப்பிகள், பென்சிலின் போன்றவை இந்நோய்க்குத் தரப்படும் மிகப்பொதுவான மருந்துகளாகும்.

**3. இ–ஃபாஸ்ட் இந்தியா என்ற முன்னெடுப்பின் முதன்மை நோக்கம் என்ன?**

அ. சாலை உள்கட்டமைப்பை அதிகரிப்பது

**ஆ. சாலை அடிப்படையிலான சரக்குப்போக்குவரவை சுழிய உமிழ்வாக மாற்றுவது ☑**

இ. தனிப்பட்ட பயன்பாட்டிற்காக மின்சார வாகனங்களை ஊக்குவிப்பது

ஈ. சரக்குந்துகளில் எரிபொருள் செயல்திறனை அதிகரிப்பது

★ IIM பெங்களூரு உள்ளிட்ட சில நிறுவனங்களுடன் இணைந்து, NITI ஆயோக், 'NITI GearShift Challenge' எனப்படும் போட்டியை அறிவித்துள்ளது. இந்த முன்னோடி ஹேக்கத்தான் இந்தியாவில் சுழிய–உமிழ்வுடன் சரக்குந்துகளை இயக்கும் சூழலை ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. 2022 செப்டம்பரில் தொடங்கப்பட்ட e–FAST முன்னெடுப்பானது தேசிய மற்றும் பன்னாட்டு ஒத்துழைப்புகள், சோதனைத் திட்டங்கள் மற்றும் தொழில்நுட்ப ஒருங்கிணைப்பு ஆகியவற்றின்மூலம் தூய்மையான சரக்குப் போக்குவரவுத் தீர்வுகளை ஊக்குவிக்கிறது. இந்த முன்முயற்சியானது பன்னிரு அறிவுசார் கூட்டாளர்களின் ஆதரவுடன் சரக்குப் போக்குவரத்துத் துறையில் மின்சாரத் தொழில்நுட்பங்களை ஏற்றுக்கொள்வதை மேம்படுத்துவதற்காக அரசாங்க அமைப்புகள் மற்றும் போக்குவரத்து சேவை வழங்குநர்கள் உட்பட பங்குதாரர்களிடையே விவாதங்களை மேற்கொள்கிறது.


**4. 'பேணுநர்கள் – Chaperones' என்றால் என்ன?**

அ. முக்கியமான கனிமங்கள்

**ஆ. அவை புரதங்களின் குழுவாகும் ☑**

இ. இவை ஆக்கிரமிப்பு தாவரங்கள்

ஈ. புதிதாக கண்டுபிடிக்கப்பட்ட கடல் விலங்குகளின் இனங்கள்



★ SN போஸ் தேசிய அடிப்படை அறிவியல் மையத்தின் ஆராய்ச்சியாளர்கள் கோவலன்ட் மேக்னடிக் டுவீசரை (CMT) பயன்படுத்தி புரத மூலக்கூறுகள் மற்றும் அவற்றின் மடிப்புகளில் பேணுநர்களின் பங்கை ஆய்வுசெய்கின்றனர். புரதங்களின் குழுவான பேணுநர்கள், தவறான மடிப்பு மற்றும் திரட்டலைத் தடுப்பதில் முக்கிய பங்கு வகிக்கின்றன; சரியான புரத உருவாக்கத்திற்கும் அவை உதவுகின்றன. முக்கிய மனித பேணுநர்களில் HSP70 மற்றும் HSP90 ஆகியவை அடங்கும். தவறாக மடிக்கப்பட்ட புரதங்கள் பார்கின்சன், அல்சைமர் மற்றும் பிறவி கண்புரைபோன்ற நோய்களுக்கு வழிவகுக்கும்.

**5. வருடாந்திர, 'கப்பற்படை விருதுகள் விழா–2024'இல் கிழக்குக்கடற்படையின் சிறந்த கப்பலாக தேர்வான INS எது?**

**அ. INS தில்லி ☑**

ஆ. INS கரஞ்ச்

இ. INS சக்தி

ஈ. INS வாகீர்



★ ஜூலை.14 அன்று விசாகப்பட்டினத்தில் நடைபெற்ற வருடாந்திர 'கப்பற்படை விருதுகள் விழா–2024'இல், கடந்த ஆண்டு அதன் செயல்பாட்டு சாதனைகளுக்காக கிழக்குக்கடற்படையின் சிறந்த கப்பலாக INS தில்லி தேர்வானது. சேமக்கலம்/OPV/LST பிரிவில் சிறந்த கப்பலுக்கான விருதை INS கவராட்டி பெற்றது. கூடுதலாக, INS ஷிவாலிக், INS சுமேதா மற்றும் INS சுமித்ரா ஆகியவை பல்வேறு சவாலான பணிகளில் செயல்பட்டதற்காக, மிகவும் உற்சாகமான கப்பல்களாக அங்கீகரிக்கப்பட்டன.

**6. அண்மையில், "Navigating New Horizons: A Global Foresight" என்ற அறிக்கையை வெளியிட்ட அமைப்பு எது?**

**அ. ஐக்கிய நாடுகளின் சுற்றுச்சூழல் திட்டம் ☑**

ஆ. ஐக்கிய நாடுகளின் வளர்ச்சித் திட்டம்

இ. உலக வங்கி

ஈ. பன்னாட்டு செலாவணி நிதியம்

UNEP

★ ஐநா சுற்றுச்சூழல் திட்டத்தின் அறிக்கையான, "Navigating New Horizons: A Global Foresight" மாசுபாடு, பல்லுயிர் இழப்பு மற்றும் தட்பவெப்பநிலை மாற்றம் ஆகிய 3 கோள் நெருக்கடியை அதிகப்படுத்தும் முக்கியமான உலகளாவிய மாற்றங்களை அடையாளம் காட்டுகிறது. உலகமயமாக்கலால் நிகழ்த்தப்படும் போர்கள், தீவிர வானிலை மற்றும் தொற்றுநோய்களை உள்ளடக்கிய இன்றைய உலகளாவிய பல்லிடர்கள் ஒன்றோடொன்று இணைந்திருப்பதை இது எடுத்துக்காட்டுகிறது. மனித–சுற்றுச்சூழல் உறவுகளை மாற்றுவது, உலகளாவிய பாதுகாப்பைப் பாதிக்கும் வளப்பற்றாக்குறை, AIபோன்ற தொழில்நுட்ப கண்டுபிடிப்புகள், தன்னறிவு ஆயுதங்களால் ஏற்படும் இடர்கள், 1.5% மக்கள் பெருமளவில் இடம்பெயர்தல் ஆகியவை கூர்நோக்கப்படும் முக்கிய சிக்கல்களாகக் குறிப்பிடப்பட்டுள்ளன.

**7. இந்தியாவின் செஸ் திறன்களை மேம்படுத்துவதற்கு தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதற்கான திட்டங்களை அண்மையில் வெளியிட்ட நிறுவனம் எது?**

அ. ஐஐடி கான்பூர்

**ஆ. ஐஐடி மெட்ராஸ் ☑**

இ. ஐஐடி மண்டி

ஈ. ஐஐடி அகமதாபாத்

★ ஐஐடி மெட்ராஸின் விளையாட்டு மற்றும் பகுப்பாய்வியலுக்கான சிறப்பு மையம் (CESSA) இந்தியாவின் செஸ் திறன்களை மேம்படுத்துவதற்கு தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதற்கான திட்டங்களை அறிவித்துள்ளது. இந்த முன்முயற்சி ரசிகர்களின் ஈடுபாட்டை அதிகரிப்பதையும், மோசடிக்கு எதிரான தீர்வுகளை வழங்குவதையும், செஸ் பயிற்சி திட்டங்களை மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. NPTEL மற்றும் எதிர்கால விளையாட்டுக் கல்வித் திட்டங்களைப் பற்றிய புதிய படிப்புகளைத் தொடங்குவதும் இதில் அடங்கும்.

**8. APSTAR–6E என்ற செயற்கைக்கோளை உருவாக்கிய நாடு எது?**



அ. இந்தியா

**ஆ. சீனா ☑**

இ. ஜப்பான்

ஈ. ரஷ்யா

★ சுற்றுப்பாதை மற்றும் ஹாங்காங்கில் நடத்தப்பட்ட வெற்றிகரமான தொழில்நுட்ப ஆய்வுகளுக்குப் பிறகு சீனாவின் APSTAR–6E என்ற செயற்கைக்கோள் செயல்படத் தொடங்கியுள்ளது. சீன வான்வெளி அறிவியல் மற்றும் தொழில் நுட்பக் கழகத்தால் உருவாக்கப்பட்ட இது, சீனாவின் முதல் அனைத்து–எலக்ட்ரிக் புரொபல்ஷன் கம்யூனிகேஷன் செயற்கைக்கோள் ஆகும்; இது 2023 ஜன.13 அன்று ஏவப்பட்டது. 15 ஆண்டுகள் வரை நீடிக்கும் வகையில் இந்தச் செயற்கைக்கோள் வடிவமைக்கப்பட்டுள்ளது. தென்கிழக்காசியா முழுவதும் அதிக திறன்கொண்ட அகலக்கற்றை சேவைகளை இது வழங்குகிறது.

**9. அண்மையில், இந்தியாவின் சீரம் நிறுவனமும் ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகமும் இணைந்து கீழ்க்காணும் எந்த நாட்டில், 'உயர் செயல்திறனுடைய' மலேரியா தடுப்பூசியான 'R21/Matrix–M'ஐ அறிமுகப்படுத்தியுள்ளன?**




அ. மாலி

**ஆ. ஐவரி கோஸ்ட் ☑**

இ. கானா

ஈ. நைஜீரியா

★ இந்தியாவின் சீரம் நிறுவனம் மற்றும் ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தால் உருவாக்கப்பட்ட R21/Matrix–M என்னும் மலேரியா தடுப்பூசியை பயன்படுத்திய முதலாவது நாடு ஐவரி கோஸ்ட் ஆகும். பல்வேறு ஆப்பிரிக்க நாடுகளால் அங்கீகரிக்கப்பட்ட இந்தத் தடுப்பூசி, தொடக்க நிலையில் 250,000 குழந்தைகளுக்குச் செலுத்தப்படவுள்ளது. ஐந்து வயதுக்குட்பட்ட சிறார்களுக்கு WHOஆல் பரிந்துரைக்கப்படும் இத்தடுப்பூசி, ஆண்டுதோறும் 600,000 இறப்புகளுக்கு காரணமான மலேரியாவை முதன்மையாக ஆப்பிரிக்காவிலிருந்து ஒழிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

**10. அண்மையில் ஷில்லாங்கில் தொடங்கப்பட்ட, 'NERACE' இணையதளத்தின் முதன்மை நோக்கம் என்ன?**

அ. வடகிழக்கில் சுற்றுலாவை மேம்படுத்துவது

**ஆ. வடகிழக்குப் பிராந்தியத்தில் உழவர்கள் மற்றும் பொருள் வாங்குவோரை இணைப்பது ☑**

இ. மாணவர்களுக்குக் கல்வி வளங்களை வழங்குதல்

ஈ. உள்ளூர் கலை மற்றும் கைவினைகளுக்கு உதவுதல்

★ நடுவண் அமைச்சர் ஜோதிராதித்ய சிந்தியா வடகிழக்குப் பிராந்தியத்தில் உள்ள உழவர்கள் மற்றும் அவர்களிடம் இருந்து பொருள் வாங்குவோர்க்குப் பயனளிக்கும் வகையில் ஷில்லாங்கில், "North East Region Agri Commodity E–Connect (NERACE)" என்ற இணையதளம் மற்றும் செயலியை தொடக்கி வைத்தார். NERACE மசாலாப்பொருட்கள், பழங்கள் மற்றும் காய்கறிகள்போன்ற தயாரிப்புகளை வாங்க உதவுவதோடு உழவர்களுக்கு பெரிய சந்தைகளையும் சிறந்த விலையையும் வழங்குகிறது. ஏழு மொழிகளில் கிடைக்கப் பெறும் இத்தளம், உலகளவில் உற்பத்தியாளர்கள், வாங்குபவர்கள் மற்றும் சேவை வழங்குநர்களை இணைக்கும் நோக்கத்தை கொண்டுள்ளது.

**11. அண்மையில், வெளியுறவு அமைச்சர் S ஜெய்சங்கர், கீழ்க்காணும் எந்த நாட்டில் நட்பின் அடையாளமாக, "மைத்ரீ உதயன்" என்றவொன்றைத் தொடங்கினார்?**

அ. வியட்நாம்

ஆ. ஆஸ்திரேலியா

**இ. மொரிஷியஸ் ☑**

ஈ. சிங்கப்பூர்



★ வெளியுறவு அமைச்சர் Dr S ஜெய்சங்கர், 2024 ஜூலை.16 அன்று போர்ட் லூயிஸில் இந்தியா–மொரிஷியஸ் நட்பின் அடையாளமாக 'மைத்ரீ உதயனைத்' திறந்து வைத்தார். மொரிஷியஸ் வெளியுறவு அமைச்சர் மனீஷ் கோபினுடன் இணைந்து மரக்கன்று ஒன்றை அவர் நட்டார். தனது இரண்டு நாள் பயணத்தின்போது, Dr S ஜெய்சங்கர், பிரதமர் பிரவிந்த் ஜக்நாத்தை சந்தித்து, இந்தியாவின் உதவியில் இயங்கி வரும் குடிமைப் பணிகள் கல்லூரி திட்டத்தை பார்வையிட்டார்.

**12. அண்மையில், இந்தியாவின் மருந்துக் கட்டுப்பாட்டாளரால் அங்கீகரிக்கப்பட்ட எடை–இழப்புக்குப் பயன்படும் மருந்தின் பெயர் என்ன?**

**அ. டிரஸ்படைட் (Tirzepatide) ☑**

ஆ. பைராசினமைடு (Pyrazinamide)

இ. நியாசினமைடு (Niacinamide)

ஈ. அடோவகோன் (Atovaquone)




★ எடையைக் குறைக்கும் மருந்தான, '*Tirzepatide*'க்கு இந்தியாவின் மருந்துக் கட்டுப்பாட்டாளர் அமைப்பு அங்கீகாரம் அளித்துள்ளது. FDAஆல் அங்கீகரிக்கப்பட்ட *Tirzepatide* மற்றும் *Semaglutide* ஆகிய இரண்டும் GLP–1ஐ அதிகரிக்கும் பாலிபெப்டைடுகள் ஆகும். *Tirzepatide* ஆனது GIP, எடை மற்றும் குளுக்கோஸ் அளவைக் கட்டுப்படுத்துகிறது. 27க்கு மேல் BMI உள்ளவர்களுக்கும், அதுதொடர்பான சுகாதார நிலைகளுக்கும் ஏற்ற வகையில், அவை நியூரான்களைத் தூண்டி திருப்தியை ஏற்படுத்துகின்றன. இதன் பக்க விளைவுகளில் குமட்டல், வயிற்றுப்போக்கு, வாந்தி மற்றும் வயிற்றுவலி ஆகியவை அடங்கும்.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. ஆளுநர்களுக்குப் பாதுகாப்பளிக்கும் 361ஆவது பிரிவை ஆராய உச்சநீதிமன்றம் ஒப்புதல்.**

ஆளுநர்களுக்கு எந்தவொரு குற்றவழக்குகள் விசாரணையிலிருந்தும் பாதுகாப்பளிக்கும் அரசமைப்புச் சட்டப்பிரிவு 361 (2)இன் வரையறைகளை ஆய்வுசெய்ய இந்திய உச்சநீதிமன்றம் ஒப்புக்கொண்டுள்ளது.

**2. காலணி தயாரிப்பில் உலகில் இரண்டாவது பெரிய நாடு இந்தியா: மத்திய காலணி தயாரிப்பு பயிற்சி நிறுவனம் தகவல்.**

காலணி தயாரிப்பில் உலகில் இந்தியா இரண்டாவது பெரிய நாடாக உள்ளது என மத்திய காலணி தயாரிப்பு பயிற்சி நிறுவனம் தெரிவித்துள்ளது. மேலும், தமிழ்நாடு காலணிகள் தயாரிப்பில் இந்தியா அளவில் முதலிடத்தில் உள்ளது.

---

**3. வறுமை ஒழிப்பில் தமிழ்நாடு முன்னணி மாநிலமாகத் திகழ்கிறது: NITI ஆயோக் பாராட்டு.**

வறுமை ஒழிப்பு உள்ளிட்ட 13 இனங்களில் தமிழ்நாடு முன்னணி மாநிலமாக திகழ்வதாக NITI ஆயோக் பாராட்டுத் தெரிவித்துள்ளது எனத் தமிழ்நாடு அரசின் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**இது தொடர்புடைய தமிழ்நாடு அரசின் செய்திக்குறிப்பு:**

வறுமை ஒழிப்பில் தமிழ்நாடு இந்தியாவிலேயே முதலிடம் பெற்று சிறந்த மாநிலமாகத் திகழ்கிறது. தட்பவெப்பநிலை மாற்றம் – சுற்றுச்சூழல் பராமரிப்பு, குறைந்த செலவில் மாசிலா எரிசக்தி இரண்டிலும் தேசிய அளவில் தமிழ்நாடு முதல் மாநிலமாக உயர்ந்துள்ளது. மேலும், பசிப்பிணி ஒழித்தல், பொருளாதாரம், சிறந்த வேலைவாய்ப்பு, தரமான கல்வி, மக்கள் நலம், சுகாதார வாழ்வு, தொழில் வளர்ச்சி – புத்தாக்கத் தொழில் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள், தூய குடிநீர் வழங்கல், கழிவுநீர் அகற்றுதல், சமத்துவமின்மையைக் குறைத்தல், உற்பத்தி மற்றும் நுகர்வு, அமைதியைக் காத்தல், நீதி நிர்வாகம், வலுவான நிறுவனங்கள், பாலின சமத்துவம் ஆகிய இனங்களில் தமிழ்நாடு முன்னணி மாநிலமாக உயர்ந்து சிறந்துள்ளது.

அதாவது, வறுமை ஒழிப்புத் திட்டத்தில் தமிழ்நாடு இந்தியாவிலேயே முதல் மாநிலமாக தலைசிறந்து விளங்குகிறது என்பது உள்பட 11 இனங்களில் தமிழ்நாடு வளங்குன்றா வளர்ச்சிக் குறியீடுகளில் தேசிய சராசரியைவிட அதிகமாக வளர்ச்சி பெற்று முன்னணி மாநிலமாகவும், 2 இனங்களில் தேசிய சராசரிக்கு இணையாகவும் வளர்ச்சி பெற்று 13 இனங்களில் மிகவும் சிறந்துள்ளது.

---

**4. தில்லியில் முதன்முறையாக உலகப்பாரம்பரிய குழுக்கூட்டம்.**

உலகப் பாரம்பரிய குழுவின் கூட்டம் முதன்முறையாக தில்லியில் நடைபெறுகிறது. இதன் 46ஆவது அமர்வை பிரதமர் நரேந்திர மோதி தொடக்கிவைத்தார். UNESCO (ஐநாஇன் கல்வி, அறிவியல், கலாச்சார அமைப்பு) உலக பாரம்பரியக் குழுவினரால் உலகப் பாரம்பரியக் களங்கள் நிர்வகிக்கப்படுகிறது. உலகப் பாரம்பரிய பட்டியலில் வைக்கப்பட வேண்டிய தளங்களை இந்தப் பாரம்பரியக் குழுவே தீர்மானிக்கிறது. தற்போது 157 நாடுகளில் 962 களங்களில் பண்பாட்டு, மலை, ஏரி, பாலைவனம் போன்ற இயற்கைசார் களங்கள், நினைவுச்சின்னங்கள், கட்டடங்கள், நகரம் என அமைந்துள்ளது. இந்தியாவில் மகாராஷ்டிரத்தின் எல்லோரா குகைகள், ஹம்பி கல்ரதம் உள்ளிட்டவைகள் உலகப் பாரம்பரிய களங்களாக உள்ளன.

---

**5. பொற்பனைக்கோட்டை அகழாய்வில் செம்பு ஆணிகள் கண்டெடுப்பு.**

புதுக்கோட்டை மாவட்டம், பொற்பனைக்கோட்டையில் தமிழ்நாடு தொல்லியல் துறை சார்பில் நடைபெற்று வரும் இரண்டாம் கட்ட அகழாய்வில் செம்பு ஆணிகள் கிடைத்துள்ளன. இதுவரையிலான அகழாய்வில் இரும்பினால் ஆன ஆணிகள் கிடைத்து வந்த நிலையில், தற்போது செம்பு ஆணிகள் கிடைத்துள்ளது குறிப்பிடத்தக்கது. மேலும், 3 செமீ நீளமுள்ள 'அஞ்சனக்கோல்' எனப்படும் மை தீட்டும் குச்சி ஒன்றும் கிடைத்துள்ளது.

---

# IMPORTANT LINKS

TNPSC Current Affairs

https://www.winmeen.com/tnpsc-tamil-current-affairs/

Winmeen: Install the Winmeen App
Daily Free & Premium Tnpsc Study Materials & Online Test

https://play.google.com/store/apps/details?id=co.robin.jbzwb

Winmeen: Winmeen Tnpsc Test Series - Samacheer lesson Wise Test + Previous Year Model Test for Tnpsc Group 1,2, 4 & VAO

https://wp.me/p7JanY-ag8

**1. தெகிரி புனல்மின்னுற்பத்தி நிலையம் அமைந்துள்ள ஆற்றுப்படுகை எது?**

அ. மந்தாகினி

**ஆ. பாகீரதி ☑**

இ. இராமகங்கை

ஈ. டோன்ஸ் ஆறு



★ உத்தரகாண்ட் மாநிலத்தில் உள்ள தெகிரி கர்வாலில் பாகீரதி ஆற்றில் 2400 மெகாவாட் திறன்கொண்ட புனல்மின் உற்பத்தி வளாகம் கட்டப்பட்டு வருகிறது. இதில் தெகிரி புனல்மின்னுற்பத்தி நிலையம், கோட்டேஷ்வர் புனல்மின் உற்பத்தித் திட்டம் மற்றும் தெகிரி நீரேற்றித்தேக்கம் ஆகியவை அடங்கும்.

★ பாகீரதி ஆறானது கங்கோத்ரி பனிப்பாறையிலிருந்து உருவாகி தேவபிரயாகில் கங்கையாக மாறுகிறது. முதன்மை ஆறுகளில் கேதார கங்கை மற்றும் ஜாத் கங்கை ஆகியவை அடங்கும். பாகீரதியில் செயல்படும் அணைகளில் மனேரி, ஜோஷியரா, கோட்டேஷ்வர் மற்றும் தெகிரி அணைகள் அடங்கும்.

**2. ஹரேலா திருவிழா கொண்டாடப்படுகிற மாநிலம் எது?**

அ. ஆந்திர பிரதேசம்

**ஆ. உத்தரகாண்ட் ☑**

இ. இராஜஸ்தான்

ஈ. கேரளா



★ ஜூலை.16 அன்று, உத்தரகண்டில் கொண்டாடப்படும் ஹரேலா திருவிழாவோடு சவான் தொடங்குகிறது. இமாச்சல பிரதேசத்தின் சில பகுதிகளிலும் கொண்டாடப்படும் இந்தப் பாரம்பரிய இந்து பண்டிகை குறிப்பாக உத்தரகாண்டின் குமாவுன் பகுதியில் கொண்டாடப்படுகிறது. ஹரேலா அமைதி, செழிப்பு மற்றும் இயற்கையின் கொண்டாட்டத்தை குறிக்கிறது. இது கலாச்சார மற்றும் சுற்றுச்சூழல் முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது. கடவுளின் கருணையோடு ஏராளமான அறுவடைகள் மற்றும் செழிப்புகளைப் பெற இவ்விழா கொண்டாடப்படுகிறது.

**3. அல்வா விழா என்பது எந்த ஆவணத்தை வெளியிடுவதுடன் தொடர்புடையதாகும்?**

அ. ரிசர்வ் வங்கியின் ஆண்டறிக்கை

**ஆ. மத்திய பட்ஜெட் ☑**

இ. பொருளாதார ஆய்வறிக்கை

ஈ. NITI ஆயோக்கின் ஆண்டறிக்கை



★ மத்திய பட்ஜெட் 2024–25க்கான இறுதிக்கட்டத் தயாரிப்பைக் குறிக்கும் ஒரு பாரம்பரிய 'அல்வா சடங்கு' விழாவில் நடுவண் நிதியமைச்சர் பங்கேற்றார். ஜூலை.23 அன்று இது வெளியிடப்படவுள்ளது. இந்த விழா நிதி அமைச்சக அதிகாரிகளுக்கு, 'அல்வா' வழங்குவதை உள்ளடக்கியது. பட்ஜெட் ஆவணங்களை அச்சிடுவதற்கான தொடக்க நிலையாக இது பார்க்கப்படுகிறது. நிதியமைச்சகத்தின் வடபகுதியின் அடித்தளத்தில் தங்கியிருக்கும் அதிகாரிகள், ரகசியக் காப்பிற்காக ஓர் அறைக்குள் வைத்து பூட்டப்படுகிறார்கள். 1950ஆம் ஆண்டு நிகழ்ந்த பட்ஜெட் கசிவிற்குப் பின் இந்த நடைமுறை உருவானது.

**4. அண்மையில் நடுவண் உள்துறை அமைச்சகத்தால் தொடங்கப்பட்ட, நாட்டின் முதல் இலவச போதைப்பொருள் ஒழிப்பு உதவி மையத்தின் பெயர் என்ன?**

அ. விக்ராந்த் ஆ. நிஷ்சய்

**இ. மனஸ் ☑** ஈ. காவேரி

★ இந்தியா தனது முதல் தேசிய இலவச போதைப்பொருள் ஒழிப்பு சேவை மையமான '1933'ஐ, MANAS (Madak Padarth Nisedh Asuchna Kendra) என்ற பெயரில் மின்னஞ்சல் சேவையுடன் ஜூலை.18 அன்று அறிமுகப்படுத்தியது. NARCO–ஒருங்கிணைப்பு மையக்கூட்டத்தின்போது நடுவண் உள்துறை அமைச்சர் அமித் ஷா இதனை தொடக்கி வைத்தார். போதைப்பொருள் தொடர்பான குற்றங்களைப் புகாரளிப்பதற்கும் உதவிபெறுவதற்கும் குடிமக்களுக்கு 24/7 சேவை வழங்குவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

**5. முதன்மை அறிவியல் ஆலோசகரால் அண்மையில் வெளியிடப்பட்ட, "இந்தியாவிற்கான மின்சார வாகனப்போக்கு வரவு R&D செயல் திட்டத்தின்" முதன்மை நோக்கம் என்ன?**

அ. மின்சார வாகனங்களின் விலையை குறைப்பது

**ஆ. மின்சார வாகனங்களில் (EVs) உலகளாவிய தலைமையை அடைவது ☑**

இ. மின்சார வாகன விற்பனையை ஊக்குவிப்பது

ஈ. மின்சார வாகனங்களுக்கான உற்பத்தி அலகுகளை நிறுவுவது



★ "இந்தியாவுக்கான மின்சார வாகனப் போக்குவரவு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுக்கான செயல்திட்ட" அறிக்கையை, நடுவணரசின் முதன்மை அறிவியல் ஆலோசகர் வெளியிட்டார். இந்தச் செயல்திட்டத்தின் படி, நான்கு கட்டங்களாக ஆராய்ச்சித் திட்டங்கள் வகைப்படுத்தப்பட்டுள்ளது: ஆற்றல் சேமிப்பு மின்கலங்கள், மின்சார வாகன மதிப்பீடு, பொருட்கள் & மறுசுழற்சி, மின்னேற்றம் & மறு எரிபொருளிடல் போன்றவற்றிற்கான தெளிவான வழிமுறைகளை வழங்குதல். 2030ஆம் ஆண்டளவில் கரியமில வாயு உமிழ்வின் தீவிரத்தை 45% குறைக்கவும், 2047ஆம் ஆண்டளவில் ஆற்றல் சுதந்திரம் அடையவும் 2070ஆம் ஆண்டில் கரியமில வாயு வெளியேற்றமே இல்லாத நாடு என்ற நிலையை எட்டவும் இந்தியா இலக்கு வைத்துள்ளது.

**6. விண்வெளி ஆராய்ச்சிக் குழுவின் (COSPAR) 45ஆவது அறிவியல் பேரவையை முதன்முறையாக நடத்திய நாடு எது?**

அ. நேபாளம்

**ஆ. தென் கொரியா ☑**

இ. பூடான்

ஈ. மாலத்தீவுகள்




★ விண்வெளி ஆராய்ச்சிக்குழுவின் (COSPAR) 45ஆவது அறிவியல் மாநாடு தென்கொரியாவின் பூசானில் நடந்தது. தென்கொரியா முதன்முறையாக இந்த மாநாட்டை நடத்துகிறது. 60 நாடுகளைச் சேர்ந்த 3,000 பங்கேற்பாளர்களை ஈர்த்த இந்த நிகழ்வு, தென் கொரியாவின் விண்வெளி ஆய்வு மற்றும் பன்னாட்டு ஒத்துழைப்புக்கான அர்ப்பணிப்பை எடுத்துக்காட்டுகிறது. விண்வெளி ஆய்வு மற்றும் லட்சிய எதிர்கால திட்டங்களை மேம்படுத்துவதில் உலகளாவிய ஆர்வத்தின் முக்கியத்துவத்தை அடிக்கோடிட்டுக் காட்டும் வகையில், முதன்மை விண்வெளி நிறுவனங்களின் தலைவர்கள் இம்மாநாட்டில் கலந்து கொண்டனர்.

**7. அண்மையில், இந்தியாவின் முதல் வெளிநாட்டில் இயங்கும் மக்கள் மருந்தகத்தை, நடுவண் வெளியுறவுத்துறை அமைச்சர் S ஜெய்சங்கர், கீழ்க்காணும் எந்த நாட்டில் திறந்து வைத்தார்?**

அ. வியட்நாம்

ஆ. இந்தோனேசியா

**இ. மொரிஷியஸ் ☑**

ஈ. மலேசியா



★ வெளியுறவுத்துறை அமைச்சர் S ஜெய்சங்கர் மொரிஷியஸில் இந்தியாவின் முதல் வெளிநாட்டு மக்கள் மருந்தகத்தை திறந்து வைத்தார்; அப்போது அந்நாட்டு பிரதமர் பிரவிந்த் குமார் ஜக்நாத் உடன் இருந்தார். இந்தத் திட்டம், மலிவு விலையில், இந்தியாவில் தயாரிக்கப்பட்ட மருந்துகளை, மொரிஷியஸில் சுகாதாரத்தை மேம்படுத்தும் நோக்கோடு விற்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. 16,000 பேருக்கு இரண்டாம்நிலை சுகாதார சேவையை வழங்கும் இந்திய உதவியால் நிதியளிக்கப்பட்டு கிராண்ட் போயிஸ் கிராமத்தில் கட்டப்பட்ட ஒரு மருத்துவ மனையையும் S ஜெய்சங்கர் திறந்து வைத்தார்.

**8. 2024 – உலக ஜூனியர் ஸ்குவாஷ் சாம்பியன்ஷிப்பில் வெண்கலப்பதக்கம் வென்ற இந்திய வீரர் யார்?**



அ. சௌர்யா பாவா ☑

ஆ. முகமது ஜகாரியா

இ. குஷ் குமார்

ஈ. அனாகத் சிங்

★ 2024 ஜூலை.17 அன்று அமெரிக்காவின் ஹூஸ்டனில் நடந்த WSF உலக ஜூனியர் ஸ்குவாஷ் சாம்பியன்ஷிப்பில், அரையிறுதியில் எகிப்தின் முகமது ஜகாரியாவிடம் தோல்வியடைந்த பிறகு, ஷௌர்யா பாவா வெண்கலப்பதக்கம் வென்றார். 2014ஆம் ஆண்டில் குஷ் குமார் வெண்கலம் வென்றதைத் தொடர்ந்து, இந்தப்போட்டி வரலாற்றில் ஓர் இந்திய வீரர் பெறும் இரண்டாவது பதக்கம் இதுவாகும். இந்திய வீராங்கனை அனாகத் சிங், காலிறுதியில் எகிப்தின் நாடியன் எல்கம்மாமியிடம் தோல்வியடைந்து பதக்கத்தைத் தவறவிட்டார்.

**9. 'ஆபரேஷன் நான்ஹே ஃபரிஷ்டே' என்பதுடன் தொடர்புடைய அமைப்பு எது?**




அ. DRDO

ஆ. ரெயில்வே பாதுகாப்புப் படை ☑

இ. ISRO

ஈ. பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம்

★ ரெயில்வே பாதுகாப்புப் படை (RPF) 2018ஆம் ஆண்டு தொடங்கிய ஆபரேஷன் 'Nanhe Farishtey'இன்கீழ் கடந்த ஏழு ஆண்டுகளில் இந்திய ரெயில் நிலையங்கள் மற்றும் ரெயில்களில் இடரிலிருந்த 84,119 குழந்தைகளை மீட்டுள்ளது. இந்த நடவடிக்கையானது ஓடிப்போன, கைவிடப்பட்ட, வறிய, ஊனமுற்ற, அல்லது கடத்தப்பட்ட குழந்தைகளைப் பாதுகாப்பதில் கவனம் செலுத்துகிறது. மீட்கப்பட்ட குழந்தைகள் மாவட்ட குழந்தைகள் நலக்குழுவிடம் ஒப்படைக்கப்ப–டுகின்றனர். 2022இல், RPF அதிகபட்சமாக 17,756 குழந்தைகளை மீட்டுள்ளது.

**10. அண்மையில், கல்வி அமைச்சகம் மற்றும் UGCஆல் தொடங்கப்பட்ட ASMITA திட்டத்தின் முதன்மை நோக்கம் என்ன?**

அ. கல்வி முறையில் இந்திய மொழிகளை மேலும் ஆழமாக ஊக்குவிப்பது மற்றும் ஒருங்கிணைப்பது ☑

ஆ. அனைத்து பாடங்களையும் ஆங்கிலத்திலிருந்து இந்திய மொழிகளுக்கு மாற்றுவது

இ. இந்தியாவில் அயல்நாட்டு மொழிகளை ஊக்குவிப்பது

ஈ. புதிய பல்கலைக்கழகங்களை உருவாக்குவது

★ ஐந்தாண்டுகளுக்குள் இந்திய மொழிகளில் 22,000 நூல்களை உருவாக்குவதற்காக கல்வி அமைச்சகமும் UGC உம் இணைந்து 'ASMITA' திட்டத்தைத்தொடங்கியுள்ளன. ASMITA (Augmenting Study Materials in Indian Languages through Translation and Academic Writing) கல்வி வளங்களை மேம்படுத்துவதையும் கல்வி அமைப்பில் இந்திய மொழிகளை ஒருங்கிணைப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. பதிமூன்று மைய பல்கலைக்கழகங்கள் இந்தக் கூட்டு முயற்சியை வழிநடத்தும். UGC நூல் எழுதும் செயல்முறைக்கான நிலையான செயல்பாட்டு நடைமுறையை உருவாக்கி, தரம் மற்றும் அணுகலை உறுதிசெய்யும்.

**11. அண்மையில், நாடு முழுவதும் உருளைக்கிழங்குப் பயிரைப் பாதித்த பின்னழுகல் நோய் என்றால் என்ன?**



அ. பாக்டீரியா தொற்று

**ஆ. பூஞ்சை நோய் ☑**

இ. வைரஸ் தொற்று

ஈ. பூச்சித்தொல்லை

★ மத்திய உருளைக்கிழங்கு ஆராய்ச்சி நிறுவனம் (CPRI) வானிலை மாற்றங்களால் உருளைக்கிழங்கில் பின்னழுகல் நோய்த் தாக்குதலுக்கு அதிக ஆபத்து இருப்பதாக ஓர் எச்சரிக்கையை வெளியிட்டுள்ளது. '*Phytophthora infestans*' பூஞ்சையால் ஏற்படும் பின்னழுகல், தக்காளி மற்றும் உருளைக்கிழங்கை பாதிக்கும் ஒரு தீவிர பூஞ்சை நோயாகும். இது பாதிக்கப்பட்ட பயிரைப் பிடுங்கி நடுதல், தன்னிச்சையாக வளரும் செடி மற்றும் சில களைகள்மூலம் பரவுகிறது; இதன் வித்துகள் காற்றில் நீண்டதூரம் பயணிக்கின்றன. இந்த நோய் குளிர்ந்த, ஈரமான காலநிலையில் பரவுகிறது, மீண்டும் மீண்டும் தொற்று சுழற்சிகளை ஏற்படுத்துகிறது.

**12. ஜெர்டன் கல்குருவி என்பது இந்தியாவின் எந்தப் பகுதியில் வாழும் ஓர் இரவுநேரப் பறவையாகும்?**



அ. மேற்குத்தொடர்ச்சி மலைகள்

**ஆ. கிழக்குத்தொடர்ச்சி மலைகள் ☑**

இ. வடகீழைப்பகுதி

ஈ. லடாக்

★ ஜெர்டன் கல்குருவி என்பது மிகவும் அருகிவிட்ட ஓர் இரவுநேரப் பறவையாகும்; இந்தியாவின் கிழக்குத்தொடர்ச்சி மலைகளில் குறிப்பாக ஆந்திர பிரதேசம் மற்றும் தெலுங்கானாவில் மட்டுமே இது காணப்படுகிறது. இதன் அறிவியல் பெயர்: *Rhinoptilus bitorquatus* ஆகும். அழிந்துவிட்டதாக கருதப்பட்டு பின்னர் 1986இல் மீண்டும் கண்டுபிடிக்கப்பட்ட இது, புதர் காடுகளுக்குள் திறந்த திட்டுகளில் வாழ்கிறது. அதன் சாம்பல்–பழுப்பு நிற இறகுகள், பெருங்கண்கள் மற்றும் தனித்துவமான கீச்சிடல்களால் இது அடையாளம் காணப்படுகிறது. இது தனது பார்வையாலேயே தனது இரையை வேட்டையாடும் திறன் பெற்றது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. தொடர்ந்து 7ஆவது முறையாக பட்ஜெட் தாக்கல்: சாதனை படைக்கும் நிர்மலா சீதாராமன்.**

மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தொடர்ந்து ஏழாவது முறையாக பட்ஜெட் தாக்கல் செய்து வரலாற்றுச் சாதனை படைக்கவுள்ளார். இதன்மூலம் தொடர்ச்சியாக ஐந்து முறை முழு பட்ஜெட்டும், ஒருமுறை இடைக்கால பட்ஜெட்டும் தாக்கல் செய்த முன்னாள் பிரதமர் மொரார்ஜி தேசாயின் சாதனையை அவர் முறியடிக்கவுள்ளார். பிரதமர் நரேந்திர மோதியின் 2ஆவது பதவிக்காலத்தில் நாட்டின் முழுநேர நிதியமைச்சராக நிர்மலா சீதாராமன் கடந்த 2019ஆம் ஆண்டு நியமிக்கப்பட்டார்.

**முதல் பட்ஜெட்:** நாடு விடுதலை அடைந்து பிரதமராக ஜவஹர்லால் நேரு பதவியேற்ற பின்பு முதல் பட்ஜெட்டை அப்போதைய நிதியமைச்சர் R K சண்முகம் தாக்கல் செய்தார்.

**பட்ஜெட் தேதி மற்றும் நேரம்:** கடந்த 2016ஆம் ஆண்டுவரை பிப்ரவரி மாதத்தின் இறுதிநாளில் பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டது. இந்த நடைமுறை கடந்த 2017ஆம் ஆண்டு மாற்றப்பட்டு பிப்ரவரி மாதத்தின் முதல் நாளில் பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டு வருகிறது. அதேபோல் கடந்த 1999ஆம் ஆண்டுக்கு முன்னதாக மாலை 4 மணிக்கு பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டு வந்தது. இந்நடைமுறையை மாற்றி 1999ஆம் ஆண்டு பிரதமர் வாஜ்பாய் தலைமையிலான அமைச்சரவையில் நிதியமைச்சராக பதவி வகித்த யஸ்வந்த் சின்ஹா காலை 11 மணிக்கு பட்ஜெட் தாக்கல் செய்தார்.

அன்றிலிருந்து தற்போது வரை காலை 11 மணிக்கே நாடாளுமன்றத்தில் பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

---

**2. இந்தியாவில் முதியவர்கள் எண்ணிக்கை 2050க்குள் இரட்டிப்பாகும்.**

இந்தியாவில் முதியவர்கள் எண்ணிக்கை 2050ஆம் ஆண்டுக்குள் இரட்டிப்பாகும் என ஐக்கிய நாடுகள் மக்கள் தொகை (UNFPA) அமைப்பு தெரிவித்துள்ளது. நாட்டில் 60 வயது மற்றும் அதற்கு மேற்பட்டவர்களின் மக்கள்தொகை 2050ஆம் ஆண்டுக்குள் 34.6 கோடி பேருடன் இரட்டிப்பாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. நாட்டில் 10 முதல் 19 வயதுக்குட்பட்ட இளைஞர்கள் 25.2 கோடி பேர் உள்ளனர்.

**2050இல் 50% நகரமயம்:** வரும் 2050ஆம் ஆண்டுக்குள் இந்தியா 50 சதவீத அளவுக்கு நகரமயமாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

---

**3. சென்னானூர் அகழாய்வில் தமிழி எழுத்துப்பொறிப்புக்கொண்ட பானை ஓடுகள் கண்டெடுப்பு.**

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை சார்பில், கிருஷ்ணகிரி மாவட்டம் சென்னானூர் அகழாய்வுத்தளத்தில் புதிய கற் காலப்பண்பாட்டைக் கண்டறிய அகழாய்வு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இங்கு உடைந்த நிலையில் புதிய கற்காலக்கருவி கண்டெடுக்கப்பட்டது. மேலும், சுடுமண் முத்திரை, சங்கு வளையல் துண்டுகள், கண்ணாடி வளையல் துண்டுகள், வட்டச்சில்லுகள், தக்களி போன்ற சங்ககாலம் என்றழைக்கப்படும் தொடக்க வரலாற்றுக் காலத்தைச் சார்ந்த தொல்பொருட்கள் கண்டெடுக்கப்பட்டன.

தற்போது, சென்னானூர் அகழாய்வில் 90 செமீ – 108 செமீ வரையிலான ஆழத்தில் தமிழி எழுத்துப்பொறிக்கப்பட்ட 3 பானை ஓடுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இந்தப் பானை ஓடுகளில் முறையே [ந்]தை பாகஅந், ஊகூர், [சா]த்தன் எனப் பொறிக்கப்பட்டுள்ளன. பாறைகளில் பொறிக்கப்பட்ட தமிழி எழுத்துக் கல்வெட்டுகளில் வேள்ஊர், மதிரை, இவகுன்றம், நெல்வெளிஇய், இலஞ்சி, கருஊர், முசிறி, வெள்அறைய், தேனூர், அகழ்ஊர், கோகூர் போன்ற ஊர்ப் பெயர்கள் காணப்படுகின்றன. ஆனால் பானை ஓடுகளில் பெரும்பாலும் ஆட்பெயர்கள் இடம்பெற்றுள்ளன. உறையூர் பானை ஓட்டில் மூலனபேடு என்ற ஊர்ப்பெயர் கிடைக்கப்பெற்றது. தற்பொழுது சென்னானூர் பானை ஓட்டில் ஊகூர் என்ற ஊர்ப்பெயர் கிடைக்கப்பெற்றுள்ளது சிறப்பானதாகக் கருதப்படுகிறது.

---


# IMPORTANT LINKS

TNPSC Current Affairs

https://www.winmeen.com/tnpsc-tamil-current-affairs/

Winmeen: Install the Winmeen App
Daily Free & Premium TNPSC Study Materials & Online Test

https://play.google.com/store/apps/details?id=co.robin.jbzwb

Winmeen: Winmeen Tnpsc Test Series - Samacheer lesson Wise Test + Previous Year Model Test for Tnpsc Group 1,2, 4 & VAO

https://wp.me/p7JanY-ag8


---

**1. பொதுச்சேவை மையங்களுடன் தொடர்புடைய அமைச்சகம் எது?**

அ. நிதி அமைச்சகம்

ஆ. பாதுகாப்பு அமைச்சகம்

**இ. மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் ☑**

ஈ. நகர்ப்புற மேம்பாட்டு அமைச்சகம்

★ பொதுச்சேவை மையங்கள் சிறப்ப நோக்கு ஊர்தி (CSC SPV) அதன் 15ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடியது. நிறுவனங்கள் சட்டம், 1956இன்கீழ் நடுவண் மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்தால் (MeitY) தொடங்கப்பட்ட CSC SPV, டிஜிட்டல் இந்தியா திட்டத்தின் ஒரு பகுதியான CSC திட்டத்தை மேற்பார்வை செய்கிறது. CSCகள் கிராமப்புற குடிமக்களுக்கு அரசு, தனியார் மற்றும் சமூகத்துறை சேவைகளை வழங்குவதற்கான அணுகல் மையங்களாக செயல்படுகின்றன. இந்தியா முழுவதும் டிஜிட்டல் & நிதி சேர்த்தலை இவை மேம்படுத்துகின்றன.

**2. U–WIN இணையதளத்தின் முதன்மை நோக்கம் என்ன?**

அ. COVID-19 பாதிப்புகளைக் கண்காணிப்பது

**ஆ. வழமையான நோய்த்தடுப்பு மருந்துகளின் மின்னணு பதிவேட்டைப் பராமரிப்பது ☑**

இ. சுகாதார நியமனங்களை நிர்வகிப்பது

ஈ. தொலைமருத்துவச் சேவைகளை எளிதாக்குவது

★ ஆகஸ்ட்.15 அன்று தொடங்கப்படவுள்ள U–WIN, தடுப்பூசி பதிவுகளை எண்மமயமாக்குவதன்மூலம் இந்தியாவில் தாய்–சேய் சுகாதாரத்தை அடுத்த நிலைக்குக் கொண்டு செல்லும். இந்த முறையானது ASHA மற்றும் பிற சுகாதாரப் பணியாளர்கள் பயன்படுத்தும் கைமுறை செயல்பாட்டுக்கு மாற்றாக இருக்கும். Co–WIN அமைப்பைப் பிரதிபலிக்கும் வகையில், U–WIN வழமையான நோய்த்தடுப்பு மருந்துகளின் மின்னணுப் பதிவேட்டைப் பராமரிக்கிறது. தற்போது மேற்கு வங்க மாநிலம் தவிர அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் சோதனை முறையில் செயல்படுத்தப்பட்டு வரும் இம்முறையானது, உலகளாவிய நோய்த்தடுப்பு திட்டத்தின்கீழ், கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் 0 முதல் 5 வயதுடைய குழந்தைகளுக்குச் செலுத்தப்படும் தடுப்பூசி நிகழ்வுகளை பதிவுசெய்கிறது.

**3. அண்மையில், இந்தியா முழுவதும் மேற்கூரை சூரியவொளி மின்னுற்பத்தி நிறுவல்களை அமைப்பதற்காக, $240.5 மில்லியன் அளவிலான கடனுக்கு ஒப்புதல் அளித்த நிறுவனம் எது?**

**அ. ஆசிய வளர்ச்சி வங்கி ☑**

ஆ. உலக வங்கி

இ. பன்னாட்டு செலவாணி நிதியம்

ஈ. ஐரோப்பிய முதலீட்டு வங்கி

★ புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அணுகலை மேம்படுத்தும் வகையில், இந்தியா முழுவதும் மேற்கூரை சூரியவொளி மின்னுற்பத்தி நிறுவல்களை மேம்படுத்துவதற்காக $240.5 மில்லியன் அளவிலான கடனுக்கு ஆசிய வளர்ச்சி வங்கி ஒப்புதல் அளித்துள்ளது. ஆசிய வளர்ச்சி வங்கியின் தூய தொழில்நுட்ப நிதி மற்றும் சாதாரண மூலதன வளங்களின் நிதியுடன், பல்தவணை நிதி வசதியின் (MFF) கீழ் சூரிய மேற்கூரை முதலீட்டுத் திட்டம் ஆதரிக்கப்படுகிறது. பாரத வங்கி (SBI) மற்றும் NABARD வங்கிமூலம் கடன்கள் விநியோகிக்கப்படும். இந்தியாவின் தற்போதைய சூரிய மேற்கூரை நிறுவல் திறன் 11.08 கிகாவாட் (GW) ஆகும்.

**4. அண்மையில், 'உலகளாவிய கல்வி கண்காணிப்பு அறிக்கை – 2024'ஐ வெளியிட்ட அமைப்பு எது?**

அ. UNDP ஆ. UNEP

இ. IMF **ஈ. UNESCO ☑**

★ UNESCOஇன் 'உலகளாவிய கல்வி கண்காணிப்பு அறிக்கை–2024' கல்வியில் தட்பவெப்பநிலை மாற்றத்தின் தாக்கத்தை எடுத்துக்காட்டுகிறது. 'கல்வி–2030 இன்சியோன் பேரறிவிப்பு மற்றும் செயலுக்கான கட்டமைப்பு' மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ள இது, SDG–4ஐ (தரமான கல்வி) கண்காணிக்கிறது.

★ இவ்வறிக்கையின் முக்கிய கண்டுபிடிப்புகள்: கடந்த 20 ஆண்டுகளில், தீவிர வானிலை நிகழ்வுகளின் காரணத்தால் 75% பள்ளிகள் மூடப்பட்டுள்ளன; இதன் காரணமாக 5 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்தியாவில், ஆரம்பகால மழைப்பொழிவு சொல்லறிவு, கணிதம் மற்றும் அறிவாற்றல் சாரா திறன்களை கேள்விக்கு உள்ளாக்குகிறது.

**5. அண்மையில் குழந்தைகளில், 'சண்டிபுரா வைரஸ் தொற்று' பாதிப்புகளைப் பதிவுசெய்த மாநிலம் எது?**

அ. ஒடிசா

**ஆ. குஜராத் ☑**

இ. ஹரியானா

ஈ. பஞ்சாப்



★ சமீபத்தில், குஜராத் மாநில அரசாங்கம், ஜூலை.10 முதல், சண்டிபுரா வைரஸ் (CHPV) தொற்றினால் ஆறு குழந்தைகள் இறந்ததாக அறிவித்தது. *Rhabdoviridae* குடும்பத்தின் ஒருபகுதியான CHPV, ஏடிஸ் ஈஜிப்டி உட்பட இரத்தத்தை உணவாக உட்கொள்ளும் கொசுக்களால் பரவுகிறது. பூச்சிகளின் உமிழ்நீர் சுரப்பிகளில் வசிக்கும் இந்த வைரஸ், மனிதர்களையும் வீட்டு விலங்குகளையும் பாதிக்கிறது. விரைவாக மூளையழற்சிக்கு வழிவகுக்கும் இது மூளையின் செயலில் உள்ள திசுக்களில் வீக்கத்தை ஏற்படுத்துகிறது மற்றும் சிறுநீரகம் மற்றும் கல்லீரல் போன்ற உறுப்புகளை பாதிக்கிறது.

**6. அண்மையில், 9ஆவது மகளிர் கிரிக்கெட் ஆசிய கோப்பையை நடத்திய நாடு எது?**

அ. மியான்மர்

ஆ. ஆஸ்திரேலியா

இ. பிரான்ஸ்

**ஈ. இலங்கை ☑**




★ 9ஆவது மகளிர் கிரிக்கெட் ஆசிய கோப்பை போட்டிகள் 2024 ஜூலை.19ஆம் தேதி, இலங்கையின் தம்புல்லாவில் தொடங்குகிறது. முதல் போட்டியாக நேபாளம் ஐக்கிய அரபு அமீரகத்தை எதிர்கொள்கிறது. ஜூலை.28 அன்று T20 வடிவத்தில் நடக்கும் இறுதிப்போட்டி உட்பட அனைத்து போட்டிகளும் ரங்கிரி தம்புள்ளை பன்னாட்டு மைதானத்தில் நடைபெறும். ICC உடன் இணைந்த ஆசிய கிரிக்கெட் கவுன்சில் (ACC) இந்தப் போட்டிகளை ஏற்பாடு செய்துள்ளது ACC ஆனது BCCI பொதுச்செயலர் ஜெய் ஷா தலைமையில் உள்ளது. நடப்பு சாம்பியனான இந்தியா, 2022இல் இக்கோப்பையை வென்றது.

**7. சமீபத்தில், உலக விண்வெளி மாநாட்டில் புகழ்பெற்ற அமைப்பான விண்வெளி ஆராய்ச்சிக்குழுவின் (COSPAR) கௌரவத்தைப் பெற்ற இரண்டு இந்திய விண்வெளி அறிவியலாளர்கள் யார் ?**

**அ. பிரகலாத் சந்திர அகர்வால் மற்றும் அனில் பரத்வாஜ் ☑**

ஆ. அஜய் குமார் சூத் மற்றும் பவன் குமார்

இ. லலிதா ஆபிரகாம் மற்றும் இராஜீவ் கௌபா

ஈ. அஸ்வின் வாசவடா மற்றும் ஷர்மிளா பட்டாச்சார்யா

★ இந்திய விண்வெளி அறிவியலாளர்களான பிரகலாத் சந்திர அகர்வால் மற்றும் அனில் பரத்வாஜ் ஆகியோர் தென் கொரியாவின் பூசானில் நடந்த 45ஆவது அறிவியல் மாநாட்டின்போது COSPARஇன் மதிப்புமிக்க விருதுகளைப் பெற்றனர். TIFRஇலிருந்து ஓய்வுபெற்ற பேராசிரியரான பிரகலாத் சந்திர அகர்வால், X–கதிர் வானியல் மற்றும் AstroSatக்கான பங்களிப்புகளுக்காக ஹாரி மாஸ்ஸி விருதைப்பெற்றார். 2017ஆம் ஆண்டு முதல் PRL இயக்குநராக உள்ள அனில் பரத்வாஜ், புவி விண்வெளி அறிவியலுக்கான தனது பணிக்காகவும், ISROஇன் பணிகளில் முக்கிய பங்கு வகித்ததற்காகவும் விக்ரம் சாராபாய் பதக்கத்தை பெற்றார்.

**8. அண்மையில், பிரதமர் ஸ்வநிதி திட்டத்தில், 'சிறந்த செயல்திறன் கொண்ட மாநிலம்' பிரிவின்கீழ் முதலிடத்தைப் பெற்ற மாநிலம் எது?**

**அ. மத்திய பிரதேசம் ☑**

ஆ. ஒடிஸா

இ. ஜார்கண்ட்

ஈ. பீகார்



★ COVID–19 காலகட்டத்தில் பாதிக்கப்பட்ட வீதியோர வியாபாரிகளை ஆதரிப்பதை நோக்கமாகக் கொண்ட பிரதமர் ஸ்வநிதி திட்டத்தில் மத்திய பிரதேசம், 'சிறந்த செயல்திறன்கொண்ட மாநிலம்' பிரிவில் முதலிடம் பிடித்துள்ளது. 'புதுமை மற்றும் சிறந்த நடைமுறைகள் விருது' பிரிவில் அஸ்ஸாம் இரண்டாவது இடத்தைப் பிடித்தது. நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில், தில்லி மாநகராட்சி கடன் செயல்திறனில் முன்னணியில் உள்ளது; அதைத் தொடர்ந்து பெங்களூரு மற்றும் ஆமதாபாத் ஆகிய நகரங்கள் உள்ளன. DAY–NULM SPARK பிரிவில் கேரளா முதலிடத்தைப் பெற்றது; உத்தர பிரதேசம் மற்றும் இராஜஸ்தான் ஆகிய மாநிலங்களும் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. PM SVANidhi திட்டமானது பெறத்தகு கடன்களை வழங்குவதோடு டிஜிட்டல் பரிவர்த்தனைகளையும் ஊக்குவிக்கிறது.

**9. '*Phlogacanthus Sudhansusekharii*' என்றால் என்ன?**

அ. மகாராஷ்டிராவில் கண்டுபிடிக்கப்பட்ட ஒரு புதிய தவளை இனம்

**ஆ. வடகிழக்கிந்தியாவில் கண்டுபிடிக்கப்பட்ட ஒரு புதிய தாவர இனம் ☑**

இ. ஒரு பழைமையான நீர்ப்பாசன நுட்பம்

ஈ. மேற்குத்தொடர்ச்சி மலையில் புதிதாக கண்டுபிடிக்கப்பட்ட ஒரு மீனினம்



★ அருணாச்சல பிரதேச மாநிலத்தின் இட்டாநகர் வனவிலங்கு சரணாலயத்தில், '*Phlogacanthus Sudhansusekharii*' என்றவொரு புதிய தாவர இனத்தை இந்திய தாவரவியல் ஆய்வகத்தின் ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். *Acanthaceae* குடும்பம் மற்றும் *Phlogacanthus* இனத்தின் ஒருபகுதியான இவ்வினத்திற்கு, Dr சுதன்சு சேகர்தாஸின் பெயர் சூட்டப்பட்டுள்ளது. இப்பெயரிடல் தாவர ஆராய்ச்சிக்கான அவரது பங்களிப்புகளை கௌரவிக்கிறது.

**10. NITI ஆயோகின் அறிக்கையின்படி, எந்த ஆண்டுக்குள் மின்னணு உற்பத்தியில் $500 பில்லியன் அமெரிக்க டாலர்களை எட்ட இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது?**

அ. 2025

ஆ. 2027

**இ. 2030 ☑**


ஈ. 2032



★ 2030ஆம் ஆண்டிற்குள் மின்னணு உற்பத்தியில் $500 பில்லியன் டாலர்களை எட்டுவதை இந்தியா இலக்காகக் கொண்டுள்ளது. முடிவுற்ற பொருட்களிலிருந்து $350 பில்லியன் டாலர்களும் உதிரிபாகங்கள்மூலம் $150 பில்லியன் டாலர்களும் ஈட்ட இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. துணைத்தலைவர் சுமன் பெரியால் வெளியிடப்பட்ட NITI ஆயோக் அறிக்கை, இந்தத் துறையின் வளர்ச்சி மற்றும் சவால்களை பகுப்பாய்வு செய்கிறது.

★ கடந்த 2017இல் $48 பில்லியனிலிருந்த இத்துறையின் மதிப்பு 2023இல் $101 பில்லியனாக உயர்ந்துள்ளது. இதில் பெரும்பாலும் திறன்பேசி உற்பத்தியே காரணமாக உள்ளது. உலகளாவிய மின்னணுவியல் உற்பத்தி மையமாக இந்தியா மாறுவதற்குத் தேவையான முன்னெடுப்புகளை இந்த அறிக்கை கோடிட்டுக் காட்டுகிறது.

### 11. கீழ்க்காணும் எந்த விண்வெளி நிறுவனத்தால் 'கையா' என்ற விண்கலம் ஏவப்பட்டது?



அ. CNSA

ஆ. NASA

**இ. ESA ☑**

ஈ. ISRO

★ 2013 டிசம்பரில் ஐரோப்பிய விண்வெளி முகமையால் (ESA) ஏவப்பட்ட கையா விண்கலம், இரண்டாவது சூரியன்–புவி லாக்ரேஞ்ச் புள்ளியில் (L2) இருந்து பால்வீதியின் ஒரு பில்லியன் விண்மீன்களை வரைபடமாக்குகிறது. இது விண்மீன்களை ஆண்டுக்கு பதினான்கு முறை கண்காணித்து, அவற்றின் நிலைகள், தூரங்கள், இயக்கங்கள் மற்றும் பிரகாசம் ஆகியவற்றைப் பட்டியலிடுகிறது. புதிய வான்பொருட்களைக் கண்டுபிடிப்பதையும், தொலைதூர துடிப்பண்டங்களை ஆராய்வதையும், ஐன்ஸ்டீனின் பொதுசார்பியல் கோட்பாட்டைச் சோதித்து, நமது பால்வெளியின் துல்லியமான முப்பரிமாண வரைபடத்தை உருவாக்குவதையும் 'கையா' நோக்கமாகக் கொண்டுள்ளது.

### 12. 'உள்ளாட்சித் தணிக்கைக்கான பன்னாட்டு மையம் (iCAL)' திறக்கப்பட்டுள்ள இடம் எது?




அ. இந்தூர், மத்திய பிரதேசம்

**ஆ. இராஜ்கோட், குஜராத் ☑**

இ. ஜெய்ப்பூர், இராஜஸ்தான்

ஈ. வாரணாசி, உத்தர பிரதேசம்

★ உள்ளாட்சித் தணிக்கைக்கான பன்னாட்டு மையம் (iCAL) குஜராத் மாநிலத்தின் இராஜ்கோட்டில் 2024 ஜூலை.18 அன்று திறக்கப்பட்டது. இந்தியாவின் முதல் மையமான இது, உள்ளூர் நிர்வாகத்தை தணிக்கை செய்வதற்கான உலகளாவிய தரநிலைகளை அமைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இது கொள்கை வகுப்பாளர்கள் மற்றும் தணிக்கையாளர்களுக்கான கூட்டுத்தளமாக செயல்படுவதோடு, உள்ளாட்சி தணிக்கையாளர்களின் தன்னிச்சை செயல்பாட்டை மேம்படுத்தி, அறிவு மையமாக செயல்படுகிறது. iCAL இந்தியாவின் 2.5 லட்சம் பஞ்சாயத்துகள் மற்றும் 8,000 நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு மத்தியில் நிர்வாகப் பிரச்சினைகளைத் தீர்வுகாணும் மற்றும் சிறந்த நடைமுறைகளை ஊக்குவிக்கும்.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

### 1. 'பிக்மி' எண்.

அனைத்து கர்ப்பிணிகளும், பேறுகாலத்தில் தாய்சேய் ஒருங்கிணைந்த கண்காணிப்புக்கான, 'பிக்மி' இணைய தளத்தில் பதிவுசெய்தல் அவசியம். இவ்வாறு பதிவுசெய்பவர்களுக்கு, 'RCH ID' என்ற தாய்சேய் நல அடையாள எண் வழங்கப்படுகிறது. இந்த பிக்மி பதிவு, ஆரம்ப சுகாதார நிலையங்களில் கிராம அல்லது நகர சுகாதார செவிலியர் வாயிலாக பதிவுசெய்யப்படுகிறது. இந்த நடைமுறையை மாற்றி, கர்ப்ப காலத்தை, கர்ப்பிணிகள் தாங்களாகவே, இணையதளத்தில் பதிவுசெய்துகொள்ளும் நடைமுறை கொண்டு வரப்பட்டுள்ளது.

**₹18,000 பெறலாம்:** அவ்வாறு பதிவு செய்பவர்களுக்கு, முதல் தவணையாக கர்ப்பகாலத்தின் நான்காவது மாதத்தில் ₹6,000; இரண்டாம் தவணையாக குழந்தை பிறந்த நான்காவது மாதத்தில் ₹6,000; மூன்றாம் தவணையாக குழந்தையின் ஒன்பதாவது மாதத்தில் ₹2,000 வழங்கப்படும்.

மேலும், கர்ப்பகாலத்தில் ₹2,000 மதிப்புள்ள 2 ஊட்டச்சத்து பெட்டகம் என ₹18,000 முதல் இரண்டு குழந்தைகளுக்கு வழங்கப்படும். இத்தொகை, ஆதாருடன் இணைந்த வங்கி சேமிப்புக்கணக்கில் மட்டுமே செலுத்தப்படும்.

# IMPORTANT LINKS

TNPSC Current Affairs

https://www.winmeen.com/tnpsc-tamil-current-affairs/

Winmeen: Install the Winmeen App
Daily Free & Premium Tnpsc Study Materials & Online Test

https://play.google.com/store/apps/details?id=co.robin.jbzwb

Winmeen: Winmeen Tnpsc Test Series - Samacheer lesson Wise Test + Previous Year Model Test for Tnpsc Group 1,2, 4 & VAO

https://wp.me/p7JanY-ag8

**1. உலகின் முதல் இரட்டை–கோபுர சூரிய அனல்மின்னுற்பத்தி ஆலையை உருவாக்கியுள்ள நாடு எது?**

**அ. சீனா ☑**

ஆ. ஜப்பான்

இ. இந்தியா

ஈ. தென் கொரியா



★ சீனா உலகின் முதல் இரட்டை–கோபுர சூரிய அனல்மின்னுற்பத்தி நிலையத்தை உருவாக்கியுள்ளது. இது ஆற்றல் செயல்திறனை 24% அதிகரிக்கிறது. இந்த நிலையம் இரண்டு 200–மீ உயர கோபுரங்களைக் கொண்டுள்ளது; அது சூரியனைக்கண்காணிக்கும் ஆயிரக்கணக்கான ஆடிகளுடன் 94% பிரதிபலிப்பு செயல்திறனை கொண்டுள்ளது. இரவில்கூட தொடர்ச்சியான மின்னுற்பத்தியைச் செயல்படுத்துவதற்காக இது அதீத வெப்பத்தைத் தக்கவைப்பதற்கு உருகிய உப்பைப் பயன்படுத்துகிறது. இந்தப் புதுமையான வடிவமைப்பு ஆற்றல் சேமிப்பை அதிகரிப்பதோடு சூரிய ஆற்றல் தொழில்நுட்பத்தை மேம்படுத்துகிறது.

**2. அண்மையில், அமெரிக்காவுக்கான இந்தியாவின் அடுத்த தூதராக நியமிக்கப்பட்டவர் யார்?**

அ. J N தீட்சித்

**ஆ. வினை மோகன் குவாத்ரா ☑**

இ. நிருபமா மேனன்

ஈ. சுரேந்திர குமார் அதானா



★ அமெரிக்காவுக்கான இந்தியாவின் அடுத்த தூதராக வினை மோகன் குவாத்ரா நியமிக்கப்பட்டுள்ளதாக வெளியுறவு அமைச்சகம் அறிவித்தது. ஓய்வுற்ற இந்திய வெளியுறவுத்துறை தூதரான, வினை மோகன் குவாத்ரா இந்தியாவின் அண்டை நாடான சீனா, அமெரிக்கா மற்றும் ஐரோப்பாவுடனான உறவுகளில் விரிவான நிபுணத்துவம் பெற்றவர்.

**3. கீழ்க்காணும் எந்த இரண்டு நீர்நிலைகளால் இராமர் பாலம் பிரிக்கப்பட்டுள்ளது?**

அ. வங்காள விரிகுடா மற்றும் அரபிக்கடல்

**ஆ. மன்னார் வளைகுடா மற்றும் பாக் நீரிணை ☑**

இ. செங்கடல் மற்றும் ஏடன் வளைகுடா

ஈ. மெக்ஸிக்கோ வளைகுடா மற்றும் கரீபியன் கடல்



★ ISRO அறிவியலாளர்கள் இராமேஸ்வரம் தீவையும் (இந்தியா) மன்னார் தீவையும் (இலங்கை) இணைக்கும் 48 கிமீ நீளமுள்ள தொடர்ச்சியான சுண்ணாம்புப் பாறைகளாலான இராமர் பாலத்தின் (ஆதாமின் பாலம்) நீரில் மூழ்கிய கட்டமைப்பை வெற்றிகரமாக வரைபடமாக்கினர். இந்தப் பாலம் மன்னார் வளைகுடா மற்றும் பாக் நீரிணையை பிரிக்கிறது. இதன் இடைப்பட்ட தூரத்தின் ஆழம் 1–10 மீட்டராக உள்ளது. இராமாயணம் மற்றும் இசுலாமிய புராணங்களில் புவியியல் சான்றுகளாக குறிப்பிடப்பட்டுள்ள இது, ஒரு முன்னாள் நில இணைப்பு ஆகும். இயற்கைப் பேரிடர்கள் காரணமாக 1480 ஆண்டுக்குப் பிறகு இது நீரில் மூழ்கியது.

**4. மாற்றியமைக்கப்பட்ட வட்டி மானியத் திட்டத்தைச் (MISS) செயல்படுத்துகிற இரண்டு நிறுவனங்கள் எவை?**

**அ. NABARD மற்றும் RBI ☑**

ஆ. RBI மற்றும் SEBI

இ. NABARD மற்றும் SEBI

ஈ. SEBI மற்றும் NITI Aayog

★ மாற்றியமைக்கப்பட்ட வட்டி மானியத் திட்டத்தின் (Modified Interest Subvention Scheme – MISS)கீழ் குறுகியகால பயிர்க்கடன்களின் உச்சவரம்பை ₹3 லட்சத்திலிருந்து ₹5 லட்சமாக உயர்த்த நடுவணரசு திட்டமிட்டுள்ளது. 2006–07 கரீப் பருவத்து முதல் செயல்படுத்தப்பட்ட MISS, விவசாயிகளுக்கு மானியத்துடன் கூடிய குறுகியகாலக்கடனை வழங்குகிறது. இது 2022–23 முதல் 2024–25 வரை செயலில் உள்ளது. பல்வேறு வங்கிகளுக்கு வட்டி மானியம் அளிக்கும் இத்திட்டத்தை NABARD மற்றும் இந்திய ரிசர்வ் வங்கி (RBI) நிர்வகிக்கிறது. தகுதியான பயனாளிகளில் சொந்த நிலம் வைத்துள்ள விவசாயிகள், குத்தகை விவசாயிகள் மற்றும் சுய–உதவிக்குழுக்கள் அடங்குவர்.

**5. பிரளய் ஏவுகணையை உருவாக்கிய அமைப்பு எது?**

**அ. DRDO ☑**

ஆ. ISRO

இ. JAXA

ஈ. CNSA



★ இந்தியாவின் பிரளய் ஏவுகணை மீதான ஆர்மீனியாவின் ஆர்வம் இந்தியாவிற்கு ஒரு குறிப்பிடத்தக்க வாய்ப்பை வழங்குகிறது. பிரளய் ஏவுகணை என்பது 350–500 கிமீ தாக்குதல் வரம்பையும், தரையிலிருந்து தரையிலுள்ள மற்றோர் இலக்கைத்தாக்கும் ஓர் ஏவுகணை ஆகும். இதனால் 500–1,000 கிலோ வரை எடையைச் சுமந்து செல்ல முடியும். பாதுகாப்பு தேவைகளுக்காக DRDOஆல் இது உருவாக்கப்பட்டது.

**6. அண்மையில், நடுவண் நிலக்கரி மற்றும் சுரங்க அமைச்சர் தேசிய நிலச்சரிவு முன்னெச்சரிக்கை மையத்தை கீழ்க்காணும் எந்த நகரத்தில் திறந்து வைத்தார்?**

அ. ஜெய்ப்பூர்

ஆ. போபால்

**இ. கொல்கத்தா ☑**

ஈ. வாரணாசி



★ கொல்கத்தா உப்பேரி நகரத்தில் உள்ள தாரித்ரி வளாகத்தில் உள்ள இந்திய புவியியல் ஆய்வு கழகத்தில், புதிதாக அமைக்கப்பட்டுள்ள தேசிய நிலச்சரிவு முன்னெச்சரிக்கை மையத்தை நடுவண் நிலக்கரி மற்றும் சுரங்கத்துறை அமைச்சர் தொடக்கி வைத்தார். 'பூஷான்கேத்' என்ற இணையதளம் மற்றும் 'பூஷ்கலான்' திறன்பேசி செயலியை அமைச்சர் அப்போது தொடக்கி வைத்தார். கடந்த 1851இல் நிறுவப்பட்ட GSI, ஆய்வுகள் மற்றும் ஆராய்ச்சிமூலம் புவி அறிவியல் தகவல் மற்றும் கனிமவள மதிப்பீட்டில் கவனம் செலுத்துகிறது. GSIஇன் தலைமையகம் கொல்கத்தாவில் உள்ளது. இந்தியா முழுவதும் ஆறு பிராந்திய அலுவலகங்கள் அதற்கு உள்ளன.

**7. Transiting Exoplanet Survey Satellite (TESS) என்பது எந்த விண்வெளி அமைப்பின் திட்டமாகும்?**

அ. CNSA

ஆ. JAXA

**இ. NASA ☑**

ஈ. ISRO



★ Transiting Exoplanet Survey Satellite (TESS) நடத்திய ஆய்வில், 4 பில்லியன் ஒளி ஆண்டுகள் தொலைவில் உள்ள விண்மீன் OJ 287இன் மையத்தில் இரண்டு கருந்துளைகள் இருப்பதை உறுதிசெய்தது. கடந்த 2018ஆம் ஆண்டில் NASAஆல் தொடங்கப்பட்ட TESS, பிரகாசமான விண்மீன்களைச்சுற்றியுள்ள புறக்கோள்களைத் தேடுகிறது. சிறிய பாறை முதல் பெரும்பாறைகள் வரை 410 உறுதிப்படுத்தப்பட்ட புறக்கோள்களை இது கண்டறிந்துள்ளது. TESS ஒரு தனித்துவமான உயர்மட்ட சுற்றுப்பாதையில் பூமியைச் சுற்றிவருகிறது.

**8. அண்மையில், "Towards Justice: Ending Child Marriage" என்ற அறிக்கையை வெளியிட்ட அமைப்பு எது?**

அ. UNICEF

ஆ. சர்வதேச குழந்தைப்பருவ கல்வி (CEI)

**இ. இந்திய குழந்தைகள் பாதுகாப்பு (ICP) ☑**

ஈ. தில்லி குழந்தைகள் நலக் கூட்டமைப்பு (DCCW)



★ இந்திய குழந்தைகள் பாதுகாப்பு (ICP) அமைப்பானது "நீதியை நோக்கி: குழந்தைத் திருமணத்தை முடிவுக்குக் கொண்டுவருதல்" என்ற தலைப்பிலான ஓர் அறிக்கையை வெளியிட்டுள்ளது. குழந்தைகள் உரிமைகள் மற்றும் பல நம்பிக்கை முன்முயற்சியின் ஒருபகுதியான ICP, குழந்தைகளிடம் தவறான நடத்தை, கடத்தல், எண்ம சுரண்டல் மற்றும் குழந்தைத்திருமணம் ஆகியவற்றுக்குத் தீர்வுகாண்கிறது. அஸ்ஸாமின் சட்டபூர்வ நடவடிக்கைகள் 2021–22 முதல் 2023–24 வரை குழந்தைத் திருமணங்களை 81% குறைத்துள்ளதாக இந்த அறிக்கை தெரிவிக்கிறது.

★ ஒவ்வொரு நிமிடமும் 3 சிறுமிகளுக்குத் திருமணம் ஆனபோதிலும் (மக்கள்தொகை கணக்கெடுப்பு–2011), தினமும் மூன்று வழக்குகள் மட்டுமே பதிவாகின்றன. 2023–24இல் 14,137 குழந்தைத் திருமணங்கள் தடுக்கப்பட்டுள்ளன. 92% வழக்கு நிலுவையில் இருப்பதால், அதைத்தீர்க்க 19 ஆண்டுகள் ஆகலாம் என இந்த அறிக்கை கூறுகிறது.

**9. *E.coli* என்றால் என்ன?**

அ. புரோட்டோசோவா

**ஆ. பாக்டீரியா ☑**

இ. பூஞ்சை

ஈ. வைரஸ்



★ பாரிஸின் தற்காலத்துக்கு ஒவ்வாத கழிவுநீர் அமைப்பு சென்னாற்றை *E.coli* என்ற தீங்கு விளைவிக்கும் பாக்டீரியா கொண்டு கடுமையாக மாசுபடுத்தியுள்ளது. 775 கிமீ நீளமுள்ள பிரான்சின் இரண்டாவது நீளமான ஆறான சென் (Seine), பாரிஸ் வழியாக 13 கிமீ பாய்ந்து ஆங்கிலக் கால்வாயில் கலக்கிறது. மனித மற்றும் விலங்குகளின் குடலில் காணப்படும் *E.coli* என்ற பாக்டீரியா, வயிற்றுக்கடுப்பு, வயிற்றுப்போக்கு மற்றும் சிறுநீரக செயலிழப்பு போன்ற கடுமையான அறிகுறிகளை ஏற்படுத்தும். இது அசுத்தமான உணவு மற்றும் மலங்கழிக்கப்பட்ட நீர்மூலம் பரவுகிறது.

**10. ஒவ்வோர் ஆண்டும் 'உலக செஸ் நாள்' அனுசரிக்கப்படுகிற தேதி எது?**

**அ. ஜூலை.20 ☑**

ஆ. ஜூலை.02

இ. ஜூன்.02

ஈ. ஜூன்.20



★ உலக செஸ் நாளானது ஆண்டுதோறும் ஜூலை.20 அன்று கொண்டாடப்படுகிறது. இது 1924இல் பாரிஸில் சர்வதேச செஸ் கூட்டமைப்பு (FIDE) நிறுவப்பட்டதைக் குறிக்கிறது. கடந்த 1966இல் UNESCOஆல் முன்மொழியப்பட்ட இந்நாள், சதுரங்கத்தின் அறிவுசார் நன்மைகள் மற்றும் கலாச்சார பன்முகத்தன்மையை அங்கீகரிக்கிறது. ஏறக்குறைய 1500 ஆண்டுகளுக்கு முன்பு இந்தியாவில் தோன்றிய செஸ், எல்லா வயதினருக்கும் பின்னணிக்கும் ஒரு விளையாட்டாக விளம்பரப்படுத்தப்படுகிறது. எட்டு நாடுகளைச் சேர்ந்த செஸ் அமைப்புகளால் FIDE நிறுவப்பட்டது.

**11. அண்மையில், "6Gக்கான கிளாசிக்கல் & குவாண்டம் கம்யூனிகேஷன்ஸ்" என்ற சிறப்பு மையம் திறக்கப்பட்ட இடம் எது?**

அ. கொல்கத்தா

**ஆ. சென்னை ☑**

இ. ஹைதராபாத்

ஈ. போபால்




★ சென்னையில் உள்ள ஐஐடி ஆராய்ச்சிப்பூங்காவில், "6Gக்கான கிளாசிக்கல் மற்றும் குவாண்டம் கம்யூனிகேஷன்ஸ்" குறித்த சிறப்பு மையத்தை தொலைத்தொடர்புத்துறை செயலர் டாக்டர் நீரஜ் மிட்டல் திறந்து வைத்தார். இது டெலிகாம் சென்டர்ஸ் ஆப் எக்ஸலன்ஸ் இந்தியாவின் துணை மையமாகும்; மேலும் இது 6G தொழில்நுட்பத்தின் வளர்ச்சிக்கு வகை செய்து தலைமை தாங்கும். இது முன்னோடியில்லாத வேகம், மிகக்குறைந்த தாமதம் மற்றும் மேம்பட்ட இணைப்பு ஆகியவற்றை உறுதியளிக்கும்.

★ இது உலகளாவிய 6G தரநிலைகள் மற்றும் உள்கட்டமைப்பை புதுமைப்படுத்தவும் வடிவமைக்கவும் கல்வி மற்றும் தொழில்துறை நிபுணர்களை ஒன்றிணைக்கும். இது 6G R&D திட்டங்களில் ஒத்துழைப்பை வளர்க்கும்.

**12. 2024 – இந்திய மொபைல் மாநாட்டின் கருப்பொருள் என்ன?**

**அ. The Future is Now ☑**

ஆ. New Digital Universe

இ. Inclusive Innovations

ஈ. IMAGINE: A new CONNECTED world Intelligent

INDIA MOBILE CONGRESS™

★ 2024 – இந்திய மொபைல் மாநாட்டின் கருப்பொருளான, "எதிர்காலம் இப்போது" என்ற தலைப்பை மத்திய தகவல் தொடர்பு & மேம்பாட்டுத்துறை அமைச்சர் ஜோதிராதித்ய சிந்தியா வெளியிட்டார். 6G தொழினுட்பம் மற்றும் தொலைத் தொடர்புகளில் இந்தியாவின் தலைமைத்துவத்தை இது எடுத்துக்காட்டுகிறது. இந்த நிகழ்வானது புதுமையான தீர்வுகளைக் காட்சிப்படுத்துவதோடு 1,000+ முதலீட்டாளர்களுடன் ஐந்நூற்றுக்கும் மேற்பட்ட சந்திப்புகளை நடத்தும். இணைய பாதுகாப்பை மேம்படுத்துவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்களும் இதன்சமயம் நடைபெறும்.

**13. 'Sagittarius A*' என்றால் என்ன?**

அ. சிறுகோள்

**ஆ. கருந்துளை ☑**

இ. AI மாதிரி

ஈ. ஆக்கிரமிப்புக்களை



★ அறிவியலாளர்கள் பால்வீதியில் ஒரு விண்மீன் கூட்டத்தின் மையத்தில், மீநிறைக் கருந்துளையான Sagittarius A* (Sgr A*)–க்கு அருகில் ஓர் இடைநிலை–நிறைக் கருந்துளையைக் கண்டுபிடித்துள்ளனர். Sgr A* விண்மீனின் மையத்தில், Sagittarius விண்மீன் தொகுப்பில் அமைந்துள்ள இது, சூரியனைவிட 4.3 மில்லியன் மடங்கு எடை கொண்டது. இது 14.6 மில்லியன் மைல்கள் (23.5 மில்லியன் கிமீ) விட்டம் கொண்டது. இது ஒரு வலுவான ரேடியோ அலை மூலமாகும்.

**14. அண்மையில் இராஜீவ் காந்தி சிவில் அபய ஹஸ்தம் என்ற திட்டத்தை அறிமுகப்படுத்திய மாநில அரசு எது?**

**அ. தெலுங்கானா ☑** ஆ. கர்நாடகா

இ. மகாராஷ்டிரா ஈ. கேரளா

★ தெலுங்கானா மாநில முதலமைச்சர் ரேவந்த் ரெட்டி, 2024–இராஜீவ் காந்தி சிவில் அபய ஹஸ்தம் என்ற திட்டத்தைத் தொடங்கினார். இது UPSC முதல்நிலைத்தேர்வில் தேர்ச்சிபெற்ற பொருளாதாரத்தில் நலிவடைந்த மாணாக்கர்க்கு (EWS/BC/SC/ST) ₹1 லட்சம் நிதியுதவியை வழங்குகிறது. இத்திட்டம் தெலுங்கானா மாநிலத்தில் அரசு ஊழியர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

**15. சமீபத்தில், தோட்டக்கலை அறிவியல் துறையில் அதன் முன்னோடி பணிக்காக சிறந்த தொழில்நுட்ப விருதைப் பெற்ற நிறுவனம் எது?**



அ. மத்திய துணை வெப்பமண்டல தோட்டக்கலை நிறுவனம்

**ஆ. இந்திய நறுமணப்பொருட்கள் ஆராய்ச்சி நிறுவனம் ☑**

இ. இந்திய தோட்டக்கலை ஆராய்ச்சி நிறுவனம்

ஈ. மத்திய பருத்தி தொழில்நுட்ப ஆராய்ச்சி நிறுவனம்

★ இந்திய நறுமணப்பொருட்கள் ஆராய்ச்சி நிறுவனமானது தோட்டக்கலை அறிவியலுக்கான சிறந்த தொழில்நுட்ப விருதைப் பெற்றது. ICARஇன் 96ஆவது நிறுவன நாளின்போது நடுவண் வேளாண் அமைச்சர் சிவராஜ் சிங் சௌகான் இவ்விருதை வழங்கினார். "உடன் கரையக்கூடிய மஞ்சள்–செறிவூட்டப்பட்ட மசாலா சுவையூட்டப்பட்ட பால் பொடிக்கான செயல்முறை"க்காக இந்திய நறுமணப்பொருட்கள் ஆராய்ச்சி நிறுவனம் இவ்விருதைப்பெற்றது. மலபார் பால் உற்பத்தியாளர்கள் யூனியனால் வணிகமயமாக்கப்பட்டதன் விளைவாக கோல்டன் பால் மற்றும் கோல்டன் மில்க் மிக்ஸ் தயாரிப்புகள் உருவாக்கப்பட்டன.

**16. ஏற்றுமதி செய்யப்பட்ட பொருட்களின்மீதான சுங்கங்கள் மற்றும் வரிகளை நீக்குதல் திட்டம் என்பது கீழ்க்காணும் எந்த அமைச்சகத்தின் WTO–இணக்க திட்டமாகும்?**

அ. பாதுகாப்பு அமைச்சகம்

ஆ. வேளாண் அமைச்சகம்

**இ. வணிக அமைச்சகம் ☑**

ஈ. நிதி அமைச்சகம்

वाणिज्य एवं उद्योग मंत्रालय
MINISTRY OF COMMERCE AND INDUSTRY
सत्यमेव जयते

★ தேயிலை தொழிற்துறையானது ஏற்றுமதி போட்டித்தன்மையை அதிகரிக்க ஏற்றுமதி செய்யப்பட்ட பொருட்களின் மீதான சுங்கங்கள் மற்றும் வரிகளை நீக்குதல் திட்டத்தின்கீழ் அதிக விகிதங்களை நாடுகிறது. நடுவண் வர்த்தக அமைச்சகத்தின் முதன்மையான ஏற்றுமதி ஊக்குவிப்புத் திட்டமான ஏற்றுமதி செய்யப்பட்ட பொருட்களின்மீதான சுங்கங்கள் மற்றும் வரிகளை நீக்குதல் திட்டம், உள்ளீடுகள் மீதான மத்திய, மாநில மற்றும் உள்ளூர் சுங்கங்களைத் திரும்பப்பெறுகிறது. 2019 செப்டம்பரில் அறிவிக்கப்பட்ட இது, WTO விதிமுறையைத் தொடர்ந்து MEIS திட்டத்துக்கு மாற்றாக கொண்டுவரப்பட்டது. கடந்த 2021 ஜன.01 முதல், தற்சார்பு இந்தியாவை இலக்காகக்கொண்டு, போட்டித் தன்மையை அதிகரிக்கவும், வேலைகளை உருவாக்கவும், பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்தவும் முக்கியமான ஏற்றுமதித் துறைகளை ஏற்றுமதி செய்யப்பட்ட பொருட்களின் மீதான சுங்கங்கள் மற்றும் வரிகளை நீக்குதல் திட்டம் ஆதரிக்கிறது.

**17. அண்மையில், அமெரிக்காவின் நியூபோர்ட்டில் உள்ள பன்னாட்டு டென்னிஸ் வாழ்த்தரங்கில் சேர்க்கப்பட்ட முன்னாள் இந்திய வீரர்கள் யாவர்?**



**அ. விஜய் அமிர்தராஜ் மற்றும் லியாண்டர் பயஸ் ☑**

ஆ. அஜய் இராமசாமி மற்றும் ரோகித் இராஜ்பால்

இ. மகேஷ் பூபதி மற்றும் ரோகன் போபண்ணா

ஈ. கரண் இரஸ்தோகி மற்றும் ஜெய் இராயப்பா

★ இந்திய டென்னிஸ் வீரர்களான லியாண்டர் பயஸ் மற்றும் விஜய் அமிர்தராஜ் ஆகியோர் பன்னாட்டு டென்னிஸ் வாழ்த்தரங்கில் சேர்க்கப்பட்ட முதல் இந்திய மற்றும் ஆசிய டென்னிஸ் வீரர்களாக ஆனார்கள். இதன்மூலம் பிரதிநிதித்துவப்படுத்தும் 28ஆவது நாடாக இந்தியா மாறியது. பிரித்தானிய விளையாட்டு ஊடகவியலாளரான ரிச்சர்ட் எவன்ஸும் இதில் சேர்க்கப்பட்டார். லியாண்டர் பயஸ் வீரர் பிரிவிலும் விஜய் அமிர்தராஜ் மற்றும் ரிச்சர்ட் எவன்ஸ் ஆகியோர் பங்களிப்பாளர் பிரிவிலும் அங்கீகரிக்கப்பட்டுள்ளனர். இந்த வாழ்த்தரங்கில் இப்போது 28 நாடுகளைச் சேர்ந்த 267 டென்னிஸ் வீரர்/வீராங்கனைகள் இடம்பெற்றுள்ளனர்.

**18. Rapid Apophis Mission for Space Safety (RAMSES) என்பது எந்த விண்வெளி முகமையின் புவிப் பாதுகாப்புத் திட்டமாகும்?**



அ. தேசிய வானியல் மற்றும் விண்வெளி நிர்வாகம் (NASA)

ஆ. இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (ISRO)

**இ. ஐரோப்பிய விண்வெளி முகமை (ESA) ☑**

ஈ. ஜப்பான் விண்வெளி ஆய்வு நிறுவனம் (JAXA)

★ ஐரோப்பிய விண்வெளி முகமையின் RAMSES விண்கலம் 2029இல் பூமியை நெருங்கிச்செல்லும், 'அபோபிஸ் – Apophis' என்ற சிறுகோளுடனேயே செல்லும். விண்வெளி பாதுகாப்பிற்கான Rapid Apophis Mission for Space Safety (RAMSES) ஆனது 2029 ஏப்.13 அன்று பூமியிலிருந்து 32,000 கிமீ தொலைவில் நெருங்கிவரும் அபோபிஸை இடைமறிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இரண்டு பில்லியன் மக்களால் நேரடியாக காணக்கூடிய இந்த அரிய நிகழ்வானது, பூமியின் ஈர்ப்பு விசையின் காரணமாக அபோபிஸின் மாற்றப்பட்ட பண்புகளை ஆய்வுசெய்ய ஆராய்ச்சியாளர்களுக்கு உதவுகிறது; மேலும், இது புவிப் பாதுகாப்பு திறன்களையும் மேம்படுத்துகிறது.

**19. பிரான்ஸின் அல்பானோ ஒலிவெட்டியுடன் இணைந்து, 2024 – ATP சுவிஸ் ஓபனில் ஆடவர் இரட்டையர் பட்டத்தை வென்ற இந்திய டென்னிஸ் வீரர் யார்?**



அ. சுமித் நாகல்

**ஆ. யூகி பாம்ப்ரி ☑**

இ. சோம்தேவ் தேவ்வர்மன்

ஈ. திக்விஜய் பிரதாப்

★ ஜூலை 15–21 வரை சுவிட்சர்லாந்தின் ஜிஸ்டாடில் நடைபெற்ற 2024 சுவிஸ் ஓபன் போட்டியில், இந்திய டென்னிஸ் வீரர் யூகி பாம்ப்ரி, பிரான்ஸின் அல்பானோ ஒலிவெட்டியுடன் இணைந்து ஆடவர் இரட்டையர் பட்டத்தை வென்றார். இந்த ATP–250 நிகழ்வு போட்டியின் 56ஆவது பதிப்பைக் குறித்தது. இவ்வெற்றி யூகி பாம்ப்ரியின் மூன்றாவது ATP பட்டமாகும். இந்த இணை இறுதிப்போட்டியில் ஃபேப்ரைஸ் மார்ட்டின் மற்றும் உகோ ஹம்பர்ட்டை தோற்கடித்தது. யூகி பாம்ப்ரி இதற்கு முன்பு 2023 மல்லோர்கா ஓபன் மற்றும் 2024 BMW ஓபன் பட்டங்களை வென்றுள்ளார்.

**20. ரேடாமின் முதன்மை நோக்கம் என்ன?**



அ. சமிக்ஞையின் வலிமையை அதிகரிப்பது

**ஆ. சுற்றுச்சூழல் கூறுகளிலிருந்து ரேடார் அல்லது அலைவாங்கி அமைப்பைக் காப்பது ☑**

இ. அலைவாங்கியின் அளவை அதிகரிப்பது

ஈ. அலைவாங்கியின் மின் நுகர்வைக் குறைப்பது

★ பாதுகாப்பு உலோகவியல் ஆராய்ச்சி ஆய்வகமானது ஏவுகணைகளுக்கான உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட சிலிக்கா ரேடாம்களை உருவாக்கியுள்ளது. ரேடாம்கள் என்பது ரேடார் அல்லது அலைவாங்கி அமைப்புகளை சுற்றுச்சூழல் கூறுகளிலிருந்து சமிக்ஞை பரிமாற்றத்தை பாதிக்காமல் காக்கும் ஒரு பாதுகாப்பு உறைகளாகும்.

★ திடமான (அ) நெகிழ்வான பொருட்களால் ஆன இது, சுற்றுச்சூழலின் தாக்கத்தை குறைப்பதன்மூலமும், மின்னணு உபகரணங்களை மறைப்பதன்மூலமும், அண்மைப்பொருட்களுடன் மோதுவதைத் தடுப்பதன்மூலமும் ரேடார்கள் / அலைவாங்கியின் செயல்திறனைப் பராமரிக்கின்றன. அவை அலைவாங்கியின் ஆயுள் மற்றும் செயல்திறனை உறுதிசெய்கின்றன.

### 21. '*Mesembrius bengalensis*' என்றால் என்ன?

அ. சிலந்தி

ஆ. தவளை

இ. மீன்

**ஈ. மிதவை ஈ ☑**



★ இரிஞ்ஞாலக்குடாவில் உள்ள கிறிஸ்ட் கல்லூரியில் உள்ள ஷட்பாடா பூச்சியியல் ஆராய்ச்சி ஆய்வகத்தின் (SERL) ஆராய்ச்சியாளர்கள், கேரளத்தின் கோலே சதுப்புநிலங்கள் மற்றும் விளகன் குன்னு மலைப்பகுதிகளில் '*Mesembrius bengalensis*' மற்றும் '*M. quadrivittatus*' ஆகிய இரண்டு புதிய மிதவை ஈ இனங்களைக் கண்டுபிடித்துள்ளதாக அறிவித்துள்ளனர். '*Syrphidae*' குடும்பத்தைச் சேர்ந்த மிதவை ஈக்கள், தோற்றத்தில் தேனீக்கள் அல்லது குளவிகள் போன்றே உள்ளன பிற மகரந்தச்சேர்க்கையாளர்களாகும். கேரள மாநிலத்தின் மிகப்பெரிய உவர் வெப்பமண்டல சுற்றுச்சூழல் அமைப்பான கோலே ஈரநிலங்கள், சாலக்குடி & பாரதப்புழை ஆறுகளுக்கு இடையில் அமைந்துள்ளது.

### 22. ஆண்டுதோறும் 'தேசியக்கொடி நாள்' அனுசரிக்கப்படுகிற தேதி எது?

**அ. ஜூலை.22 ☑**

ஆ. ஜூலை.26

இ. ஜனவரி.26

ஈ. ஜனவரி.22



★ ஜூலை.22 அன்று அனுசரிக்கப்படும் தேசியக்கொடி நாள், 1947ஆம் ஆண்டு விடுதலைக்கு சற்றுமுன்பு, ஆகஸ்ட்.15 அன்று அரசியலமைப்புச்சபையால் இந்தியாவின் மூவர்ணக்கொடி ஏற்றுக்கொள்ளப்பட்டதை நினைவுகூருகிறது. இந்த நாள் இந்தியாவின் வரலாற்றுச் சாதனை, பன்முகத்தன்மை மற்றும் ஒற்றுமையைக் கொண்டாடுகிறது. இது கல்விப்பயிலரங்குகள், பேச்சுக்கள் மற்றும் கண்காட்சிகள்மூலம் கொடியின் முக்கியத்துவத்தைப் புரிந்துகொள்வதை ஊக்குவிக்கிறது. மக்களாட்சி, ஒற்றுமை மற்றும் தேசியப்பெருமை ஆகியவற்றின் மதிப்புகளை வலியுறுத்துகிறது.

### 23. இந்திய ஆடவர் கால்பந்து அணியின் தலைமைப்பயிற்சியாளராக நியமிக்கப்பட்டுள்ள மனோலோ மார்க்வெஸ் சார்ந்த நாடு எது?

அ. ஆஸ்திரேலியா

**ஆ. ஸ்பெயின் ☑**

இ. பிரான்ஸ்

ஈ. ருமேனியா



★ இந்தியன் சூப்பர் லீக் (ISL) 2024–25 சீசனில் FC கோவாவுடன் தனது பங்கைத்தொடரும் அதேவேளையில், இந்திய ஆடவர் கால்பந்து அணியின் தலைமைப் பயிற்சியாளராக ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த மனோலோ மார்க்வெஸ் நியமிக்கப்பட்டுள்ளார். ISL சீசனுக்குப்பிறகு மனோலோ மார்க்வெஸ் தேசிய அணியின் தலைமைப் பயிற்சியாளர் பொறுப்பை முழுநேரமாக ஏற்றுக்கொள்வார். AIFF தலைவர் கல்யாண் சௌபே இந்த நியமனம் குறித்து அறிவித்தார்.

**24. அண்மையில், ஒத்துழைப்பு ஒப்பந்தத்தின்மூலம் கரிம வர்த்தகம் மற்றும் கடன் சரிசெய்தலுக்கான கூட்டு கடன் பொறிமுறையை நிறுவ திட்டமிட்டுள்ள இரு நாடுகள் எவை?**



அ. இந்தியா மற்றும் ஜப்பான் ☑

ஆ. இந்தியா மற்றும் ரஷ்யா

இ. இந்தியா மற்றும் சீனா

ஈ. இந்தியா மற்றும் ஆஸ்திரேலியா

★ கரிம வர்த்தகம் மற்றும் கடன் சரிசெய்தலுக்கான ஒரு கூட்டு கடன் பொறிமுறையை இந்தியாவும் ஜப்பானும் ஓர் ஒப்பந்தம்மூலம் நிறுவ திட்டமிட்டுள்ளன. இந்தக் கூட்டு கடன் பொறிமுறையானது பாரிஸ் ஒப்பந்தத்தின் 6.2ஆவது பிரிவின்கீழ் உருவாக்கப்படும். $CO_2$ உமிழ்வைக்குறைத்தல், கரிமிகா தொழில்நுட்பங்களை மேம்படுத்துதல் மற்றும் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிப்பதை இது தனது நோக்கமாகக் கொண்டிருக்கும். இக்கூட்டு கடன் பொறிமுறை $CO_2$ உமிழ்வு குறைப்பு வரவுகளை பகிர்வதற்கும், கரிநீக்கல் தொழில்நுட்பங்களின் பரவலுக்கும், மற்றும் தணிப்பு நடவடிக்கைகளைச் செயல்படுத்துவதற்கும் உதவும்.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. ஊரக மேம்பாட்டு அமைச்சக நிதி 12% அதிகரிப்பு.**

ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டத்துக்கு ₹86,000 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இது கடந்த பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்ட ₹60,000 கோடியிலிருந்து சுமார் 43% அதிகமாகும். பிரதமரின் கிராமப்புற வீட்டுவசதி திட்டத்துக்கான ஒதுக்கீடு ₹54,500 கோடியாக உள்ளது. கடந்த ஆண்டில் இத்திட்டத்துக்கு ₹54,487 கோடி ஒதுக்கப்பட்டது.

மகளிருக்கு அதிகாரமளிக்கும் "தேசிய வாழ்வாதார இயக்கம்–அஜீவிகா" திட்டத்துக்கு கடந்தாண்டைவிட கூடுதலாக ₹15,047 கோடி நிதி அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேபோல், மகளிர், சிறுமிகள் நலத் திட்டங்களுக்கு ₹3 லட்சம் கோடியும், பாதுகாப்புத் துறைக்கு ₹6.21 லட்சம் கோடியும், சுகாதாரத் துறைக்கு ₹90,528 கோடியும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

---

**2. 'கவச்' ரெயில் பாதுகாப்பு அமைப்பு நிறுவ முன்னுரிமை. ரெயில்வே ஒதுக்கீடு ₹2.6 இலட்சம் கோடி.**

2024–25ஆம் நிதியாண்டுக்கான மத்திய பட்ஜெட்டில் ரெயில்வே துறைக்கு ₹2,62,200 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதில் பெரும் பகுதி 'கவச்' தானியங்கி பாதுகாப்பு அமைப்பை நிறுவுதல் உள்பட ரெயில் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கும் செலவிடப்படும் என்று ரெயில்வே அமைச்சகம் தெரிவித்துள்ளது. தானியங்கி பாதுகாப்பு அமைப்பின் மேம்படுத்தப்பட்ட 'கவச் 4.0' பதிப்புக்கு ஆராய்ச்சி வடிவமைப்புகள் மற்றும் தரநிலை அமைப்பிடமிருந்து அண்மையில் ஒப்புதல் கிடைத்துள்ளது.

---

**3. ஒரு ரூபாயில் (₹1) வரவு / செலவு.**

**வரவினங்கள்...**

கடன்தொகை–27 காசு

நிறுவன வரி–17 காசு

வருமான வரி–19 காசு

சுங்க வரி– 4 காசு

கலால் வரி–5 காசு

சரக்கு மற்றும் சேவை வரி–18 காசு

வரி சாரா வருவாய்–9 காசு

கடன் சாரா மூலதன வரவு–1 காசு

**செலவினங்கள்...**

நடுவண் அரசு திட்டங்கள்–16 காசு

நிதி ஆணையம் மற்றும் பிற நிதிஒதுக்கீடு–9 காசு

நடுவண் அரசின் நிதியுதவி திட்டங்கள்–8 காசு

மாநிலங்களுக்கான வரி பகிர்வு–21 காசு

வட்டி செலுத்துகை–19 காசு

ஓய்வூதியம்–4 காசு

பாதுகாப்பு துறை–8 காசு

இதர செலவுகள்–9 காசு

மானியங்கள்–6 காசு

---

**4. தொழில்முனைவோருக்கான 'முத்ரா' கடன் வரம்பு இரட்டிப்பு.**

பெருநிறுவனங்கள் அல்லாத மற்றும் முறைசாரா குறு, சிறு தொழில்முனைவோருக்கு வருவாயைப் பெருக்கும் நடவடிக்கைகளுக்காக பிணை ஏதுமின்றி எளிதாக அதிகபட்சமாக ₹10 இலட்சம் வரை குறு கடன் பெறும் வகையில் கடந்த 2015 ஏப்.8ஆம் தேதி, 'பிரதமர் முத்ரா யோஜனா' (PMMY) என்ற திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. தற்போது, தொழில்முனைவோரை மேலும் ஊக்குவிக்கும் விதமாக, இத்திட்டத்தின்கீழ் ஏற்கனவே கடன்பெற்று வெற்றிகரமாக திரும்பச்செலுத்தியவர்களுக்கு, இந்தத் திட்டத்தின்கீழ் மீண்டும் கடன் பெறுவதற்கான கடன் உச்ச வரம்பு ₹20 லட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது.

---

**5. புதிய வருமான வரிவிதிப்பில் சலுகைகள்.**

புதிய வருமான வரிவிதிப்பு முறையில் தனிநபர்களுக்கு அளிக்கப்படும் நிலையான கழிவு 50% உயர்த்தப்பட்டு ₹50,000இலிருந்து ₹75,000ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது.

புதிய வருமான வரிவிதிப்பு முறையில் ₹3 லட்சம் வரை வருமான வரி விலக்கு தொடர்கிறது. அதே நேரத்தில் ₹3 லட்சம் முதல் ₹6 லட்சம் வரையிலான வருமானத்துக்கு 5% வரி என்பது மாற்றப்பட்டு, ₹3 லட்சம் முதல் ₹7 லட்சம் வரையிலான வருமானத்துக்கு 5% வரி விதிக்கப்பட்டுள்ளது. ₹7 லட்சம் முதல் ₹10 லட்சம் வரை 10%, ₹10 லட்சம் முதல் ₹12 லட்சம் வரை 15%, ₹12 லட்சம் முதல் ₹15 லட்சம் வரை 20%, ₹15 லட்சத்துக்கு மேலுள்ள வருமானத்துக்கு 30% என வருமான வரி விதிக்கப்படுகிறது.

**ஏஞ்சல் வரி நீக்கம்:** புத்தொழில் நிறுவனங்களில் முதலீடு செய்வோர்க்கு விதிக்கப்படும் ஏஞ்சல் வரி நீக்கப்படுவதாக பட்ஜெட்டில் அமைச்சர் நிர்மலா சீதாராமன் அறிவித்தார். இதன்மூலம் புத்தொழில் நிறுவனங்கள் அதிக முதலீடு பெற முடியும்.

---

**6. சீனாவில் ஷாங்காய் ஒத்துழைப்பு கூட்டமைப்பின் முதல் கூட்டுப்பயிற்சி: இந்தியா பங்கேற்பு.**

ஷாங்காய் ஒத்துழைப்பு கூட்டமைப்பில் (SCO) அங்கம் வகிக்கும் இந்தியா உள்பட அனைத்து உறுப்புநாடுகளின் பாதுகாப்புப் படையினர், சீனாவில் முதன்முறையாக கூட்டு பயங்கரவாத எதிர்ப்புப் பயிற்சியை மேற்கொண்டனர். 'இன்டராக்ஷன்–2024' என்னும் இந்தப் பயங்கரவாத எதிர்ப்புப் பயிற்சி வடமேற்கு சீனாவின் ஜின்ஜியாங் உய்குர் தன்னாட்சிப் பகுதியில் அண்மையில் நடத்தப்பட்டதாக அந்நாட்டின் பொதுப்பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்தது.

---

**7. பொருளாதார பேராசிரியர் குரியன் மறைவு.**

பொருளாதார பேராசிரியர் சி டி குரியன் (92) காலமானார். 'தமிழக கிராமப்புற மாறுதல்கள்' என்ற அவருடைய ஆய்வு தமிழ்நாட்டில் முக்கிய பங்களிப்பை செய்தது.

---

# IMPORTANT LINKS

TNPSC Current Affairs

https://www.winmeen.com/tnpsc-tamil-current-affairs/

Winmeen: Install the Winmeen App
Daily Free & Premium TNPSC Study Materials & Online Test

https://play.google.com/store/apps/details?id=co.robin.jbzwb

Winmeen: Winmeen TNPSC Test Series - Samacheer lesson Wise Test + Previous Year Model Test for TNPSC Group 1,2, 4 & VAO

https://wp.me/p7JanY-ag8

---

**1. அண்மையில், அமீபிய மூளையுறை–மூளையழற்சி என்ற அரிய நோயைத் தடுத்தல், கண்டறிதல் மற்றும் சிகிச்சை செய்வது குறித்த வழிகாட்டுதல்களை வெளியிட்டுள்ள மாநிலம் எது?**



அ. தமிழ்நாடு

**ஆ. கேரளா ☑**

இ. கர்நாடகா

ஈ. குஜராத்

★ அமீபிய மூளையுறை–மூளையழற்சி (*amoebic meningoencephalitis*) நோயைக் கண்டறிவதற்கும் நிர்வகிப்பதற்கும் கேரள மாநிலம் தொழில்நுட்ப வழிகாட்டுதல்களை வெளியிட்டுள்ளது. *Primary Amoebic Meningoencephalitis* (PAM) என்பது நன்னீரில் காணப்படும் *Naegleria fowleri* என்னும் மூளையை உண்ணும் அமீபாவால் ஏற்படும் ஓர் அரிய, ஆபத்தான தொற்றுநோய் ஆகும். இதன் அறிகுறிகளில் தலைவலி, காய்ச்சல், குமட்டல் மற்றும் வாந்தி ஆகியவை அடங்கும். PAM ஆனது 97%–க்கும் அதிகமான இறப்பு விகிதத்தைக் கொண்டுள்ளது. இந்த நோய்க்கு முறையான சிகிச்சை என்றவொன்று இதுவரை கண்டறியப்படவில்லை. இதற்கான பொதுவான மருந்தாக அமிபிசைடல் என்ற மருந்து தரப்படுகிறது.

**2. கிருஷ்ணராஜ சாகர் மற்றும் கபினி அணைகள் அமைந்துள்ள மாநிலம் எது?**



அ. தமிழ்நாடு

ஆ. மகாராஷ்டிரா

**இ. கர்நாடகா ☑**

ஈ. கேரளா

★ கர்நாடக மாநிலத்தின் கிருஷ்ணராஜ சாகர் (KRS) அணைக்கு 69,000 கனஅடிக்கு மேல் தண்ணீர் வருவதால், அணையின் கீழ்பகுதிகளில் உள்ள தாழ்வான பகுதிகளில் வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. மைசூரு மற்றும் சாம்ராஜ்நகர் மாவட்டங்களில் காவிரி ஆற்றங்கரையோர பகுதிகளில் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. KRS அணையின் நீர்வரத்து தொடர்ந்து இரண்டாவது நாளாக 60,000 கனஅடியைத் தாண்டியதால், 50,000 கனஅடி வீதம் தண்ணீர் அணையிலிருந்து வெளியேற்றப்பட்டது. கபினி அணைக்கும் அதிகளவு நீர்வரத்து பதிவாகியுள்ளது. நீர்மட்டம் உயர்ந்து வருவதால் ரங்கநதிட்டு பறவைகள் சரணாலயம் போன்ற சுற்றுலா தலங்கள் மூடப்பட்டுள்ளன.

**3. 2025இல் முதல் ஒலிம்பிக் இ–விளையாட்டுப் போட்டிகளை நடத்தவுள்ள நாடு எது?**




அ. ஈரான்

**ஆ. சவூதி அரேபியா ☑**

இ. ஜோர்டான்

ஈ. ஐக்கிய அரபு அமீரகம்

★ பன்னாட்டு ஒலிம்பிக் குழுமம் (IOC) மற்றும் சவூதி அரேபியாவின் தேசிய ஒலிம்பிக் குழுமம் (NOC) ஆகியவை சவூதி அரேபியா 2025ஆம் ஆண்டில் தொடக்க ஒலிம்பிக் இ–விளையாட்டுப்போட்டிகளை நடத்தும் என அறிவித்தன. இந்த வரலாற்று கூட்டாண்மை 12 ஆண்டுகளுக்கு நீடிப்பதோடு ஒலிம்பிக் விளையாட்டுகள் தொடர்ந்து நடைபெறுவதை உறுதிசெய்யும்.

**4. அண்மையில், மொத்த சுற்றுச்சூழல் உற்பத்தி குறியீட்டு எண்ணை அறிமுகப்படுத்திய முதல் மாநிலம் எது?**



அ. கேரளா

**ஆ. உத்தரகாண்ட் ☑**

இ. இமாச்சல பிரதேசம்

ஈ. மேகாலயா

★ சுற்றுச்சூழலில் மேம்பாட்டு நடவடிக்கைகளின் தாக்கத்தை அளவிடும் மொத்த சுற்றுச்சூழல் உற்பத்தி (GEI – Gross Environment Index) குறியீட்டை அறிமுகப்படுத்திய இந்தியாவின் முதல் மாநிலமாக உத்தரகாண்ட் ஆனது. அம்மாநில முதலமைச்சர் புஷ்கர் சிங் தாமியால் தொடங்கப்பட்ட GEP சமன்பாடு என்பது காற்று, நீர், மண் மற்றும் காடுகளின் தரக்குறியீடுகளை அடிப்படையாகக் கொண்டதாகும். இந்த முன்முயற்சியானது வளங்குன்றா வளர்ச்சி இலக்குகளில் உத்தரகாண்ட் மாநிலத்தின் பொருளாதாரம் & சூழலியலை சமநிலைப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

**5. அண்மையில், பன்னாட்டு ஒலிம்பிக் குழுமத்தால் ஒலிம்பிக் விருது பெற்ற இந்திய துப்பாக்கிச்சுடும் வீரர் யார்?**



அ. அபினவ் பிந்த்ரா ☑

ஆ. ஜஸ்பால் ராணா

இ. மனு பாக்கர்

ஈ. பிரஞ்சு சோமானி

★ இந்திய துப்பாக்கிச்சுடும் வீரரான அபினவ் பிந்த்ரா, ஒலிம்பிக் இயக்கத்திற்கு அவர் ஆற்றிய சிறந்த பங்களிப்பிற்காக ஒலிம்பிக் விருதை IOC வழங்கியுள்ளது. இதற்கான விழா ஆக.10ஆம் தேதி பாரிஸில் 142ஆவது IOC அமர்வின்போது நடைபெறும். இந்தியாவின் முதல் தனிநபர் ஒலிம்பிக் தங்கப்பதக்கம் வென்ற அபினவ் பிந்த்ரா, 2008 பெய்ஜிங் விளையாட்டுப் போட்டியில் ஆடவருக்கான 10 மீ ஏர் ரைபிள் போட்டியில் வென்றார். அவர் ISSF தடகளக்குழு மற்றும் IOC தடகள ஆணையத்திலும் பணியாற்றியுள்ளார்.

**6. மேல் கர்னாலி புனல்மின்சாரத் திட்டம் அமைந்துள்ள நாடு எது?**



அ. பூடான்

**ஆ. நேபாளம் ☑**

இ. இந்தியா

ஈ. மியான்மர்

★ இந்திய புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மேம்பாட்டு நிறுவனம் (IREDA) நேபாளத்தின் கர்னாலி ஆற்றில் 900 மெகாவாட் (MW) உற்பத்தித் திறன்கொண்ட மேல் கர்னாலி புனல்மின்சாரத்திட்டத்தில் ₹290 கோடி முதலீடு செய்யும். நேபாளம், இந்தியா மற்றும் வங்காளதேசம் ஆகிய நாடுகளுக்கு சுமார் 25 ஆண்டுகளுக்கு இந்த ஆற்றின்மூலம் மின்சாரம் வழங்கப்படும். கடந்த 2008இல் GMR மேல் கர்னாலி கர்னாலி புனல்மின்சார நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட இது, ஆண்டுக்கு 3,466 மில்லியன் அலகு மின்சாரத்தை உற்பத்தி செய்யும். இதன்மூலம் 2 மில்லியன் டன் பைங்குடில் வளி வெளியேற்றம் தடுக்கப்படும்.

**7. உலகளாவிய தெற்கில் உள்ள நாடுகளுக்கான திட்டங்களை உருவாக்குவதற்காக உலக அறிவுசார் சொத்து அமைப்புடனான ஒரு கூட்டு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட நிறுவனம் எது?**




அ. WAPCOS

ஆ. உலக வங்கி

**இ. NITI ஆயோக் ☑**

ஈ. ஐஐடி, தில்லி

★ ஜூலை.22 அன்று உயர்மட்ட WIPO தூதுக்குழு புது தில்லியில் NITI ஆயோக்கின் அடல் புத்தாக்க இயக்கத்துடன் (AIM) ஒரு கூட்டு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது. உலகளாவிய தெற்கில் புதுமை, தொழில்முனைவு மற்றும் அறிவு சார் சொத்துக்கான திட்டங்களை உருவாக்குவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது. ஓர் ஐநா நிறுவனமான WIPO, வருடாந்திர உலகளாவிய புத்தாக்க குறியீட்டை வெளியிடுகிறது. 2023இல், இந்தியா 40ஆவது இடத்தில் இருந்தது. 2022இல், இந்தியாவின் காப்புரிமை தாக்கல் வீதம் 31.6%ஆக வளர்ச்சியைக் கண்டது.

**8. ஒவ்வோர் ஆண்டும், 'தேசிய ஒலிபரப்பு நாள்' அனுசரிக்கப்படுகிற தேதி து?**

அ. ஜூலை.20

**ஆ. ஜூலை.23 ☑**

இ. ஜூலை.25

ஈ. ஜூலை.31




★ கடந்த 1927ஆம் ஆண்டு பம்பாயிலிருந்து இந்திய ஒலிபரப்பு நிறுவனத்தால் இதே நாளில் வானொலி ஒலிபரப்பு தொடங்கியதைக் குறிக்கும் வகையில், ஒவ்வொரு ஆண்டும் ஜூலை.23 அன்று இந்தியாவில் தேசிய ஒலிபரப்பு நாள் கொண்டாடப்படுகிறது. 1936ஆம் ஆண்டு அகில இந்திய வானொலி (AIR) எனப் பெயர் மாற்றப்பட்ட இது, உலகின் மிகப்பெரிய வலையமைப்புகளில் ஒன்றாக வளர்ந்தது. இந்தியாவை இணைப்பதிலும், செய்திகள், இசை மற்றும் கதைகளை வழங்குவதிலும், விடுதலைப் போராட்டம்போன்ற வரலாற்று நிகழ்வுகளில் முக்கியப்பங்கு வகிப்பதிலும் வானொலி முக்கியமானதாக விளங்கி வருகிறது.

**9. துருவ மற்றும் கடல் ஆராய்ச்சிக்கான தேசிய மையம் (NCPOR) என்பது எந்த அமைச்சகத்தின்கீழ் நிறுவப்பட்ட ஒரு தன்னாட்சிமிக்க ஆராய்ச்சி நிறுவனமாகும்?**

அ. துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழிப்போக்குவரத்து அமைச்சகம்

ஆ. பாதுகாப்பு அமைச்சகம்

**இ. புவி அறிவியல் அமைச்சகம் ☑**

ஈ. நகர்ப்புற மேம்பாட்டு அமைச்சகம்




★ துருவ மற்றும் பெருங்கடல் ஆராய்ச்சிக்கான தேசிய மையமானது (NCPOR) இந்தியப்பெருங்கடலில் உள்ள அரிய கனிமங்களை ஆராய்வதற்காக இந்தியாவின் ஆழ்கடல் பணிக்காக ஒரு புதிய கடல்சார் ஆராய்ச்சிக் கப்பலை உருவாக்கவுள்ளது. கடந்த 1998இல் நிறுவப்பட்ட NCPOR, துருவ மற்றும் தென்பெருங்கடல் ஆராய்ச்சிக்கான இந்திய நாட்டின் முன்னணி R&D நிறுவனமாகும். இது அண்டார்டிகா, ஆர்க்டிக், இமயமலை மற்றும் தென்பெருங்கடலில் மேற்கொள்ளப்படும் துருவப்பயணங்கள் மற்றும் அறிவியல் ஆராய்ச்சிகளை ஒருங்கிணைக்கிறது. இது நடுவண் புவி அறிவியல் அமைச்சகத்தின்கீழ் கோவாவின் வாஸ்கோடகாமாவில் அமைந்துள்ளது.

**10. சராய்தேவ் மேடாம் அமைந்துள்ள மாநிலம் எது?**

**அ. அஸ்ஸாம் ☑**

ஆ. மணிப்பூர்

இ. நாகாலாந்து

ஈ. சிக்கிம்



★ சராய்தேவ் மேடாம் ஆனது வடகிழக்கு இந்தியாவின் முதல் உலகப் பாரம்பரியச் சின்னமாகவும், கலாச்சாரப் பிரிவில் இந்தியாவின் 43ஆவது தலமாகவும் மாறவுள்ளது. அஸ்ஸாமில் அமைந்துள்ள இந்தப்புராதன இடுகாட்டு மேடுகள் அஹோம் மன்னர்கள் மற்றும் பிரபுக்களின் இடுகாட்டு மேடுகளாகும். இவை யாவும் 13–18ஆம் நூற்றாண்டுகளுக்கு முந்தையவை. அஹோம் சமூகத்தால் புனிதமானதாகப் போற்றப்படும், மேடாம்கள் பெரிய புல் மூடிய மலைகளை ஒத்திருக்கின்றன. காசிரங்கா மற்றும் மனாஸ் தேசியப்பூங்காக்கள் வடகிழக்கிந்தியாவில் அமைந்துள்ள இயற்கைப் பிரிவில் இடம்பெற்றுள்ள பிற உலகப் பாரம்பரிய தலங்களாகும்.

**11. '*S. thermophilus*' என்றால் என்ன?**

**அ. பாக்டீரியா ☑**

ஆ. வைரஸ்

இ. பூஞ்சை

ஈ. புரோட்டோசோவா



★ '*S. thermophilus*'ஐ ஆராயும்போது, இந்தியாவில் உள்ள அகர்கர் ஆராய்ச்சி நிறுவனத்தின் அறிவியலாளர்கள் ஒரு புதிய வகை லாக்டிக் அமில பாக்டீரியாவைக் கண்டுபிடித்தனர். செரிமான மண்டலத்தில் காணப்படும் இந்த கிராம்-நேரி, இயக்கமில்லா பாக்டீரியா, லாக்டிக் அமிலத்தை உற்பத்தி செய்வதோடு உணவு முறிவு, ஊட்டச்சத்து உறிஞ்சல் மற்றும் தீங்கு விளைவிக்கும் உயிரினங்களை எதிர்த்துப் போராடவும் உதவுகிறது. இது லாக்டோஸ் செரிமானத்தை மேம்படுத்தி, வீக்கத்தைக் குறைத்து குடல் அழற்சியின் அபாயத்தைக் குறைக்கிறது. '*S. thermophilus*' ஆனது தயிர் உற்பத்தி மற்றும் நார்ச்சத்துபோன்ற கூடுதல் சத்துக்களில் பயன்படுத்தப்படுகிறது.

**12. அண்மையில், 'உலகின் காடுகளின் நிலை – 2024' என்ற அறிக்கையை வெளியிட்ட அமைப்பு எது?**

அ. SEBI

ஆ. NABARD

**இ. உணவு மற்றும் உழவு அமைப்பு ☑**

ஈ. வேளாண் அமைச்சகம்

★ உணவு மற்றும் உழவு அமைப்பின் (FAO), "Accelerating forest solutions through innovation" என்ற கருப்பொருளின் அடிப்படையில் வெளியிடப்பட்ட "உலகின் காடுகளின் நிலை – 2024" என்ற அறிக்கை, 1990–2000ஆம் ஆண்டில் 15.8 மில்லியன் ஹெக்டேராக இருந்த காடழிப்பு விகிதம் 2015–2020 ஆம் ஆண்டில் 10.2 மில்லியன் ஹெக்டேராக குறைந்துள்ளதை எடுத்துக்காட்டுகிறது. சராசரி வருடாந்திர நிகர வனப்பரப்பு அதிகரிப்பில் (2010–2020) இந்தியா மூன்றாவது இடத்தில் உள்ளது. மரமல்லாத வனப்பொருட்கள் மட்டும் 275 மில்லியன் இந்திய வாழ்வாதாரங்களை ஆதரிக்கின்றன. தட்பவெப்பநிலை நெகிழ்தன்மை, உயிரியல் பொருளாதார மாற்றங்கள் மற்றும் மரமல்லா காடுகளின் ஊட்டச்சத்து நன்மைகளை மேம்படுத்துவதற்கு புத்தாக்கம் முக்கியமானது என இவ்வறிக்கை கூறுகிறது.

**13. களரிப்பயட்டு என்பது எந்த மாநிலத்தில் பிரபலமாக நடைமுறையில் உள்ள பாரம்பரிய தற்காப்புக் கலையாகும்?**

அ. தமிழ்நாடு

**ஆ. கேரளா ☑**

இ. அருணாச்சல பிரதேசம்

ஈ. பஞ்சாப்



★ இந்தியாவில் களரிப்பயட்டை ஊக்குவிக்கும் வகையில் இந்திய களரிப்பயட்டு கூட்டமைப்பு மண்டல விளையாட்டு கூட்டமைப்பாக அங்கீகரிக்கப்பட்டுள்ளதாக மத்திய இளையோர் விவகாரம் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் மக்களவையில் அறிவித்தார். கேரளாவில் தோன்றிய இந்தப் பாரம்பரிய தற்காப்புக்கலை, போர்வீரரான பரசுராமரால் நிறுவப்பட்டதாக நம்பப்படுகிறது. "களரிபயட்டு" என்ற சொல் "களரி" (போர்க்களம்) மற்றும் "பயட்டு" (சண்டை) ஆகிய இரு மலையாளச் சொற்களின் இணைவாகும்.

**14. அண்மையில், எரிகாற்றிழுப்பு முன்செலுத்தல் தொழில்நுட்பத்திற்கான (Air Breathing Propulsion Technology) இரண்டாவது பறப்புச்சோதனையை வெற்றிகரமாக நடத்திய அமைப்பு எது?**

அ. CNSA **ஆ. ISRO ☑**



இ. JAXA ஈ. NASA

★ வளிமண்டல உயிர்வளியை ($O_2$) ஆக்சிகரணியாகப் பயன்படுத்தும் எரிகாற்றிழுப்பு முன்செலுத்தல் தொழில்நுட்பத்தி–ற்கான (Air Breathing Propulsion Technology) இரண்டாவது பறப்புச் சோதனையை ISRO வெற்றிகரமாக நடத்தியது. இது ஏவுகலங்களை இலகுவாகவும் திறமையாகவும் ஆக்குகிறது. இருப்பினும், இத்தொழில்நுட்பமானது பூமியின் வளிமண்டலத்தின் அடர்த்தியான அடுக்குகளுக்குள் (70 கிலோமீட்டர் உயரம் வரை) மட்டுமே இயங்கும். இதற்கு அப்பால், ஏவுகலங்கள் எரிபொருள் மற்றும் ஏவுகலத்திலேயே உள்ள ஆக்சிகரணி ஆகிய இரண்டையுங்கொண்ட ஒரு நிலைக்கு மாறவேண்டும்.

**15. ஒவ்வோர் ஆண்டும், 'தேசிய வருமான வரி நாள்' அனுசரிக்கப்படுகிற தேதி எது?**




அ. 23 ஜூலை

**ஆ. 24 ஜூலை ☑**

இ. 25 ஜூலை

ஈ. 26 ஜூலை

★ 1860ஆம் ஆண்டில் சர் ஜேம்ஸ் வில்சன் முதன்முறையாக வருமான வரி விதித்ததை நினைவுகூரும் வகையில், 2010ஆம் ஆண்டு முதல், ஜூலை.24 அன்று இந்தியா தேசிய வருமான வரி நாளை அனுசரித்து வருகிறது. தேசிய வளர்ச்சிக்காக சரியான நேரத்தில் வரி செலுத்துவதன் முக்கியத்துவத்தை இந்த நாள் எடுத்துக்கூறுகிறது. முதல் முறையாக இந்நாள் அனுசரிக்கப்பட்ட 2010 என்பது வருமான வரி கொண்டுவரப்பட்ட 150ஆம் ஆண்டு நிறைவைக் குறித்தது. 1922இன் வருமான வரிச் சட்டம் நேரடி வரிகள் நிர்வாகத்திற்கான கட்டமைப்பை நிறுவியது; பின்னர் விடுதலைக்குப்பிறகு 1961 சட்டத்துடன் அது ஒருங்கிணைக்கப்பட்டது.

**16. MSME–TEAM முன்னெடுப்பின் முதன்மை இலக்கு என்ன?**

அ. MSMEகள் கடன் பெற உதவுவது

**ஆ. ONDC தளத்தில் ஐந்து லட்சம் MSMEகளை இணைப்பது ☑**

இ. MSME ஊழியர்களுக்கு பயிற்சியளிப்பது

ஈ. MSMEகளுக்கான புதிய சந்தைப்படுத்தல் உத்திகளை உருவாக்குவது

★ MSME அமைச்சகமானது RAMP திட்டத்தின்கீழ், "MSME வர்த்தக இயக்கம் மற்றும் சந்தைப்படுத்தல் முன்னெடுப்பு" (MSME–TEAM Initiative)ஐ அறிமுகப்படுத்தியுள்ளது. Open Network Digital Commerce (ONDC) தளத்தில் சேர்வதில் 2 ½ லட்சம் பெண்களுக்குச் சொந்தமான MSEகள் உட்பட ஐந்து லட்சம் MSME களுக்கு உதவுவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது. இது பட்டியல் தயாரிப்பு, போக்குவரவு மற்றும் பொதிகட்டல் ஆகியவற்றிற்கான நிதியுதவியை வழங்குகிறது. விழிப்புணர்வு பயிலரங்குகள் அடுக்கு 2 மற்றும் அடுக்கு 3 நகரங்களில் நடத்தப்படும். இதன் துணைத் திட்டம் 2027 மார்ச் வரை இயங்கும்.

**17. எண்ம அஞ்சல் குறியீட்டெண்ணின் (DIGIPIN) முதன்மை நோக்கம் என்ன?**




அ. புதிய அஞ்சல் குறியீட்டமைப்பை உருவாக்குவது

ஆ. பாரம்பரிய முகவரிகளை QR குறியீடுகளுடன் மாற்றுவது

இ. புதிய அஞ்சல் வரிசையாக்க முறையை செயல்படுத்துவது

**ஈ. இந்தியாவில் தரப்படுத்தப்பட்ட, நிலக்குறியீடு செய்யப்பட்ட முகவரி அமைப்பை நிறுவுவது ☑**

★ ஐஐடி ஹைதராபாத் உடன் இணைந்து உருவாக்கப்பட்ட நிலக்குறியிடப்பட்ட முகவரி அமைப்பான DIGIPINஇன் சோதனைப்பதிப்பை அஞ்சல் துறை அறிமுகப்படுத்தியுள்ளது. DIGIPIN ஆனது பொது & தனியார் சேவைகளுக்கான முகவரிகளை எளிதாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்த அமைப்பு பொதுச்சேவை வழங்கல், அவசரகால

பதிலளிப்பு மற்றும் போக்குவரவுச் செயல்திறனை மேம்படுத்தும். இது துல்லியமான முகவரி தேவைப்படும் பல்வேறு சூழலமைப்புகளுக்கு அடிப்படை அடுக்காகப் பயன்படுத்தப்படும்.

**18. மத்திய பட்ஜெட் 2024–25இன்படி, தேசிய தொழிற்துறை வழித்தட மேம்பாட்டுத்திட்டத்தின் (National Industrial Corridor Development Programme (NICDP))கீழ் எத்தனை தொழிற்பூங்காக்கள் நிறுவ அனுமதிக்கப்பட்டுள்ளன?**

அ. 10

ஆ. 01

**இ. 12 ☑**

ஈ. 21

★ மத்திய பட்ஜெட் 2024–25 ஆனது தேசிய தொழிற்துறை வழித்தட மேம்பாட்டுத்திட்டத்தின்கீழ் பன்னிரண்டு தொழிற் பூங்காக்களை உருவாக்க முன்மொழிகிறது. மாநிலங்கள் மற்றும் தனியார் துறையுடன் கூட்டிணைந்து நூறு (100) நகரங்களில் அல்லது அதற்கருகில் முதலீட்டுக்குத் தயாரான தொழிற்பூங்காக்களை அரசாங்கம் உருவாக்கும். ஆந்திர பிரதேச மாநிலத்தின் ஸ்ரீ சிட்டி SEZ போன்ற தொழிற்பூங்காக்கள், வேலைவாய்ப்புகளை உருவாக்குகின்றன, உள்கட்டமைப்பைப் பகிர்ந்துகொள்கின்றன, உற்பத்தித் திறனை அதிகரிக்கின்றன, மேலும் அயல்நாட்டு நேரடி முதலீட்டை ஈர்க்கின்றன, உற்பத்தி நடவடிக்கைகளை விரிவுபடுத்துகின்றன.

**19. மின்சார வாகனப் போக்குவரவு ஊக்குவிப்புத் திட்டத்தை தொடங்கிய எந்த அமைச்சகம் எது?**

அ. மின்சார அமைச்சகம்

ஆ. நகர்ப்புற மேம்பாட்டு அமைச்சகம்

**இ. கனரக தொழிற்துறை அமைச்சகம் ☑**

ஈ. பாதுகாப்பு அமைச்சகம்

★ EV பயன்பாட்டை விரைவுபடுத்துவதற்காக மத்திய கனரக தொழிற்துறை அமைச்சகத்தால் 2024 மார்ச்சில் Electric Mobility Promotion Scheme (EMPS) தொடங்கப்பட்டது; இது 2024 ஜூலை.31 அன்று முடிவடையும். ₹500 கோடி மதிப்பீட்டிலான இந்தத் திட்டம், இரு சக்கர வாகனங்கள் (தனியார், பெருநிறுவனம் மற்றும் வணிகம்) மற்றும் மூன்று சக்கர வாகன (இ–ரிக்ஷாக்கள் மற்றும் வண்டிகள் உட்பட) விற்பனையை ஊக்குவிக்கிறது. தகுதியான EVகள் இத்திட்டத்தின் செல்லுபடியாகும் காலத்திற்குள் தயாரிக்கப்பட்டு பதிவுசெய்யப்பட்டிருக்க வேண்டும்.

**20. பிரதமர் ஜன்ஜாதிய உன்னத் கிராம அபியானின் முதன்மை நோக்கம் என்ன?**

அ. நகர்ப்புறங்களில் உள்கட்டமைப்பை மேம்படுத்துதல்

**ஆ. பழங்குடி சமூகங்களின் சமூகப்பொருளாதார நிலையை மேம்படுத்துதல் ☑**

இ. கிராமப்புறங்களில் எண்மக்கல்வியறிவை மேம்படுத்துதல்

ஈ. வேளாண் உற்பத்தியை அதிகரித்தல்



★ பழங்குடியின சமூகங்களின் சமூகப்பொருளாதார நிலையை மேம்படுத்தும் நோக்கில், பிரதமர் ஜன்ஜாதிய உன்னத் கிராம் அபியானை மத்திய பட்ஜெட் அறிமுகப்படுத்தியது. கல்வி, சுகாதாரம் மற்றும் திறன் மேம்பாடு ஆகியவற்றில் கவனஞ்செலுத்தும், பழங்குடியினர் பெரும்பான்மையாக வசிக்கும் கிராமங்கள் மற்றும் ஆர்வமுள்ள மாவட்டங்களை இலக்காகக் கொள்ள இந்தத் திட்டம் செறிவூட்டல் அணுகுமுறையைப் (saturation approach) பயன்படுத்தும். இது 63,000 கிராமங்களை உள்ளடக்கியதாகவும், நாடு முழுவதும் உள்ள 5 கோடி பழங்குடியின மக்கள் பயன்பெறவும் திட்டமிட்டுள்ளது.

**21. அண்மையில், நடுவண் நிதி அமைச்சகத்தால் நமோ டிரோன் சகோதரிகள் திட்டத்திற்கு எவ்வளவு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது?**

அ. ரூ.600 கோடி **ஆ. ரூ.500 கோடி ☑**

இ. ரூ.400 கோடி ஈ. ரூ.300 கோடி



★ 2023–24 முதல் 2025–2026 வரை 15,000 பெண்கள் சுயஉதவிக்குழுக்களுக்கு டிரோன்களை வழங்குவதை நோக்கமாகக் கொண்ட நமோ டிரோன் சகோதரிகள் திட்டத்திற்கு நடுவண் நிதியமைச்சகம் ₹500 கோடி நிதியை ஒதுக்கீடு செய்துள்ளது. இந்த முன்னெடுப்பு பெண்களுக்கு உரம் தெளித்தல், விதை விதைத்தல் மற்றும் பயிர் கண்காணிப்புபோன்ற பணிகளில் விவசாயிகளுக்கு உதவுவதன்மூலம் டிரோன் ஓட்டிகளாக ஆவதற்கு பயிற்சி அளிக்கிறது. இந்தத் திட்டம் விவசாயத்தை நவீனமயமாக்கவும் மற்றும் உற்பத்தித்திறனை அதிகரிக்கவும் நோக்கம் கொண்டுள்ளது. ஒரு சுய உதவிக்குழுவிற்கு ₹8 இலட்சம் வரை டிரோன் செலவில் 80% மானியம் வழங்கப்படுகிறது.

**22. நக்சலைட்டுகளின் அச்சுறுத்தல்களுக்கு எதிராக, 'ஆபரேஷன் பிரஹார்' தொடங்கப்பட்ட மாநிலம் எது?**

அ. பீகார்

**ஆ. சத்தீஸ்கர் ☑**

இ. ஜார்கண்ட்

ஈ. ஒடிசா



★ சத்தீஸ்கர் மாநிலத்தின் முதல் பழங்குடியினத்து முதலமைச்சர் பதவியேற்றதிலிருந்து, நக்சலைட்டுகள் தொடர்பான நிகழ்வுகள் கொலைகள், கைதுகள் மற்றும் சரணடைதல் போன்றவை 5 மடங்கு அதிகரித்துள்ளன. இதனை அடுத்து "ஆபரேஷன் பிரஹார்" என்ற நடவடிக்கையை அம்மாநிலம் தொடங்கியுள்ளது. இது மாவோயிஸ்ட் தலைவர்களை குறிவைக்கும் கிளர்ச்சி எதிர்ப்பு முயற்சியாகும். கிளர்ச்சியாளர்களை ஒன்றுமில்லாமலாக்குவது மற்றும் ஆட்சேர்ப்பை சீர்குலைப்பதை நோக்கமாகக்கொண்ட இந்த நடவடிக்கை, அதிகப்படியான அரச அதிகாரம் மற்றும் செயற்கை மோதல்களை நடத்தியதுபோன்ற குற்றச்சாட்டுகளை எதிர்கொண்டது. மாவோயிஸ்ட் நடவடிக்கைகளில் ஈடுபடாத உள்ளூர் ஆதிவாசி சமூகங்கள்மீதான அதன் தாக்கம் கவலைகளை எழுப்புகிறது.

**23. 2024–25க்கான மத்திய பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்ட, 'தட்பவெப்பநிலை நிதி வகைபிரிப்பை' உருவாக்குவதன் நோக்கம் என்ன?**

அ. பசுமைப்பத்திரங்கள் போன்ற தட்பவெப்பநிலை தொடர்பான நிதிக்கருவிகளை வகைப்படுத்துவதற்கான தரநிலைகளை உருவாக்குவது

**ஆ. தட்பவெப்பநிலை மாற்றத்தை எதிர்கொள்வதற்காக நிலையான திட்டங்களை நோக்கிவரும் முதலீடுகளை வழிநடத்துவதில் முதலீட்டாளர்கள் மற்றும் வங்கிகளுக்கு வழிகாட்டுவது ☑**

இ. தட்பவெப்பநிலை மாற்றத்துடன் தொடர்புடைய அபாயங்களை நிர்வகிப்பது

ஈ. தட்பவெப்பநிலை நிதியத்தில் நாடுகளின் முன்னேற்றத்தைக் குறிப்பது

★ 2024–25ஆம் ஆண்டுக்கான மத்திய பட்ஜெட்டில், "தட்பவெப்பநிலை நிதி வகைபிரிப்பை" உருவாக்குவதாக நடுவண் நிதியமைச்சர் அறிவித்தார். இந்த அமைப்பு பொருளாதாரத்தின் சில பகுதிகளை நிலையான முதலீடுகளாக வகைப்படுத்துகிறது; தட்பவெப்பநிலை மாற்றத்தை எதிர்த்துப் போராடுவதற்கு முதலீட்டாளர்கள் மற்றும் வங்கிகளை வழிநடத்துகிறது. இது பசுமைப்பத்திரங்கள் மற்றும் தட்பவெப்பநிலை இடர் மேலாண்மை மற்றும் நிகர–சுழிய மாற்றம் திட்டமிடல்போன்ற தட்பவெப்பநிலை தொடர்பான நிதிக்கருவிகளுக்கான தரநிலைகளை அமைக்கிறது. தென்னாப்பிரிக்கா, தென்கொரியா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் போன்றவை ஏற்கனவே இதேபோன்ற நிதி வகைபிரித்தல்களை உருவாக்கியுள்ளன.


24. 'பழுப்புநிறக்குறளிகள்' என்றால் என்ன?

அ. வான் பொருள்கள் ☑

ஆ. ஆக்கிரமிப்பு தாவரங்கள்

இ. மீனினங்கள்

ஈ. காசநோய்க்கான மருந்துகள்



★ ஜேம்ஸ் வெப் விண்வெளி தொலைநோக்கியைப் பயன்படுத்தி ஆராய்ச்சியாளர்கள் பழுப்புநிறக்குறளிகளின் (Brown dwarfs) வளிமண்டல நிலைமைகளை ஆய்வுசெய்துள்ளனர். இந்த வான் பொருட்கள், கோள்களைவிட பெரியவை ஆனால் விண்மீன்களைவிட சிறியவை, பெரிய கோள்களுக்கும் சிறிய விண்மீன்களுக்கும் இடையில் உள்ளன. அவை விண்மீன்கள்போன்ற பொருட்களைத் திரட்டி சூடான சிலிக்கேட் மேக அமைப்புகளை உருவாக்குகின்றன. விண்மீன்களைப் போல் பழுப்புநிறக்குறளிகளால் அணுக்கரு இணைவைத் தாங்க முடியாது, அதனால்தான் அவை "தோல்வியுற்ற விண்மீன்கள்" என்று அழைக்கப்படுகின்றன. அவை ஹைட்ரஜன் மற்றும் ஹீலியத்தை கோள்களை விட சிறப்பாக தக்கவைத்து, குறைந்த உலோக உள்ளடக்கம் கொண்டவையாக உள்ளன.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. 'தமிழ்ப்புதல்வன்' திட்டத்தால் உயர்கல்வி சேர்க்கை 10% அதிகரிக்கும்: வழிகாட்டி நெறிமுறைகளை வெளியிட்டது தமிழ்நாடு அரசு.**

கல்லூரி மாணவர்களுக்கும் மாதம் ₹1,000 அளிக்கும் 'தமிழ்ப்புதல்வன்' என்ற திட்டத்தால், உயர்கல்வி சேர்க்கை 10% அதிகரிக்க வாய்ப்பு ஏற்படும் என்று தமிழ்நாடு அரசு நம்பிக்கை தெரிவித்துள்ளது. தமிழ்ப்புதல்வன் திட்டம் அடுத்த மாதம் நடைமுறைக்கு வரவுள்ளது. தமிழ்ப்புதல்வன் திட்டத்தில் இணையவுள்ள மாணவர்களின் எண்ணிக்கை தோராயமாக 3.28 லட்சம் இருக்கும் எனக்கண்டறியப்பட்டுள்ளது.

அதன்படி, 6 முதல் +2 வரை அரசு, அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயின்று உயர்கல்வி பயிலும் மாணவர்களுக்கு மாதம் ₹1,000 வழங்கப்படவுள்ளது. அரசு, அரசு உதவி பெறும் பள்ளிகளில் தமிழ் வழியில் பத்தாம் வகுப்பு வரை பயின்று, அதன்பிறகு தொழிற்பயிற்சி நிறுவனத்தில் பயிலும் மாணவர்களும் இந்தத்திட்டத்தின்கீழ் பயன்பெறத் தகுதி படைத்தவர்கள் ஆவர்.

ஒருங்கிணைக்கப்பட்ட பாடப்பிரிவில் பயிலும் மாணவர்கள், முதல் 3 ஆண்டுகள் மட்டும் திட்டத்தின்கீழ் ஊக்கத் தொகை பெற இயலும். பிற மாநிலங்களில் நடுவணரசின்கீழ் செயல்படும் IIT, NIT போன்ற நிறுவனங்களில் பயிலக் கூடிய, தமிழ்வழியில் பள்ளிப்பாடம் பயின்ற மாணவர்களும் விண்ணப்பிக்கலாம். இந்தத்திட்டத்தைச் செயல்படுத்தும் ஒருங்கிணைப்பு அலுவலராக, சமூகநல ஆணையர் செயல்படுவார்.

---

**2. கனிம வளம்: மாநிலங்களுக்கு வரிவிதிப்பு அதிகாரம் – உச்சநீதிமன்றம் தீர்ப்பு.**

"கனிம வளங்கள், கனிம வளம் நிறைந்த நிலங்கள்மீது வரி விதிக்க மாநில அரசுகளுக்கு சட்ட அதிகாரம் உள்ளது" என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்தது. மேலும், கனிம வளம் நிறைந்த நிலத்தை குத்தகைக்கு எடுப்பதற்கு மாநில அரசுக்கு வழங்கப்படும் உரிமத்தொகை என்பது வரி கிடையாது என்றும் உச்சநீதிமன்றம் குறிப்பிட்டது. தமிழ்நாடு அரசு எதிர் இந்தியா சிமெண்ட்ஸ் நிறுவனம் இடையேயான வழக்கில் இத்தீர்ப்பை உச்சநீதிமன்றம் வழங்கியுள்ளது.

அரசமைப்புச் சட்டத்தின் இரண்டாவது அட்டவணையின் 49ஆவது பிரிவின்படி, நிலம் மற்றும் கட்டடங்கள்மீது வரி விதிக்கும் அதிகாரம் மாநிலங்களுக்கு உண்டு. அதுபோல, 50ஆவது பிரிவு, கனிம மேம்பாடு சட்டத்தின்மூலம் நாடாளுமன்றம் விதித்துள்ள வரம்புகளுக்கு உட்பட்டு, கனிமங்கள்மீது வரி விதிக்க மாநிலங்களை அனுமதிக்கிறது. 54ஆவது பிரிவின்படி, கனிமங்கள்மீது வரி விதிக்கும் அதிகாரம் நாடாளுமன்றத்துக்கு இல்லை.

**3. பாரீஸ் ஒலிம்பிக்கில் முதல் தங்கப்பதக்கத்தை வென்றது சீனா!**

பாரீஸ் ஒலிம்பிக் தொடரில் 10 மீட்டர் ரைபிள் கலப்பு இரட்டையர் பிரிவில் சீனா தங்கப்பதக்கம் வென்றுள்ளது. இதன் மூலம் பாரீஸ் ஒலிம்பிக்கில் சீனா முதல் தங்கத்தை வென்றது.

# IMPORTANT LINKS

TNPSC Current Affairs

https://www.winmeen.com/tnpsc-tamil-current-affairs/

Winmeen: Install the Winmeen App
Daily Free & Premium TNPSC Study Materials & Online Test

https://play.google.com/store/apps/details?id=co.robin.jbzwb

Winmeen: Winmeen TNPSC Test Series - Samacheer lesson Wise Test + Previous Year Model Test for TNPSC Group 1,2, 4 & VAO

https://wp.me/p7JanY-ag8

**1. மத்திய பட்ஜெட் 2024-25இன்படி, 2024-25 நிதியாண்டில் நடுவண் ரெயில்வே அமைச்சகம் எவ்வளவு நிதி ஒதுக்கீடு பெற்றுள்ளது?**

அ. ரூ.1.78 லட்சம் கோடி

**ஆ. ரூ.2.55 லட்சம் கோடி ☑**

இ. ரூ.4.34 லட்சம் கோடி

ஈ. ரூ.3.78 லட்சம் கோடி

★ 2024-25 நிதியாண்டில், மத்திய பட்ஜெட்டில் ரெயில்வே அமைச்சகத்திற்கு இதுவரை இல்லாத அளவு ₹2.55 லட்சம் கோடி ஒதுக்கப்பட்டுள்ளது; இது முந்தைய ஆண்டின் ₹2.41 லட்சம் கோடியை ஒப்பிடுகையில் 5.85% அதிகமாகும். இக்குறிப்பிடத்தக்க நிதி ஊக்கம் இருந்தபோதிலும், பொருளாதார ஆய்வு 2023-24 முக்கிய பாதுகாப்பு முயற்சிகளில் வரையறுக்கப்பட்ட முன்னேற்றத்தை எடுத்துக்காட்டுகிறது; இதில் தானியங்கி ரெயில் பாதுகாப்பு அமைப்பான 'கவாச்' ஐ பயன்படுத்துதல் மற்றும் ரெயில் நிலையங்களில் சமிக்ஞை அமைப்புகளை மாற்றியமைத்தல் ஆகியவை அடங்கும்.

**2. மத்திய பட்ஜெட் 2024-25இன்படி, 'கேலோ இந்தியா' முன்னெடுப்புக்கு எவ்வளவு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது?**

அ. ரூ.600 கோடி

ஆ. ரூ.800 கோடி

**இ. ரூ.900 கோடி ☑**

ஈ. ரூ.400 கோடி

★ 2024-25 மத்திய பட்ஜெட்டில், கேலோ இந்தியா முன்னெடுப்பு ₹900 கோடியைப் பெற்றது; இது முந்தைய ஆண்டு ஒதுக்கப்பட்ட ₹880 கோடியைவிட ₹20 கோடி அதிகமாகும். அடிமட்ட விளையாட்டு மேம்பாட்டில் கவனம் செலுத்தும் கேலோ இந்தியாவுக்கு, அரசாங்கம் தொடர்ந்து முன்னுரிமை அளித்து வருகிறது. கடந்த 2018இல் தொடங்கப்பட்ட இது, கேலோ இந்தியா பல்கலை விளையாட்டுகள், குளிர்கால விளையாட்டுகள் மற்றும் பாரா விளையாட்டுகள் என விரிவுபடுத்தப்பட்டுள்ளது. விளையாட்டு வீரர்களை ஆதரிப்பதற்காக பல மாநில சிறப்பு மையங்கள் நிறுவப்பட்டுள்ளன.

**3. 'ஹென்லே கடவுச்சீட்டு குறியீடு – 2024'இல் இந்தியாவின் தரநிலை என்ன?**

அ. 25ஆவது

ஆ. 52ஆவது

**இ. 82ஆவது ☑**

ஈ. 28ஆவது



★ இந்தோனேசியா, மாலத்தீவு மற்றும் தாய்லாந்து உட்பட 58 நாடுகளுக்கு நுழைவு இசைவு இல்லாத அணுகலை வழங்கி ஹென்லே கடவுச்சீட்டு குறியீடு – 2024இல் இந்திய கடவுச்சீட்டு 82ஆவது இடத்தைப் பிடித்துள்ளது. 195 நாடுகளுக்கு நுழைவு இசைவு இல்லாத அணுகலை வழங்கி, இக்குறியீட்டில் சிங்கப்பூர் முதலிடத்தில் உள்ளது. அதே நேரத்தில் பிரான்ஸ், இத்தாலி, ஜெர்மனி, ஸ்பெயின் மற்றும் ஜப்பான் ஆகியவை 192 நாடுகளுக்கு நுழைவு இசைவு இல்லாத அணுகலை வழங்கி இரண்டாவது இடத்தில் உள்ளன. ஆஸ்திரியா, பின்லாந்து, அயர்லாந்து, லக்சம்பர்க், நெதர்லாந்து, தென்கொரியா மற்றும் சுவீடன் ஆகியவை 191 நாடுகளுடன் மூன்றாமிடத்தைப் பகிர்ந்துகொள்கின்றன. இங்கிலாந்து, நியூசிலாந்து, நார்வே, பெல்ஜியம், டென்மார்க் மற்றும் சுவிட்சர்லாந்து ஆகிய நாடுகள் 190 நாடுகளுடன் மூன்றாமிடத்தைப் பகிர்ந்துகொள்கின்றன.

**4. 'வரி நிகழ்வு' என்றால் என்ன?**

அ. வரி விகிதங்களை அமைக்கும் செயல்முறை

**ஆ. பங்காளர்களுக்கிடையே வரி சுமையைப் பிரித்தல் ☑**

இ. வரி வசூலிக்கும் முறைகள்

ஈ. வரி சட்டத்தின் வரலாறு

★ சரக்குகள் மற்றும் சேவைகள் வரி (GST) சாமானிய மக்களின் வரிச்சுமையை குறைத்துள்ளதாக நடுவண் அரசு தெரிவித்துள்ளது. 'வரி நிகழ்வு' என்பது வாங்குபவர்கள் மற்றும் விற்பவர்கள்போன்ற பங்காளரிடையே வரிச்சுமை எவ்வாறு பிரிக்கப்படுகிறது என்பதைக் குறிக்கிறது. இதில் இரண்டு வடிவங்கள் உள்ளன: சட்டரீதியான நிகழ்வுகள்: வரி செலுத்துவதற்கு யார் சட்டப்பூர்வமாக பொறுப்பு என்பதை தீர்மானிக்கிறது மற்றும் பொருளாதார நிகழ்வுகள்: இது பொருளாதார நலன் மீதான இறுதிச்சுமையை பிரதிபலிக்கிறது.

**5. இந்தியாவில், 'கார்கில் வெற்றி நாள்' அனுசரிக்கப்படுகிற தேதி எது?**




அ. 25 ஜூலை

**ஆ. 26 ஜூலை ☑**

இ. 27 ஜூலை

ஈ. 28 ஜூலை

★ ஜூலை.26 அன்று அனுசரிக்கப்பட்ட கார்கில் வெற்றி நாளானது 1999 கார்கில் மோதலில் பாகிஸ்தானுக்கு எதிரான இந்திய இராணுவத்தின் வெற்றியை நினைவுகூருகிறது. அதன் 25ஆவது ஆண்டு நிறைவையொட்டி, லடாக்கில் உள்ள டிராஸ் செக்டாரில் கார்கில் போர் நினைவிடத்தில் தியாகிகளுக்கு மரியாதை செலுத்த பிரதமர் நரேந்திர மோதி வருகை தந்தார். 1999 மே.08 முதல் ஜூலை.26 வரை நடைபெற்ற கார்கில் போரில் பாகிஸ்தான் படைகள் முஜாகிதீன் போல் மாறுவேடமிட்டு இந்திய நிலைகளில் ஊடுருவின. இந்தியாவின் 'ஆபரேஷன் விஜய்' அவர்களை வெற்றிகரமாக வெளியேற்றியது.

**6. கான் குவெஸ்ட்–2024 என்ற பன்னாட்டு கூட்டு இராணுவப்பயிற்சியின் 21ஆவது பதிப்பை நடத்துகிற நாடு எது?**



அ. சீனா

ஆ. இந்தியா

**இ. மங்கோலியா ☑**

ஈ. ஜப்பான்

★ 2024 ஜூலை.27 முதல் ஆகஸ்ட்.09 வரை மங்கோலியாவின் உலான்பாதரில் நடந்த 21ஆவது கான் குவெஸ்ட் பன்னாட்டு இராணுவப் பயிற்சியில் இந்திய ராணுவம் பங்கேற்றுள்ளது. அமெரிக்க இந்தோ–பசிபிக் தலைமையின் இணை அனுசரணையுடன் மங்கோலிய ஆயுதப்படைகளால் நடத்தப்படும் கான் குவெஸ்ட் பயிற்சி, பிராந்திய அமைதி மற்றும் பாதுகாப்பை மேம்படுத்துகிறது. ஆரம்பத்தில் 2003இல் அமெரிக்கா–மங்கோலியா இருதரப்புப் பயிற்சியாக நடத்தப்பட்ட இது, 2008இல் பலதரப்புப்பயிற்சியாக மாற்றப்பட்டது. இந்தப் பயிற்சி அமைதிகாக்கும் நடவடிக்கைகளில் கவனம் செலுத்துவதோடு எதிர்கால ஐநா அமைதிகாக்கும் பணிகளுக்கான திறன்களையும் மேம்படுத்துகிறது.

**7. அண்மையில், நாட்டின் 500ஆவது சமூக வானொலி நிலையம் திறக்கப்பட்ட இடம் எது?**



அ. ஷில்லாங்

**ஆ. ஐஸ்வால் ☑**

இ. கோஹிமா

ஈ. காங்டாக்

★ 10ஆவது தேசிய சமூக வானொலி விருதுகளை நடுவண் தகவல் மற்றும் ஒலிபரப்புத் துறை அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் அறிவித்தார். மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்புத் துறை இணையமைச்சர், மிசோரம் முதலமைச்சர் லால்டுகோமா ஆகியோர் முன்னிலையில், இந்தியாவின் 500ஆவது சமூக வானொலி நிலையத்தையும் அமைச்சர்

தொடக்கி வைத்தார். 'அப்னா ரேடியோ 90.0 FM' நிலையம் இந்திய மக்கள் தொடர்பு நிறுவனத்தால் நடத்தப்படும் ஒரு நிலையமாகும்.

★ இது வானிலை அறிவிப்புகள், அரசு திட்டங்கள் மற்றும் வேளாண் தகவல்களை வழங்கும். சமூக வானொலிகள், பொது மற்றும் வணிக வானொலியைப் போலல்லாமல், ஊட்டச்சத்து மற்றும் ஆரோக்கியம்போன்ற பிரச்சினைகளில் கவனம் செலுத்தி, உள்ளூர் சமூகங்களால் உள்ளூர் மொழிகளில் இயக்கப்படும் தாழ்திறன் நிலையங்கள் ஆகும். அவை கல்வி நிறுவனங்கள், சமூகஞ்சார் அமைப்புகள், பதிவு செய்யப்பட்ட சங்கங்கள் மற்றும் அறக்கட்டளைகளால் அமைக்கப்படலாம்.

★ சமூக வானொலி நிலையங்களிடையே, புதுமை & நலன்மிகு போட்டியை ஊக்குவிப்பதற்காக, அமைச்சகம் 2011–12ஆம் ஆண்டில் தேசிய சமூக வானொலி விருதுகளை நிறுவியது. இவ்வாண்டுக்கான விருதுகளில், "மிகவும் புதுமையான சமூக ஈடுபாடு விருது"க்கு மதுரை வயலக வானொலிக்கு இரண்டாம் பரிசு அறிவிக்கப்பட்டுள்ளது. "உள்ளூர் கலாச்சாரத்தை ஊக்குவித்தல் விருது" பிரிவில் 2ஆம் பரிசு நீலகிரி வானொலிக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

**8. சமீபத்தில், உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட முதல் தல்வார் வகை போர்க்கப்பலான 'திரிபுத்'ஐ அறிமுகப்படுத்திய கப்பல்கட்டும் தளம் எது?**

அ. கொச்சின் கப்பல்கட்டும் நிறுவனம்

ஆ. மசாகன் கப்பல்கட்டும் நிறுவனம்

இ. ஹிந்துஸ்தான் கப்பல்கட்டும் நிறுவனம்

**ஈ. கோவா கப்பல்கட்டும் நிறுவனம் ☑**



★ இந்திய கடற்படைக்காக கோவா கப்பல்கட்டும் நிறுவனத்தின் கட்டுமானத்தில் உள்ள இரண்டு மேம்பட்ட போர்க் கப்பல்களில் முதலாவது கப்பல், கோவாவில் பணியில் சேர்க்கப்பட்டது. இந்தக் கப்பலுக்கு வலிமைமிக்க அம்பைக் குறிக்கும், 'திரிபுத்' என்று பெயரிடப்பட்டுள்ளது.

★ இரண்டு திரிபுத் நவீன போர்க்கப்பல்களை உருவாக்குவதற்கான ஒப்பந்தம் மத்திய பாதுகாப்பு அமைச்சகம், கோவா கப்பல் கட்டும் நிறுவனத்திற்கு இடையே 2019இல் கையெழுத்தானது. இக்கப்பல் எதிரிகளின் மேற்பரப்பு கப்பல்கள், நீர்மூழ்கிக்கப்பல்கள், விமானந்தாங்கி கப்பல்களுக்கு எதிரான போர் நடவடிக்கைகளுக்காக வடிவமைக்கப்பட்டு உள்ளது. 'திரிபுத்' வகை கப்பல்கள் 124.8 மீ நீளமும் 15.2 மீ அகலமும் கொண்டவை. அவற்றின் இடப்பெயர்ச்சி தோராயமாக 3600 டன் ஆகும். வேகம் அதிகபட்சமாக 28 கடல் மைல்கள். இந்தக் கப்பல்களில் மேம்பட்ட இரகசிய அம்சங்கள், நவீன ஆயுதங்கள், சென்சார்கள், இயங்குதள மேலாண்மை அமைப்புகள் பொருத்தப்பட்டுள்ளன.

★ கோவாவில் கட்டப்படும், 'திரிபுத்' வகை கப்பல்கள் ரஷ்யாவிலிருந்து பெறப்பட்ட டெக் மற்றும் தல்வார் வகை கப்பல்களை மாதிரியாகக்கொண்டுள்ளன. இப்போர்க்கப்பல்கள் முதன்முறையாக இந்திய கப்பல்கட்டும் தளத்தால் உள்நாட்டிலேயே கட்டப்படுகின்றன.

**9. 'NPS வாத்சல்யா' என்ற திட்டத்தின் முதன்மை நோக்கம் என்ன?**




அ. பழங்குடியினக் குடும்பங்களுக்கு மருத்துவக் காப்பீடு வழங்குவது

ஆ. உயர்கல்விக்காக மாணவர்களுக்கு கல்விக்கடன் வழங்குவது

**இ. பெற்றோர்கள் & பாதுகாவலர்கள் தங்கள் சிறார்களின் எதிர்கால நிதித்தேவைகளைத் திட்டமிட உதவுவது ☑**

ஈ. பெற்றோரின் ஓய்வூதியத்தைத் திட்டமிடுவது

★ சிறுவர்களுக்கென, 'வாத்சல்யா' எனப்படும் பங்களிப்புடன் கூடிய புதிய ஓய்வூதிய திட்டம் செயல்படுத்தப்படும் என, 2024–25ஆம் ஆண்டுக்கான மத்திய பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கான பங்களிப்பை சிறுவர்களின் பெற்றோர் அல்லது பாதுகாவலர்கள் செலுத்துவார்கள் என நடுவண் நிதியமைச்சர் தெரிவித்துள்ளார். இத்திட்டத்தில் இணையும் சிறுவர்கள் பருவ வயதை எட்டும்போது, அவர்களது கணக்கை வழக்கமான தேசிய ஓய்வூதிய திட்ட கணக்காக மாற்றிக்கொள்ளலாம்.

**10. 2024-25 மத்திய பட்ஜெட்டில் குறிப்பிடப்பட்ட, 'திறன் கடன் திட்டத்தின்' முதன்மை நோக்கம் என்ன?**

அ. உயர்கல்விக்கான உதவித்தொகை வழங்குதல்

**ஆ. திறன் மேம்பாட்டு படிப்புகளுக்கு நிறுவனஞ்சார் கடன் வழங்குதல் ☑**

இ. புத்தொழிலுக்கு நிதியளித்தல்

ஈ. திறமையான தொழிலாளர்களுக்கு வீட்டுக்கடன்களை வழங்குதல்



★ நிதியமைச்சர் மாதிரி திறன் கடன் திட்டத்தில் திருத்தம் செய்வதாக அறிவித்தார். இதன்மூலம் இத்திட்டத்தின்கீழ் ₹7.5 லட்சம் வரையிலான கடனை அரசு ஊக்குவித்த நிதி உத்தரவாதத்தின் ஆதரவுடன் பெறமுடியும். 2015 ஜூலை மாதத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட இந்தத்திட்டம், NSQF-இணக்கமான பயிற்சி நிறுவனங்களால் நடத்தப்படும் தேசிய தொழில்கள் தரநிலைகள் மற்றும் தகுதித்தொகுப்புகளுடன் இணைந்த திறன் மேம்பாட்டுப் படிப்புகளுக்கு நிறுவனஞ் சார் கடன் வழங்குகிறது. இது அனைத்து இந்திய வங்கிகள் சங்கத்தின் உறுப்பினர் வங்கிகள் மற்றும் இந்திய ரிசர்வ் வங்கி-ஆலோசனை பெற்ற நிதி நிறுவனங்களுக்கும் பொருந்தும்.

**11. மின்னணு மற்றும் தகவல் தொடர்பு அமைச்சகத்தின் 2024-25ஆம் ஆண்டிற்கான IndiaAI பணிக்கு எவ்வளவு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது?**

**அ. ரூ.551 கோடி ☑**

ஆ. ரூ.558 கோடி

இ. ரூ.547 கோடி

ஈ. ரூ.548 கோடி

INDIAai
A MEITY, NEGD & NASSCOM INITIATIVE

★ மத்திய பட்ஜெட் 2024-25இல், மின்னணு மற்றும் தகவல் தொடர்பு அமைச்சகத்தின் 2024-25க்கான IndiaAI பணிக்காக ₹551 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்திய அரசாங்கத்தால் தொடங்கப்பட்ட, 'IndiaAI' பணி, பொருளாதார வளர்ச்சியை அதிகரிக்க, நிர்வாகத்தை மேம்படுத்த, குடிமக்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்த செயற்கை நுண்ணறிவை (AI) மேம்படுத்துவதில் கவனஞ்செலுத்துகிறது.

★ அதிநவீன AI உள்கட்டமைப்பை மேம்படுத்துதல், AI பயன்பாடுகளை ஊக்குவித்தல் மற்றும் AI கல்வி மற்றும் புத தொழில்களை ஆதரிப்பதன்மூலம் AI கண்டுபிடிப்பு மற்றும் பயன்பாடு ஆகியவற்றில் இந்தியாவை உலகளாவிய தலைமையாக நிலைநிறுத்துவதை இது தனது நோக்கமாகக் கொண்டுள்ளது.


**12. அண்மையில், 14ஆவது கிழக்காசிய உச்சிமாநாட்டின் வெளியுறவு அமைச்சர்கள் கூட்டம் நடைபெற்ற இடம் எது?**

அ. பெய்ஜிங், சீனா

**ஆ. வியன்டியான், லாவோ PDR ☑**

இ. புது தில்லி, இந்தியா

ஈ. ஜகார்த்தா, இந்தோனேசியா



★ வெளியுறவு அமைச்சர் S ஜெய்சங்கர் 2024 ஜூலை.26 அன்று, லாவோ PDR, வியன்டியானில் இந்தியாவுடனான ASEAN மாநாட்டில் கலந்து கொண்டார். ஜூலை.25-27 வரையிலான அவரது மூன்று நாள் பயணத்தில் ASEAN-இந்தியா, கிழக்காசிய உச்சிமாநாட்டிலும் பங்கேற்றார். ASEAN தலைமைப் பொறுப்பை கொண்டுள்ளது என்ற முறையில் லாவோ இந்நிகழ்வுகளை நடத்தியது. லாவோவின் துணைப் பிரதமரும் வெளியுறவு அமைச்சருமான சலேயும்சே கொம்மசித் அவர்களும் கலந்துகொண்டார். இந்த மாநாட்டில் 10 ASEAN உறுப்புநாடுகளைச்சேர்ந்த வெளியுறவு அமைச்சர்கள் கலந்துகொண்டனர்.

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. பாரீஸ் ஒலிம்பிக்: இந்தியாவுக்கு முதல் பதக்கம்.**

பாரீஸ் ஒலிம்பிக்கில், துப்பாக்கிச்சுடுதலில் இந்தியாவின் மானு பாக்கர் வெண்கலப்பதக்கம் வென்றார். இதன்மூலம் ஒலிம்பிக் துப்பாக்கிச்சுடுதலில் இந்தியாவுக்காக பதக்கம் வென்ற முதல் வீராங்கனை என்ற பெருமையை அவர் பெற்றார். ஒலிம்பிக் போட்டி துப்பாக்கிச்சுடுதலில் இந்தியாவுக்கு பன்னீராண்டுகள் காத்திருப்புக்குப் பிறகு பதக்கம் மீண்டும் வசமாகியிருக்கிறது.

---


## IMPORTANT LINKS

TNPSC Current Affairs

https://www.winmeen.com/tnpsc-tamil-current-affairs/

Winmeen: Install the Winmeen App
Daily Free & Premium Tnpsc Study Materials & Online Test

https://play.google.com/store/apps/details?id=co.robin.jbzwb

Winmeen: Winmeen Tnpsc Test Series - Samacheer lesson Wise Test + Previous Year Model Test for Tnpsc Group 1,2, 4 & VAO

https://wp.me/p7JanY-ag8


**1. அண்மையில், இந்தியாவின் எந்தப்பகுதியில் 'காந்தப் புதைபடிவங்களை' ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்தனர்?**

**அ. லடாக் ☑**

ஆ. அஸ்ஸாம்

இ. மணிப்பூர்

ஈ. குஜராத்




★ இந்தியாவின் லடாக்கில் உள்ள பாறை வண்ண இழைவு அடுக்குகளில் மேக்னடோடாக்டிக் பாக்டீரியாவால் உற்பத்தி செய்யப்படும் காந்தத்துகள்களின் புதைபடிவ எச்சங்களை (காந்தப்புதைபடிவங்கள் – Magnetofossils)) ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். இந்தப் புரோகாரியோடிக் உயிரினங்கள் பூமியின் காந்தப்புலத்துடன் இணைந்து நன்னீர் மற்றும் உவர்நீர் வாழ்விடங்களில் காணப்படுகின்றன. அவை உகந்த உயிர்வளி அளவைக் கண்டறிய காந்தப்புலத்தைப்பயன்படுத்துகின்றன. இந்தப் பாக்டீரியாவில் இரும்புச்சத்து நிறைந்த துகள்கள் சிறிய பைகளில் உள்ளன;அவை திசைகாட்டிகளாக செயல்படுகின்றன;அது மேக்னடைட் அல்லது கிரீஜிட்டின் என்ற சிறிய படிகங்களை உருவாக்குகிறது. இந்தப் படிகங்கள் தண்ணீரில் உயிர்வளி அளவை மாற்றுவதற்கு உதவுகின்றன.

**2. அண்மையில் மேம்படுத்தப்பட்ட எஃகு இறக்குமதி கண்காணிப்பு அமைப்பான SIMS 2.0ஐ அறிமுகப்படுத்திய அமைச்சகம் எது?**

அ. வேளாண் அமைச்சகம்

ஆ. மின்சார அமைச்சகம்

**இ. எஃகுத்துறை அமைச்சகம் ☑**

ஈ. அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகம்

★ எஃகுத்துறை அமைச்சகம், 'எஃகு இறக்குமதி கண்காணிப்பு அமைப்பு' (SIMS) 2.0 இணையதளத்தை அறிமுகம் செய்துள்ளது. இது நிலையான மற்றும் மெய்யான தரவுகளுக்கான வலுவான தரவு நுழைவு அமைப்பைக் கொண்டு உள்ளதோடு வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புணர்வை மேம்படுத்துகிறது. மத்திய எஃகுத்துறை மற்றும் கனரக தொழிற்துறை அமைச்சர், பாதுகாப்பு தரத்தை மேம்படுத்தவும், விபத்துகளைக் குறைக்கவும், "இரும்பு மற்றும் எஃகுத்துறைக்கான பாதுகாப்பு வழிகாட்டுதல்கள்" இரண்டாவது தொகுதியை வெளியிட்டார்.

★ 2019இல் அறிமுகப்படுத்தப்பட்ட SIMS, விரிவான எஃகு இறக்குமதித் தரவை வழங்குகிறது; கொள்கை உருவாக்கம் மற்றும் தொழில் வளர்ச்சிக்கு உதவுகிறது. SIMS 2.0, API ஒருங்கிணைப்பு மற்றும் தரவுத்தள இணைப்புகளுடன், தரக்கட்டுப்பாடு, இடர் மேலாண்மை மற்றும் எஃகு இறக்குமதி பற்றிய சுங்கப்பகுப்பாய்வை மேம்படுத்துகிறது; இது உள்நாட்டு எஃகுத்தொழிலுக்குப் பயனளிக்கிறது.

**3. அண்மையில், அணுக்கனிமங்கள் ஆய்வு மற்றும் ஆராய்ச்சி இயக்குநரகமானது கீழ்க்காணும் எந்த மாநிலத்தில் 1600 டன் லித்தியம் வளங்களைக் கண்டுபிடித்தது?**

அ. தமிழ்நாடு

**ஆ. கர்நாடகா ☑**


இ. ஜார்கண்ட்

ஈ. இராஜஸ்தான்

★ கர்நாடகாவின் மாண்டியா, யாத்கிரி மாவட்டங்களில் லித்தியம் வளங்கள் இருப்பதை அணுசக்தித்துறையின் ஓர் அமைப்பான அணுக்கனிம ஆய்வு மற்றும் ஆராய்ச்சிக்கான இயக்குநரகம் (AMD) கண்டறிந்துள்ளது. கர்நாடக மாநிலம் மாண்டியா மாவட்டம் மார்லகல்லா பகுதியில் 1,600 டன் (G3 நிலை) லித்தியம் வளங்களை AMD நிறுவியுள்ளது.

★ முதன்முதலில் 1817இல் ஜோஹன் ஆகஸ்ட் அர்ப்வெட்சன் என்பவரால் கண்டுபிடிக்கப்பட்ட லித்தியம் என்பது உலக அளவில் மிகவும் விரும்பப்படும் ஒரு தனிமமாகும். கல்லைக்குறிக்கும் 'லித்தோஸ்' என்ற கிரேக்கச் சொல்லிலிருந்து பெறப்பட்ட 'லித்தியம்' குறைந்த அடர்த்திகொண்ட உலோகமாகும். தண்ணீருடன் தீவிரமாக வினைபுரிகிற இந்த உலோகம் இயற்கையில் மிகவும் நச்சுத்தன்மைகொண்டது.

**4. அண்மையில், "Wind Demon" என்றழைக்கப்படும், வானிலிருந்து தரையிலுள்ள இலக்கைத்தாக்கும் ஒரு புதிய ஏவுகணையை அறிமுகம் செய்துள்ள நாடு எது?**



அ. ஜப்பான்

ஆ. சீனா

**இ. இஸ்ரேல் ☑**

ஈ. இந்தியா

★ இஸ்ரேல் ஏரோஸ்பேஸ் இண்டஸ்ட்ரீஸ் (IAI) அண்மையில் "Wind Demon" என்ற ஏவுகணையை அறிமுகம் செய்தது. இது குறைந்த செலவில் துல்லியமான, நீண்டதூர தாக்குதல்களுக்காக வடிவமைக்கப்பட்ட, மேம்பட்ட, வானிலிருந்து தரையிலுள்ள இலக்கைத்தாக்கும் ஒரு சீர்வேக ஏவுகணையாகும். IAIஆல் உருவாக்கப்பட்ட இது, இயக்கியின் துணை ஏதுமில்லாமல் நகர்ந்துகொண்டுள்ள மற்றும் நிலையான இலக்குகளைத் தாக்க ஹெலிகாப்டர்கள் அல்லது விமானங்களிலிருந்து ஏவப்படலாம். இந்த ஏவுகணை 200 கிமீட்டருக்கு மேல் சென்று தாக்கும் திறன்கொண்டது.

**5. மத்திய பட்ஜெட் 2024–25இன்படி, இந்திய அரசின் உதவிபெறும் அயல்நாடுகளில் முதலிடம் பெற்ற நாடு எது?**



அ. நேபாளம்

**ஆ. பூடான் ☑**

இ. மாலத்தீவுகள்

ஈ. வங்காளதேசம்

★ வெளியுறவுக்கொள்கை இலக்குகளை அடைய நிதி உதவியை ஓர் உத்தியாகப் பயன்படுத்தும் நோக்கோடு மத்திய வெளியுறவு அமைச்சகம் 2024–25 மத்திய பட்ஜெட்டில் ₹4,883 கோடி நிதியைப் பெற்றது. முக்கிய ஒதுக்கீடுகளில் பூடானுக்கு அதிகபட்ச உதவியும், நேபாளம் மற்றும் இலங்கைக்கு குறிப்பிடத்தக்க உதவிகளும் அடங்கும். கடந்த கால அரசியல் ரீதியான பதட்டங்கள் இருந்தபோதிலும், ஆப்கானிஸ்தான் மற்றும் மாலத்தீவுகளுக்கான உதவிகளும் தொடர்கின்றன. பிராந்திய உதவியின் ஒருபகுதியாக மியான்மரும் உதவி பெறுகிறது. ஆப்பிரிக்கா, மத்திய ஆசியா, தெற்காசியா மற்றும் லத்தீன் அமெரிக்கா ஆகிய நாடுகள் இந்தியாவின் பலதரப்பு & இருதரப்பு உதவித்திட்டங்களால் பயனடைகின்றன. ஈரானில் உள்ள சபகர் துறைமுகத்திட்டம் கடந்த 3 ஆண்டுகளாக மாறாமல் ஆண்டுதோறும் ₹100 கோடி பெற்று வருகிறது.

**6. "போஷான் பி பதாய் பி" என்ற முன்னெடுப்பின் முதன்மை நோக்கம் என்ன?**



அ. பள்ளிகளில் ஊட்டச்சத்து தரத்தை மேம்படுத்துவது

**ஆ. அங்கன்வாடி மையங்களில் குழந்தைப்பருவ பராமரிப்பு மற்றும் கல்வியை மேம்படுத்துவது ☑**

இ. வயது வந்தோருக்கான கல்வியை ஊக்குவிப்பது

ஈ. இடைநிலைக் கல்விக்கான உள்கட்டமைப்பை மேம்படுத்துவது

★ 2023 மே.10 அன்று தொடங்கப்பட்ட, "போஷன் பி பதாய் பி" முன்னெடுப்பானது, 6 வயதுக்குட்பட்ட சிறார்களுக்கான குழந்தைப்பருவ பராமரிப்பு, கல்வி மற்றும் ஊட்டச்சத்து சேவைகளை மேம்படுத்துவதற்காக அங்கன்வாடி பணியாள–ர்களின் திறனை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. 2024 ஜூனுக்குள், 11,364 மாநில அளவிலான முதுநிலைப்பயிற்சியாளர்கள் மற்றும் 1,877 அங்கன்வாடி பணியாளர்கள் பயிற்சி பெற்றுள்ளனர்.

★ தரமான உள்கட்டமைப்பு மற்றும் விளையாட்டு உபகரணங்களுடன் அங்கன்வாடி மையங்களை கற்றல் மையங்களாக மாற்றுவதில் இத்திட்டம் கவனஞ்செலுத்துகிறது. இது 2 பாடத்திட்ட கட்டமைப்புகளை உள்ளடக்கியது: பிறப்பு முதல் 3 வயது வரையிலான குழந்தைகளுக்கான "நவசேதனா" (முழுமையான ஆர்வத்தைத் தூண்டும்), மற்றும் 3 முதல் 6 வயது வரையிலான குழந்தைகளுக்கான "ஆதர்ஷிலா" (அனைத்து வளர்ச்சிக் களங்களையும் உள்ளடக்கியது). மாற்றுத்திறன் குழந்தைகளுக்குச் சிறப்புக்கவனம் செலுத்தப்படுகிறது.

**7. கீழ்க்காணும் எந்த வடகிழக்கு மாநிலத்தில், "மரவள்ளிக்கிழங்கு கிராமங்கள்" அமைந்துள்ளது?**

அ. நாகாலாந்து ☑

ஆ. மணிப்பூர்

இ. அஸ்ஸாம்

ஈ. மிசோரம்



★ நாகாலாந்தின் மொகோக்சுங் மாவட்டத்தில் உள்ள "மரவள்ளிக்கிழங்கு கிராமங்கள்" நெகிழிகளுக்குப் பதிலாக, MSME எகோஸ்டார்ச்மூலம் தயாரிக்கப்பட்ட மரவள்ளிக்கிழங்கின் மாவிலிருந்து தயாரிக்கப்பட்ட மக்கும் உயிரி–நெகிழிப்பைகளை பயன்படுத்துகின்றன. தென்னமெரிக்காவை பூர்வீகமாகக் கொண்ட வெப்பமண்டலப்பயிரான மர வள்ளிக்கிழங்கு, அதிக மாவுப்பொருளுக்கு பெயர் பெற்றதாகும்; இது உயிரி–நெகிழி மற்றும் உயிரி–எத்தனால் உற்பத்திக்கு மிகவும் ஏற்றதாக அமைகிறது.

**8. SAMADHAN என்ற இணையதளத்தைத் தொடங்கிய மத்திய அமைச்சகம் எது?**

அ. விவசாய அமைச்சகம்

ஆ. பாதுகாப்பு அமைச்சகம்

**இ. பணியாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகம் ☑**

ஈ. நகர்ப்புற மேம்பாட்டு அமைச்சகம்

श्रम एवं रोजगार मंत्रालय
GOVERNMENT OF INDIA
MINISTRY OF LABOUR & EMPLOYMENT

★ தொழில் தகராறுகள் சட்டம்–1947இன்கீழ் பணியாளர்கள், வேலைவாய்ப்பளிப்போர், தொழிற்சங்கங்கள் ஆகியோர் தொழில் தகராறுகளைத் தாக்கல் செய்ய வசதியாக சமாதான் இணையதளம் தொடங்கப்பட்டுள்ளது. பணிக்கொடை வழங்கல் சட்டம்–1972, குறைந்தபட்ச ஊதியச் சட்டம்–1948, ஊதியம் வழங்கல் சட்டம்–1936, சம ஊதியச் சட்டம் –1976, மகப்பேறு நலச்சட்டம்–1961 ஆகியவற்றின்கீழ் தொழிலாளர்கள் உரிமைகோரல் வழக்குகளைத் தாக்கல் செய்வதற்கான வசதிகளும் இதிலுள்ளன. இந்த இணையதளம் பயனாளிகளுக்கு எளிதான செயல்முறையைக் கொண்டுள்ளதுடன் வெளிப்படைத்தன்மையை மேம்படுத்தியுள்ளது.

**9. "இந்தியாவில் இளம்பருவத்தினரின் நல்வாழ்வில் முதலீடு செய்வதற்கான பொருளாதாரம்" என்ற தலைப்பிலான விரிவான அறிக்கையை வெளியிட்ட அமைச்சகம் எது?**

அ. உள்துறை அமைச்சகம்

ஆ. வேளாண் அமைச்சகம்

**இ. சுகாதாரம் மற்றும் குடும்பநல அமைச்சகம் ☑**

ஈ. ஊரக வளர்ச்சி அமைச்சகம்

स्वास्थ्य एवं
परिवार कल्याण मंत्रालय
MINISTRY OF
HEALTH AND
FAMILY WELFARE
सत्यमेव जयते

★ சுகாதாரம் மற்றும் குடும்பநல அமைச்சகம் "இந்தியாவில் இளம்பருவத்தினரின் நல்வாழ்வில் முதலீடு செய்வதற்கான பொருளாதாரம்" என்ற தலைப்பில் ஓர் அறிக்கையை வெளியிட்டது. இது இளம்பருவத்தினரின் நல்வாழ்வில் முதலீடு செய்வதற்கான முக்கிய பகுதிகளை எடுத்துக்காட்டுகிறது. உலகளவில் இந்தியாதான் அதிக இளம்பருவத்தினரை (253 மில்லியன்) கொண்டுள்ளது. 2000 மற்றும் 2019க்கு இடையில், இளம்பருவத்தினரின் இறப்பு விகிதம் 50% –க்கும் அதிகமாக குறைந்துள்ளது; மேலும் கருவுறுதல் விகிதம் 83% குறைந்துள்ளது. இடைநிலைப்பள்ளி நிறைவு விகிதம் 2005இல் இருந்த 22%இலிருந்து 2020இல் 50%ஆக இருமடங்காக அதிகரித்துள்ளது.

★ இருப்பினும், 2021–2022 வரை 18 வயதுக்குட்பட்ட இளம்பருவத்தினரிடையே ஏற்படும் அபாயகரமான சாலை விபத்துகள் 22.7% அதிகரித்துள்ளது. குறிப்பிடப்பட்டுள்ள இந்தப் பரிந்துரைகள் இந்தியாவின் பொருளாதாரத்தை 10.1%ஆக உயர்த்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**10. அண்மையில், பழங்காலப் பொருட்களை சட்டத்துக்குப்புறம்பாகக் கடத்துவதை தடுக்கவும் ஒழிக்கவும் வகை செய்யும், 'கலாச்சார சொத்து ஒப்பந்தத்தில்' இந்தியாவும் கீழ்க்காணும் எந்த நாடும் கையெழுத்திட்டுள்ளன?**



அ. அமெரிக்கா ☑

ஆ. ரஷ்யா

இ. சீனா

ஈ. ஜப்பான்

★ 2024 ஜூலை.26 அன்று பழங்காலப் பொருட்களை சட்டத்துக்குப்புறம்பாகக் கடத்துவதை எதிர்த்து இந்தியாவும் அமெரிக்காவும் தங்கள் முதல் கலாச்சார சொத்து ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன. புது தில்லியில் உள்ள உலக பாரம்பரியக்குழுவில் ஸ்ரீ கோவிந்த் மோகன் மற்றும் அமெரிக்கத்தூதர் எரிக் கார்செட்டி ஆகியோர் கையெழுத்திட்ட இந்தக் கலாச்சார சொத்து ஒப்பந்தம், 1970 UNESCO தீர்மானத்துடன் ஒத்துப்போகிறது. இந்தக் கலாச்சார சொத்து ஒப்பந்தம் இந்தியாவின் கலாச்சார பாரம்பரியத்தைக் காப்பதையும், கடத்தப்பட்ட கலைப்பொருட்களை திரும்பப் பெறுவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

**11. அண்மையில், கீழ்க்காணும் எந்தத் துறைமுகத்திற்காக இந்தியாவின் முதலாவது ஒருங்கிணைந்த வேளாண் ஏற்றுமதி மையம் அங்கீகரிக்கப்பட்டது?**



அ. கொச்சி துறைமுகம்

ஆ. ஜவகர்லால் நேரு துறைமுகம் ☑

இ. தீனதயாள் துறைமுகம்

ஈ. மங்களூரு துறைமுகம்

★ மும்பை ஜவகர்லால் நேரு துறைமுகத்தில் இந்தியாவின் முதல் ஒருங்கிணைந்த வேளாண் ஏற்றுமதி மையத்திற்கு நடுவண் கப்பல் போக்குவரத்து, துறைமுகங்கள், நீர்வழித்துறை அமைச்சர் சர்பானந்த சோனோவால் ஒப்புதல் அளித்துள்ளார். இந்தியாவின் வேளாண் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி திறன்களை மேம்படுத்தும் குறிப்பிடத்தக்க நடவடிக்கையாக இது அமையும். அரசு–தனியார் கூட்டு முயற்சியில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

★ இம்முன்னோடித் திட்டம் போக்குவரத்துகளில் உள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்யும். வேளாண் பொருட்களின் அடுக்கு ஆயுளை நீட்டிக்கும். எதிர்பார்க்கப்படும் நன்மைகளில் வேளாண் பொருட்களுக்கு சிறந்த விலை, வேலை உருவாக்கம் மற்றும் வேளாண் துறையில் ஒட்டுமொத்த வளர்ச்சி ஆகியவை அடங்கும். பாசுமதி அல்லாத அரிசி, மக்காச்சோளம், மசாலாப்பொருட்கள், வெங்காயம், கோதுமைபோன்ற முக்கிய பொருட்களின் ஏற்றுமதியை இது பூர்த்தி செய்யும்.

**12. அண்மையில், 2024–25 காலகட்டத்திற்கான ஆசிய பேரிடர் தயார்நிலை மையத்தின் தலைமைப்பொறுப்பை ஏற்ற நாடு எது?**



அ. இந்தியா ☑

ஆ. இந்தோனேசியா

இ. தாய்லாந்து

ஈ. பிலிப்பைன்ஸ்

★ இந்திய அரசின் பிரதிநிதியாக, தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையத்தின் உறுப்பினர், இராஜேந்திர சிங், 2024–25ஆம் ஆண்டிற்கான ஆசிய பேரிடர் தயார்நிலை மையத்தின் தலைவராக தாய்லாந்தின் பாங்காக்கில் பொறுப்பை ஏற்றுக்கொண்டார். ஆசிய பேரிடர் தயார்நிலை மையம் என்பது ஆசிய–பசிபிக் பிராந்தியத்தில் பேரிடர் தணிப்பு & பருவநிலை நெகிழ்திறனை உருவாக்குவதில் ஒத்துழைப்பை செயல்படுத்துவதற்கான ஒரு தன்னாட்சி மிகுந்த பன்னாட்டு அமைப்பாகும். இந்தியா, வங்காளதேசம், கம்போடியா, சீனா, நேபாளம், பாகிஸ்தான், பிலிப்பைன்ஸ், இலங்கை மற்றும் தாய்லாந்து ஆகிய 8 அண்டை நாடுகள் இந்த அமைப்பின் நிறுவன உறுப்பினர்களாக உள்ளன. தாய்லாந்தின் பாங்காக்கில் நடைபெற்ற ஆசிய பேரிடர் தயார்நிலை மையத்தின் ஐந்தாவது அறங்காவலர் குழு கூட்டத்திற்கும் இந்தியா தலைமை தாங்கியது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. மாணாக்கர் தற்கொலைகளைத் தடுக்க 'மனோதர்பன்' முன்னெடுப்பு: நடுவண் அரசு.**

மாணாக்கர் தற்கொலை செய்வதை தடுப்பதற்காக, 'மனோதர்பன்' என்ற முன்னெடுப்பை மத்திய கல்வியமைச்சகம் தொடங்கியுள்ளது. அதன்படி மாணாக்கர்க்கு வல்லுநர்களால் ஆலோசனை வழங்கப்பட்டு வருகிறது. தேர்வுகளில் தோல்வியடைபவர்கள் தற்கொலைச் செய்துகொள்ளும் சம்பவங்கள் 1.2%ஆக உள்ளது குறிப்பிடத்தக்கது.

---

**2. 'குவாட்' மாநாடு.**

ஜப்பான் தலைநகரம் டோக்கியோவில் நடைபெறும் இந்தியா, அமெரிக்கா, ஜப்பான் மற்றும் ஆஸ்திரேலியா ஆகிய 4 நாடுகளை உள்ளடக்கிய குவாட் கூட்டமைப்பின் வெளியுறவுத்துறை அமைச்சர்கள் மாநாட்டில் இந்தியா சார்பில் ஜெய்சங்கர் கலந்துகொண்டார்.

---

**3. மகப்பேறு இறப்பு இல்லா நிலை..**

மகப்பேறு இறப்பு விகிதத்தில் ஒரு இலட்சம் பிறப்புகளுக்கு 70 மரணங்கள் என்கிற சர்வதேச இலக்கை இந்தியா எட்டியிருக்கிறது. தமிழ்நாடு இலக்கை எட்டியதோடு மட்டுமல்லாமல், குறைந்த அளவிலான இறப்புகள் என்கின்ற வகையில் சாதனையும் படைத்திருக்கிறது. கடந்த ஆண்டு தாய்மார்களின் இறப்பு விகிதம் 1 லட்சம் பிறப்புகளுக்கு 54 ஆக குறைந்திருந்தது. தேசிய அளவிலான இறப்பு விகிதம் 70 என்றிருந்தாலும் தமிழ்நாட்டைப் பொருத்தவரை 54 ஆக குறைந்துள்ளது. இந்நிலையில் நடப்பாண்டில் 45.5ஆக குறைந்துள்ளது. விருதுநகர் மாவட்டம் மகப்பேறு இறப்பு பூஜ்ஜியம் என்னும் நிலையை அடைந்துள்ளது.

தமிழ்நாட்டைப்பொருத்தவரை 99.9% பிரசவங்கள் அதாவது 8.70 லட்சம் பிரசவங்கள் மருத்துவமனைகளிலேயே நடக்கிறது. அதில் அரசு மருத்துவமனைகளில் 59% பிரசவங்கள் நடக்கின்றன.

---

**4. உழவர்களின் சந்தேகங்களுக்கு செயற்கை நுண்ணறிவு செயலிமூலம் விடை.**

உழவர்களுக்கு வேளாண்மையில் ஏற்படும் ஐயங்களுக்கு செயற்கை நுண்ணறிவு செயலிமூலம் விடை கிடைக்க உள்ளது. இதற்கான தனித்த செயலியை சிங்கப்பூர் பல்கலைக்கழகத்தின் துணையுடன் தமிழ்நாடரசு உருவாக்க உள்ளது.

**அக்ரி–பாட்:** தமிழ்மொழியில் வேளாண்மைக்கென தனித்துவம் வாய்ந்த சாட் GPT போன்று அக்ரி – பாட் என்ற செயற்கை நுண்ணறிவு இணையதளம் உருவாக்குவது குறித்து விவாதிக்கப்பட்டது. இந்தச்செயலிமூலம் வேளாண் தொழில்நுட்பங்களையும் வேளாண்சார்ந்த தகவல்களையும் துரிதமாக நமது விவசாயிகளுக்கு கொண்டு சேர்க்க இயலும். விவசாயிகள் தங்களது திறன்பேசிமூலமாக அனைத்து ஐயங்களையும் தீர்த்துக்கொள்ளலாம்.

# IMPORTANT LINKS

TNPSC Current Affairs

https://www.winmeen.com/tnpsc-tamil-current-affairs/

Winmeen: Install the Winmeen App
Daily Free & Premium Tnpsc Study Materials & Online Test

https://play.google.com/store/apps/details?id=co.robin.jbzwb

Winmeen: Winmeen Tnpsc Test Series - Samacheer lesson Wise Test + Previous Year Model Test for Tnpsc Group 1,2, 4 & VAO

https://wp.me/p7JanY-ag8

விண்மீன்

**1. அண்மையில், பிரதமர் நரேந்திர மோதி தலைமையில் நடைபெற்ற NITI ஆயோக்கின் இந்த ஆண்டு ஆளும் குழுக் கூட்டத்தின் கருப்பொருள் என்ன?**

**அ. விக்சித் பாரத்@2047 ☑**

ஆ. விக்சித் சமாஜ்@2056

இ. டிஜிட்டல் இந்தியா@2034

ஈ. இந்தியாவில் தயாரிப்போம்




★ புது தில்லியில் உள்ள குடியரசுத் தலைவர் மாளிகையின்கண் அமைந்துள்ள கலாச்சார மையத்தில் NITI ஆயோகின் ஒன்பதாவது ஆளும் குழு கூட்டம் பிரதமர் தலைமையில் நடைபெற்றது. வளர்ச்சியடைந்த பாரதம்@2047 (விக்சித் பாரத்@2047) என்ற கருப்பொருள், இந்தியாவை வளர்ந்த நாடாக மாற்றுவதில் கவனம் செலுத்துகிறது.

★ வளர்ச்சியடைந்த பாரதம்@2047 குறித்த தொலைநோக்கு ஆவணத்திற்கான அணுகுமுறை அறிக்கை குறித்து ஆளும் குழுக்கூட்டம் விவாதிக்கும். மத்திய, மாநில அரசுகளுக்கிடையே பங்கேற்பு ஆளுமை & ஒருங்கிணைப்பை வளர்ப்பது, அரசு தலையீடுகளின் விநியோக வழிமுறைகளை வலுப்படுத்துவதன் மூலம் கிராமப்புற மற்றும் நகர்ப்புற மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவது ஆகியவற்றை இந்தக் கூட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது. 2047 ஆம் ஆண்டிற்குள் $30 டிரில்லியன் பொருளாதாரமாக மாறவேண்டும் என்ற நோக்கத்துடன், முதலமைச்சர்கள், நடுவண் அமைச்சர்கள் மற்றும் NITI ஆயோக் உறுப்பினர்கள் கலந்து கொள்கின்றனர்.

**2. GROWTH-India தொலைநோக்கியின் முதன்மை நோக்கம் என்ன?**

அ. சூரியனை ஆராய்வது

**ஆ. பூமிக்கருகிலுள்ள சிறுகோள்கள் உட்பட வெடிக்கும் நிலையற்ற மற்றும் மாறக்கூடிய மூலங்களைக் கண்காணிப்பது ☑**

இ. வானிலை முறைகளைக் கண்காணிப்பது

ஈ. செயற்கைக்கோள் இயக்கங்களைக் கண்காணிப்பது



★ GROWTH-India தொலைநோக்கி அண்மையில் ஒரு குறிப்பிடத்தக்க கூராய்வை மேற்கொண்டது. 116 மீ அளவுள்ள ஒரு சிறுகோள் பூமிக்கு மிக அருகில் வரும்போது அதை GROWTH-India படமெடுத்தது. இந்தியாவின் முதல் முழு ரோபோடிக் ஆப்டிகல் ஆராய்ச்சி தொலைநோக்கியான இதன் முதன்மை பணியானது, பூமிக்கு மிக அருகில் உள்ள சிறுகோள்கள் உட்பட, வெடிக்கும் நிலையற்ற மற்றும் மாறக்கூடிய மூலங்களைக் கூர் நோக்குவதாகும்.

★ கடல் மட்டத்திலிருந்து 4500 மீ உயரத்தில் லடாக்கின் ஹன்லேயில் உள்ள இந்திய வானியல் ஆய்வு மையத்தில் அமைந்துள்ள இது, உலக அளவில் மிக உயரத்தில் அமைந்துள்ள கண்காணிப்புத் தளங்களில் ஒன்றாகும். இந்திய வானியற்பியல் நிறுவனம் மற்றும் IIT பாம்பே ஆகியவற்றுக்கு இடையேயான கூட்டாண்மைமூலம் DST மற்றும் இந்தோ-அமெரிக்க அறிவியல் மற்றும் தொழில்நுட்ப மன்றத்தின் ஆதரவுடன் கட்டமைக்கப்பட்டுள்ள இது, பன்னாட்டு வளர்ச்சி வலையமைப்பின் ஒருபகுதியாகும். இது வானியல் நிகழ்வுகளை தொடர்ந்து கண்காணிக்கிறது.


**3. அண்மையில், ஒலிம்பிக்கின் 33ஆவது பதிப்பு தொடங்கப்பட்ட இடம் எது?**

அ. லண்டன்

**ஆ. பாரிஸ் ☑**

இ. பெய்ஜிங்

ஈ. சென்னை



★ 33ஆவது ஒலிம்பிக் போட்டிகள் பாரிஸில் தொடங்கின. இதில் 32 வெவ்வேறு விளையாட்டுகள் இடம்பெற்றுள்ளன. 1896ஆம் ஆண்டு கிரேக்கத்தின் ஏதென்ஸில் முதல்முறையாக ஒலிம்பிக் போட்டிகள் நடத்தப்பட்டன.

★ இந்த விளையாட்டுப் போட்டிகள் நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும். ஐந்து ஒலிம்பிக் வளையங்கள் ஒலிம்பிக் இயக்கம் நிலவும், 'உலகின் ஐந்து பகுதிகளை' அடையாளப்படுத்துகின்றன. 'Citius–Altius–Fortius' என்ற ஒலிம்பிக் வாசகம் லத்தீன் மொழியிலிருந்து ஆங்கிலத்தில் 'Faster–Higher–Stronger' என மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

**4. ஒவ்வோர் ஆண்டும், 'உலக கல்லீரல் அழற்சி நோய் நாள்' அனுசரிக்கப்படுகிற தேதி எது?**




**அ. 28 ஜூலை ☑**

ஆ. 27 ஜூலை

இ. 25 ஜூலை

ஈ. 24 ஜூலை

★ உலக கல்லீரல் அழற்சி நோய் நாளானது ஒவ்வோர் ஆண்டும் ஜூலை.28 அன்று அனுசரிக்கப்படுகிறது. கடும் கல்லீரல் நோய் மற்றும் புற்றுநோய்க்கு வழிவகுக்கும் கல்லீரல் அழற்சி நோய் பற்றிய விழிப்புணர்வை இந்த நாள் ஏற்படுத்துகிறது. உலகளவில் கல்லீரல் அழற்சிதொடர்பான நோய்களால் லட்சக் கணக்கானோர் மரணிக்கின்றனர். இது இந்நோய்க்கானச் சிறந்த தடுப்பு, நோயறிதல் முறை மற்றும் சிகிச்சையின் அவசியத்தை எடுத்துக்காட்டுகிறது.

★ கல்லீரல் அழற்சி பொதுவாக வைரஸ் நோய்த்தொற்றுகளால் ஏற்படுகிறது; ஆனால் தன்னுடல் தாக்க நிலைமைகள், மருந்துகள், நச்சுகள் மற்றும் ஆல்கஹால் ஆகியவற்றாலும் இது ஏற்படலாம். நடப்பு 2024இல் வரும் உலக கல்லீரல் அழற்சி நோய் நாளுக்கானக் கருப்பொருள், "It's Time for Action" என்பதாகும்.

**5. இந்தியா, எந்த ஆண்டுக்குள் 100 மில்லியன் டன் நிலக்கரியை வாயுவாக்க இலக்கு நிர்ணயித்துள்ளது?**



அ. 2025

**ஆ. 2030 ☑**

இ. 2035

ஈ. 2040

★ 2030ஆம் ஆண்டுக்குள் 100 மில்லியன் டன் நிலக்கரியை வாயுவாக்க இந்தியா இலக்கு நிர்ணயித்துள்ளது. நிலக்கரி வாயுவாக்கம் என்பது நிலக்கரியை கார்பன் மோனாக்சைடு மற்றும் ஹைட்ரஜனாக மாற்றி, சின்காஸ், டைமிதில் ஈதர், அம்மோனியம் நைட்ரேட் மற்றும் மெத்தனால் ஆகியவற்றை உற்பத்தி செய்யும் வெப்ப–வேதியியல் செயல்முறையாகும். சின்காஸ் LPG மற்றும் மின்சார உற்பத்திக்கு மாற்றாக இருக்கும், அதே சமயம் டைமெத்தில் ஈதர் டீசல் என்ஜின்களுக்கு மாற்றாக உள்ளது; மேலும் அம்மோனியம் நைட்ரேட்டை வெடிபொருட்களுக்குப் பயன்படுத்தலாம். இந்த முன்னெடுப்பு இறக்குமதியை நம்பியிருப்பதைக் குறைப்பது, அந்நியச் செலாவணியைப் பாதுகாப்பது மற்றும் இந்தியாவின் எண்ணெய், எரிவாயு, உரம் மற்றும் பெட்ரோ–கெமிக்கல் துறைகளுக்கு ஆதரவளிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. தற்போது, இந்தியா தனது எண்ணெய் தேவையில் 83%, மெத்தனால் தேவையில் 90% மற்றும் அம்மோனியா தேவையில் 13–15%ஐ இறக்குமதி செய்கிறது.

**6. தமிழ்நாட்டின் எந்த மாவட்டத்தில் மேட்டூர் அணை அமைந்துள்ளது?**



**அ. சேலம் ☑**

ஆ. ஈரோடு

இ. தருமபுரி

ஈ. கரூர்

★ நீர்வரத்து அதிகரித்துள்ளதால் மேட்டூர் அணைக்கு அருகில் அமைந்துள்ள தாழ்வான பகுதிகளில் வசிப்பவர்களுக்கு எச்சரிக்கை விடப்பட்டுள்ளது. 1934ஆம் ஆண்டு கட்டப்பட்ட மேட்டூர் அணை இந்தியாவின் மிகப்பெரிய அணைகளில் ஒன்றாகும்; இது தமிழ்நாட்டின் சேலம் மாவட்டத்தில் அமைந்துள்ளது; அங்கு காவேரி ஆறு சமவெளியில் நுழைகிறது.

★ இது 1700 மீட்டர் நீளம், அதிகபட்ச அளவு 120 அடி மற்றும் 93.4 டிஎம்சி அடி கொள்ளளவு கொண்ட கற்கட்டமைப்பு ஈர்ப்பணையாகும்; இது ஸ்டான்லி நீர்த்தேக்கத்தை உருவாக்குகிறது. இந்த அணை மேட்டூர் நீர்மின் மற்றும் அனல் மின் நிலையத்திற்கு துணைபுரிந்து 32 மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்கிறது. இதன்மூலம் சேலம், ஈரோடு, நாமக்கல், கரூர், திருச்சிராப்பள்ளி மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்களில் 271,000 ஏக்கர் விவசாய நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன.

### 7. 'டெல் உம் அமர்' அமைந்துள்ள பகுதி எது?



அ. லண்டன்

ஆ. மாஸ்கோ

**இ. பாலஸ்தீனம் ☑**

ஈ. ஈரான்

★ உலகப் பாரம்பரியக்குழு அண்மையில் டெல் உம் அமெரின் பாலஸ்தீன தளத்தை UNESCOஇன் உலகப் பாரம்பரிய தலப் பட்டியல் மற்றும் ஆபத்திலுள்ள உலகப் பாரம்பரிய பட்டியலில் சேர்த்துள்ளது. காசா நகரத்துக்கு தெற்கே கடலோர குன்றுகளில் அமைந்துள்ள டெல் உம் அமெர், புனித ஹிலாரிய மடாலயம் என்றும் அழைக்கப்படுகிறது; இது நான்காம் நூற்றாண்டில் ஹிலாரியன் தி கிரேட் என்பவரால் நிறுவப்பட்டது. புனித பூமியின் முதல் துறவற சமூகத்தை பிரதிநிதித்துவப்படுத்துகிற இது, ஆசியா மற்றும் ஆப்பிரிக்கா இடையேயான முக்கிய வர்த்தக வழிகளில் அமைந்துள்ளது. 1946இல் நிறுவப்பட்ட UNESCO என்பது ஐநா சிறப்பு நிறுவனமாகும். அமைதி மற்றும் நிலையான வளர்ச்சியை மேம்படுத்துவதற்கு கல்வி, அறிவியல் மற்றும் கலாச்சாரத்தில் பன்னாட்டு ஒத்துழைப்பை வளர்ப்பதை இது தனது நோக்கமாகக் கொண்டுள்ளது.

### 8. ஒவ்வோர் ஆண்டும், 'பன்னாட்டு புலிகள் நாள்' அனுசரிக்கப்படுகிற தேதி எது?




அ. 27 ஜூலை

ஆ. 28 ஜூலை


**இ. 29 ஜூலை ☑**

ஈ. 30 ஜூலை

★ கடந்த 2010ஆம் ஆண்டு தொடங்கி ஒவ்வோர் ஆண்டும் ஜூலை.29ஆம் தேதியன்று பன்னாட்டு புலிகள் நாள் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. சட்டத்துக்குப்புறம்பான வேட்டையாடுதல் மற்றும் வாழ்விட அழிப்புகளால் புலிகள் எதிர்கொள்ளும் அச்சுறுத்தல்கள் குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வை இந்நாள் ஏற்படுத்துகிறது.

★ கடந்த 2010ஆம் ஆண்டு ரஷ்யாவின் புனித பீட்டர்ஸ்பர்க்கில் நடந்த பன்னாட்டு உச்சிமாநாட்டிலிருந்து இந்த நாள் உருவானது; இதில் இந்தியா உட்பட புலிகள் வாழும் 13 நாடுகள் கலந்துகொண்டன. மனித ஆக்கிரமிப்பால் குறைந்து வரும் புலிகளின் எண்ணிக்கையை நிவர்த்தி செய்வதை நோக்கமாகக் கொண்ட இந்த உச்சிமாநாடு, 2022ஆம் ஆண்டிற்குள் காட்டுப்புலிகளின் எண்ணிக்கையை இரட்டிப்பாக்க TX2 இலக்கை அறிமுகப்படுத்தியது. நடப்பு 2024 இல் வரும் இந்நாளுக்கானக் கருப்பொருள், "Call for Action" என்பதாகும்.

### 9. அண்மையில், பாரிஸில் நடந்த ஒலிம்பிக் துப்பாக்கிச்சுடுதல் போட்டியில் வெண்கலம் வென்ற முதல் இந்தியப் பெண்மணி யார்?



அ. வேதிகா சர்மா **ஆ. மனு பாக்கர் ☑**

இ. அஞ்சலி பகவத் ஈ. மனிஷா கீர்

★ 2024 ஜூலை.28 அன்று பாரிஸில் நடந்த 33வது கோடைகால ஒலிம்பிக்கில் ஹரியானாவைச் சேர்ந்த மனு பாக்கர், 10 மீ ஏர் பிஸ்டல் போட்டியில் வெண்கலம் வென்று இந்தியாவின் பதக்கக் கணக்கைத் தொடங்கினார். துப்பாக்கிச் சுடுதல் போட்டியில் ஒலிம்பிக்கில் பதக்கம் வென்ற முதல் இந்திய துப்பாக்கிச்சுடும் வீராங்கனை என்ற பெருமையை அவர் பெற்றார். 2024 ஜூலை.26 முதல் ஆகஸ்ட்.11 வரை நடைபெற்ற பாரிஸ் ஒலிம்பிக்கில் 32 விளையாட்டுகள் இடம்பெற்றுள்ளன; இதில் இந்தியா 16 பிரிவுகளில் போட்டியிடுகிறது. எட்டுப் பெண்கள் பங்கேற்ற இறுதிப்போட்டியில் 22 வயதான பாக்கர் 221.7 புள்ளிகளைப்பெற்று மூன்றாவது இடத்தைப் பிடித்தார்.

★ தென் கொரிய வீரர் ஓ யே ஜின் 243.2 புள்ளிகளுடன் தங்கமும், தென் கொரிய வீரர் யேஜி கிம் 241.3 புள்ளிகளுடன் வெள்ளியும் வென்றனர்.

10. **அண்மையில், தனது முதல் மகளிர் ஆசியக்கோப்பை பட்டத்தை வென்ற நாடு எது?**




அ. சீனா


ஆ. இந்தியா

**இ. இலங்கை ☑**

ஈ. வங்காளதேசம்

★ நடப்புச்சாம்பியனான இந்திய அணியை வீழ்த்தி, போட்டியை நடத்திய இலங்கை மகளிர் கிரிக்கெட் அணி, தங்களது முதல் மகளிர் கிரிக்கெட் ஆசியக்கோப்பையை வென்றது. இலங்கையின் தம்புள்ளையில் உள்ள ரங்கிரி தம்புள்ளை பன்னாட்டு மைதானத்தில் 2024 ஜூலை.28 அன்று நடைபெற்ற 9ஆவது மகளிர் ஆசியக்கோப்பை கிரிக்கெட்டின் இறுதிப்போட்டியில், இலங்கை அணி இந்தியாவை 8 பந்துகள் மீதமிருக்க 8 விக்கெட் வித்தியாசத்தில் வீழ்த்தியது. இந்தியா (ஏழு முறை) மற்றும் வங்காளதேசம் (ஒரு முறை) ஆகியவற்றைத் தொடர்ந்து, மகளிர் கிரிக்கெட் ஆசியக் கோப்பையை வென்ற மூன்றாவது அணியாக இலங்கை ஆனது.

11. **ஒருங்கிணைந்த நோய் கண்காணிப்புத் திட்டத்தின் முதன்மை நோக்கம் என்ன?**



அ. இலவச மருத்துவச்சேவைகளை வழங்குவது

**ஆ. பரவலாக்கப்பட்ட ஆய்வக அடிப்படையிலான தகவல் தொழில்நுட்பத்துடன்கூடிய நோய்க் கண்காணிப்பு அமைப்பை வலுப்படுத்துவது & பராமரிப்பது ☑**

இ. தடுப்பூசி திட்டங்களை ஊக்குவிப்பது

ஈ. அரிதான நோய்கள் குறித்து மருத்துவ ஆராய்ச்சி நடத்துவது

★ கடந்த ஆண்டில் (2023) மட்டும் 1,862 நோய் பாதிப்புகள் ஒருங்கிணைந்த நோய்க் கண்காணிப்புத்திட்டத்தில் (IDSP) பதிவாகியுள்ளன; கேரளாவில் அதிக எண்ணிக்கையில் பதிவுசெய்யப்பட்டுள்ளது. 2004 நவம்பரில் உலக வங்கி உதவியுடன் தொடங்கப்பட்ட IDSP, இந்தியாவின் சுகாதாரம் மற்றும் குடும்பநல அமைச்சகத்தால் பரவலாக்கப்பட்ட, மாநில அடிப்படையிலான ஒரு திட்டமாகும். அதன் நோக்கங்களில் நோய் போக்குகளைக் கண்காணித்தல் மற்றும் பயிற்சியளிக்கப்பட்ட விரைவு பதிலளிப்புக் குழுக்கள்மூலம் பாதிப்புகளுக்குப் பதிலளிப்பது ஆகியவை அடங்கும்.

★ இத்திட்டம் மத்திய, மாநில மற்றும் மாவட்ட அளவில் கண்காணிப்பு நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கிறது; தரவு மேலாண்மைக்கு ICT–ஐப் பயன்படுத்துகிறது மற்றும் பொதுச்சுகாதார ஆய்வகங்களை வலுப்படுத்துகிறது. தொற்று நோய்–பாதிப்பு நோய்கள்பற்றிய வாராந்திர தரவு சேகரிப்பு போக்குகளை அடையாளம் காண உதவுகிறது.

12. **இ–உபஹார் என்ற இணையதளத்தை உருவாக்கிய அமைச்சகம் எது?**

அ. நகர்ப்புற மேம்பாட்டு அமைச்சகம்

ஆ. பாதுகாப்பு அமைச்சகம்

इलेक्ट्रॉनिकी एवं सूचना प्रौद्योगिकी मंत्रालय
MINISTRY OF ELECTRONICS AND INFORMATION TECHNOLOGY

**இ. மின்னணு & தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் ☑**

ஈ. உள்துறை அமைச்சகம்

- ★ குடியரசுத்தலைவர் மற்றும் முன்னாள் குடியரசுத்தலைவர்களுக்கு பல்வேறு சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்ட தேர்ந்தெடுக்கப்பட்ட பரிசுப்பொருட்களை குடியரசுத்தலைவர் மாளிகை இ–உபஹார் என்ற இணையதளம்மூலம் ஏலம் விடும். இந்தியக் குடியரசுத்தலைவர் திரௌபதி முர்மு, 2024 ஜூலை.25 அன்று தனது குடியரசுத்தலைவர் பதவியின் ஈராண்டுகளை நிறைவு செய்ததையொட்டி இந்த இணையதளத்தை தொடக்கி வைத்தார். இ–உபஹார் ஆனது தேசிய தகவலியல் மையம் (NIC), மத்திய மின்னணுவியல் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்தால் உருவாக்கப்பட்டதாகும்.
- ★ இந்த முன்னெடுப்பின் நோக்கம் குடிமக்களின் ஈடுபாட்டை அதிகரிப்பது மட்டுமல்லாமல், உன்னத காரணத்தை ஆதரிப்பதும் ஆகும். ஏலத்தின்மூலம் கிடைக்கும் வருமானம் அனைத்தும் உதவி தேவைப்படும் குழந்தைகளுக்கு உதவ நன்கொடையாக வழங்கப்படும்.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. ஒரே ஒலிம்பிக்கில் 2 பதக்கங்கள்: மானு பாக்கர் புதிய சாதனை.**

பாரீஸ் ஒலிம்பிக் போட்டியின் துப்பாக்கிச்சுடுதலில் இந்தியாவின் மானு பாக்கர் இரண்டாவது வெண்கலம் வென்றார். இதன்மூலம், விடுதலை இந்தியாவில் ஒரே ஒலிம்பிக் போட்டியில் இரு பதக்கங்கள் வென்ற முதல் இந்தியர் என்ற வரலாற்றுச் சாதனையை மானு பாக்கர் படைத்திருக்கிறார். 10 மீ ஏர் பிஸ்டல் கலப்பு அணிகள் பிரிவு வெண்கலப் பதக்கச் சுற்றிலும், 10 மீ ஏர் பிஸ்டல் மகளிர் பிரிவிலும் மானு பாக்கர் வெண்கலம் வென்றுள்ளார். சரப்ஜோத் சிங் தனது முதல் ஒலிம்பிக் போட்டியிலேயே பதக்கம் வென்று அசத்தியுள்ளார்.

---

**2. சிவப்பு, ஆரஞ்சு மற்றும் மஞ்சள் எச்சரிக்கை:**

24 ம.நேரத்தில் 20 செமீக்கும் மேல் கனமழை முதல் மிக கனமழை பெய்யக்கூடும் என்றால் சிவப்பு எச்சரிக்கையும், 11 செமீ முதல் 20 செமீ வரை கனமழைக்கு ஆரஞ்சு எச்சரிக்கையும் 6 செமீ முதல் 11 செமீ வரையிலான மழைக்கு மஞ்சள் எச்சரிக்கையும் விடுக்கப்படுகின்றன.

---


## IMPORTANT LINKS

TNPSC Current Affairs

https://www.winmeen.com/tnpsc-tamil-current-affairs/

Winmeen: Install the Winmeen App
Daily Free & Premium TNPSC Study Materials & Online Test

https://play.google.com/store/apps/details?id=co.robin.jbzwb

Winmeen: Winmeen TNPSC Test Series - Samacheer lesson Wise Test + Previous Year Model Test for TNPSC Group 1,2, 4 & VAO

https://wp.me/p7JanY-ag8